# பகுதி IV

## இலங்கை மத்திய வங்கியினதும் வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றிய 1988 ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | *1988 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்* | ( i ) |
| 2. | *1988 ஆம் அண்டின் 6 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம்* | ( xxiii ) |
| 3. | *1988 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பணச் சட்ட (திருத்தச்) சட்டம்* | ( xxv ) |
| 4. | *1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டம்* | ( xxvii ) |
| 5. | *1988 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் (திருத்தச்) சட்டம்* | ( Lxxxv ) |
| 6. | **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (அதிவிசேஷமானது) இலக்கம் 510/9 இல் வெளியிடப் பட்ட அறிவித்தல்.** | ( xCv |
| 7. | *1988 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம், ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டம்* | ( Ciii ) |
| 8. | *1988 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, பல்புடை முதலீடு (உத்தரவாத முகவர் நிலைய) சட்டம்* | ( Cvii ) |
| 9. | *1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் சட்டம்* | ( Clv ) |

# 1988 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறை (திருத்தச்) சட்டம்

*[1988, மார்ச்சு 25 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

## 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணுட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறை (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் (''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''(ஏ) என்னும் பந்தியின், (ஔ) என்னும் பந்தியின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''(ஏ) என்னும் பந்தியின் (ஔ) என்னும் பந்தியின் (க) என்னும் பந்தியின்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியில் ''தொகையாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''தொகையாகவிருத்தல் வேண்டும்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியின் ''சேர்த்துப் பெறப்படும் தொகையாக இருத்தல் வேண்டும்.''. என்னும் சொற்களுக்குப் பதிலாக ''சேர்த்துப் பெறப்படும் தொகையாக இருத்தல் வேண்டும்; அத்துடன்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(4) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''(க) ஆதனமானது, அசைவற்ற ஆதனமாகவிருந்து 1977 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் அத்தகைய ஆதனம் எவ்வாளினுல் கொள்ளப்பட்டதோ அவ்வாளிடமிருந்து, எவ்வாளுக்கு அத்தகைய வருமான மிகை எழுகின்றதோ அவ்வாளினுல் 1977 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் நன்கொடை வகையாக அல்லது மரபுரிமை வகையாக அந்த ஆதனம் கொள்ளப்பட்டவிடத்து, முதலாவதாகக் கூறப்பட்ட ஆளினுல் அவ்வாதனம் கொள்ளப்பட்ட நேரத்தில் அத்தகைய ஆதனத்தின் பெறுமதியானது—

(I) இரண்டாவதாகக் கூறப்பட்ட ஆள் ஆதனத்தைக் கொள்வனவு வகையாகக் கொண்டிருப்பின், அத் தகைய கொள்வனவுகளின் விலைக்குச் சமனான தொகையொன்றுதலும்; அத்துடன்

(II) இரண்டாவதாகக் கூறப்பட்ட ஆள் அந்த ஆதனத் தைக் கொள்வனவு வகையாக அல்லாத வேறு வகையில் கொண்டிருப்பின், ஆத்தகைய கொள் வனவின் நேரத்தில் அவ்வாதனத்தின் சந்தைப் பெறுமதிக்குச் சமனானதும்,

இரண்டாவதாகக் கூறப்பட்ட ஆளினால், அது அவரால் கொள்ளப்பட்டபின்னர் அவ்வாதனத்திற்குச் செய்யப் பட்ட திருத்தங்கள், சேர்ப்புகள் அல்லது மாற்றங்கள் எவற்றிற்குமான செலவால் அதிகரிக்கப்பட்டதுமான தொகையொன்றுதல் வேண்டும்.''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பந்தியின் (xix) என்னும் உட்பந்தியில், ''1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சனாதிபதி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியத்தின்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப்பதிலாக '1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சனாதிபதி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியத்தின்;'' என்னும் சொற்களை இடு வதன் மூலமும்;

(2) அப்பந்தியின் (G) என்னும் உட்பந்தியில் ''1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக் கப்பட்ட தேசிய பாதுகாப்பு நிதியத்தின்,''; என்னும் சொற் களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு நிதியத்தின்;'' என்னும் சொற்களையும் எண் களையும் இடுவதன் மூலமும்;

(3) அப்பந்தியின் (L) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(Li) 1977 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கை கட்டிடக் கலைகள் நிறுவகச் சட்டத்தால் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை கட்டிடக் கலைகள் நிறுவகம்;

(Lii) 1982 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க இலங்கை நில அளவையாளர்கள் நிறுவகச் சட்டத்தால் கூட்டிணைக்கப் பட்ட இலங்கை நில அளவையாளர்கள் நிறுவகம்; அத் துடன்

(Liii) 1972 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இரசாயனவியல் நிறுவக (இலங்கை)ச் சட்டத்தால் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை இரசாயனவியல் நிறுவகம்.''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (க) என்னும் பந்தியில், ''இலவசப் பிரயாண வசதியின் பெறுமதி.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இலவசப் பிரயாண வசதியின் பெறுமதி அத்துடன்,'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (க) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(ங) ஊழியர் ஒருவருக்கு அவர் ஓய்வுபெறும் நேரத்தில் ஏதேனும் சேம இலாப அல்லது ஓய்வூதிய நிதியத்திலிருந்து அந்நிதியத்தினால் பெறப்பட்ட வருமானத்தைக் குறிக்கின்றதாக, 1987 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப் பகுதிக்கு, அதனால் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து செலுத்தப்பட்ட ஏதேனும் பணத் தொகையின் அத்தகைய பாகம்,''.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''20 ஆம், 20அ ஆம், 21 ஆம்'' என்னும் எண்களுக்குப் பதிலாக, ''20 ஆம், 20அ ஆம், 20ஆ ஆம், 20இ ஆம், 21 ஆம்'' என்னும் எண்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியில், ''கொடுக்கப்பட்டதாதல் வேண்டும்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கொடுக்கப்பட்டதாதல் வேண்டும்,'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(ஈ) கம்பனியொன்றின் பங்குதாரர் ஒருவருக்கு (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டதான ஏதேனும் அத்தகைய பங்கிலாபத்திலிருந்து 1988 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செலுத்தப்பட்டதும் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பங்கிலாபங்கள் எந்தக் காலப்பகுதிக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனவோ, அந்தக் காலப்பகுதியின்போது அல்லது அதன் பின்னரான இரண்டாண்டுகளுக்குள் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட இடைநிலையான கம்பனிகளின் ஊடாகப் பெறப்பட்டதுமான ஏதேனும் பங்கிலாபம்.''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''ஒரு வீடு, வதியும் நோக்கங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுவதோடு—'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஒரு வீடு, அவ்வீட்டின் நிருமாணம் 1989 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் நிறைவு பெற்று அல்லது பூர்த்தி செய்யப்பட்டிருந்து அத்துடன் வதியும் நோக்கங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுவதோடு—'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(ஆஆ) வீடொன்றின் சொந்தக்காரருக்கு அவ்வீட்டின் நிர்மாணம் நிறைவுபெற்ற வரிமதிப்பீட்டாண்டிற்கும் அதனை உடனடுத்துவரும் ஆறு வருடங்களுக்கான வரிமதிப்பீட்டுக்கும் அத்துடன் அத்தகைய வீட்டின் நிருமாணம் 1989 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் முடிக்கப்பெற்று, வதியும் நோக்கங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுவதோடு—

(i) அதன் சொந்தக்காரரால் இருப்பாட்சி செய்யப்படின்;

(ii) (சுவர்களின் தடிப்பு உட்பட) இரண்டாயிரம் சதுர அடிக்கு மேற்படாத தளப்பரப்பைக் கொண்டிருப்பின்.

ஆயின், வீட்டின் தளப்பரப்பு ஆயிரத்தைந்நூறு சதுர அடியாக அல்லது அதனிலும் குறைவாக உள்ளவிடத்து, அவ்வீட்டின் சொந்தக்காரருக்குச் சேரும் வருமானமானது, அந்த வீட்டின் நிருமாணம் எந்த வரிமதிப்பீட்டாண்டில் நிறைவுபெற்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் ஒன்பது வரிமதிப்பீட்டாண்டுகளுக்கும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.''.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அதன் (அ) என்னும் பந்தியின் (xvi) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(xvi) ஏதேனும் ஆதனத்தின் சொத்தாண்மையில் 1986 நவம்பர் 12 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், அத்தகைய வருமான மிகை எந்த ஆளுக்கு எழுகின்றதோ அந்த ஆளினால் கொள்ளப்பட்ட பின்னர் இருபத்தைந்து ஆண்டுகளுக்குக் குறையாத காலத்தின்போது நிகழும் மாற்றத்தின்மீதும்.''.

8. பிரிவு 20ஆ என்பதனை உடனடுத்துப் பின்வரும் பிரிவு உட்புகுத்தப் படுகின்ற என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 20இ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"குறித்த சில பொறுப்பு முயற்சிகளுக்கான வழங்களிலிருந்து பெறும் இலாபங்கள்

20இ. (1) ஏற்றுமதி இலாபங்களும் அப்பொறுப்பு முயற்சியின் வருமானமும் அடங்கியதான (மூலதனச் சொத்துக்களின் விற்பனை யிலிருந்து வரும் எவையேனும் இலாபங்களையும் வருமானத்தை யும் தவிர்ந்த) 3 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின் கருத் தெல்லைக்குட்பட்ட, இலாபங்களினதும் வருமானத்தினதும் அத் தகைய பாகம், 1988 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பிரிவில்—

(அ) "ஏற்றுமதி இலாபங்களும் வருமானமும்", அத்துடன் "மொத்த விற்பனவு வரவு" என்பன 20 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவற்றிற்குக் குறித்தொதுக்கப் பட்ட அந்தந்த பொருள்களைக் கொண்டிருத்தல் வேண் டும்.

(ஆ) "ஏற்றுமதி விற்பனை வரவு" என்பது (இப்பிரிவு ஏற் புடைத்தாகும்) ஒரு பொறுப்பு முயற்சி தொடர்பில் உபயோகிக்கப்படும்போது எந்தத் தொழில் முயற்சியுடன் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 17 ஆம் பிரி வின் கீழ் மா கொழும்புப் பொருளாதார ஆணைக்குழு வினல் ஒப்பந்தமொன்று செய்து கொள்ளப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் தொழில் முயற்சிக்கு, அந்தத் தொழில் முயற்சியின் இலாபங்களும் வருமானமும் எந்தக் காலப் பகுதியின்போது அந்த உடன்படிக்கையின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகின்றதோ அந்தக் காலப் பகுதியின்போது பொருட்களின் விற்பனையிலிருந்து அப் பொறுப்பு முயற்சியால் பெறப்பட்ட அல்லது பெறப் படற்பாலதான மொத்தத் தொகை என்று பொருள் படும். அத்தகைய விற்பனைக்கான கொடுப்பனவு—

(i) மூலதனச் சொத்துக்களின் விற்பனையின் மூலம் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான ஏதேனும் தொகை;

(ii) இரத்தினக் கற்களின் விற்பனையிலிருந்து பெறப் பட்ட அல்லது பெறப்படற்பாலதான ஏதேனும் தொகை;

(iii) தொகையான கருந்தேயிலை, கிறேப்பு இறப்பர், தாளுருவ இறப்பர், கழிவு இறப்பர், தேங்கா யெண்ணெய், உலர்த்திய தேங்காய்கள், கொப்

பரு, புதுத் தேங்காய்கள், தென்னந்தும்பு ஆகிய வற்றின் விற்பனையிலிருந்து அல்லது ஏற்றுமதியி லிருந்து பெறப்பட்ட அல்லது பெறப்படற்பால தான ஏதேனும் தொகை;

(iv) மூன்றும் பிரிவின் (அ) என்னும் பந்தியின் இலாபங் களதும் வருமானங்களதும் கருத்தெல்லைக்கு உட் படாத ஏதேனும் இலாபங்களும் வருமானமும்

என்பன புறநீங்கலாக, இலங்கையிலுள்ள ஏதேனும் வர்த்தக வங்கியின் வெளிநாட்டு நாணய வங்கித்தொழிற் பிரிவில் அத் தகைய தொழில் முயற்சியால் பேணப்படும் ஏதேனும் கணக்கி லிருந்து எடுக்கப்பட்ட நிதியங்களிலிருந்து செய்யப்படும்.''.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு பின்வருமாறு திருத்தப் படுகின்றது:—

(1) அப்பிரிவை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவென மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், ''ஏதேனும் வீட்டை அல்லது தொடர்மாடி வீட்டை விற்குமிடத்தும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஏதேனும் வீட்டை அல்லது தொடர்மாடி வீட்டை, 1989 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் விற்குமிடத்தும்'', என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(2) அரசாங்கத்தின் வீடமைப்புக் கொள்கையைக் கருத்திற் கொண்டு தேசிய வீடமைப்பு ஆணை யாளரால் அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு முய ற்சியொன்றுக இருக்கின்றதும் வீடுகளின் அல் லது தொடர்மாடிகளின் நிருமாணத்திற்கும், விற்பனைக்குமான பொறுப்பு முயற்சியொன் றைக் கொண்டு நடாத்துகின்ற ஆளொருவர், இரண்டாயிரம் சதுர அடிக்கு மேற்படாத, தளப் பரப்பளவை 1977 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் நிருமாணிக் கப்படத் தொடங்கியதுமான ஏதேனும்வீட்டை அல்லது தொடர் மாடியை 1989 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் விற்குமிடத்து அத்தகைய விற்பனை அவ்வீட்டின் அல்லது தொடர்மாடி

யின் முதலாவது விற்பனையாக இருப்பதனுல் அத்தகைய விற்பனையிலிருந்து எழும் இலாபங்களினதும் வருமானத்தினதும் எழுபத்தைந்து வீதம், வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.''.

*10.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

''(1) அப்பிரிவின் 1 ஆம் உட்பிரிவில்,

(அ) அவ்வுட்பிரிவின் (உஉஉ) என்னும் பந்தியில் ''சதவீதத்திலான விடுதொகையொன்று''; என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''சதவீதத்திலான விடுதொகையொன்று:

ஆயினும் இப்பந்தியின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ், இப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் அல்லது (ii) ஆம் உட்பந்தியில் அல்லது (iii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் எந்த மூலதனச் சொத்து தொடர்பில், முற்போந்த வரிமதிப்பீட்டாண்டுகளில் தேய்மானத்திற்கென அளிக்கப்பட்ட விடுதொகைகளின் மொத்தம் விடயத்திற்கேற்ப அத்தகைய மூலதனச் சொத்தின் கொள்ளளவின் செலவுக்கு அல்லது நிர்மாணத்தின் செலவுக்குச் சமமாக இருக்கின்றதோ அந்த ஏதேனும் மூலதனச் சொத்து தொடர்பில் ஆளொருவருக்கு கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதலாகாது,''

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஏஏ) என்னும் பந்தியில் ''வாராக்கடன்களின் அல்லது ஐயுறவுக் கடன்களின் கொடுப்பனவுக்கெனச் சிறப்பான ஒதுக்கொன்றிற்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''வருமானமொன்றின் தன்மையிலான செலவினத்தை ஏற்பதற்கென பொது ஒதுக்கொன்றிற்கு'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,''

(இ) அவ்வுட்பிரிவின் (ந) என்னும் பந்தியின் ''1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக ''1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர்'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்'',

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (ஆஆஆ) என்னும் பந்தியில் ''கொள்ளலுக்கான செலவு'' என்னும் சொற்களுக்குப் டதிலாக அப்பந்தியில் அச்சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம், ''விடயத்திற்கேற்ப, கொள்ளலுக்கான செலவு அல்லது நிருமாணத்திற்கான செலவு'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆஆஆ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத் திற்குப் பதிலாக, பின்வரும் காப்பு வாசகத்தை இடுவதன் மூலமும்:—

''ஆயின் அத்தகைய வித்தியாசம் அத்தகைய கையுதிர்ப்பை விஞ்சுமிடத்து, மிகையானது (1) ஆம் உட்பிரிவின் நோக்கத் திற்கென வருமானத்தின் உற்பத்தியில் உறப்பட்ட செலவொன் ருகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலும், இப்பந்தியிலுள்ள எதுவும் பின்வருவனவற்றிற்கு ஏற்புடையனவாதல் ஆகாது:—

(அ) தனியாள் ஒருவரினுல் ஒன்றில் தனித்தோ பங்குடைமையிலோ கொண்டு நடாத்தப்பட்ட தொழிலொன்று அத்தகைய கம்பனி யாக மாற்றப்படுவதன்மீது 14 (அ) ( xv ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் கம்பனியொன்றுக்கு ஏதேனும் அத் தகைய மூலதனச் சொத்து 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் மாற்றப்படுதல்; அல்லது

(ஆ) அத்தகைய ஏதேனும் மூலதனச் சொத்தை கையுதிர்ப்பதன் மூலம் எவரேனும் ஆளினுல் பெறப்படும் முழு வரும்படிகள், அவரால் கொண்டு நடாத்தப்படும் அல்லது புரியப்படும் ஏதே னும் வியாபாரத்தில், தொழிலில், உயர் தொழிலில், வாழ்க் கைத் தொழிலில் அல்லது ஊழியத்தில் வருமானத்தை உண் டாக்குவதற்கு அவரால் பயன்படுத்தப்படவேண்டிய அத் தகைய மூலதனச் சொத்து எதனையும் மாற்றீடு செய்வதற் கென, கையுதிர்க்கப்பட்ட ஓராண்டுக்குள் அத்தகைய ஆளினுல் பயன்படுத்தப்படின் அத்தகைய கையுதிர்ப்பு.''.

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் ''(1) (உஉ) அல்லது (1) (ஊ)'' என்னும் சொல்லுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''(1) (உஉ), (1) (உஉஉ) அல்லது (1) (ஊ)'' என்னும் சொல்லையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(i) அந்த மதிப்பீட்டாண்டில் அவரால் செய்யப்பட்ட அல்லது அவரினுற் செய்யப்பட்டிருக்கின்றதெனக் கருதப்பட்ட (2) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ), (க), (ங) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் தவிர்ந்த ஏனைய தகைமையுள்ள கொடுப்பனவுகள் யாவும் தொடர்பாக, அத் தகைய மதிப்பீட்டு வருவாயின் மூன்றில் ஒரு பங்கை அல்லது ஐம்பதாயிரம் ரூபாவை, இதில் எது குறைவோ அதை விஞ்சு தலாகாது;

(ii) அவரால் செய்யப்பட்ட அல்லது அவரினுற் செய்யப்பட்டிருக் கின்றதெனக் கருதப்பட்ட 2 ஆம் உட்பிரிவின் (இ), (க), (ங) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமை யுள்ள கொடுப்பனவுகள் யாவும் தொடர்பாக ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சுதலாகாது; அத்துடன்

(4) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் ''(உஉ) என்னும் பந்தியின்கீழ்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''அல்லது (உஉ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (உஉஉ) என்னும் பந்தியின் கீழ்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் ''அத்தகைய விற்பனையிலான வரும்படிகளுக்கும், இடையிலான வித்தியாசமாகக் கருதப்படுதல் வேண்டும்,'' என்னும் சொற்களுக்கும் பதிலாக, ''விற்கப்பட்ட சொத்தின் விற்பனையின் மீதான இலாபங்களுக்கும் இடையிலான வித்தியாசமாகக் கருதப்படுதல் வேண்டும்;'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(இ) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:—

''இந்த உட்பந்தியியின் நோக்கங்களுக்காக விற்பப்பட்ட சொத்தொன்றின் விற்பனை மீதான இலாபமானது, அத்தகைய சொத்தின் விற்பனை வரும்படிகள் பின்வருவனவற்றுக்கிடையிலான வித்தியாசத்தை எத்தொகையால் விஞ்சுகின்றதோ அத்தொகையாதல் வேண்டும்:—

(i) விடயத்திற்கேற்ப அத்தகைய சொத்தின் கொள்ளலுக்கான செலவு அல்லது நிருமாணத்திற்கான செலவு; அத்துடன்

(ii) அத்தகைய மூலதனச் சொத்து தொடர்பில் அளிக்கப்பட்ட பெறுமானத் தேய்வுக்கான மொத்த விடுதொகை.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் ''23 (1) (அ) என்னும் பிரிவின் கீழான அல்லது 23 (1) (உ) என்னும் பிரிவின் கீழான அல்லது 23 (1) (ஊ) என்னும் பிரிவின் கீழான'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''23 (1) (அ) என்னும் பிரிவின் கீழான அல்லது 23 (1) (உ) என்னும் பிரிவின் கீழான அல்லது 23 (1) (உஉஉ) என்னும் பிரிவின் கீழான அல்லது 23 (1) (ஊ) என்னும் பிரிவின் கீழான'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(1அ) ஆணையாளர் தலைமையதிபதி இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் தொடர்பிலான கணக்குகள் அவரது பணிப்புரையில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப் பகுதிகளுக்குச் செய்

யப்பட வேண்டுமெனப் பணிக்குமிடத்து, 1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அந்த மூலத்திலிருந்து வரும் நியதிச்சட்ட வருமானம் அந்த வரிமதிப் பீட்டாண்டில் முடிவடையும் காலப்பகுதிக்கான இலாபங்களின் தொகையின் மீது கணிக்கப்பட வேண்டுமென அவர் மேலும் பணிக்கலாம். ஆயினும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் ஒன்றி லிருந்து எவரேனும் ஆளின் நியதிச் சட்ட வருமானம் குறித்த ஒரு காலப் பகுதிக்கென ஆக்கப்பட்ட கணக்கொன்று தொடர்பில் கணிக்கப்பட்டுள்ள விடத்தும், அத்துடன் அத்தகைய ஆள் அடுத்துவரும் ஆண்டில் நேரொத்த காலப்பகுதிக்கான கணக்கொன்றை ஆக்கத் தவறுகின்றவிடத்தும், அத் தகைய தவறுகை நிகழும் வரிமதிப்பீட்டாண்டு, அடுத்துவரும் இரண்டு மதிப் பீட்டாண்டுகள் ஆகிய இரண்டிலும் அம் மூலத்திலிருந்தும் நியதிச்சட்ட வருமானம் விடயத்தின் சூழ்நிலைகளில் ஆணையாளர் தலைமையதிபதி நீதி யானதும் ஒப்புரவானதுமாகும் எனக் கருதுகின்றவாறுன அத்தகைய அடிப் படையின்மீது கணிக்கப்படுதல் வேண்டும்:

ஆயினும், ஆணையாளர் தலைமையதிபதி இந்த உட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரையொன்றை ஏதேனும் நேரத்தில் வேறுபடுத்தலாம் அல்லது அழிக்கலாம்:

அத்துடன் ஆயினும், மேலும் அத்தகைய பணிப்புரை, ஆணையாளர் தலைமையதிபதியால் வேறுபடுத்தப்படுமிடத்து அல்லது அழிக்கப்படுமிடத்து ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு, எந்த மூலம் தொடர்பில் அத்தகைய பணிப்புரை வழங்கப்பட்டதோ அந்த மூலத்திலிருந்துவரும் நியதிச் சட்ட வருமானம், அந்த வரிமதிப்பீட்டாண்டில் மார்ச்சு முப்பத்தோராம் தேதி வரை கணக்குகள் ஆக்கப்பட்டாற்போன்று கணிக்கப்படவேண்டுமென அவர் பணிக்கலாம்.''.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (4அ) என்னும் உட்பிரிவில், ''20அ என்னும் பிரிவில்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும், பதிலாக அச்சொற்களும் எண்களும் காணப்படும் இடங்களிலெல்லாம், ''20அ என்னும் பிரிவில் அல்லது 20ஆ என்னும் பிரிவில் அல்லது 20இ என்னும் பிரிவில்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவில் (6) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(iv) அத்தகைய ஆளினால் அவரால் கொண்டு நடாத்தப்படும் அல்லது புரியப்படும் ஏதேனும் வியாபாரத்தின், தொழிலின், உயர் தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் இலாபங்களையும் வரு மானத்தையும் உண்டுபண்ணுவதற்கு உபயோகிக்கப்படும் எதேனும் மூலதனச் சொத்தின் கையுதிர்ப்பிலிருந்து எழுகின்ற ஏதேனும் மூலதன நட்டம் தொடர்பில், அத்தகைய சொத்து தொடர்பிலான பெறு மானத் தேய்வுக்கான கழிப்பனவொன்று இச்சட்டத்தின் 23 ஆம்

பிரிவின்கீழ் அல்லது 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உண்ணுட்டர சிறைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் அல்லது வருமான வரிக் கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் அனுமதிக்கப்பட்டிருப்பின், கழிப்பனவு எதுவும் செய்யப்படுதல் ஆகாது.''

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''ஐந்தாம் உட்பிரிவின் அத்துடன் (5அ) என்னும் உட்பிரிவின்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''ஐந்தாம் உட்பிரிவின், (5அ) என்னும் உட்பிரிவின், (5ஆ) என்னும் உட்பிரிவின் அத்துடன் (5இ) என்னும் உட்பிரிவின் என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில்—

(i) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், ''1973, ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று'' என்பது முதல் ''திருப்பிக்கொடுப்பதில் செலுத்தப் பட்ட ஏதேனும் தொகை'', என்பது வரையிலான சொற்களுக் கும் இலக்கங்களுக்கும் பதிலாக, பின்வரும் சொற்களையும் இலக் கங்களையும் இடுவதன் மூலமும்:—

''1973 எப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனுல் 1989 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அத்தேதிக்கு முன்னர் வீடு ஒன்று கட்டுவதற்காக அல்லது ஒன்றில் முதலாவது வீட்டை அன்றேல் வீடொன்றைக் கட்டுவதற்கென 1973 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட முதல் அமைவிடத்தைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட கடன் எதனதும் முதலைத் திருப் பிக் கொடுப்பதில் செலுத்தப்பட்ட ஏதேனும் தொகை,'' அத் துடன்

(ii) அப் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் ''1973, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, 1973 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனுல் 1989 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்,'';

(ஆ) அந்த உட்பிரிவின், (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(உஉ) பணச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் இலங்கை அரசாங்கத் திற்கு அல்லது ஏதேனும் வங்கித்தொழில் நிறுவனத்திற்கு அல்லது பின்வருவன தொடர்பில் அரசாங்கத்தின் வீடமைப் புக் கொள்கையைக் கருத்தில் கொண்டு, வீடமைப்பு என்னும்

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் உள்ளூரதிகார சபைக்கு அல்லது வேறேதேனும் நிறுவனத்திற்கு தனியாள் ஒருவரால் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத் தொகை—

(i) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் அத்தகைய தனியாளினுல் முதலாவது வீடாகவுள்ள, வீடொன்றைப் பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு செலவில் நிருமாணித்தமைக்காக அல்லது 1978, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் முதலாவது வீடாக அல்லது முதலாவது அமைவிடமாக அத்தகைய தனியாளினுல் கொள்வனவு செய்யப்பட்டதான பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு விலைக்கு ஒரு வீட்டை அல்லது வீடொன்றை நிருமாணிப்பதற்கான அமைவிடமொன்றைக் கொள்வனவு செய்தமைக்காக, 1989 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் அளிக்கப்படும் ஏதேனும் கடனின் மூலதனங்கள் கொடுப்பனவில், அத்தகைய மீள் கொடுப்பனவானது, அந்தத் தனியாள் அவ்வீட்டின் அல்லது அந்த அமைவிடத்தின் சொந்தக்காரராக இருக்கையில் அவரினுலும் அல்லது அந்த வீட்டின் அல்லது அமைவிடத்தின் சொந்தக்காரர் பதினெட்டு வயதுக்குக் குறைந்த வயதுள்ள பிள்ளையாக இருக்கையில்—

(அ) எந்த தனியாள் அத்தகைய வீட்டின் அல்லது அமைவிட.த்தின் சொத்தாண்மையைக் கொடைவாயிலாக கொண்டுள்ளாரோ அத்தகைய தனியாளின்; அத்துடன்

(ஆ) எந்தத் தனியாளுடைய வருமானமானது, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அந்த வரிமதிப்பீட்டாண்டிலான அத்தகைய தனியாளின் வருமானத்துடன் கூட்டு மொத்தமாகியுள்ளதோ, அத்தகைய தனியாளின்

மீள் கொடுப்பனவானது 1989 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின் வழங்கப்படும் ஏதேனும் கடனினது மூலதனத்தின் மீள் கொடுப்பனவு;

(ii) வாடகைக் கொள்வனவு நியதிகளின் மீது 1978 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட முதலாவது வீடு தொடர்பில் 1989 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்துகொள்ளப்பட்ட எந்த வாடகைக் கொள்வனவு உடன்படிக்கையின் பிரதி பயன் பத்து இலட்சம் ரூபாவை விஞ்சவில்லையோ அந்த வாடகைக் கொள்வனவு உடன்ப்படிக்கையின் நியதிகளின் படியான மாதாந்தக் கொடுப்பனவு.''.

(இ) அந்த உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் ''வீடொன்று நிருமாணிக் கப்பட்டதன் மேல்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, 1989 மார்ச்சு 1 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்பு வீடொன்று நிர்மாணிக்கப் பட்டதன்மேல்'' என்னும் சொற்களேயும் எண்களேயும் இடுவதன் மூல மூம்'';

(ஈ) அதன் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(ஊஊ) 1978 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், அவரால் நிருமாணிக்கப்பட்ட முதலாவது வீட் டின் 1989 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் பத்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத செலவில் நிர்மாணிப்பின் மீது தனியாள் ஒருவரால் செலவழிக்கப் பட்ட ஏதேனும் பணத்தொகை, அத்தகைய பணத்தொகை (ஊ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட இலங்கை அரசாங்கத்திடமிருந்து அல்லது ஏதேனும் நிறுவனத்திட மிருந்து அல்லது அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகையாகவிராதவிடத்து'';

(உ) அந்த உட்பந்தியின் (எ) என்னும் பந்தியில் உள்ள ''1978 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்'' என்பதிலிருந்து ''செலவு செய்யப்பட்ட ஏதேனும் தொகை'' என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''1978 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனல் 1989 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஒன்றில் முதலாவது வீடு கொள்வனவு செய்யப்பட்டமைக்காக, அல்லது 1978 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் வீடொன்றை நிருமாணிப்பதற் காக முதலாவது அமைவிடம் அவரால் கொள்வனவு செய்யப்பட் டமைக்காகத் தனியாள் ஒருவரால் செலவழிக்கப்பட்ட ஏதேனும் தொகை'' என்னும் சொற்களேயும் எண்களேயும் இடுவதன் மூலமும்,'';

(ஊ) அந்த உட்பிரிவின் (எ) என்னும் பந்தியை உடனடுத்து, பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''(எஎ) 1989 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத ஒரு விலேக்கு ஒன்றில் முதலாவது வீட்டை அல்லது வீடொன்றை நிருமாணிப்பதற் கான முதலாவது அமைவிடத்தைக் கொள்வனவு செய்தமைக் காகத் தனியாள் ஒருவரால் செலவழிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகையானது, முதலாவது வீடாக, அல்லது 1978 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அவரால் கொள்வனவு செய்யப்பட்ட முதலாவது அமைவிடம் என் பதால், அத்தகைய பணத் தொகையானது இலங்கை அரசாங் கத்திடமிருந்து அல்லது (உ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்திடமிருந்து அல்லது அதி காரசபையிடமிருந்து கடனுகப் பெறப்படாததொரு பணத் தொகை'';'';

(எ) அந்தப் பிரிவின் (ஓள) என்னும் பந்தியில்,

(i) "ஏதேனும் வீட்டை அல்லது தொடர்மாடி வீட்டை நிருமாணிப்பதில் ஆளொருவரால் செலவழிக்கப்படும் அல்லது கூறெதனதும் கொள்வனவுச் செலவு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "1989 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்பு ஏதேனும் வீட்டை அல்லது தொடர்மாடி வீட்டை நிருமாணிப்பதில் ஆளொருவரால் செலவழிக்கப்படும் அல்லது 1989 மார்ச் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்பான கூறெதனதும் கொள்வனவுச் செலவு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்,"; அத்துடன்

(ii) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில் "23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தி அல்லது 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தி" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தி அல்லது 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உஉஉ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தி அல்லது 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தி" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்";

(ஏ) அவ்வுட்பந்தியின் (ஓள) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம்—

"(ஓளஓள) (i) ஏதேனும் வீடு, தொடர்மாடி அல்லது கூறு அத்தகைய ஆளினல் ஊழியத்திலீடுபடுத்தப்பட்ட பணியாளரின் எவரேனும் உறுப்பினருக்கு வசிக்கும் வீடாக இருப்பாட்சி கொள்வதற்கென இருப்பின்;

(ii) அத்தகைய வீடுகளின், தொடர் மாடிகளின் அல்லது கூறுகளின் நில இடப்பரப்பு இரண்டாயிரம் சதுர அடியை விஞ்சாதிருப்பின், அத்துடன்

(iii) அத்தகைய வீடு, தொடர்மாடி அல்லது கூறு தொடர்பாக 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியின் கீழ் அல்லது 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உஉஉ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியின் கீழ் அல்லது 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் கீழ் விடுதொகை எதுவும் கழிக்கப்படற்பாலதற்றதாகவிருப்பின்,

1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத ஒரு விலையில் அத்தகைய வீட்டை அல்லது தொடர் மாடியை அமைப்பதில் அல்லது (1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினுல் தாபிக்கப் பட்ட) நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்துடன் நிர் மாணிக்கப்பட்ட வதிவிட இடவசதியினதும் 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் பொருளினுள் பதிவு செய்யப்பட்ட ஒரு கூட்டாட்சி ஆதனத்தின் உட் கொண்டிருக்கும் ஏதேனும் கூறின் 1983 ஏப்பிரல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத ஒரு விலே யில் கொள்வனவு செய்வதில் ஓர் ஆளினுல் செலவிடப்பட்ட ஏதேனும் தொகை'';

(ஐ) அவ்வுட்பந்தியின் (ச) என்னும் பந்தியை உடன் அடுத்துவரும் பந்தியில் ''இவ்வுட்பந்தியின் (உ) (எ) என்னும் பந்திகளில்'' என்னும் சொற் களுக்குப் பதிலாக ''இவ்வுட்பந்திகளின் (உ), (உஉ), (எ) அத்துடன் (எஎ) என்னும் பந்திகளில்'' என்னும் சொற்களே இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் ''(ஊ) என்னும் பந்தியில் அல்லது (எ) என்னும் பந்தியில் அத்தகைய'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''(ஊ) என்னும் பந்தியில் அல்லது (ஊஊ) என்னும் பந்தியில் அல்லது (எ) என்னும் பந்தியில் அல்லது (எஎ) என்னும் பந்தியில், அத்தகைய,'' என்னும் சொற்களே இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (5ஆ) என்னும் உட்பிரிவின் ''1986 ஏப்பிரல் மாதத்தில் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்காக'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1986 ஏப்பிரல் 1 ஆந் தேதியன்று ஆரம்பமாகும் மதிப்பீட்டாண்டிற்காகவும், அத்துடன் அந்த மதிப் பீட்டாண்டை உடன் அடுத்துவரும் ஆண்டிற்காகவும்'' என்னும் சொற்களேயும் எண்களேயும் இடுவதன் மூலமும்;

(5) அப்பிரிவின் (5ஆ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்னர் பின் வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(5இ) 1988 ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் மதிப்பீட்டாண்டிற்கான, ஒரு கம்பனி தவிர்ந்த எவரேனும் ஆளின் மதிப்பிடற்பாலதான வருவாயிலிருந்து கழிவு—

(iii) இவ்வுட்பிரிவில் (1) ஆம், (ii) ஆம் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமையுள்ள கொடுப்பனவுகள் யாவற்றின தும் கூட்டு மொத்தம் தொடர்பாக ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சுதலாகாது.''; அத்துடன்

(6) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத் தின் இறுதியில் பின்வரும் காப்பு வாசகத்தைச் சேர்ப்பதன் மூலம்:—

''ஆயினும் மேலும் அத்தகைய பங்குகளைக் கொள்வனவு செய்த ஆளினல் மீளப் பெறப்பட்ட அல்லது பணமாக மாற்றப்பட்ட அல்லது அவருக்குச் செலுத்தப்பட்ட அத்தகைய பங்குகள் தொடர்பில் ஏதேனும் பணத்தொகையின் விளைவால், மேலதிகவரி மதிப்பீடொன்று எழுகின்ற விடத்து—

( i ) அத்தகைய ஆளினல் மீளப் பெறப்பட்ட அல்லது பணமாக மாற்றப் பட்ட அல்லது அவருக்குச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகைக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான அத்தகைய விடுதொகையின் அத்தகைய பாகம் அளிக்கப்படாதிருப்பின் விடுதொகை எந்த ஆளுக்கு அளிக்கப் பட்டதோ அந்த ஆள் செலுத்துதலுக்காளாகும் வருமான வரிக்கும்; அத்துடன்

( ii ) அந்த வரி மதிப்பீட்டாண்டிற்கு அறவிடப்பட்ட வரியின் தொகைக்கும்

வித்தியாசத்தைக் கொண்ட அத்தகைய மேலதிக வரி மதிப்பீடு, இச் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும் அந்த ஆள் தொடர்பில் செய்யப்படல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வரிமதிப்பீட்டறிவித்தல், மேல் முறையீடு அத்துடன் வேறு நடவடிக்கைகள் என்பன தொடர்பில் அத்தகைய மேலதிக வரிமதிப்பீட் டிற்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.''.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ)என்னும் பந்தியில்—

(அ) அப்பந்தியின் (v) ஆம் என்னும் உட்பந்தியில் ''1986 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குவதான ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக'' என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''1986 ஆம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆம் தேதியன்று தொடங்குவதான ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாகவும் அந்த மதிப்பீட் டாண்டை உடனடுத்து வரும் ஆண்டு தொடர்பாகவும்'' என்ற சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;'';

(ஆ) அப்பந்தியின் (v) என்னும் உட்பந்தியை நேரே உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(vi) 1988 ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின் னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாக, இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் 11ஈ பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங் களில்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், அதன் இறுதியிலுள்ள ''அப்பாகம் நீங்கலாக'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அப் பாகம் நீங்கலாக, அல்லது'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(ஊ) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியத்திலிருந்து, ஏதேனும் தொழிலிலிருந்து அவர் ஒய்வு பெறும் நேரத்தில் அவருக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை,'';
அத்துடன்

(இ) ''அத்தகைய முன்னர் சொல்லப்பட்டவாறுன பணத்தொகை யானது அத்தகைய தனியாளின் தொழில் தருநரால், ஆணை யாளர் தலைமையதிபதியின் கருத்துப்படி அத்தகைய தொழில் தருநரால் வேலைக்கமர்த்தப்பட்ட எல்லாத் தனி ஆட்களுக்கும் ஒரு சீராக ஏற்புடைத்தாகும் என்ற ஒரு திட்டத்திற்கு இணங்கச் செலுத்தப்பட்டதாக இருந்தால்'', என்னும் சொற்களுக்குப் பதி லாக ''முன்னர் சொல்லப்பட்ட பணத்தொகை அல்லது பணத் தொகைகளில் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை அத்தகைய தனியாளின் தொழில் தருநரால், அத்தகைய தனி ஆட்களுக்குச் செலுத்தப்பட்டதாக அல்லது செலுத்தப்பட்டன வாக இருந்தால் அல்லது அத்தகைய தொழில்தருநர் அத்தகைய நிதியத்திற்கு அல்லது நிதியங்களுக்கு உதவுதொகை செலுத்தி யிருந்தால்,''.

(3) அப்பிரிவின் (3அ) என்னும் உட்பிரிவில், ''அத்தகைய ஆளினுல் அத் தகைய ஆதனம் கொள்ளப்பட்டபின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு அதிக மாக ஆனுல் ஐந்து ஆண்டுகளுக்குக் குறைவாக, அத்துடன் அத்தகைய வருமானத்தில் அத்தகைய பாகத்தில் செலுத்தற்பாலதான வருமான வரியின் வீதம்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''அத்தகைய ஆளினுல் அத்தகைய ஆதனம் கொள்ளப்பட்ட பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு அதிகமாக, ஆனுல், அத்தகைய ஆளினுல் அத்தகைய ஆதனம் கொள் ளப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு அதிகமாகாத, அத்துடன் அத்தகைய வருமானத்தின் அத்தகைய பாகத்தில் செலுத்தற்பாலதான வருமானவரியின் வீதம்'' என்ற சொற்களை இடுவதன்மூலமும்.''.

(4) அப்பிரிவின் (3ஆ) என்னும் உட்பிரிவில்—

(அ) ''அந்த ஆதனம் கொள்ளப்பட்ட அத்தகைய காலப் பகுதிக்குள் ளாக'' என்ற சொற்களுக்குப் பதிலாக, அந்த ஆதனம் கொள்ளப் பட்ட தேதியின் பின்னர் அத்தகைய காலப் பகுதிக்குள்ளாக'' என்ற சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அந்த உட்பிரிவின் 1 ஆம் நிரலில்—

(i) ''ஐந்து ஆண்டுகளுக்கு அதிகமாக ஆனல் பதினைந்து ஆண்டுகளுக்குக் குறைவாக'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''ஐந்து ஆண்டுகளுக்கு அதிகமாக ஆனல் பதினைந்து ஆண்டுகளுக்கு அதிகமாகாமல்'' என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ii) ''பதினைந்து ஆண்டுகளுக்கு அதிகமாக ஆனல் இருபது ஆண்டுகளுக்குக் குறைவாக'' என்ற சொற்களுக்குப் பதிலாக, ''பதினைந்து ஆண்டுகளுக்கு அதிகமாக ஆனல் இருபது ஆண்டுகளுக்கு அதிகமாகாமல்'' என்ற சொற்களை இடுவதன் மூலமும்;

(5) இப்பிரிவின் (3ஆ) என்னும் உட்பிரிவை நேரே உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(3இ) ஏழாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஔ), அல்லது (க) பந்தியின் நோக்கங்களுக்கென ஏதேனும் ஆதனத்தின் பெறுமதியான எவரேனும் ஆளினல் அத்தகைய ஆதனம் கொள்ளப்பட்ட உண்மையான தேதிக்கு முன்னரான ஒரு தேதியுடன் தொடர்புபடுத்தியே தீர்மானிக்கப்படுமிடத்து, அத்தகைய ஆளினல் அத்தகைய ஆதனம் கொள்ளப்பட்ட தேதியன்று, இப்பிரிவின் நோக்கங்களுக்காக அத்தகைய பந்தியில் இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆளினல் அத்தகைய ஆதனம் கொள்ளப்பட்ட தேதி எனக் கருதப்படுதல் வேண்டும்.''.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1இ) என்னும் உட்பிரிவினை நீக்கஞ் செய்வதன்மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகிறது:—

''(1இ) 1986, நவம்பர் 12 முதல் தொடங்குவதான காலப்பகுதியில் கம்பனி ஒன்றின் வரி விதிக்கற்பாலதான வருமானமானது, ஏதேனும் ஆதனத்தின் சொத்தாண்மை மாற்றப்பட்டதில் தோன்றிய ஏதேனும் பங்கிலாபத்தினை உள்ளடக்கியிருக்குமிடத்து, 32 ஆம் பிரிவின் (3அ) அத்துடன் (3ஆ) என்னும் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன், அந்தப் பங்கிலாபத்தின் வரி விதிப்புக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:—

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினை நீக்கஞ்செய்வதன் மூலமும், அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினைப் பதிலீடு செய்வதன் மூலமும்:—

"(ஆ) 1986, ஏப்பிறில் 1 இல் தொடங்குவதான வரிமதிப்பீட்டாண்டுகளும், அந்த வரிமதிப்பீட்டாண்டை உடன் அடுத்து வரும் மதிப்பீட்டாண்டுக்கும், அறுபது வீதத்தை விஞ்சுதலாகாது;"; அத்துடன்

(2) (ஆ) என்னும் பந்தியினை நேரே உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன்மூலமும்:—

"(இ) 1988, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்றும், அதன் பின்னரும் தொடங்குவதான ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு, ஐம்பது வீதத்தினை விஞ்சுதலாகாது.".

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 67 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம், (3) ஆம், (4) ஆம் பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(2) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின்போது நூற்றி எண்பத்திமூன்று நாட்களுக்கு அல்லது அதற்கு மேல் ஆளுருவில் இலங்கையிலிருக்கின்ற தனியார் ஒருவர், அந்த வரிமதிப்பீட்டாண்டு முழுவதும் இலங்கையில் வதிகின்றவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) தொடர்ச்சியான இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது அதற்கு மேல் இலங்கையில் வதிபவராகக் கருதப்பட்டுள்ள தனியாள் ஒருவர், முந்நூற்றி அறுபத்தைந்து நாட்களைக் கொண்ட இடையறாத காலப் பகுதியொன்றுக்கு அவர் தொடர்ந்து இலங்கையில் இல்லாதிருக்கின்றவாறான அத்தகைய காலம்வரை இலங்கையில் வதிகின்றவராகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய ஆள் அவ்வாறு இல்லாதவராக இருக்கின்றவிடத்து அவர் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படி இருப்பினும், அத்தகைய இல்லாமை ஆரம்பிக்கின்ற மதிப்பீட்டு ஆண்டின் ஆரம்பத்திலிருந்து வதிவற்றவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஆளொருவர், கூட்டு மொத்தமாக முப்பது நாட்களை விஞ்சாத ஏதேனும் காலப்பகுதிக்கு அல்லது எவையேனும் காலப்பகுதிகளுக்கு அவர் இலங்கையில் இருந்திருப்பதைத் தவிர, (3) ஆம் உட்பிரிவின் கீழ் வதிவற்றவராகக் கருதப்பட்டிருக்கக்கூடியவிடத்து, முப்பது நாட்களை விஞ்சாத அத்தகைய காலப்பகுதி அல்லது காலப் பகுதிகள், அது அல்லது அவை அவரால் இலங்கைக்கு வெளியே கழிக்கப்பட்டுள்ளதாக அல்லது கழிக்கப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.".

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''1986 ஏப்பிறல் 1 ஆம் தேதி அன்று அல்லது அதற்குப் பின்னர், அத்துடன்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''1986, ஏப்பிறல் 1 ஆம் தேதி அன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனுல் 1988, ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர், அத்துடன்'' என்னும் சொற்களை யும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(3) (அ) 1988, ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டு ஆண் டிற்கு, ஆளொருவர் ஆளாகக் கூடிய செல்வ வரியின்; அத்துடன்

(ஆ) அம் மதிப்பீட்டு ஆண்டிற்கு அத்தகைய ஆள் ஆளாகக் கூடிய வருமான வரியில்,

கூட்டுமொத்தத் தொகையானது (இச்சட்டத்தின் கீழ் வருமான வரியில் இருந்து விலக்களிக்கப்பட்ட வதிவிடம் ஒன்றினதும் அத்துடன் ஏதேனும் மானியத்தினதும் தேறிய வருடாந்த மதிப்புத் தவிர்ந்த) எவையேனும் இலாபங்கள் அத்துடன் வருமானம் ஆகியவற்றின் கூட்டு மொத்தத் தொகையும் (இவை இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் கீழ் வருமான வரியில் இருந்து விலக்களிக்கப்பட்ட இலாபங்களும், வருமானமும், அத்துடன் அவ் விலக்களிப்பு இல்லாவிட்டால் அத்தகைய மதிப்பீட்டு ஆண்டுக்கான அவ்வாளின் மதிப்பீடு செய்யக்கூடிய வருமானத்தைக் கணிக்கையில் கணக்கில் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கும்) அம் மதிப்பீட்டு ஆண்டுக்கான அவ்வாளினது மதிப்பீடு செய்யப் படக்கூடிய கூட்டு மொத்தத் தொகையின் ஐம்பது சதவீதத்தை விஞ்சுகின்ற விடத்து, அத்தகைய மேல் மிகையானது, அவர் அம்மதிப்பீட்டு ஆண்டுக்குச் செலுத்துவதற்கு ஆளாக வேண்டிய செல்வ வரிக்கு எதிராக எதிரீடு செய்யப்படல் வேண்டும்.''.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவானது அப்பிரிவின் காப்பு வாசகத்தின் ''23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தி'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (உ) அல்லது பந்தி (உஉஉ)'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 92 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(2) (அ) முற்போந்த உட்பிரிவுகளின் நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதியினுல் குறித்துரைக்கப்பட்டவாறுன அத்தகைய படிவத்தில் இல்லாததும் அத்துடன் அத்தகைய விபரங்களைக் கொண்டிராததுமான வருமானம் அல்லது செல்வம் பற்றிய விபரத் திரட்டொன்றைக் கொடுத்துத் தீர்க்கின்ற ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தம்முடைய வருமானம் அல்லது செல்வம் பற்றிய விபரத் திரட்டொன்றைக் கொடுத்துத் தீர்க்கவில்லை எனக் கருதப்படல் வேண்டும்.''.

22\. முதன்மைச் சட்டவாக்கத்தின் 115 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னர் அத்துடன் ''அம் மதிப்பீட்டு ஆண்டின் இறுதியில்; அத்துடன்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அம் மதிப்பீட்டு ஆண்டின் இறுதியில்; மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னர் செய்யப்படுதலாகாது;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்:

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''அம்மதிப்பீட்டு ஆண்டின் இறுதியில் இருந்து மூன்று ஆண்டுகள் முடிவடைந்த பின்னர்;'', என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அம் மதிப்பீட்டு ஆண்டின் இறுதியில் இருந்து மூன்று ஆண்டுகள் முடிவடைந்த பின்னர் செய்யப்படுதல் ஆகாது அத்துடன்''; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அவ் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(இ) விபரத்திரட்டு தரப்படுகின்ற மதிப்பீட்டு ஆண்டின் இறுதியில் இருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்னர், அம்மதிப்பீட்டு ஆண்டின் இறுதியை அடுத்துவரும் அடுத்த நவம்பர் முப்பதாம் நாளுக்குப் பின்னர், ஆனல் அடுத்த அடுத்துவரும் ஆண்டில் மார்ச் முப்பத்தோராம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் விடயத்திற்கேற்றவாறு, தம்முடைய வருமானத்தைப் பற்றிய அல்லது செல்வத்தைப் பற்றிய விபரத்திரட்டு ஒன்றைத் தங்கியிருக்கின்ற ஆள் எவரினுலும், 1988 ஏப்பிறில் (1) ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் மதிப்பீட்டு ஆண்டிற்கு, இச்சட்டத்தின் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான, விடயத்திற்கேற்றவாறு வருமான வரியின் அல்லது செல்வ வரியின் வரி மதிப்பீடு செய்யப்படுதல் ஆகாது;''.

23\. முதன்மைச் சட்டவாக்கத்தின் 118 ஆம் பிரிவு அப்பிரிவில் ''செயலதிகாரி'' என்னும் சொல் இடம் பெறும் இடங்களில் எல்லாம் ''செயலாளர்'' என்னும் சொல்லைப் பதிலுக்கு இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

24\. முதன்மைச் சட்டவாக்கத்தின் 119 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் உள்ள ''செயலதிகாரி'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''செயலாளர்'' என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

25\. முதன்மைச் சட்டவாக்கத்தின் 121 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள ''செயலதிகாரி'' என்னும் சொற்களுக்குப் பதிலாகச் ''செயலாளர்'' என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

26\. முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள ''செயலதிகாரி'' என்னும் சொல்லுக்குப் பதிலாகச் ''செயலாளர்'' என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு, ''நிறைவேற்று அலுவலர்'' என்னும் வரைவிலக்கணத்தில் இடம் பெறும் ''ஆயிரத்தைந்நூறு ரூபாவுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஐயாயிரம் ரூபாவுக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அட்டவணையின் ''பாகம் 11இ'' என்பதில் இடம் பெறும் ''1986 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கும் அத்துடன் அவ்வரிமதிப்பீட்டாண்டினை உடனடுத்தும் வரி மதிப்பீட்டாண்டிற்குமான'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது,''; அத்துடன்

(2) அவ்வட்டவணையின் பாகம் 11இ என்பதனை உடனடுத்துப் பின்வரும் அட்டவணையை உட்புகுத்துவதன் மூலமும்:—

''பாகம் 11 ஈ

1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கான வருமான வரி வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும்:—

| | | |
|---|---|---|
| வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் முதல் 21,000 ரூபாவுக்கு | — | 10 வீதம் |
| வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 24,000 ரூபாவுக்கு | — | 20 வீதம் |
| வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் அடுத்த 24,000 ரூபாவுக்கு | — | 30 வீதம் |
| வரி விதிக்கற்பாலதான வருமானத்தின் மிகுதிக்கு | — | 40 வீதம்.''. |

29. (அ) இச்சட்டத்தின் பிரிவு 15 (3), பிரிவு 15 (4) என்பனவற்றின் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், எல்லா நோக்கங்களுக்குமாக 1986 நவம்பர் 12 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) இச்சட்டத்தின் பிரிவு 4, பிரிவு 10 (2), பிரிவு 10 (3), பிரிவு 10 (4) (அ) பிரிவு 11, பிரிவு 14 (2) (எ) (11), பிரிவு 20 என்பனவற்றின் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், எல்லா நோக்கங்களுக்குமாக 1987 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) இச்சட்டத்தின் பிரிவு 2, பிரிவு 15 (5) என்பனவற்றின் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், 1987 நவம்பர் 17 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டனவாகக் கருதப்படல் வேண்டும்.

# 1988 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க மொத்த விற்பனே வரவு வரி (திருத்தச்) சட்டம்

*[1988, மாச்சு 24 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனே வரவு வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டமானது 1988 அம் ஆண்டின் 6 ஆம் இலக்க, மொத்த விற்பனே வரவு வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனே வரவு வரிச் சட்டத்தின் 49 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவினே உட்புகுத்துவதன் மூலமும்:—

''(4அ) ஐந்தாம் உட்பிரிவினதும் (6) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, பொருட்களே உற்பத்தி செய்யும் அல்லது தயாரிக்கும் தொழிலேக் கொண்டு நடாத்துகின்றவரும் (இதன் பின்னர் இப்பிரிவில் ''வழங்குநர்'' எனக் குறிப்பீடு செய்யப்படுபவருமான) எவரேனும் ஆள், அத்தகைய பொருட்களே எவரேனும் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்குகின்ருர் எனவும், அத்தகைய வழங்குகை தொடர்புபட்ட ஏற்றுமதியின் வெளிநாட்டுச் செலாவணிப் பெறுமதியில் இலங்கைக்கான பண அனுப்புகைக்குரிய சர்வதேச நாணயக் கடிதத்துக்கு எதிராக ஒன்றுக்கொன்று ஆதரவு என்ற அடிப்படையில் இலங்கையில் உள்ள வங்கி ஒன்றில் திறக்கப்பட்ட நாணயக் கடிதத்தின்மூலம் அத்தகைய வழங்குகையானது மேவப்பட்டது எனவும், அத்துடன்—

(i) அவ்வாறு வழங்கப்பட்ட பொருட்களின் உற்பத்தியில் அல்லது தயாரிப்பில் அத்தகைய வழங்குநரால் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்கள் தொடர்பில் பிரதான சுங்கச் சேகரிப்பாளருக்கு அத்தகைய வழங்குநரால் மொத்த விற்பனே வரவு வரி உண்மையில் செலுத்தப்பட்டதென்றும்; அல்லது

(ii) (அ) அத்தகைய பொருளே உற்பத்தி செய்வதற்கு அல்லது தயாரிப்பதற்குச் சார்த்தப்படக்கூடியவாறுன அத்தகைய மூலப்பொருட்களேக் கொள்வனவு செய்வதற்காக அத்தகைய வழங்குநரால் செலுத்தப்பட்ட விலே எந்த உற்பத்தியாளரிடமிருந்து அல்லது தயாரிப்பாளரிடமிருந்து அத்தகைய மூலப்பொருட்கள் கொள்

DISCARDED

வனவு செய்யப்பட்டனவோ அந்த உற்பத்தியாளருக்கு அல்லது தயாரிப்பாளருக்குச் செலுத்தப்பட்டதென வும்; அத்துடன்

(ஆ) அத்தகைய மூலப்பொருட்களுக்குச் சார்த்தப்படக் கூடியவாறுன அவரது தொழிலின் மொத்த விற்பனை வரவு தொடர்பில் அத்தகைய மூலப்பொருட்களின் தயாரிப்பாளரால் அல்லது உற்பத்தியாளரால் மொத்த விற்பனை வரவு வரி உண்மையில் செலுத்தப்பட்ட தெனவும்,

ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுகின்றவிடத்து, அத் தகைய பொருளின் உற்பத்தியில் அல்லது தயாரிப்பில் பயன்படுத்தப் பட்ட மூலப் பொருட்களுக்குச் சார்த்தப்படக்கூடியவாறுன வழங்கு நரால் செலுத்தப்பட்ட மொத்த விற்பனை வரவு வரியின் அத்தகைய தொகை ஆணையாளர் தலைமையதிபதியினுல் அத்தகைய வழங்கு நருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்'';

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் ''(3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள்'' எனும் சொல்லமைப்புக்குப் பதிலாக ''(3) ஆம், (4) ஆம், (4அ) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள்'' எனும் சொல் லமைப்பை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) ஆரும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட் பிரிவை இடுவதன்மூலமும்:—

''(6) மூன்றும் உட்பிரிவின், (4) ஆம் உட்பிரிவின் அல்லது (4அ) ஆம் உட்பிரிவின் கீழான கொடுப்பனவு எதுவும், ஏதேனும் பொருளை ஏற்றுமதி செய்ததன் அல்லது வழங்கியதன் பின்னர் மூன்று மாதங்களுக்கு முந்தாமலும் ஒன்பது மாதங்களுக்குப் பிந் தாமலும் அத்தகைய பொருளின் ஏற்றுமதியாளரால் அல்லது வழ ங்குநரால் அத்தகைய கொடுப்பனவுக்கான எழுத்திலான கோரிக்கை யொன்று செய்யப்பட்டாலொழிய அத்தகைய பொருள் தொடர்பில் அல்லது அத்தகைய பொருள் ஏற்றுமதி செய்யப்பட்ட அல்லது வழங்கப்பட்ட கொள்கலன் பாத்திரம் அல்லது சுற்றளவு தொடர் பில் ஆணையாளர் தலைமையதிபதியால் கொடுப்பனவு எதுவும் செய் யப்படுதலாகாது''.

3. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினுல் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 1988 சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

# 1988 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பணச் சட்ட (திருத்தச்) சட்டம்

*[1988, மார்ச்சு மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

## பணச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பணச் சட்ட (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் பணச்சட்டத்தின் 10 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(ஆஆ) 117 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், வீடமைப்பு நோக்கங்களுக்காக, அசைவற்ற, ஆதனத்தின் ஈட்டின்மேல் அல்லது வேறு வகையாக, பிணைப் பொறுப்பின்மீது, மத்திய வங்கி அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் கடன்கள் அத்துடன் முற்பணங்கள் என்பவற்றை வழங்கலாம்;''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து, பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:—

''எந்தப் பதவிக்கு அல்லது நிலைக்குச் சம்பளம் அல்லது ஊதியம் பகிரங்க நிதிகளிலிருந்து கொடுபடற்பாலதோ, அந்தப் பதவி அல்லது நிலை எதனிலும் சேவையாற்றுவதற்கெனத் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ளவரான அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றாகவுள்ள ஏதேனும் வங்கித் தொழில் நிறுவனத்தின் பணிப்பாளர் ஒருவராக இருக்கின்றவரான மத்திய வங்கியின் அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவர், பிரதி ஆளுநர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியிலுள்ளதெதுவும் தகுதியற்றவராக்குவதாகக் கொள்ளப்படுதலாகாது.'';

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''(ஈ) சபையின் அபிப்பிராயப்படி தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவர் தவறியுள்ளவராகவிருந்தால்:

ஆயின், இந்தப் பிரிவிலுள்ளதெதுவும் எந்தப் பதவிக்கு அல்லது நிலைக்கு சம்பளம் அல்லது வேறு ஊதியம் பகிரங்க நிதிகளிலிருந்து கொடுபடற்பாலதோ, அந்தப் பதவி அல்லது நிலை எதிலும் சேவை யாற்றுவதற்கு அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமாகவுள்ள ஒரு வங்கித் தொழில் நிறுவனத்தில், அவ்வங்கித்தொழில் நிறுவனத்தின் பணிப் பாளரொருவராகச் சேவையாற்றுவதற்கு (3) ஆம் உட்பிரிவின்கீழ் தற்காலிகமாக விடுக்கப்பட்டுள்ளவரான பிரதி ஆளுநர் எவரையும், அத்தகைய பிரதி ஆளுநர், அத்தகைய பதவியை அல்லது நிலையை வகிக்கிறார் அல்லது அத்தகைய பணிப்பாளராக இருக்கிறார் என்ற காரணத்திற்காக மாத்திரம் அத்தகைய பிரதி ஆளுநரெவரையும், அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பதவியிலிருந்து அகற்றப்படுவதற்குப் பணச் சபைக்குத் தத்துவமளிப்பதாகக் கொள்ளப்படுதலாகாது.''.

(இ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட் பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(3) பணச் சபையானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அதே போன்ற ஒருப்பாட்டுடன் பணச் சபையினால், தீர்மானிக்கப்படக் கூடியவாறான அதே நியதிகளின்மீது—

(அ) எப்பதவிக்குரிய அல்லது நிலைக்குரிய சம்பளம் அல்லது வேறு ஊதியம் பகிரங்க நிதிகளிலிருந்து கொடுபடற் பாலதோ அப்பதவியில் அல்லது நிலையில் சேவையாற்று வதற்கு;

(ஆ) பகிரங்க கூட்டுத்தாபனம் ஒன்றாகவிருக்கும் வங்கித் தொழில் நிறுவனமொன்றில், அவ்வங்கித்தொழில் நிறு வனத்தின் பணிப்பாளரொருவராகச் சேவையாற்று வதற்கு,

பிரதி ஆளுநரொருவரைத் தற்காலிகமாக விடுவிக்கலாம். இப்பிரிவினது நோக்கங்களிற்காக ''பகிரங்கக் கூட்டுத்தாபனம் என்பது அரசியலமைப் பின் 170 ஆம் உறுப்புரையிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 120 ஆம் பிரிவை உடனடுத்து, பின் வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்ட வாக்கத்தின் 120அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

''மத்திய வங்கியின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் விடுவித்தல்.

120அ. பணச் சபையானது, 23 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அரசாங்கத்தின் வேண்டு கோளின்பேரில் அல்லது வேறுவகையாக மத்திய வங்கியின் அலு வலர் அல்லது சேவையாளர் எவரையும், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளரின் சம்மதத்துடன், பணச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளின் மீதும் நிபந்தனைகளின்மீதும் மத்திய வங்கிக்கு வெளியே ஏதேனும் பதவி யில் அல்லது நிலையில் சேவையாற்றுவதற்குத் தற்காலிகமாக விடுவிக்கலாம்.''.

# 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டம்

*[1988, ஓகத்து மாதம் 25 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆட்களுக்கு உரிமமளிப்பதற்கான நடவடிக்கை முறையொன்றை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்காகவும், வங்கித்தொழில் தொடர்பான கருமங்களை ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்துவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. (1) இச்சட்டம், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் (V ஆம் பாகம் தவிர) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேதியன்று (இது, இதனகத்துப் பின்னர் ''நியமிக்கப்பட்ட தேதி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் V ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

## பாகம் 1

### வங்கித்தொழிலைக் கொண்டு நடாத்தும் ஆட்களுக்கு உரிமமளித்தல்

2. (1) அமைச்சரின் அங்கீகாரத்துடன் பணச் சபையினால் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின்கீழ் கம்பெனியொன்றினால் தவிர நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன் பின்னர் வங்கித்தொழில் எதுவும் கொண்டு நடாத்தப்படலாகாது.

(2) அத்தகைய கம்பெனி இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாக இருக்குமிடத்து, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் XIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகளோடு அத்தகைய கம்பெனி இணங்கியொழுகியிருந்தாலன்றி உரிமம் எதுவும் வழங்கப்படலாகாது.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதான ஏதேனும் கம்பெனி இதனகத்துப் பின்னர் ''உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி'' எனக் குறிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளினதும் அத்துடன் இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், நியமிக்கப்பட்ட தேதியன்று வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துபவையும், இச்சட்டத்துக்கான

1 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவையுமான வர்த்தக வங்கிகள் யாவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க உரிமம் வழங்கப்படுதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவை மீறி வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஏதேனும் கம்பெனி, இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக ''கம்பெனி'' என்பது, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பெனியொன்று எனப் பொருள்படுவதுடன், இலங்கைக்கு வெளியில் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட, அல்லது ஏதேனும் வெளிநாட்டின் நியதிச் சட்டம் எதனையும் அரச பட்டயம் எதனையும் அல்லது உரிமையோலை எதனையும் பின்பற்றி அமைக்கப்பட்ட கம்பெனியொன்றையும் அத்துடன் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழு ஒன்றையும் உள்ளடக்கும்; அத்துடன் மத்திய வங்கியை, அல்லது 1 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வங்கிகள் நீங்கலாக இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதான தனியார் கம்பெனியொன்றை உள்ளடக்குதலாகாது.

3. (1) உரிமமொன்றுக்கான விண்ணப்பமொன்று, பணச் சபையினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில், பணச் சபைக்கு எழுத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(2) உரிமமொன்றுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வருவனவற்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்:—

(அ) கம்பெனியின் அமைப்புப் புறவிதிகளினதும் அமைப்பு அகவிதிகளினதும் அல்லது கம்பெனியின் அமைப்புவிதியினதும் அல்லது அதனுடன் சேர்ந்த வேறு ஏதேனும் ஆவணத்தினதும் பிரதியொன்று;

(ஆ) உரிமமானது எந்த ஆண்டில் விண்ணப்பிக்கப்படுகின்றதோ அந்த ஆண்டுக்கு முற்போந்த ஆண்டு தொடர்பில், கம்பெனியின் ஐந்தொகையினதும் இலாபநட்டக் கணக்கினதும் (ஏதேனுமிருப்பின்) பிரதியொன்று; அத்துடன்

(இ) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றினால் விண்ணப்பமொன்று செய்யப்படும் விடயத்தில், இலங்கையில் வங்கித் தொழிலை நடாத்துவதில் உறப்பட்ட எல்லாக் கடப்பாடுகளையும், பொறுப்புகளையும் மேவுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நிதிகள் மத்திய வங்கியினால் கோரப்படுவதன்மேல் அத்தகைய கம்பெனி ஏற்பாடு செய்யுமெனக் கூறுவதும், அதன் பணிப்பாளர்கள் சபையின் தீர்மானமொன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்படுவதுமான அத்தகைய கம்பனியின் தவிசாளரிடமிருந்து பெறப்படும் சத்தியக்கடதாசி ஒன்று.

(3) ஓராம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெறுவதன் மேல் பணச் சபையானது அத்தகைய சபை அவசியமானதெனக் கருதுகின்ற விடத்து, உரிமமொன்று வழங்கப்படவேண்டுமா அல்லவா என்பதனைத் தீர்மானிப்பதற்கென அத்தகைய வேறு ஆவணங்களை அல்லது விபரங்களைக் கொடுத்துதவும்படி விண்ணப்பகாரரைத் தேவைப்படுத்தலாம்.

(4) எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப் பட்ட கம்பெனி எதுவும்:—

(அ) அத்தகைய கம்பெனி பகிரங்கக் கம்பெனியொன்ருகப் பதிவு செய்யப் பட்டிருந்தாலொழியவும்;

(ஆ) காசோலை மூலம், உடனுண்டியல் மூலம், கட்டளை மூலம் அல்லது வேறு வகையாகக் கொரப்படுவதன்மீது மீளப் பெறுவதற்கு அமைய பண வைப்புகளை ஏற்கின்ற தொழிலைக் கொண்டு நடாத்துவதனை அத் தகைய கம்பெனியின் ஆரம்பக் குறிக்கோள்களாக அக்கம்பெனியின் அமைப்புப் புறவிதிகள் எடுத்துக்கூறினுலொழியவும்; அத்துடன்

(இ) கம்பெனியின் அமைப்புப் புறவிதிகள் வேறு ஏதேனும் வகையிலான தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாயின்; அத் தகைய தொழில் வகைகளை இச்சட்டத்துக்கான அட்டவணையில் குறித் துரைக்கப்பட்டுள்ள தொழில் வகைகளில் ஒன்றுக்கு அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்குக் கம்பெனியின் அமைப்புப் புறவிதிகள் வரையறுத் திருந்தாலொழியவும்,

உரிமமொன்றின் வழங்கலுக்கான விண்ணப்பமொன்றைச் செய்தலாகாது.

(5) ஏதேனும் முக்கியமான விபரத்தில் பொய்யானதென அல்லது பிழை வழியுய்க்கின்றதென அவர் அறிந்துள்ள தகவலைக் கொண்டுள்ள விண்ணப்பமொன் றையும் வேறு ஆவணங்களையும் (1) ஆம், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின்கீழ் சமர்ப்பிப்பவரான எவரேனும் ஆள், இச்சட்டத்தின் கீழான தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

4. (1) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதும், 3 இம் பிரிவின் கீழான உரிமமொன்றுக்காக விண்ணப்பித்துள்ளதுமான ஏதேனும் கம்பெனியை, இலங்கையில் அவர்களது தொழிலைத் தொடங்குவதற்கு முன்னர், அமைச்சரின் அங்கீகாரத்துடன் தீர்மானிக்கப்படும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் டாலர்களி லான அல்லது பெயரிடப்பட்ட ஏதைனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான பணத் தொகையொன்றை இலங்கைக்கு அனுப்புவதற்குப் பொறுப் பேற்கும்படி பணச்சபை தேவைப்படுத்தலாம். அவ்வாறு அனுப்பப்படும் தொகை யானது, அத்தகைய கம்பெனியின் குறித்தொதுக்கப்பட்ட மூலதனத்தின் பாகமாக அமையலாம் என்பதுடன் அது மத்திய வங்கியுடனுன வைப்பாக அல்லது பணச் சபையினுல் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாருன அத்தகைய வேறு முறையில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

(2) பணச்சபையானது, தேசிய பொருளாதாரத்தின் நலன் கருதி அவ்வாறு செய்தல் அவசியமானதென அல்லது உசிதமானதென அத்தகைய சபை கொள்ளு மிடத்து, மேலதிகத் தீர்மானங்களுள் கடைசித் தீர்மானத் தேதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதி முடிவடைந்த பின்னர் பண அனுப்பல் தொடர்பாகக் காலத் துக்குக் காலம் அத்தகைய தீர்மானங்களைச் செய்யலாம்.

(3) இப்பிரிவின் கீழ் செய்யப்படும் ஒரு தீர்மானம், இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டவையும், அத்தகைய ஒவ்வொரு தீர்மானத்தின் பின்னரும் உரிமத்துக்காக விண்ணப்பிக்கின்றவையுமான எல்லாக் கம்பெனிகளுக்கும் ஒரு சீராக ஏற்புடையதாதல் வேண்டும்.

5. (1) பணச்சபை ஆனது, 3 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மேல் அத்தகைய விண்ணப்பத்துடன் சேர்த்தனுப்பப்படும் ஆவணங்களையும் விபரங்களையும் கவனத்தில் கொண்டும் அத்தகைய உரிமத்தின் நியதிகளும் நிபந்தனைகளும் விண்ணப்பகாரரினல் பின்பற்றப்படுமெனத் தாம் திருப்தியடைந்ததும், இலங்கையில் வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு விண்ணப்பகாரருக்கு அதிகாரமளிக்கும் உரிமமொன்றை அமைச்சரின் அங்கீகாரத்துடன் விண்ணப்பகாரருக்கு வழங்குதல் வேண்டும்.

(2) உரிமம், பின்வருவனவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும்:—

(அ) வங்கியானது, உள்ளூர் வங்கித் தொழிலை அல்லது கரைகடந்த வங்கித் தொழிலை அல்லது அத்தகைய தொழில்கள் இரண்டையும் கொண்டு நடாத்த வேண்டுமா என்பது; அத்துடன்

(ஆ) ஏதேனும் வங்கி, எந்த இடத்துக்குள் அல்லது இடங்களுக்குள் அல்லது இடப்பரப்புக்குள் தொழில்களைக் கொண்டு நடாத்தலாம் என்பது.

(3) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும், (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதற்கு வழங்கப்பட்ட உரிமத்தின் பிரதியை, அத்தகைய ஏதேனும் வங்கியின் வளவுக்குள் துலாம்பரமானதோர் இடத்தில் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

6. (1) பதினேழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எதுவும்—

(அ) உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட தொழில் தவிர்ந்த வேறேதேனும் வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்தலாகாது; அல்லது;

(ஆ) இச்சட்டத்துக்கான 11 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவை ஏதேனும் தவிர்ந்த வேறு வகையினதான தொழில் எதனையும் கொண்டு நடாத்துதல் ஆகாது,

7. முறையே (397 ஆம் அத்தியாயமான) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் கீழும் 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழும் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கியையும் அல்லது மக்கள் வங்கியையும், அத்துடன் 1985 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கியையும் முறையே அத்தகைய வங்கிகளுள் ஒவ்வொன்றுக்கும் ஏற்புடையவான மேற்கூறப்பட்ட நியதிச் சட்டங்களின்மூலம் அவற்றின் கீழும் அத்தகைய வங்கி ஒவ்வொன்றுக்கும் அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதில் மட்டுப்படுத்தும் வகையில் இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளில் அடங்கியுள்ள எதுவும் பொருள் கொள்ளப்படலாகாது.

8. (1) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் அத்தகைய வங்கியினல் கொண்டு நடாத்தப்படும் வெவ்வேறு வகுப்பினவான வங்கித் தொழிலைக் கவனத்தில் கொண்டு, பணச் சபையினல் தீர்மானிக்கப்படக் கூடியவாறன அத்தகைய ஆண்டு உரிமக் கட்டணத்தை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

(2) உரிமக் கட்டணமாகக் கொடுபடற்பாலதான தொகையையும் அத்தகைய கட்டணம் எம்முறையில் கொடுபட வேண்டும் என்பதையும் உரிமமளிக்கப்பட்ட அத்தகைய வர்த்தக வங்கி ஒவ்வொன்றுக்கும் பணச் சபை அறிவித்தல் வேண்டும்.

(3) வங்கித் தொழிலின் வகுப்புகள் தொடர்பில் உரிமக் கட்டணம் தீர்மானிக்கப்படுமிடத்து, அத்தகைய கட்டணமானது, அத்தகைய வகுப்பினவான வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற எல்லா வங்கிகளுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

9. (1) உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி—

(அ) ஐந்தாம் பிரிவின்கீழ் உரிமம் வழங்கப்பட்டதிலிருந்து ஒன்பது மாதங்களுக்குள் தொழில் தொடங்குவதற்குத் தவறுமிடத்து; அல்லது

(ஆ) அதனுல் உறப்பட்ட கடன்கள் எவற்றையும் அத்தகைய கடன்கள் கொடுக்குமதியாகியதன்மேல் செலுத்துவதற்குத் தவறுமிடத்து; அல்லது

(இ) அதற்கெதிராக நிவாரண மனு அல்லது வழக்கு கோப்பிடப்பட்டிருக்குமிடத்து ஏதேனும் வங்கி முறிவுச் சட்டத்தின்கீழ் அல்லது கடனுளிகளுக்கு நிவாரணமளிப்பதற்கு ஏற்பாடு செய்யும் அல்லது கடனுளிகள் தொடர்பான வேறேதேனும் சட்டத்தின்கீழ் அது தொடர்பில் கட்டுக்காப்பாளர் அல்லது பெறுநர் ஒருவரை நியமித்திருக்குமிடத்து; அல்லது

(ஈ) வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்தாதொழிந்திருக்குமிடத்து, பணச் சபையானது, அத்தகைய வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை அது இல்லாதாக்குமென அறிவித்தல் வழங்கலாமென்பதுடன், அத்தகைய அறிவித்தலை உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று, (1) ஆம் உட்பிரிவின் கீழான இல்லாதாக்கல் கட்டளைக்கெதிராக, அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் 5 ஆம் பிரிவின்கீழ் அதற்கு வழங்கப்பட்ட உரிமத்தை அவ்வாறு ஏன் இல்லாதொழிக்கக் கூடாது என்பதற்கான காரணங்களைக் கொடுத்து, பணச் சபைக்கு எழுத்திலான ஆட்சேபனைகளைத் தெரிவிக்கலாம்.

(3) இல்லாதாக்கல் பற்றிய அறிவிப்புத் தேதியிலிருந்து அறுபது நாட்கள் முடிவடைந்த பின்னரும், அத்துடன் (2) ஆம் உட்பிரிவின்கீழ் பணச் சபையின் முன்னர் வைக்கப்பட்ட ஆட்சேபனைகளைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னரும், பணச் சபையானது, அத்தகைய அறிவித்தலை மீளப் பெறுதல் வேண்டும் அல்லது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்குதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வங்கிக்கு அறிவிப்புச் செய்தலும் வேண்டும்.

(4) உரிமமொன்று, (3) ஆம் உட்பிரிவின் கீழ் இல்லாதாக்கப்படுதல் ஆனது—

(அ) இல்லாதாக்குதலுக்கு எதிரான மேன்முறையீடு முன்னப்படுவதற்கான காலப்பகுதி முடிவடைந்த பின்னர், அத்தகைய மேன்முறையீடு (5) ஆம் உட்பிரிவின் கீழ் முன்னப்படுமிடத்து; அல்லது

(ஆ) இல்லாதாக்கப்படல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், இல்லாதாக்கலுக்கு எதிரான மேன்முறையீடு (5) உட்பிரிவின்கீழ் முன்னப்படுமிடத்து

அது பயனுக்கு வருதல் வேண்டும், அத்துடன் அத்தகைய இல்லாதாக்கல் பற்றிய அறிவிப்பு சாற்றில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(5) மூன்றும் உட்பிரிவின் கீழ் ஏதேனும் இல்லாதாக்கல் தொடர்பில் பணச் சபையின் முடிவொன்றினல் இடருறும் ஆளெவரும், அத்தகைய இல்லாதாக்கல் பற்றி சபையால் அறிவிக்கப்பட்ட பதினுலு நாட்களுக்குள் அத்தகைய முடிவுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(6) இப்பிரிவின்கீழ் மேன்முறையீடுகள் தொடர்பாக அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ் விதிகள் ஆக்கப்படும்வரை, மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கான மீளாய்வு என்ற வகையில் விண்ணப்பங்கள் தொடர்பில் அந்த உறுப்புரையின் கீழ் ஆக்கப்பட்ட விதிகள் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட மேன்முறையீடு ஒவ்வொன்றிற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) மேன்முறையீட்டு நீதிமன்றமானது (5) ஆம் உட்பிரிவின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின்மீது எந்த முடிவுக்கெதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த முடிவை உறுதிப்படுத்தலாம், மீளாய்வு செய்யலாம், திரிபுபடுத்தலாம் அல்லது இல்லாதாக்கலாம் என்பதுடன், நீதியின் அக்கறைகள் தேவைப்படுத்தக் கூடியவாறு வேறு ஏதேனும் கட்டளையை ஆக்கலாம்.

10. (1) உரிமமொன்றை இல்லாதாக்குவதற்கான அறிவித்தலொன்று 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணச் சபையினல் வழங்கப்பட்டுள்ளவிடத்து, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்குச் சபை பின்வருமாறு பணிப்புகள் விடுக்கலாம்:—

(அ) அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் முறையில் அதன் சொத்துக்களைக் கையாள்வதை அல்லது கையுதிர்ப்பதைத் தடைசெய்தல்;

(ஆ) அவ்வாறு குறித்துரைக்கப்படும் ஏதேனும் கொடுக்கல் வாங்கலை அல்லது ஏதேனும் வகுப்பினவான கொடுக்கல் வாங்கல்களைச் செய்துகொள்வதைத் தடைசெய்தல்; அல்லது

(இ) வைப்புகளைப் பரிந்து கேட்பதைத் தடைசெய்தல்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புகளோடு இணங்கியொழுகுவதற்கு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று தவறியுள்ளவிடத்து பணச்சபை பின்வருமாறு மேலும் பணிக்கலாம்:—

(அ) அத்தகைய வங்கி அதன் தொழிலை இலங்கைக்குள்ளும் அத்துடன், இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான வங்கியொன்றின் விடயத்தில், அதன் தொழிலை இலங்கைக்குள்ளும் இலங்கைக்கு வெளியிலும் உடனடியாக இடைநிறுத்தி வைப்பதற்கும்; அத்துடன்

(ஆ) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், வங்கியின் தொழிலையும் அதன் புத்தகங்கள், பதிவேடுகள், சொத்துக்கள் என்பவற்றையும் பொறுப்பேற்பதற்கும், அத்துடன் வங்கியின் மேற்பார்வைப் பணிப்பாளர், பணச்சபையின் பணிப்புடன் இணங்கியொழுகுவதற்கு அவருக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடபடிகளை எடுத்தல் அவருக்குச் சட்டமுறையாதலும் வேண்டும்.

(3) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், (2) ஆம் உட்பிரிவின்கீழ் எல்லாப் புத்தகங்களையும், பதிவேடுகளையும் சொத்துக்களையும் பொறுப்பேற்குமிடத்தும் அத்துடன் பணச்சபை இல்லானதாக்கலை நிபந்தனையின்றி மீளப் பெறுமிடத்தும், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரை, அவரது கட்டுக்காப்பில் எடுத்துக் கொண்ட புத்தகங்களையும், பதிவேடுகளையும், சொத்துக்களையும் உடனடியாக அத்தகைய வங்கியிடம் ஒப்படைக்கும்படி பணச்சபை பணித்தல் வேண்டும்.

(4) அப்போதைக்கு வலுவிலுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், இப்பிரிவின்கீழ் நல்லெண்ணத்துடன் விடுக்கப்பட்ட எவையேனும் பணிப்புகள் தொடர்பிலும் அத்தகைய ஏதேனும் பணிப்புக் காரணமாக உறப்பட்ட அல்லது உறப்படும் சாத்தியங் கொண்ட அல்லது உறப்பட்டதெனச் சார்த்தப்படும் நட்டம் அல்லது சேதம் தொடர்பிலும், ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் அல்லது வழக்கு நடவடிக்கைகள் எவையும் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கியினால் தொடுக்கப்படலாகாது.

11. (1) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் உரிமமொன்று இல்லாதாக்கப்படுமிடத்து, உரிமமளிக்கப்பட்ட அந்த வர்த்தக வங்கியை, இலங்கையில் அதன் தொழிலை உடனடியாக இடைநிறுத்தும்படியும் அத்துடன் இலங்கைக்குள் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் விடயத்தில், இலங்கைக்குள்ளும் இலங்கைக்கு வெளியிலும் அதன் தொழில் உடனடியாக இடைநிறுத்தும்படியும் பணச்சபை பணித்தல் வேண்டும்; அத்துடன் அதன் தொழிலையும் அதன் புத்தகங்களையும், பதிவேடுகளையும், சொத்துக்களையும், பொறுப்பேற்கும்படியும், அத்தகைய வர்த்தக வங்கியினால் வங்கித் தொழிலைத் தொடர்ந்து நடாத்தப்படுவதனைத் தடுப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடபடிகளை எடுக்கும்படியும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரைப் பணித்தலும் வேண்டும். பணச்சபையின் பணிப்புடன் இணங்கியொழுகுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கையை எடுத்தல் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குச் சட்டமுறையாதல் வேண்டும்.

(2) அப்போதைக்கு வலுவிலுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் இலங்கைக்குள் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக் கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று தொடர்பில் உரிம மொன்று இல்லாதாக்குகை செய்யப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய வங்கியின் தொழிலை ஒடுக்கத் தொடங்குவதற்கெனத் தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுடைய நீதிமன்றமொன்றுக்கு வங்கியின் மேற்பார்வைப் பணிப்பாளர் உடனடியாக விண் ணப்பம் செய்ய வேண்டும். இச்சட்டத்தின் VIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க வங்கியை ஒடுக்குகின்ற நோக்கங்களுக்காக அவர் ஒழித்துக்கட்டுநராக நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(3) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று தொடர்பில் உரிமமொன்று இல்லாதாக்குகை செய்யப் பட்டிருக்குமிடத்து, இலங்கைக்குள் தாபிக்கப்பட்ட கிளையின் தொழிலைக் கொண்டு நடாத்துவதில் உறப்பட்ட கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் அது கௌரவிக்க வேண்டுமென வங்கியின் மேற்பார்வைப் பணிப்பாளர் அத்தகைய வங்கியின் தலைமை அலுவலகத்துக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்; அத்துடன் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க இது தொடர்பாக வழங்கப் பட்டிருக்கக் கூடியவாறான அத்தகைய ஏதேனும் பொறுப்பேற்பை வலியுறுத்து வதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடபடிகளை அவர் எடுத்தலும் வேண்டும்.

(4) பணச்சபையானது, இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம், (3) ஆம் உட் பிரிவுகளில் விதிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு மேலதிகமாக உரிமமளிக்கப் பட்ட அவ்வர்த்தக வங்கி தொடர்பில் அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய வேறு நடபடிகளைப் பின்வருவன மூலம் எடுக்கலாம்:—

(அ) அத்தகைய வங்கியின் தொழில் தொடர்பில் அவசியமெனச் சபை கொள்ளக்கூடியவாறான ஏதேனும் நடவடிக்கையை உடனடியாக எடு க்குமாறு அல்லது ஏதேனும் செயலை அல்லது காரியத்தை உடனடியாகச் செய்யுமாறு அத்தகைய வங்கியைத் தேவைப்படுத்துதல்;

(ஆ) அத்தகைய வங்கியின் தொழிலைத் தகுந்த முறையில் நடாத்துவது தொடர்பாக அத்தகைய வங்கிக்கு ஆலோசனை கூறுவதற்குத் தகுதி யுடையவரும் தகுந்தவருமான ஆளொருவரை நியமித்தல்;

(இ) அத்தகைய வங்கியினது தொழிலின் கட்டுப்பாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்டு நடாத்துதல் அல்லது சபையினால் அவ்வாறு பொறுப்பேற்கப் பட்ட கட்டுப்பாட்டை, வங்கியினது தொழிலைக் கொண்டு நடாத்து வதற்கென இன்னொர் ஆளிடம் கையளித்தல்;

(ஈ) அத்தகைய வங்கியினது மூலதனத்தை அதிகரித்தல், புதின பங்காளி களுக்கு ஒழுங்கு செய்தல், அதன் பணிப்பாளர் சபையை மீளமைத்தல் என்பன மூலம் அதனை மீள ஒழுங்குபடுத்துதல்; அத்துடன்

(உ) அத்தகைய வங்கியுடன் ஒன்றிணையச் சம்மதிக்கும் உரிமமளிக்கப்பட்ட வேறு ஏதேனும் வர்த்தக வங்கியுடன் இணைவதற்கு அவசியமான வாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல்.

12. (1) அமைச்சரின் ஒருப்பட்டுடன் வழங்கப்பட்ட பணச் சபையின் அங்கீகாரம் பின்வருவனவற்றுக்குத் தேவைப்படுதல் வேண்டும்:—

(அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றை, அத்தகைய வங்கியின் கிளையொன்றை, முகவர் நிலையமொன்றை அல்லது அலுவலகமொன்றை இலங்கையின் எப்பாகத்திலும் திறப்பதற்கும் அல்லது மூடுவதற்கும் அல்லது ஏலவேயுள்ள ஏதேனும் தொழிலிடத்தின் அமைவிடத்தை மாற்றுவதற்கும்;

(ஆ) எழுத்திலான ஏதேனும் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின் கீழ் இலங்கைக்குள் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று, இலங்கைக்கு வெளியில் ஏதேனுமிடத்தில் கிளையொன்றை, முகவர் நிலையமொன்றை அல்லது அலுவலகமொன்றைத் திறப்பதற்கும் அல்லது மூடுவதற்கும்;

(இ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று, உரிமமளிக்கப்பட்ட வேருெரு வர்த்தக வங்கியின் தொழிலை அல்லது உரிமமளிக்கப்பட்ட வேருெரு வர்த்தக வங்கிக் கிளையினது தொழிலைக் கொள்ளுவதற்கும்;

(ஈ) எவரேனும் ஆள் அல்லது அத்தகைய ஆளின் பங்குடைமையின், கம்பெனியின் அல்லது கூட்டுத்தாபனத்தின் நியமத்தர், எழுத்திலான ஏதேனும் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின்கீழ் இலங்கைக்குள் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான அல்லது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பொருளளவிலான அக்கறையைக் கொள்ளுவதற்கும்;

இப்பந்தியின் நோக்கங்களுக்காக ''பொருளளவிலான அக்கறை'' என்பது அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் வழங்கப்பட்ட மூலதனத்தின் பத்து சதவீதத்துக்கு மேற்பட்ட வைத்திருக்கை எனப் பொருள்படும்; அத்துடன்

(உ) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டனவான அல்லது தாபிக்கப்பட்டனவான வங்கிகள், பிரதிநிதித்துவ அலுவலகமொன்றை அல்லது அத்தகைய வேறு தொழிலிடத்தை இலங்கைக்குள் திறப்பதற்கும்.

(2) ஆப்பிரிவின் கீழான அங்கீகாரம் ஆனது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன் பணச் சபையினுல் குறித்துரைக்கப்படக் கூடியவாறுன அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய வழங்கப்படலாம்.

13. (1) வங்கி மேற்பார்வை பணிப்பாளரின் அறிக்கையொன்றின்மீது பணச் சபை, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், எழுத்தில் செய்யப்படும் கட்டளை மூலம் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் கிளையொன்றின், முகவர் நிலையமொன்றின் அல்லது அலுவலகமொன்றின் மூடுதலுக்குக் கட்டளையிடுதல் உட்பட, 12 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அங்கீகாரமொன்றினை மீளப் பெறலாம் அல்லது அங்கீகாரமொன்றின் நியதிகளையும் நிபந்தனைகளையும் வேறுபடுத்தலாம். பணச் சபையின் முடிபு பற்றிய அறிவித்தல், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினுல் அத்தகைய வங்கிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன்,

அவ்வங்கியானது, கிளையின், முகவர் நிலையத்தின் அல்லது அலுவலகத்தின் எல்லாக் கடப்பாடுகளையும் நிறைவேற்றுவதுடன் எல்லாப் பொறுப்புகளையும் ஈடு செய்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதான உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி, அத்தகைய அங்கீகாரம் ஏன் மீளப் பெறப்படலாகாது அல்லது நியதிகளும் நிபந்தனைகளும் ஏன் வேறுபடுத்தப்படலாகாது என்பதற்கான காரணங்களைக் கொடுத்து, அத்தகைய கட்டளைத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் பணச் சபைக்கு எழுத்தில் ஆட்சேபனைகளைத் தெரிவிக்கலாம்.

(3) பணச் சபை ஆனது, அறிவித்தல் தேதியிலிருந்து அறுபது நாட்கள் முடிவடைந்த பின்னரும், (2) ஆம் உட்பிரிவின் கீழ் அதன் முன்னர் இடப்பட்ட ஆட்சேபனைகளைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னரும், அமைச்சரின் அங்கீகாரத்துடன்—

(அ) எழுத்தில் ஆக்கப்பட்ட கட்டளை மூலம் மீளப் பெறல் அல்லது வேறுபடுத்தல் அறிவித்தலை நிபந்தனையின்றி இல்லாதாக்கல் வேண்டும்; அல்லது

(ஆ) எழுத்தில் ஆக்கப்பட்டதும் கசெற்றில் வெளியிடப்படுவதுமான கட்டளை மூலம் அந்த மீளப் பெறுதலை அல்லது வேறுபடுத்தலைத் திரிபுடன் அல்லது திரிபின்றி உறுதிப்படுத்தல் வேண்டும்.

(4) மூடுவதற்கான கட்டளை (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டுள்ளவிடத்து, அக்கிளையில், முகவர் நிலையத்தில் அல்லது அலுவலகத்தில் பணங்களை வைப்பிலிட்டுள்ளவர்களான எல்லா ஆட்களுக்கும் அத்தகைய பணத்தை விரைவாக மீளப் பெறுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது என வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்ளுவதற்கு அச்சூழ்நிலையில் அவசியமெனத் தோன்றக்கூடியவாறான அத்தகைய வைப்பீட்டாளர்களின் நலனைப் பாதுகாக்கக்கூடிய அத்தகைய வழிவகைகள் எடுக்கப்படுகின்றன என்பதனை வலியுறுத்தும்படியும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரைப் பணச் சபை பணித்தல் வேண்டும். அத்தகைய நடபடிகளை அதற்கிணங்க எடுத்தல் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குச் சட்டமுறையாதல் வேண்டும்.

14. (1) எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் வர்த்தக வங்கி, உரிமமொன்று இல்லாமல் வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றதென நம்புவதற்கு மத்திய வங்கியின் ஆளுநருக்கு நியாயமான ஏதுக்கள் இருக்குமிடத்து, அத்தகைய ஆள் அல்லது வங்கி இச்சட்டத்தின் ஏற்பாடுகளில் எதனையும் மீறியுள்ளாரா அல்லது மீறியுள்ளதா அல்லது மீறுகின்றாரா அல்லது மீறுகின்றதா என்பதனை நிச்சயித்துக்கொள்ளும் நோக்கத்துக்காகப் புத்தகங்களையும், கணக்குகளையும் பதிவேடுகளையும் பரிசோதிக்கும்படி வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரை அல்லது மத்திய வங்கியின் வேறு எவரேனும் அலுவலரை ஆளுநர் பணிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆளுநரினால் அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அல்லது அத்தகைய வேறு அலுவலர், அத்தகைய பரிசோதனையின் நோக்கத்துக்காகப் பெறுதல் அவசியமென அவர் கொள்ளக்கூடியவாறான அத்தகைய தகவலைத் தமக்குக் கொடுத்துதவும்படி அல்லது

எவையேனும் புத்தகங்களை, குறிப்புகளை, கணக்குகளை, ரொக்கத்தை, பிணைப் பொறுப்புகளை, உறுதிச்சீட்டுகளை, வேறு ஆவணங்களை அத்துடன் பதிவேடுகளைச் சோதனைக்காகத் தமக்குக் காண்பிக்கும்படி அத்தகைய ஆளை அல்லது வங்கியைத் தேவைப்படுத்தலாம்; அத்துடன் அவ்வாறு தேவைப்படுத்தப்படும்போது விடயத்துக்கேற்றவாறு அத்தகைய தகவலைக் கொடுத்துதவுதலும் அத்தகைய புத்தகங்களை, குறிப்புகளை, கணக்குகளை, ரொக்கத்தை, பிணைப் பொறுப்புகளை, உறுதிச்சீட்டுகளை, வேறு ஆவணங்களை அத்துடன் பதிவேடுகளைப் பரிசோதனைக்கென அத்தகைய அலுவலருக்குச் சமர்ப்பித்தலும் அத்தகைய ஆளின் அல்லது அவ்வங்கியின் கடமையாதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்போது அத்தகைய தகவலைக் கொடுத்துதவுவதற்கு அல்லது எவையேனும் புத்தகங்களை, குறிப்புகளை, கணக்குகளை, ரொக்கத்தை, பிணைப் பொறுப்புகளை, உறுதிச்சீட்டுகளை, வேறு ஆவணங்களை அத்துடன் பதிவேடுகளைக் காண்பிப்பதற்குத் தவறுகின்றவரான எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழான தவறு ஒன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக அத்தகைய தகவலைக் கொடுத்துதவுவதற்கு அல்லது எவையேனும் புத்தகங்களை, குறிப்புகளை, கணக்குகளை, ரொக்கத்தை, பிணைப்பொறுப்புகளை, உறுதிச்சீட்டுகளை, வேறு ஆவணங்களை அத்துடன் பதிவேடுகளைச் சமர்ப்பிப்பதற்கு எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் வர்த்தக வங்கி மறுத்தலானது, அத்தகைய ஆள் அல்லது அத்தகைய வங்கி உரிமம் இல்லாமல் வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துகிறார் அல்லது கொண்டு நடாத்துகிறது என்பதற்கு முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

15. பணச் சபையோ அல்லது மத்திய வங்கியோ, வங்கித் தொழில் தொடர்பில் பணச் சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் கீழ் அழிக்கப்பட்ட, சுமத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளைப் பிரயோகிப்பதற்குப் புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு 5 ஆம் பிரிவின் கீழான உரிமமோ அல்லது 12 ஆம் பிரிவின் கீழான அங்கீகாரமோ தேவைப்படுகின்றதெனக் பொருள்படுவதாக இப்பாகத்தின் ஏற்பாடுகள் பொருள் கொள்ளப்படலாகாது.

## பாகம் II

### வங்கித் தொழில் பெயர்களும் விவரணங்களும்

16. (1) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று தவிர்ந்த வேறு கம்பெனி எதுவும், அதனது பெயரின் அல்லது அதனது விவரணத்தின் ஒரு பாகமாக 'வங்கி', 'வங்கியாளர்', அல்லது 'வங்கித் தொழில்' என்னும் சொற்களில் எதனையும் அல்லது அவற்றிலிருந்து மருவியவை அல்லது அவற்றிலிருந்து உருப்பெயர்ப்பு பெற்றவை எவற்றையும் அல்லது வேறு எம்மொழியிலும் அவற்றுக்குச் சமமான எதனையும் பயன்படுத்துதல் ஆகாது; ஆத்துடன் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எதுவும், அதனது பெயரின் ஒரு பாகமாக அத்தகைய பெயர்களில் ஒன்றையேனும் பயன்படுத்தினாலொழிய இலங்கையில் வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துதல் ஆகாது:

ஆயின், எவ்வாருயினும், இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டு, வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துவதும், அத்துடன் 'வங்கி', 'வங்கியாளர்', அல்லது 'வங்கித் தொழில்' எனும் சொற்களை எம்மொழியிலும் அதன் பெயரில் கொண்டிராததுமான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று, அதன்பெயரில் இச்சொற்கள் விட்டுவிடப்பட்டமையைப் பொருட்படுத்தாது அத்தகைய தொழிலை இலங்கையில் கொண்டு நடாத்தலாம்.

(2) ஏதேனும் தொழிலைக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக, குழுமம் எதுவும், தனியாள் எவரும் அல்லது தனியாட்களின் கூட்டம் எதுவும், அதனது அல்லது அவரினது பெயரின், அல்லது அதனது அல்லது அவரினது விவரணத்தின் ஒரு பாகமாக 'வங்கி', 'வங்கியாளர்' அல்லது வங்கித்தொழில், என்னும் சொற்களில் எதனையும், அவற்றிலிருந்து மருவியவை அல்லது அவற்றிலிருந்து உருப்பெயர்வு பெற்றவை எவற்றையும் அல்லது வேறு எம்மொழியிலும் அவற்றுக்குச் சமமான எதனையும் பயன்படுத்துதல் ஆகாது.

(3) இப்பிரிவில் உள்ளது எதுவும் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையதாதலாகாது:—

(அ) இச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களில் ஒன்றுக்காக அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைகளுக்காக அமைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் துணை நிறுவனத்துக்கு;

(ஆ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட அவ்வங்கிகளின் கழகம் எதற்கும்;

(இ) பணச் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் பொருளுக்குட்பட்ட வங்கித் தொழில் நிறுவனமொன்றில் அல்லது மத்திய வங்கியின் ஊழியர்களாகவுள்ள தொழிலாளர்களின் கழகம் ஒன்ருக அல்லது கூட்டு ஒன்ருக உள்ளதான, (138 ஆம் அத்தியாயமான) தொழிற் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்டதான தொழிற் சங்கமொன்றுக்கு;

(ஈ) பணச் சட்டத்தின் 127 ஆம் பிரிவில் அடங்கியுள்ள 'வங்கித் தொழில் நிறுவனம்' என்பதன் வரைவிலக்கணத்தின் (ஆ), (ஈ) என்னும் பந்திகளில் பொருளுக்குட்படும் முகவர் நிலையமொன்றுக்கு, நிறுவனமொன்றுக்கு, ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு;

(உ) கூட்டிணைக்கப்பட்டதிலிருந்து ஒரு வாரத்துக்குள்ளும் அத்துடன் விண்ணப்பம் தொடர்பில் பணச் சபையின் முடிபு அக்கம்பெனிக்கு அனுப்பிவைக்கப்படும் அத்தகைய காலம் வரையிலும் 2 ஆம் பிரிவின் கீழான உரிமமொன்றுக்காக விண்ணப்பிக்கும் கம்பெனியொன்றுக்கு;

(ஊ) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான வர்த்தக வங்கியொன்றின் பிரதிநிதித்துவ அலுவலகத்துக்கு.

17. (1) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று, அதன் துணை நிலை நிறுவனமாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றாகவிராத கம்பெனியொன்றை வைத்திருத்தல் ஆகாது;

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய வங்கியானது பணச் சபையின் எழுத்திலான அனுமதியுடன்—

(அ) வங்கித் தொழில், கணக்கியல், பெறுமான மதிப்பீடு, கருத்திட்ட மதிப்பீடு அத்துடன் கடன் மதிப்பீடு என்பன தொடர்பான விடயங்களுள் ஏதேனுமொன்றில் பயிற்சியை ஏற்பாடு செய்கின்ற தொழிலைத் தனித்துக் கொண்டு நடாத்துவதான;

(ஆ) வாடகைக் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் தொழிலைத் தனித்துக் கொண்டு நடாத்துவதான;

(இ) அபிவிருத்திக்கான இடைக்கால நீண்டகாலக் கடன் வழங்கலை எற்பாடு செய்கின்ற தொழிலைத் தனித்துக் கொண்டு நடாத்துவதான;

(ஈ) தொழிற்சாலையைக் குத்தகைக்கு விடுகின்ற, அத்துடன் குதத்தில் வைத்திருக்கின்ற தொழிலைத் தனித்துக் கொண்டு நடாத்துவதான;

(உ) முகாமைத்துவ கலந்தாலோசனைச் சேவைகளை ஏற்பாடு செய்கின்ற தொழிலைத் தனித்துக் கொண்டு நடாத்துவதான;

(ஊ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கடன்கள்மீது, கம்பெனியொன்றினால் அவ்வங்கிக்குச் செலுத்தப்படாதுள்ள மூலதனத்தையும் அதன்மீது திரண்ட வட்டியையும் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியானது மூலதனமாக்கிக் கொண்டதன் விளைவாக, அக்கம்பெனியின் பங்குகளை உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி கொள்ளுதல் செய்த காரணத்தால் மட்டுமே துணைநிலை நிறுவனமாக வருவதான;

(எ) ஆறாம் பிரிவின் காப்பு வாசகத்தின்கீழ், துணைநிலைக் கம்பெனிகளினூடாகக் கொண்டு நடாத்துவதற்கு வங்கி அதிகாரமளிக்கப்பட்டுள்ளதான வேறு ஏதேனும் விதமான தொழிலைக் கொண்டு நடாத்துவதான

துணைநிலை நிறுவனமொன்றைக் கொண்டிருக்கலாம்:

ஆயின், மேலும், இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள், இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்த வங்கியினால் நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் அமைக்கப்படும் துணைநிலை நிறுவனமொன்றுக்கு ஏற்புடையனவாதல் ஆகாது.

(2) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று அதன் துணைநிலைக் கம்பெனிகள் எதற்கும், அத்தகைய துணைநிலைக் கம்பெனியைப் போன்ற அதே மாதிரியான தொழிலைக் கொண்டு நடாத்துபவையான அவ் வங்கியின் வேறு உறுப்பமைப்புகளுக்கு அளிக்கப்படும் பராமரிப்பைவிட மேலும் சாதகமான பராமரிப்பை அளித்தலாகாது.

(3) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கம்பனியொன்று—

(i) இன்னெரு கம்பெனி அதன் ஒப்புரவுப் பங்கு மூலதனத்தின் பெயரள விலான பெறுமதியில் அரைவாசிக்கு மேல் வைத்திருந்தால்; அல்லது

(ii) இன்னெரு கம்பெனி அதன் பங்காளராகவிருந்து, அதன் பணிப்பாளர் சபையின் அமைப்பைக் கட்டுப்படுத்தினல்; அல்லது

(iii) முதற் குறிப்பிட்ட கம்பெனி, அந்த இன்னென்றின் துணைநிலை நிறுவன மாகஉள்ளதான ஏதேனும் கம்பெனியின் துணை நிலை நிறுவனமாக இருந்தால்:

மட்டுமே அந்த இன்னெரு கம்பெனியின் துணைநிலை நிறுவனமாகக் கருதப்படு தல் வேண்டும்.

(4) கம்பெனியொன்று இன்னென்றின் துணைநிலை நிறுவனமொன்ரு என் பதைத் தீர்மானிப்பதில்—

(அ) அறக்கட்டளைத் தன்மையில் அந்த இன்னென்றினல் வைத்திருக்கப்படும் எவையேனும் பங்குகள் அல்லது பிரயோகிக்கப்படற்பாலதான தத்து வம் எதுவும், அதனல் பிரயோகிக்கப்படற்பாலதல்ல எனக் கருதப் படல் வேண்டும்;

(ஆ) பந்திகள் (இ), (ஈ) என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய—

(i) அந்த இன்னென்று அறக்கட்டளைத் தன்மையில் மட்டுமே சம்பந் தப்பட்டிருக்குமிடத்துத் தவிர அந்த இன்னென்றுக்கான நியமத் தாராக எவரேனும் ஆளினல்; அல்லது

(ii) அறக்கட்டளைத் தன்மையில் மட்டுமே சம்பந்தப்பட்ட துணைநிலை நிறுவனமொன்ருக இராத, அந்த இன்னென்றின் துணைநிலை நிறுவனமொன்றினல் அல்லது அதற்கான நியமத்தர் ஒருவரினல்

வைத்திருக்கப்படும் எவையேனும் பங்குகள் அல்லது பிரயோகிக்கப் படற்பாலதான தத்துவம் எதுவும் அந்த இன்னென்றினல் வைத்திருக் கப்படுவதாக அல்லது பிரயோகிக்கப்படற்பாலதாகக் கருதப்படல் வேண்டும்;

(இ) முதற் குறிப்பிடப்பட்ட கம்பெனியின் எவையேனும் தொகுதிக் கடன் பத்திரங்களினது ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு அல்லது அத்தகைய தொகுதிக் கடன் பத்திரங்களின் வழங்கலைப் பெறுவதற்கான நம்பிக் கைப் பொறுப்பு உறுதியொன்றின் பயனைக் கொண்டு எவரேனும் ஆளினல் வைத்திருக்கப்படும் எவையேனும் பங்குகள் அல்லது பிர யோகிக்கப்படற்பாலதான தத்துவம் எதுவும் புறக்கணிக்கப்படுதல் வேண்டும்;

(ஈ) (பந்தி 'இ' என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு வைத்திருக்கப் படாததான அல்லது பிரயோகிக்கப்படற்பானதல்லாததான) அந்த இன்னொன்றினால் அல்லது அதன் துணைநிலை நிறுவனமொன்றினால் அல்லது அதன் நியமத்தரினால் வைத்திருக்கப்படும் எவையேனும் பங்குகள் அல்லது பிரயோகிக்கப்படற்பாலதான தத்துவம் எதுவும், விடயத்திற்கேற்ப அந்த இன்னொன்றின் அல்லது அதன் துணைநிலை நிறுவனத்தின் சாதாரணத் தொழில், பணம் கடன் கொடுப்பதை உள்ளடக்குவதுடன் அந்தத் தொழிலின் சாதாரண நெறியின்போது செய்து கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலொன்றின் நோக்கங்களுக்காக மட்டுமே பிணைப் பொறுப்பு என்ற வகையில் மேற்கூறப்பட்டவாறு பங்குகள் வைத்திருக்கப்படின் அல்லது தத்துவம் பிரயோகிக்கப்படற்பாலதாகவிருப்பின், அந்த இன்னொன்றினால் வைத்திருக்கப்படாதனவாக அல்லது பிரயோகிக்கப்படற்பாலதல்லாததாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் நோக்கத்துக்காக, கம்பெனியொன்று, இன்னொன்றை அதன் துணைநிலை நிறுவனமாகக் கொண்டிருந்தால், அவ்வாறு கொண்டிருந்தால் மட்டுமே, இன்னொன்றின் வைத்திருக்கைக் கம்பெனியாக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இப்பாகத்தில் கம்பெனியொன்று தொடர்பாக ''ஒப்புரவுப் பங்கு மூலதனம்'' என்னும் சொல்லமைப்பு, பகிர்ந்தளிப்பில் குறித்துரைக்கப்பட்ட தொகைக்கு அப்பால் பங்குபற்றுவதற்கான ஏதேனும் உரிமையை, பங்கிலாபங்கள் தொடர்பிலோ அல்லது மூலதனம் தொடர்பிலோ கொண்டிராத அதன் ஏதேனும் பாகம் புறநீங்கலாக, அதன் வழங்கப்பட்ட பங்கு மூலதனம் எனப் பொருள்படும்.

## பாகம் III

## மூலதனத் தேவைப்பாடுகள், ஒழுங்கு நிதிகள் அத்துடன் திரவச் சொத்துக்களின் பேணல்

18. எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் அடங்கியுள்ளது எது எப்படியிருப்பினும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எதுவும் நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், இப்பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் எல்லாவற்றோடும், இலங்கையில் தொழில் தொடங்குதலோ கொண்டு நடாத்துதலோ ஆகாது.

19. (1) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும், எல்லா நேரங்களிலும், இரண்டரைக் கோடி ரூபாவுக்குக் குறையாத தொகையொன்றைக் கேடுறுத மூலதனமாகப் பேணி வருதல் வேண்டும்.

(2) கேடுறுத மூலதனம் ஆனது—

(அ) எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றாயின், செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப் பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்ருயின் அத்தகைய வங்கிக்குத் தலைமை அலுவலகத்தால் குறித்தொதுக்கப்படல் வேண்டும்:

ஆயின், எவ்வாருயினும், பணச் சபை ஆனது, கேடுருத மூலதனமாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினுல் பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட குறைந்தபட்சத் தொகையாகக் குறித்துரைக்கப்படும், தொகையை, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகளைக் கொண்ட காலப் பகுதியின் பின்னர், வங்கியொன்றின் வைப்புப் பொறுப்புகள் அல்லது எதிர்பாராப் பொறுப்புக்களுட்பட மொத்தப் பொறுப்புகள் அல்லது மொத்தச் சொத்துக்களின் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் பகுதிகள் என்பவற்றைக் கவனத்திற்கொண்டு, காலத்துக்குக் காலம் வேறுபடுத்தலாம். பணச்சபை ஆனது, உரிமமளிக்சப்பட்ட வர்த்தக வங்கியொன்றினுல் பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் கேடுருத மூலதனம் தொடர்பில் சபையினுல் செய்யப்பட்ட ஏதேனும் வேறு படுத்தல் பற்றி, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் எல்லாவற்றுக்கும் எழுத்தில் அறிவித்தல் வேண்டும். உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி அதனது மூலதனத்தை அதிகமாக்கும்படி அத்தகைய வேறுபடுத்தலின் மூலம் தேவைப் படுத்தப்படுமிடத்து, அவ்வங்கி பணச் சபைக்கு விண்ணப்பிப்பதன் மேல் அத் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்கென அதற்குப் பன்னிரண்டு மாதங் களைக் கொண்ட காலப்பகுதி அல்லது பணச் சபையினுல் அளிக்கப்படக் கூடிய வாருன அத்தகைய நீட்டிய காலப்பகுதி அளிக்கப்படல் வேண்டும்.

(3) ஆகக் குறைந்த அளவில் தேவைப்படும் மூலதனத்தைக் கணிக்கும் நோக்கத்துக்காகப் பொறுப்புகளை அல்லது சொத்துகளைக் குறிப்பிட்டு அத்தகைய தொகை விதித்துரைக்கப்படும்போது, மூலதனமும் அத்துடன் பொறுப்புகளும் அல்லது சொத்துக்களும் தேசியப் பொருளாதாரத்தின் நலன்களைக் கருத்திற் கொண்டு, சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கக் கூடியவாருன அத்தகைய வகையினதாகவும் அத்தகைய விதத்தில் கணிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண் டும்.

(4) எழுத்திலான ஏதேனும் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின்கீழ் இலங்கை யில் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் விடயத்தில், அத்தகைய வங்கியின் மூலதனத்தில் வெளிநாட்டுப் பங்குபற்றுகை ஆனது, சபையினுல் காலத்துக்குக் காலம் நிலை நாட்டப்படும் வரையறையை எந்நேரத்திலும் விஞ்சுதலாகாது.''

(5) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று, அதனது—

(அ) செலுத்தப்பட்ட மூலதனத்தை; அல்லது

(ஆ) அத்தகைய வங்கிக்குக் குறித்தொதுக்கப்பட்ட பணச் சபையின் முன் கூட்டிய எழுத்திலான அங்கீகாரமின்றிக் குறைத்தலாகாது.

(6) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று, அத்தகைய வங்கியின் செலுத்தப்படாத ஏதேனும் மூலதனத்தின் மீது எவ்வித இறுப்பனவையும் உரு வாக்குதலாகாது என்பதுடன், இவ்வேற்பாடுகளை மீறி அவ்வாறு உருவாக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் இறுப்பனவு வெற்றும் வறிதுமாதலும் வேண்டும்.

(7) (அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும், தேசிய பொருளாதாரத்தின் நலன்களைக் கருத்திற் கொண்டு பணச் சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான முற்போந்த பன்னிரண்டு மாதங்களின் போது உறப்பட்ட எதிர்பாராப் பொறுப்புக்களுட்பட அதன் மாதக் கடைசிப் பொறுப்புகளின் சராசரியினது அத்தகைய சதவீதத்துக்குச் சமமான கூட்டு மொத்தத் தொகையிலான மூலதன நிதிகளை எல்லா நேரங்களிலும் பேணி வருதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சதவீதத்தில் ஏற்படும் ஏதேனும் வேறுபாடு, பணச் சபையினால் எழுத்தில் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றுக்கும் அறிவிக்கப்படுதல் வேண்டும்; ஆயின் அத்தகைய வேறுபாடு மூலம் அதனது மூலதன நிதிகளை அதிகமாக்கும்படி தேவைப்படுத்தப்படும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றுக்கும், அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்கென, பணச் சபையினால் வழங்கப்படக் கூடியவாறான பன்னிரண்டு மாத காலப் பகுதி அல்லது அத்தகைய நீட்டிய காலப்பகுதி அளிக்கப்படல் வேண்டும்.

(8) அச்சட்டத்துக்கான 1 ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ளனவான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் முற்போந்த உட்பிரிவுகளின் ஏற்பாடுகளோடு இணங்கியொழுக வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றன என்று பொருள்படுவதாக, (1) ஆம், (7) ஆம் உட்பிரிவுகளில் அடங்கியுள்ள எதுவும் பொருள் கொள்ளப்படுதலாகாது.

(9) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் மூலதனம் அல்லது மூலதன நிதிகள் முற்போந்த உட்பிரிவுகளின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி குறைவுபட்டுள்ளவிடத்து, பணச் சபையானது, அத்தகைய குறைவுபாடுகளைச் சரிப்படுத்துவதற்கு நியாயமானதொரு காலப்பகுதியை வழங்கலாம்.

20. (1) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் ஒதுக்கு நிதியமொன்றைப் பேணி வருதல் வேண்டும் என்பதுடன் ஒவ்வோர் ஆண்டினதும் வரிக் கொடுப்பனவுக்குப் பின்னரான தேறிய இலாபங்களிலிருந்து ஏதேனும் பங்கிலாபத்தை வெளிப்படுத்துவதற்கு முன்னர் அல்லது ஏதேனும் இலாபங்களைத் தலைமை அலுவலகத்துக்கு அல்லது வேறு இடத்துக்கு கைமாற்றுவதற்கு முன்னர், அத்தகைய ஒதுக்கு நிதியத்துக்கு—

(அ) சொல்லப்பட்ட ஒதுக்கு நிதியத்தின் தொகை, விடயத்துக்கேற்றவாறு அத்தகைய வங்கியின் செலுத்தப்பட்ட மூலதனத்தின் அல்லது குறித்தொதுக்கப்பட்ட மூலதனத்தின் ஐம்பது சதவீதத்துக்குச் சமமாகும் வரையில், அத்தகைய இலாபங்களின் ஐந்து சதவீதத்துக்குக் குறையாத தொகைக்குச் சமமான பணத் தொகையொன்றையும்; அத்துடன்

(ஆ) சொல்லப்பட்ட ஒதுக்கு நிதியத்தின் தொகை, விடயத்துக்கேற்றவாறு அத்தகைய வங்கியின் செலுத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட மூலதனத்துக்குச் சமமாகும் வரையில், அத்தகைய இலாபங்களின் இரண்டு சதவீதத்துக்குக் குறையாத தொகைக்குச் சமமான மேலதிகப் பணத்தொகையொன்றையும்

கைமாற்றுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாருயினும், அத்தகைய இலாபங்கள் ஒதுக்கு நிதியத்துக்குக் கைமாற்றப்படுவதற்கு முன்னர் பணச் சபையினுல் தீர்மானிக்கப்படக் கூடியவாறு, தேறிய இலாபங்களில் இருபத்தைந்து சதவீதத்துக்குக் குறையாத தொகையொன்று அத்தகைய தொட்டுணரமுடியாத சொத்துக்களை ஈடுசெய்வதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கியின் ஒதுக்கு நிதியம் குறைக்கப்படவோ அல்லது கேடுறப்படுத்தப்படவோ ஆகாது:

ஆயின், எவ்வாருயினும், பணச் சபை ஆனது, ஒதுக்கு நிதியம் குறைக்கப் படக்கூடிய சூழ்நிலைகளைக் குறித்துரைக்கலாம் என்பதுடன், விடயத்துக்கேற்றவாறு செலுத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட மூலதனத்தை அதிகரிக்கின்ற நோக்கத்துக்காகக் கைமாற்றமொன்று செய்யப்படும்போது ஒரு குறைப்பை அனுமதித்தலும் வேண்டும். ஒதுக்கு நிதியத்தைக் கேடுறப்படுத்தல் ஒன்றின் மூலம் மட்டுமே, விடயத்துக்கேற்றவாறு செலுத்தப்பட்ட மூலதனத்தை அல்லது குறித்தொதுக்கப்பட்ட மூலதனத்தைக் கேடுருமல் தடுக்க முடிகின்றபோது தரப்படும் காலப்பகுதிக்குள் குறைவுபாடு சரிப்படுத்தப்படும் என்ற நிபந்தனைக்கமைய அதனைப் பணச்சபை அனுமதித்தல் வேண்டும்.

21. (1) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும், மத்திய வங்கிக்கும் பங்குதாரர்களுக்கும் உரிய அதனது பொறுப்புகள் நீங்கலாகவுள்ள பொறுப்புகளின் மொத்தத்தின் அத்தகைய சதவீதம் ஒவ்வொரு மாதத்தின் அன்ருட சராசரியின் குறையாத அத்தகைய தொகையில்; அத்தகைய வங்கியினுல் கொண்டு நடாத்தப்படும் தொழிலின் தன்மையைக் கருத்தில் கொண்டு பணச் சபையினுல் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறு திரவச் சொத்துக்களைப் பேணி வரல் வேண்டும்:

ஆயின், எவ்வாருயினும் பணச் சபையினுல் தீர்மானிக்கப்படும் சதவீதம் ஆனது, மத்திய வங்கிக்கும் பங்குதாரர்களுக்கும் உரியதான அவ்வங்கியின் பொறுப்புகள் நீங்கலாக, அதன் மொத்தப் பொறுப்புகளின் இருபது சதவீதத்துக்குக் குறைதலோ நாற்பது சதவீதத்துக்கு மேற்படுதலோ ஆகாது.

(2) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் ஆனவர், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளவெனத் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்ளும் நோக்கங்களுக்கு அவசியமென அவர் கருதக்கூடியவாருன அத்தகைய விபரத் திரட்டினை அல்லது விபரத் திரட்டுகளை அவருக்குக் கொடுத்துதவும்படி, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றையும் எழுத்திலான அறிவித்தல் மூலம் தேவைப்படுத்தலாம் என்பதுடன், அவ்வாறு அறிவித்தல் அனுப்பப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் தேவைப்படுத்தப்படக் கூடியவாருன அத்தகைய விபரத் திரட்டினை அல்லது விபரத் திரட்டுகளைக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளோடு இணங்கியொழுகுவதற்குத் தவறும் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி, பணச் சபையினுல் தீர்மானிக்கப் படக்கூடிய அத்தகைய காலத்துக்குள் பணச் சபையினுல் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய வீதத்தில் கணக்கிடப்படும் குறைவுபாட்டுத் தொகையின் மீதான இறுப்பனவொன்றை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

(4) மூன்றும் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறும் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி இச்சட்டத்தின் கீழான தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

22. தொட்டுணராமுடியாத சொத்துக்களைப் பிரதிநிதித்துவம் செய்யாதவையான முதனிலைச் செலவுகள், மற்றும் செலவின விடயங்கள் உட்பட மூலதனமாக்கப்பட்ட செலவுகள் அனைத்தும் முழுமையாகப் பதிவழிக்கப்படும் வரையில், எழுத்திலான ஏதேனும் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின்கீழ் இலங்கைக்குள் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எதுவும் அதனது பங்குகளின்மீது ஏதேனும் பங்கிலாபத்தைச் செலுத்துதல் ஆகாது என்பதுடன், இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எதுவும் இலங்கையில் சம்பாதிக்கப்பட்ட எவையேனும் இலாபங்களை வெளிநாட்டுக்குக் கைமாற்றுதலும் ஆகாது.

## பாகம் IV

### கரைகடந்த வங்கித் தொழில்

23. கரைகடந்த வங்கித் தொழில் எதுவும் கரைகடந்த வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினுல் தவிர, கொண்டு நடாத்தப்படுதலாகாது; அத்துடன் அத்தகைய வங்கி பணச் சபையினுல் வகுத்தமைக்கப்படும் அத்தகைய கரைகடந்த வங்கித் தொழில் திட்டத்துக்கிணங்க அதனது தொழிலைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்:

ஆயின், 1 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவையும், பணச் சபையினுல் தாபிக்கப்பட்டதான ''வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டம்'' என்பதன் கீழ், நியமிக்கப்பட்ட தேதியன்று கரைகடந்த வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துபவையுமான வங்கிகளுக்கு இப்பாகத்தின்கீழ் கரைகடந்த வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அத்தகைய வங்கிகளை இயலச் செய்து 5 ஆம் பிரிவின் நியதிகளின்படியான உரிமமொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

24. இப்பாகத்தின் கீழ், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் ''கரைகடந்த'' தொழிற்பாடுகள் யாவும், அதன் கரைகடந்த கூறினுல் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும். இச்சட்டத்தின் 111 ஆம், V ஆம், V1 ஆம் பாகங்கள் கரைகடந்த வங்கித் தொழில் தொடர்பில் ஏற்புடையனவாகாதிருத்தல் வேண்டும்.

25. தேசிய பொருளாதாரத்தின் நலன்களைக் கவனத்திற் கொண்டு, அமைச்சரின் அங்கீகாரத்துடன் பணச் சபை சுமத்தக்கூடியவாறுன அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் கரைகடந்த கூறு ஒன்றுக்குப் பின்வரும் தொழில்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் கொண்டு நடாத்துவதற்கு அமைச்சரின் அங்கீகாரந்துடன் ஆக்கப்பட்ட கட்டளைமூலம் பணச் சபை அதிகாரமளிக்கலாம்:—

(அ) எவரேனும் வதிவற்றவரிடமிருந்து பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தின் கால வைப்புக்களையும் கோரிக்கை வைப்புகளையும் ஏற்றல்; ஆயின் கால வைப்புக்களின் விடயத்தில், அத்தகைய வைப்புகள் பத்தாயிரம் ஐக்கிய அமெரிக்க டாலர்களுக்குக் குறையாதவையாக அல்லது அதற்குச் சமமானவையாக அல்லது பணச் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய உயர்ந்த தொகையானவையாக இருத்தல் வேண்டும்; ஆயின் காசோலை மூலம் நிதிகளை மீளப் பெறக்கூடிய சேமிப்புக் கணக்குகள் எவையும் அத்தகைய கரை கடந்த கூறினால் திறக்கப்படலாகாது;

(ஆ) பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலான ஏதேனும் பணத் தொகையை வதிவற்ற எவரிடமிருந்தும் கடன் பெறல்;

(இ) பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் வதிவற்ற எவருக்கும் கடனுதவியை நீடித்தல்;

(ஈ) பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் கரை கடந்த வேறு ஏதேனும் கூறுடன் ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட; அத்துடன்

(உ) பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அமைச்சரின் அங்கீகாரத்துடன் பணச் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடல்.

26. தேசிய பொருளாதாரத்தின் நலன்களைக் கவனத்தில் கொண்டு, அமைச்சரின் அங்கீகாரத்துடன் பணச் சபை குறித்துரைக்கப்படக்கூடியதான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய, 25 ஆம் பிரிவின் கீழ்க் குறித்துரைக்கப்படும் எல்லாத் தொழில்களிலும் அல்லது ஏதேனும் தொழிலில் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் கரைகடந்த வங்கித் தொழிலில் ஈடுபடுவதற்கு அமைச்சரின் அங்கீகாரத்துடன் பணச் சபைக் கட்டளைமூலம் அதிகாரமளிக்கலாம்.

27. உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும், அதன் கரை கடந்த கூறு தொடர்பில், பின்வருவனவற்றைத் தயாரித்தல் வேண்டும்:—

(அ) உரிமமளிக்கப்பட்ட அத்தகைய வர்த்தக வங்கியின் ஒவ்வொரு நிதி யாண்டினதும் கடைசி வேலை நாளன்று உள்ளவாறான ஐந்தொகை;

(ஆ) அத்தகைய ஆண்டு தொடர்பிலான இலாப, நட்டக் கணக்கு.

28. இருபத்தேழாம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்தொகையினதும், இலாப, நட்டக் கணக்கினதும் படிவத்தைப் பணச் சபை குறித்துரைக்கலாம் என்பதுடன், ஐந்தொகையும் இலாப, நட்டக் கணக்கும் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் தயாரிக்கப்படவும் வேண்டும்.

29. பணச் சட்டத்தின் V ஆம் அத்தியாயத்தின் III ஆம், VI ஆம், VII ஆம் பாகங்களில் ஏற்பாடுகள், கரைகடந்த கூறுகள் தொடர்பில் ஏற்புடையனவாதல் ஆகாது.

30. (1) கரைகடந்த வங்கித் தொழிலில் ஈடுபட்டுள்ளதான வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் அதன் கரைகடந்த கூறினது கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்குத் தகைமை பெற்றவரான கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கணக்காய்வாளர் கரைகடந்த அத்தகைய கூறினது கணக்குகள் ஐந்தொகை இலாப நட்டக் கணக்கு என்பன தொடர்பில் உரிமமளிக்கப்பட்ட அத்தகைய வர்த்தக வங்கிக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும். கணக்காய்வாளர் ஆனவர், அவரது அபிப்பிராயத்தின்படி ஐந்தொகையும் இலாப நட்டக் கணக்கும் முழுமையாகவும் நியாயமாகவும் உள்ளனவா என்பதையும் தகுந்த முறையில் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் அவை உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அலுவல்கள் பற்றி உண்மையானதும் சரியானதுமான கூற்றினை வெளிக்காட்டுகின்றனவா என்பதையும் தமது அறிக்கையில் கூறுதல் வேண்டும்.

(2) அறிக்கையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று பணச் சபைக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்பதுடன், கணக்காய்வாளர் அவரது முழு திறமையையும் பயன்படுத்தி அவரது கடமையை நிறைவேற்றவில்லை என்று பணச் சபை அபிப்பிராயப்படுமாயின், புதிய அறிக்கையொன்றைத் தயாரிக்கும் நோக்கத்துக்காக இன்னொரு கணக்காய்வாளரை நியமிக்கும்படி உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்குச் சபை கட்டளையிடலாம்.

31. கணக்காய்வாளரினது அறிக்கையின் விளைவாக, அல்லது அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்குக் கணக்காய்வாளரினது தவறுகையின் விளைவாக, அல்லது கரைகடந்த அந்தக் கூறு உறுதியில்லாத நிதி நிலைமையில் இருப்பதென அல்லது அது மோசடியான, பாதுகாப்பற்ற அல்லது உறுதியற்ற வங்கிச் செய்முறைகளில் ஈடுபட்டுள்ளதென, அல்லது அதனது தொழிலைக் கொண்டு நடாத்துவதில் இப்பாகத்தின் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படவில்லையென நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைப் பணச் சபைக்கு அளிக்கும் இயைபான வேறு தகவலின் காரணமாகப் பணச் சபையினால் அதற்கென உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர்களினால் கரைகடந்த கூறு எதனதும் பரிசோதனையொன்றைப் பணச் சபை செய்விக்கலாம்.

32. கரைகடந்த வங்கித் தொழில் கூறு ஒவ்வொன்றும் கரைகடந்த அத்தகைய கூறினால் கொண்டு நடாத்தப்படும் தொழிலின் தன்மையைக் கருத்தில் கொண்டு பணச் சபையினால் தீர்மானிக்கக் கூடியவாறான புத்தகங்களையும் குறிப்புகளையும், கணக்குகளையும், ரொக்கத்தையும், பிணைப் பொறுப்புக்களையும் உறுதிச் சீட்டுக்களையும் வேறு ஆவணங்களையும் பதிவேடுகளையும் பேணி வரல் வேண்டும்.

33. (1) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அல்லது வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர் அல்லது 31 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலர் பின்வருவனவற்றைச் செய்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்:—

(அ) கரைகடந்த ஏதேனும் கூறின் அலுவல்களினது உண்மையான நிலைமையை நிச்சயப்படுத்திக்கொள்ளுகின்ற நோக்கத்துக்காகப் பெறுதல் அவசியமென அவர் கொள்ளக்கூடியவாறான அத்தகைய தகவலைத் தம்மிடம் கொடுத்துதவும்படி கரைகடந்த ஏதேனும் கூறின் பணிப்பாளரை அலுவலரை அல்லது ஊழியரைத் தேவைப்படுத்துதல்;

(ஆ) அத்தகைய எவரேனும் பணிப்பாளரின், அலுவலரின் அல்லது ஊழியரின் உடைமையில் உள்ளவையும் அத்தகைய ஏதேனும் தகவலைக் கொண்டிருப்பவையும் அல்லது கொண்டிருக்கும் சாத்தியம் உடையவையுமான புத்தகங்கள், குறிப்புகள், கணக்குகள், ரொக்கம், பிணைப் பொறுப்புகள், ஆவணங்கள், உறுதிச்சீட்டுகள், வேறு ஆவணங்கள், அத்துடன் பதிவேடுகள் எவற்றையும், தாம் குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய நேரத்தில் தம்மால் சோதனையிடப்படுவதற்கெனக் காண்பிக்கும்படி அத்தகைய பணிப்பாளர், அலுவலர் அல்லது ஊழியர் எவரையும் தேவைப்படுத்துதல்.

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி அவ்வாறு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படும் போதிலெல்லாம், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அல்லது அவரது திணைக்களத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது 31 ஆம் பிரிவின்கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்குத் தமது உடைமையில் உள்ளவையும் அத்தகைய தகவலைக் கொண்டிருப்பவையும் அல்லது கொண்டிருக்கும் சாத்தியம் உடையவையுமான புத்தகங்கள், குறிப்புகள், கணக்குகள், ரொக்கம், பிணைப் பொறுப்புகள், உறுதிச்சீட்டுகள், வேறு ஆவணங்கள், அத்துடன் பதிவேடுகள் எவற்றையும் பரிசோதிப்பதற்கு முழுமையான சந்தருப்பம் அளித்தல் கரைகடந்த ஏதேனும் கூறினது பணிப்பாளர், அலுவலர் அல்லது ஊழியர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கப் புத்தகங்கள், குறிப்புகள், கணக்குகள், ரொக்கம், பிணைப் பொறுப்புகள், உறுதிச் சீட்டுகள், வேறு ஆவணங்கள் அத்துடன் பதிவேடுகள் எவையேனும் காண்பிக்கப்படவோ அல்லது தகவல் கொடுத்துதவப்படவோ இல்லையாயின், அவ்வாறு, தவறுகை புரிகின்ற அலுவலர் ஆனவர், இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

34. இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கமைய, பணச் சபை ஆனது, இப்பாகத்தின் நோக்கங்களுக்காக அவசியமென அது கருதக்கூடியவாறான தகவலை, அறிக்கைகளை அத்துடன் விபரத் திரட்டுகளைக் காலத்துக்குக் காலம் கோரலாம் என்பதுடன், தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை வெளிவிடாதவையும் அதிலிருந்து பெறப்பட்டவையுமான தகவலையும் தரவுகளையும் வெளியிடலாம்.

## பாகம் V

### கணக்குகள். கணக்காய்வு, தகவல், சோதனை

35. உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும், ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் பின்வருவனவற்றைத் தயாரித்தல் வேண்டும்:—

(அ) அத்தகைய நிதியாண்டின் கடைசி வேலை நாளன்று உள்ளபடியான ஐந்தொகை; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆண்டு தொடர்பான இலாப நட்டக் கணக்கு.

36. (1) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் ஐந்தொகை ஆனது, அத்தகைய ஐந்தொகை எந்த நிதியாண்டு தொடர்பானதோ அந்த நிதி ஆண்டின் இறுதியில் உள்ளவாறான அத்தகைய வங்கியினது அலுவல்களின் நிலைமையைத் தருதல் வேண்டும்.

(2) ஐந்தொகையில் அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட ஏதேனும் கூற்றில் பின்வருவன காட்டப்படல் வேண்டும்:—

(அ) தனித்தனியான தலைப்புகளின்கீழ் .திடமான சொத்துக்களைப் பிரதி நிதித்துவப்படுத்தாததான மூலதனமாக்கப்பட்ட செலவுகள் அவை பதிவழிக்கப்பட்டிராத அளவுக்கு;

(ஆ) முதலீடுகளின் சந்தைப் பெறுமதி;

(இ) நிதியாண்டின்போது நிலையான சொத்துக்களின் ஏதேனும் நிலை மதிப் பீடு செய்யப்பட்டிருக்குமாயின், அத்தகைய சொத்துக்களை விலைமதிப் பிடுவதற்குக் கடைப்பிடிக்கப்பட்ட முறை;

(ஈ) மீளாக் கடன்கள், சந்தேகத்துக்கிடமான கடன்கள் என்பவற்றுக்கான ஏற்பாடுகளுக்குப் பின்னர், முற்பணங்களின் கூட்டு மொத்தத் தொகை கள்;

(உ) நிலையான சொத்துக்களின் பெறுமதியின் தேய்வுக்கென, புதுப்பித்தல் களுக்கென அல்லது குறுக்கத்துக்கென ஏற்பாடு செய்தலில் ஏதேனும் அதிகரிப்பு அல்லது வீழ்ச்சி;

(ஊ) நிதிகளின் மூலங்களும் பயன்பாடுகளும்;

(எ) தனித்தனியாக வேறுபடுத்தப்படற்பாலனவான ஒதுக்குகள், ஏற்பாடு கள், அத்துடன் பொறுப்புகள்;

(ஏ) இச்சட்டத்தின் இப்பாகம் வலுவுக்கு வந்ததன் பின்னரான முதலாவது ஐந்தொகையின் விடயத்தில் தவிர, நேர்முற்போந்த நிதியாண்டின் முடிவில் ஐந்தொகையில் காட்டப்பட்ட எல்லா விடயங்களுக்குமான நேரொத்த தொகைகள்.

37. இலாப, நட்டக் கணக்கில் அல்லது அதனோடு இணைக்கப்பட்ட ஏதே னும் கூற்றில் பின்வருவன காட்டப்படுதல் வேண்டும்:—

(அ) நிலையான சொத்துக்களின் பெறுமதியிலான தேய்வுக்கென, புதுப்பித்தல் களுக்கென அல்லது குறுக்கத்துக்கென ஏற்பாடு செய்யப்பட்டதன் வகையாக அரசிறைக்குப் பொறுப்பிக்கப்பட்ட தொகை;

(ஆ) இலாபங்களின் மீது இலங்கை வருமான வரிக்கெனவும் இலங்கையின் வேறு வரிவிதிப்புக்களுக்கெனவும் அரசிறைக்குப் பொறுப்பிக்கப்பட்ட தும் அத்தகைய கணக்கிலிருந்து வேறு பிரித்துக் காட்டப்படக்கூடியது மான தொகை; நடப்பு வரிவிதிப்பு ஆண்டில் அல்லது அடுத்துவரும் ஓர்

ஆண்டில் வருமதியாகவுள்ள வரி தொடர்பிலான பொறுப்புகளுக்கென ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் அல்லது ஒதுக்கி வைப்பதற்கு உத்தேசிக்கப் பட்டிருக்கும் தொகைகள் முக்கியமானதாயின்;

(இ) செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்படும் பங்கிலாபங்களின் கூட்டு மொத்தத் தொகை;

(ஈ) கணக்காய்வாளர்களின் ஊதியத் தொகை;

(உ) பணிப்பாளர்களின் வேதனுதிகளினது கூட்டு மொத்தத் தொகையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதும் அரசிறைக்குப் பொறுப்பிக்கப்பட்டது மான தொகை;

(ஊ) ஒதுக்குக்கென ஒதுக்கிவைக்கப்பட்ட அல்லது ஒதுக்கிவைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட அல்லது ஒதுக்குகளிலிருந்து மீளப் பெறப்பட்ட தொகை;

(எ) வங்கித் தொழில் கம்பெனிகளால் வழமையில் கொண்டு நடாத்தப் படாதவையும், அத்துடன் விதிவிலக்கான அல்லது மீள வருவனவல்லாத தன்மையிலான சூழ்நிலைகளையிட்டு அல்லது கணக்கீட்டு அடிப் படையிலான ஒரு மாற்றத்தால் வழமையில் கொண்டு நடாத்தப் படுபவையுமான அத்தகைய கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற இலாபம் அல்லது நட்டம் அல்லது வருமானம், செலவுகள் என்பன தனித்தனியான தலைப்புகளின் கீழ்;

(ஏ) இச்சட்டத்தின் இப்பாகம் வலுவுக்கு வந்தபின்னரான முதலாவது இலாப நட்டக் கணக்கின் விடயத்தில் தவிர, நேர்முற்போந்த நிதி யாண்டின் முடிவில் இலாப நட்டக் கணக்கில் காட்டப்பட்டுள்ள எல்லா விடயங்களுக்குமான நேரொத்த தொகைகள்.

38. (1) எழுத்திலான ஏதேனும் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின் கீழ் இலங்கைக்குள் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும், நிதியாண்டின் முடிவில் உள்ளபடியான அதன் ஐந்தொகையையும் நிதியாண்டுக்கான அதன் இலாப நட்டக் கணக்கையும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டுமென்பதுடன் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் ஐந்து மாதங்களுக்குள் அவற்றை வெளியிடுதலும் வேண்டும்; அத்துடன் அதன் தொழில் இடங்களுள் ஒவ்வொன்றினதும் துலாம்பரமானவோர் இடத்தில், அடுத்துவரும் நிதியாண்டுக்கான ஐந்தொகையும் இலாப நட்டக் கணக்கும் தயாரிக்கப்பட்டு வெளிக்காட்டி வைக்கப் படும்வரையில், வெளிக்காட்டி வைத்தலும் வேண்டும்.

(2) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும், இலங்கையில் அதனது தொழில் தொடர்பில் நிதியாண்டின் முடிவில் உள்ளபடியான அதன் ஐந்தொகையையும் நிதியாண்டுக் கான அதன் இலாப, நட்டக் கணக்கையும் நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து ஐந்து மாதங்களுக்குள் வங்கி மேற்பார்வை பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3) இப்பாகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்தொகையும் இலாப நட்டக் கணக்கும் என்ன படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதனைப் பணச் சபை குறித்துரைக்கலாம்; அத்தகைய படிவம் குறித்துரைக்கப்படுமிடத்து, உரிமமளிக் கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றினதும் ஐந்தொகையும், இலாப நட்டக் கணக்கும் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் தயாரிக்கப் படுதலும் வேண்டும்.

(4) இலங்கையில் வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு உரிம மளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும், நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள் —

(அ) கரைகடந்த அதன் கூறினது தொழில் உட்பட இலங்கைக்குள் உள்ள அதன் தொழில் தொடர்பில் அத்தகைய நிதியாண்டுக்கான இலாப, நட்டக் கணக்கையும்; அத்துடன்

(ஆ) அத்தகைய வர்த்தக வங்கியினதும் அதன் இணைநிலை நிறுவனங்களின தும், துணைநிலை நிறுவனங்களினதும் அடுத்த இலாப நட்டக் கணக்கும் ஐந்தொகையும் வெளிக்காட்டி வைக்கப்படும் வரையில், அவற்றினது அலுவல்களின் நிலைமையை அத்தகைய நிதியாண்டின் இறுதியில் உள்ள படி தருகின்றதாக திரட்டிய ஐந்தொகையையும் அத்தகைய வர்த்தக வங்கியின் தொழிலிடத்தினுள் துலாம்பரமானதோர் இடத்தில் வெளிக் காட்டி வைத்தல் வேண்டும்.

39. (1) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும், அத்தகைய வங்கியின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கென, தகைமை பெற்ற கணக் காய்வாளர் ஒருவரை ஆண்டு தோறும் நியமித்தல் வேண்டும். அத்தகைய கணக்காய்வாளரின் கடமைகள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(அ) எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் இலங்கை க்குள் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான உரிம மளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றின் விடயத்தில், அவரால் பரி சோதிக்கப்பட்ட கணக்குகள், ஐந்தொகை, இலாப, நட்டக் கணக்கு என்பன தொடர்பில் அதன் பங்குதாரர்களுள், ஒவ்வொருவருக்கும் சமர்ப்பிக்கப்படுவதற்கென அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண் டும்; அத்துடன்

(ஆ) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றின் விடயத்தில், அவரால் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள், ஐந்தொகை, இலாப, நட்டக் கணக்கு என்பன தொடர் பில் அவ்வங்கியின் தலைமை அலுவலகத்துக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

(2) நிதியாண்டின் முடிவிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பூரணமாக்கப்பட வேண்டிய அத்தகைய ஒவ்வோர் அறிக்கையும் கணக்காய்வாளரின் அபிப்பிராயத் தின்படி ஐந்தொகையும் இலாப, நட்டக் கணக்குகளும் முழுமையானதான, நியாயமானதான அத்துடன் தகுந்த முறையில் தயாரிக்கப்பட்டதான கூற்றினைக் கொண்டுள்ளனவா என்பதனையும், அவை வங்கியின் அலுவல்கள் குறித்து உண்மை யானதும் சரியானதுமான கூற்றினைக் குறித்துக் காட்டுகின்றனவா என்பதனையும்,

அத்துடன் உரிமமளிக்கப்பட்ட அத்தகைய வர்த்தக வங்கியின் அலுவலர்களிடமிருந்து விளக்கம் அல்லது தகவல் எதையும் கணக்காய்வாளர் கேட்டிருப்பாரெனின் அவ்வாறான விளக்கம் அல்லது தகவல் திருப்திகரமானதாக இருந்ததா என்பதனையும் குறிப்பிடும் கணக்காய்வாளரின் கூற்று ஒன்றினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஓராம், இரண்டாம் உட்பிரிவுகளுக்கிணங்கத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை ஆனது, எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் இலங்கைக்குள் கூட்டிணைக்கப்பட்டதான அல்லது தாபிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் விடயத்தில் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினது பணிப்பாளர்கள் சபையின் அறிக்கையுடன் சேர்த்து அவ் வங்கியின் பங்குதாரர்களினது ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் வாசிக்கப்படல் வேண்டும் என்பதுடன் இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதான வங்கியொன்றின் விடயத்தில், அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் தலைமை அலுவலகத்துக்கு அவை அனுப்பி வைக்கப்படலும் வேண்டும். அறிக்கையின் பிரதியொன்று வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படலும் வேண்டும். கணக்காய்வாளரின் அறிக்கை குறித்து வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் திருப்தியடையாதவிடத்து, ஒரு புதிய அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காகப் புதிய கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்கும்படி பணச் சபைக்கு அவர் வேண்டுகோளொன்றை விடுக்கலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று தவறுமாயின் அல்லது வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பணச் சபைக்கு வேண்டுகோளொன்றை விடுத்திருந்தால், அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கெனக் கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்கும் தத்துவம் பணச் சபைக்கு இருத்தல் வேண்டும்.

(5) ஓராம் அல்லது நான்காம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்படும் கணக்காய்வாளர் ஒவ்வொருவரும், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்குச் சொந்தமானவையும் அவரது கடமைகளைப் புரிவதற்கு அவசியமென அவர் கருதுபவையுமான புத்தகங்கள், கணக்குகள், உறுதிச்சீட்டுகள் என்பவற்றையும், ஆவணங்கள், பதிவேடுகள் எல்லாவற்றையும் எந்நேரத்திலும் பார்க்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன் அவர் கணக்காய்வாளராக அவரது கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் அல்லது தகுந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் அவசியம் என அவர் எண்ணும் அத்தகைய தகவலையும் விளக்கங்களையும் அத்தகைய வங்கியின் அலுவலர்களிடமிருந்து தேவைப்படுவதற்கும் அவர் உரித்துடையவராதல் வேண்டும்.

(6) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் நியமிக்கப்பட்டாலும்சரி பணச் சபையினால் நியமிக்கப்பட்டாலும்சரி, கணக்காய்வாளரின் ஊதியம் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் செலுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன் (4) ஆம் உட்பிரிவின்கீழ் பணச் சபையினால் நியமிக்கப்படும் கணக்காய்வாளர் ஒருவரின் விடயத்தில், பணச் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தொகை அவருக்குக் கொடுபடுதலும் வேண்டும்.

(7) உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கியில் அக்கறையுடைய வரான ஆள் எவரும் அல்லது உரிமமளிக்கப்பட்ட அத்தகைய வர்த்தக வங்கியின் பணிப்பாளர், அலுவலர், ஊழியர் அல்லது முகவர் எவரும் உரிமமளிக்கப்பட்ட அந்த வர்த்தக வங்கியின் கணக்காய்வாளராக நியமிக்கப்படுவதற்குத் தகவுடைய வராதலாகாது. அவ்வாறு கணக்காய்வாளராக நியமிக்கப்படும் எவரேனுமாள், அத்தகைய நியமனத்துக்குப் பின்னர் உரிமமளிக்கப்பட்ட அத்தகைய வர்த்தக வங்கியில் ஏதேனும் அக்கறையைக் கொள்ளுவாரெனின் அல்லது அவ்வங்கியின் பணிப்பாளர், அலுவலர், ஊழியர் அல்லது முகவர் ஒருவராக வருவாரெனில், அவர் அத்தகைய கணக்காய்வாளராக உடனடியாகச் செயலாற்றுதொழிதல் வேண்டும்.

(8) இப்பிரிவிலுள்ளது எதுவும், பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றுகவுள்ள உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கியினது கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையதாதலாகாது.

40. உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி அதன் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளையிட்டு 35 ஆம் பிரிவின் ஏற்பாடுகளோடு இணங்கி யொழுகுவதற்குத் தவறியுள்ளவிடத்து, அல்லது உரிமமளிக்கப்பட்ட அத்தகைய வர்த்தக வங்கியினுல் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவர் அவரது கட்டுப் பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களையிட்டு கணக்காய்வு அறிக்கையைக் குறித் துரைக்கப்பட்டவாறு செய்து முடிப்பதற்குத் தவறியுள்ளவிடத்து, பணச்சபை ஆனது, உரிமமளிக்கப்பட்ட அத்தகைய வர்த்தக வங்கியினுல் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது, இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாடுகளோடு இணங்கியொழு குவதற்கு நியாயமானதொரு காலப்பகுதியை வழங்கலாம்.

41. (1) உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கியின் நிதிசார்நிலைமை உறுதியாக உள்ளதா என்றும், அத்துடன் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினுல் தொழில் கொண்டு நடாத்தப்படுதல் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க இருந்துள்ளதா என்றும் பரிசோதனை செய்வதற்கெனப் பரிசோதனையானது அவசியமென அல்லது உசிதமெனப் பணச் சபைக்குத் தோன்றும் போதிலெல்லாம், உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரையும் கொண்டு உரிமம் அளிக்கப்பட்ட அத்தகைய வர்த்தக வங்கி எதனையும் அல்லது அதன் கிளை நிறுவனங்களுள் எவற்றையும் காலத் துக்குக் காலம் அச்சபை பரிசோதனை செய்வித்தல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும், அத்துடன் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி யினது துணைநிலை நிறுவனம் எதுவும் அதன், தொழில் தொடர்பிலான புத்தகங் கள், குறிப்புகள், கணக்குகள், ரொக்கம், பிணைப் பொறுப்புகள், உறுதிச் சீட்டு கள், வேறு ஆவணங்கள், பதிவேடுகள் எல்லாவற்றையும் பணச் சபையினுல் அதிகாரமளிக்கப்படும் அலுவலரை, குறித்துரைக்கப்பட்ட அவ்வலுவலரினுல் வேண்டப்படும் எந்நேரத்திலும் சோதனையிடுவதற்கு அனுமதித்தல் வேண்டும்; அத்துடன் அத்தகைய அலுவலரினுல் வேண்டப்படக்கூடியவாறன அதன் தொழில் சம்பந்தப்பட்ட அத்தகைய தகவலைக் கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தப் படுத்துதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க புத்தகங்கள், குறிப்புகள், கணக்குகள், ரொக்கம், பிணைப் பொறுப்புகள், உறுதிச் சீட்டுகள், வேறு ஆவணங்கள், பதிவேடுகள் எவையும் காண்பிக்கப்படவில்லையாயின் அல்லது தகவல் கொடுத்துதவப்படவில்லையாயின் அல்லது கொடுத்துதவப்பட்ட தகவல் அல்லது காண்பிக்கப்பட்ட பொருள் முக்கியமான ஏதேனும் விபரத்தில் பொய்யானதாயின், விடயத்துக்கேற்ப, தவறுகை புரிகின்றதான, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியோ அல்லது துணைநிலை நிறுவனமோ அல்லது இரண்டுமோ இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

## பாகம் VI

### உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் பணிப்பாளர், செயலாளர் முதலியோராக நியமிக்கப்படுவதற்கு எதிரான தகைமையீனங்கள்

42. (1) ஆள் எவரும்—

(அ) இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்ற ஒருவர் அல்லது வங்கி முறிந்த ஒருவர் என வெளிப்படுத்தப்பட்டிருப்பதுடன் பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்கவகையற்றவரான அல்லது வங்கி முறிந்தவரான ஆளொருவராக இருப்பாரெனில்; அல்லது

(ஆ) இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவித்துக்கொண்டிருப்பவராயின் அல்லது அனுபவித்தவராயின்; அல்லது

(இ) மோசடியான அல்லது சட்டவிரோத குணம்சமுடையதான செயல் எதற்குமாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பாரெனின்,

அவர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்படவோ அல்லது தேர்ந்தெடுக்கப்படவோ ஆகாது.

(2) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் பணிப்பாளர் ஒருவர்—

(அ) ஓராம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தகைமையீனங்களுள் எதற்கும் அமைந்தவர் ஆகுவாரெனின்; அல்லது

(ஆ) அவரது கடமைகளைப் புரிவதில் நிரந்தரமாக இல்லாதவர் ஆகுவாரெனின்; அல்லது

(இ) மோசடியான அல்லது சட்டவிரோத குணம்சமுடையதான ஏதேனும் செயலுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பாரெனின்; அல்லது

(ஈ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் குறிக்கோள்களையும் நலன்களையும் வெளிப்படையாக எதிர்ப்பவையான செயல் அல்லது காரியம் எதனையும் செய்திருப்பாரெனின் அவர், பணிப்பாளர் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

43. உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எதுவும், உரிமமளிக்கப்பட்ட அத்தகைய வர்த்தக வங்கியின் ஊழியர் ஒருவர் அல்லாத வேறு ஆளொருவரை உரிமமளிக்கப்பட்ட அத்தகைய வர்த்தக வங்கியின் செயலாளராக வைத்திருத்தல் ஆகாது.

44. (1) ஆளெவரும்—

(அ) அவர், இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள சட்டத்தின் கீழ் கடனிறுக்க வகையற்ற ஒருவர் அல்லது வங்கி முறிந்த ஒருவர் என வெளிப்படுத்தப்பட்டிருப்பதுடன் பொறுப்பு விடுவிக்கப் படாத, கடனிறுக்க வகையற்றவரான அல்லது முறிந்தவரான ஆளொருவராக இருப்பாரெனின்; அல்லது

(ஆ) அவர், ''இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப் பொன்றை அனுபவித்துக் கொண்டிருப்பவராயின் அல்லது அனுபவித் தவராயின்; அல்லது

(இ) மோசடியான அல்லது சட்டவிரோத குணும்சமுடையதான செயல் எதற்குமாகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பாரெனின், உரிமமளிக்கப் பட்ட

வர்த்தக வங்கியொன்றின் முகாமையாளராக, செயலாளராக அல்லது வேறு அலுவலராக நியமிக்கப்படுதல் ஆகாது என்பதுடன், அத்தகைய வங்கியின் முகாமையாளராக, செயலாளராக அல்லது வேறு அலுவலராக நியமிக்கப்பட்ட எவரேனுமாள் பதவியிலிருந்து அகற்றப்படுதலும் வேண்டும்.

(2) நீதிமன்றக் கட்டளையொன்றினால் ஒடுக்கப்பட்டதான உரிமமளிக்கப் பட்ட வர்த்தக வங்கியொன்றின் பணிப்பாளர் ஒருவராய் இருந்தவரான அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் ஒருவராய் இருந்தவரான ஆள் எவரும் பணச் சபையின் எழுத்திலான அங்கீகாரமின்றி, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி யொன்றின் பணிப்பாளராக அல்லது பிரதான நிறைவேற்று அலுவலராகச் செயலாற்றுதல் ஆகாது.

(3) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எதுவும், உரிமமளிக்கப்பட்ட அத் தகைய வர்த்தக வங்கியில் ஊழியர் ஒருவர் அல்லாதவரான முகாமைத்துவ முகவர் ஒருவரைத் தொழிலுக்கமர்த்தவோ அல்லது அத்தகைய முகவர் ஒரு வரினால் முகாமைத்துவம் செய்யப்படவோ ஆகாது.

## பாகம் VII

### உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மீதான கட்டுப்பாடு

45. (1) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று—

(அ) அதனது தொழிலைக் கொண்டு நடாத்துவதில்—

(i) அதனது வைப்பீட்டாளர்கள் தொடர்பில் அதற்குள்ள கடப்பாடு களை இடருக்குள்ளாக்கும் சாத்தியங் கொண்டனவான; அல்லது

(ii) அதனது கடப்பாடுகளை ஈடுசெய்வதற்கு அத்தகைய வங்கியை இயலாத்தாக்கும் விளைவை ஏற்படுத்தும் சாத்தியங் கொண்டவையான

பாதுகாப்பற்ற அல்லது திட்டவட்டமில்லாத செய்முறைகளில் ஈடுபட்டுள்ளதென; அல்லது

(ஆ) பணச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியுள்ளதென அல்லது அவற்றோடு இணங்கியொழுகத் தவறியுள்ளதென;

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அபிப்பிராயப்படுமிடத்து, அவர் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியைப் பின்வருமாறு செய்யும்படி பணிக்கும் கட்டளையொன்றை வழங்கலாம்:—

(அ) அத்தகைய ஏதேனும் செய்முறையை அல்லது மீறுகையைச் செய்யாதொழித்தல் அல்லது தவிர்த்தல்; அல்லது

(ஆ) பணச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதல்; அல்லது

(இ) அத்தகைய செய்முறையிலிருந்து அல்லது மீறுகையிலிருந்து விளைகின்ற நிலைமைகளைச் சரிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட கட்டளையுடன் அதிருப்தியடையும் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி, அத்தகைய கட்டளை வழங்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடைவதற்கு முன்னர், பணச்சபைக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம்; பணச்சபையானது அத்தகைய மேன்முறையீடு கிடைக்கப்பெற்றதிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அதன் முடிவை அளித்தலும் வேண்டும்.

46. பணச்சபை ஆனது, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும், பின்வருவனவற்றைக் குறித்துரைத்து அது அவசியமெனக் கருதக்கூடியவாறான பணிப்புகளை விடுக்கலாம்:—

(அ) அத்தகைய வங்கியினால் கொடுபடவேண்டிய அல்லது கொடுபடாதிருக்க வேண்டிய முற்பணங்களின் வகுப்பு அல்லது வகுப்புகள்;

(ஆ) பாதுகாப்போடு கொடுக்கப்பட்ட முற்பணங்கள் தொடர்பில் பேணப்படவேண்டிய வரம்புகள்;

(இ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் செலுத்தப்பட்ட மூலதனம், ஒதுங்குகள், வைப்புகள் என்பவற்றையும் வேறு இயைபான விடயங்களையும் கவனத்தில் கொண்டு, அத்தகைய வங்கியினால் ஏதேனுமொரு கம்பெனிக்கு, குழுமத்துக்கு ஆட்களின் அல்லது தனியாட்களின் கழகத்திற்கு அல்லது கூட்டு மொத்தத்தில் தனியாளொருவருக்கு அல்

லது அவரது நெருங்கிய உறவினர்களுக்கு அல்லது அவருக்குக் கணிச மான அக்கறையுடைய ஒரு கம்பெனிக்கு அல்லது குழுமத்துக்கு அளிக் கப்படக்கூடிய கடனுதவியின் உச்சத் தொகை;

(ஈ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில்—

(i) கம்பனியொன்றினால், கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் அல் லது தனியாள் ஒருவரினால்;

(ii) கூட்டு மொத்தத்தில்—

(அ) ஒரு கம்பெனியினாலும் அத்துடன் பின்வருவனவற்றுள் ஒன் றினாலும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவையினாலும்:—

(அஅ) அதன் துணைநிலை நிறுவனங்களால்;

(ஆஆ) அதன் வைத்திருக்கைக் கம்பெனியினால்;

(இஇ) அதன் வைத்திருக்கைக் கம்பெனியின் துணைநிலை நிறுவனத்தினால்; அல்லது

(ஈஈ) அத்தகைய கம்பெனி, அல்லது அதன் துணைநிலை நிறுவனம் அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனி அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனியின் துணை நிலை நிறுவனம் கணிசமான அக்கறை கொண் டிருப்பதான கம்பெனியொன்றினால்; அல்லது

(ஆ) ஒரு தனியாளினாலும் அத்துடன் பின்வருவனவற்றுள் ஒன் றினாலும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவையினாலும்:—

(அஅ) அவரது நெருங்கிய உறவினர்களினால்;

(ஆஆ) அவர் கணிசமான அக்கறை கொண்டிருக்கும் அல் லது அவரது நெருங்கிய உறவினர்கள், கணிசமான அக்கறை கொண்டிருக்கும் கம்பெனியினால்;

(இஇ) அத்தகைய கம்பெனியின் துணைநிலை நிறுவனத்தி னால்;

(ஈஈ) அத்தகைய கம்பெனியின் வைத்திருக்கைக் கம்பெனி யினால்;

(அஅ) அத்தகைய கம்பெனியின் வைத்திருக்கைக் கம்பெனி யின் துணைநிலை நிறுவனத்தினால்;

(ஊஊ) அத்தகைய கம்பெனி, அல்லது அதன் துணைநிலை நிறுவனம் அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனி, அல்லது அதன் வைத்திருக்கை கம்பெனியின் துணைநிலை நிறுவனம் கணிசமான அக்கறை கொண்டிருப்பதான கம்பெனியொன்றினால்; அல்லது

(எஎ) கம்பெனியொன்று அல்லாததும் அத்தகைய தனியாள் அல்லது அவரது நெருங்கிய உறவினர் கணிசமான அக்கறை கொண்டிருப்பதுமான கூட்டிணைக் கப்பட்ட குழுவொன்றினால்

வைத்திருக்கப்படும் பங்கு மூலதனத்தின் உச்ச அளவு சதவீதம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பணிப்பொன்று அத்தகைய பணிப்பானது, இச்சட்டம் நடைமுறைக்கு வருமுன்னர் அல்லது வந்த பின்னர் கொள்ளப்பட்டதாயினுஞ்சரி அல்லது அதன் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் எவற்றினதும் தன்மையில் அல்லது தொகையில் மாற்றமொன்றினைப் பயனுறுத்துமாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றைத் தேவைப்படுத்தும் என்பது எவ்வாறிருப்பினும் பயனுடையதாதல் வேண்டும். ஆயினும், அவ்வாறு மாற்றமொன்றைப் பயனுறுத்துமாறு தேவைப்படுத்தப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று அத்தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகுவதற்கு அத்தகைய பணிப்பின் தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதி அல்லது பணச்சபையால் அளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நீண்டகாலப் பகுதி வழங்கப்படும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று.

(3) (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் அதற்கு வழங்கப்பட்ட பணிப்பொன்றுக்கு இணங்கியொழுகுவதற்காக அத்தகைய வங்கியில் பங்குகள் வைத்திருக்கும் ஆளை, அத்தகைய வங்கிகள் அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் அத்தகைய ஆளினால் நியமித்த தேதிக்கு முன்னர் கொள்ளப்பட்டதாயினுஞ்சரி, பின்னர் கொள்ளப்பட்டதாயினுஞ்சரி, அத்தகைய வங்கியில் அத்தகைய ஆளினால் வைத்திருக்கப்படும் பங்குகளின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு பணிக்கலாம், அத்துடன் அத்தகைய பணிப்பிற்கு இணங்கியொழுகுவது அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் அவருக்குக் கொடுக்கப்பட்ட பணிப்பொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவரால் சுருக்கமுறை விசாரணையின் பின் பதினெட்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு மறியற்றண்டனைக்கு அல்லது ஆயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

47\. (1) இப்பிரிவின் ஏற்பாடுகள், உள்ளூர் வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்தும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கு மட்டுமே ஏற்புடையன வாதல் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எதுவும் —

(அ) அதன் சொந்தப் பங்குகளின்; அல்லது

(ஆ) அதில் கணிசமான அக்கறையுடைய கம்பெனிகளினது பங்குகளின்; அல்லது

(இ) பந்தி (ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனிகள் கணிசமான அக்கறையுடைய கம்பெனிகளினது பங்குகளின் பிணைப் பொறுப்பிற் கெதிராகக் கடனுதவி வழங்குதலாகாது.

(3) பணச் சபையினால் காலத்துக்குக் காலம் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிணைப்பொறுப்பானது வழங்கப்பட்டாலன்றியும் அத்துடன் (சம்பந் தப்பட்ட பணிப்பாளரைத் தவிர) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப் பாளர்கள் சபையினை உருவாக்கும் பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோர் பணிப்பாளர்கள் சபையின் கூட்டமொன்றின்போது அத்தகைய கடனுதவிக்குச் சார்பாக வாக்களித்து அத்தகைய கடனுதவியானது அனுமதிக்கப்பட்டாலன்றியும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எதுவும் அதன் பணிப்பாளர்களுள் எவரேனும் பணிப்பாளருக்கோ அல்லது அத்தகைய பணிப் பாளரின் மிக நெருங்கிய உறவினர் ஒருவருக்கோ ஏதேனும் கடனுதவியை வழங்குதல் ஆகாது.

(4) பணிப்பாளர் ஒருவருக்கு அல்லது அத்தகைய பணிப்பாளரின் ஆகக் கிட்டிய உறவினருக்கு உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப் படும் கடன் உதவியானது, அவருக்கு அல்லது அத்தகைய மிக நெருங்கிய உறவி னருக்குக் கொடுக்கப்பட்ட கடன் உதவி ஏதேனும் இருப்பின் அத்தொகையையும் பணிப்பாளராக அவர் நியமிக்கப்பட்ட தேதிக்கு முந்திய நாளன்று அல்லது நியமித்ததேதிக்கு முந்திய நாளன்று, இவற்றுள் எது பிந்தியதோ அந்நாளன்று வெளிநிலுவையாகவுள்ள தொகையை அல்லது ஐந்து இலட்சம் ரூபா ஆகிய இவற்றுள் எது கூடியதோ அத்தொகையை விஞ்சுதலாகாது என்பதுடன் அத்தகைய கடன்உதவியானது இப்பிரிவின் நோக்கங்களுக்காக பணச் சபையினால் காலத் துக்குக் காலம் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிணைப்பொறுப்பினால் பிணைப் பொறுப்பாக்கப்படுதலும் வேண்டும்.

(5) பணச் சபையினால் காலத்துக்குக் காலம் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிணைப்பொறுப்பானது வழங்கப்பட்டாலன்றியும், அத்துடன் (சம்பந் தப்பட்ட பணிப்பாளரைத் தவிர) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப் பாளர்கள் சபையினை உருவாக்கும் பணிப்பாளர்களின் எண்ணிக்கையின் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோர் பணிப்பாளர்கள் சபையின் கூட்டமொன்றின்போது அத்தகைய கடனுதவிக்குச் சார்பாக வாக்களித்த அத்தகைய கடனுதவியானது அனுமதிக்கப்பட்டாலன்றியும், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எதுவும் பணிப் பாளரொருவராக அவர் நியமிக்கப்பெற்ற தேதிக்கு முன்னைய நாளன்று அல்லது நியமித்த தேதிக்கு முந்திய தேதியன்று இத்தேதிகளில் எத்தேதி முந்தியதோ அத்தேதியன்று, கணிசமானளவு அக்கறையினைக் கொண்டுள்ளவாரான அத்தகைய பணிப்பாளரானவர் எத்தாபனத்தில் இருக்கின்றாரோ அத்தாபனம் எதற்கும் கடனுதவியை வழங்குதலாகாது.

(6) ஆள் ஒருவருக்கு அல்லது ஆள் ஒருவரின் மிக நெருங்கிய உறவினர் ஒருவருக்கு அல்லது அந்த ஆள் கணிசமானளவு அக்கறையினைக் கொண்டுள்ள தாபனம் ஒன்றுக்கு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினுல் ஏதேனும் கடனுதவியானது அளிக்கப்பட்டிருக்குமிடத்து, அத்துடன் அந்த ஆளானவர் நியமிக்கப்பட்ட தேதியன்று அந்த உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப் பாளராகவிருந்தால் அல்லது நியமிக்கப்பட்ட தேதியின் பின்னர் பணிப்பாளராக நியமிக்கப்பட்டால், நியமித்த தேதியிலிருந்து அல்லது பணிப்பாளராக நியமிக்கப் பட்ட தேதியிலிருந்து, இதில் எது ஏற்புடைத்தானதோ அத்தேதியிலிருந்து ஒரு வருடத்துக்குள்ளாகப் பணச் சபையினுல் அந்நோக்கத்துக்கென அங்கீகரிக்கப்படக் கூடியவாறுன அத்தகைய பிணைப்பொறுப்பினைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

(7) அத்தகைய பிணைப்பொறுப்பானது (6) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப் பட்டவாறு ஏற்பாடு செய்யப்பட்டிராதிருக்குமிடத்து—

(அ) கடனுதவியானது வழங்கப்பட்ட நேரத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக அல்லது (6) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப் பட்ட காலப்பகுதியானது முடிவுறுத்தப்பட்டிருந்து ஆறு மாத காலப் பகுதியானது முடிவடையும்போது, இதில் எது முந்தியதோ அக்காலப் பகுதிக்குள்ளாக;

(ஆ) காலப்பகுதி எதுவும் குறித்துரைக்கப்படாதவிடத்து, (6) ஆம் உட் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள காலப்பகுதியானது முடிவுறுத்தப் பட்டதிலிருந்து ஓராண்டு காலப்பகுதி முடிவடையும்போது உரிமம் பெற்ற வர்த்தக வங்கியானது, அதற்கு வருமதியாகவுள்ள வட்டி ஏதேனுமிருப்பின் அவ்வட்டியுடன் சேர்த்து, ஏதேனும் கடனுதவியின் கணக்கால் வருமதியாகவுள்ள ஏதேனும் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்:

ஆயின், பணச்சபையானது, எவ்விடயத்திலேனும் அதன் சார்பில் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினுல் அதற்குச் செய்யப்பட்ட எழுத்திலான விண்ணப்பமொன்றின்மீது (அ) என்னும் பந்தியின் குறித் துரைக்கப்பட்ட ஆறு மாத காலப்பகுதி முடிவடைவதிலிருந்து ஆரம்பிக் கும் மூன்ருண்டு காலப் பகுதிக்குமப்பாற்படாத ஒரு தேதிவரை கட னுதவியை அறவிடுவதற்கான காலப்பகுதியை நீடிக்கலாம்:

ஆயின், மேலும், இவ்வுட்பிரிவினதும் (6) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகள், சம்பந்தப்பட்ட பணிப்பாளர் இறப்பதன் மூலமோ, இளைப்பாறுவதன் மூலமோ, பதவி துறப்பதன் மூலமோ அல்லது வேறு வகையாகவோ அத்தகைய பதவியை வறிதாக்குபவராயின் அத் துடன் வறிதாக்கும்போது ஏற்புடையனவாகா.

(8) பணிப்பாளர் ஒருவருக்கு அல்லது பணிப்பாளர் கணிசமான அக்கறை கொண்டுள்ள தாபனம் ஒன்றிற்கு வழங்கப்பட்ட கடனுதவி தொடர்பில் (6) ஆம் உட்பிரிவினுல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாகப் பிணைப்பொறுப்பு எதுவும் ஏற்பாடு செய்யப்பட்டிராதவிடத்து அல்லது வருமதியாகவுள்ள தொகை யானது (7) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி மீளச் செலுத்தப்படாதிருக்கு மிடத்து, அத்தகைய பணிப்பாளர், (7) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவில் பதவியை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(9) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியிடமிருந்து ஏதேனும் கடனுதவியை அல்லது உத்தேச கடனுதவியைப் பெற எத்தன்மைத்தான எம் முறையிலேனும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அக்கறை கொண்டிருக்கின்ற உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் பணிப்பாளர் ஒவ்வொருவரும், இயலக்கூடியளவு விரைவாகப் பணிப்பாளர் சபைக்குத் தமக்குள்ள அக்கறையின் தன்மை பற்றி வெளியிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் செயலாளர் அல்லது முகாமையாளர் அத்தகைய வெளிவிடுகை பற்றி எல்லாப் பணிப்பாளர்களுக்கும் உடனடியாகச் சுற்றறிக்கைமூலம் அறிவிப்புச் செய்தல் வேண்டும்.

(10) எந்த உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப்பாளர் அல்லது பணிப்பாளரின் மிக நெருங்கிய உறவினர் அல்லது பணிப்பாளர் கணிசமானளவு அக்கறை கொண்டுள்ள வியாபாரத் தாபனம், அக்கறை கொண்டுள்ளாரோ அல்லது அக்கறை கொண்டுள்ளதோ அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கியால் கொண்டு நடாத்தப்படும் அல்லது கொண்டு நடாத்தப்பட உத்தேசிக்கப்படும் ஏதேனும் தொழில் தொடர்பாகச் சபை எடுக்கும் கலந்தாராய்வுகள் அல்லது முடிவுகள் எதிலும் பணிப்பாளர் ஒருவர் பங்கு பற்றுதலாகாது என்பதுடன் கலந்தாராய்வு இடம்பெற்றுக் கொண்டிருக்கும் அல்லது முடிவு எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது அத்தகைய தொழிலானது கலந்தாலோசிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அல்லது கொண்டு நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் சபைக் கூட்டத்திலிருந்து அவர் விலகிக்கொள்ளுதலும் வேண்டும்.

(11) பணிப்பாளர் ஒருவருக்கு அல்லது பணிப்பாளரின் மிக நெருங்கிய உறவினருக்கு அல்லது பணிப்பாளர் கணிசமானளவு அக்கறை கொண்டுள்ள தாபனத்திற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியினல் வழங்கப்பட்ட கடனுதவி அல்லது அதன் பாகம் எதுவும் பணச் சபையின் முன்னங்கீகாரம் இல்லாது அனுப்பப்படுதல் ஆகாது. அத்துடன் அத்தகைய அங்கீகாரமில்லாது செய்யப்பட்ட அனுப்புகை எதுவும் வெற்றுனதாதலும் பயனுறுதி அற்றதாதல் வேண்டும்.

(12) ஒன்பதாம், (10) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவ ரேனும் பணிப்பாளர், இச்சட்டத்தின் கீழ்த் தவறென்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(13) இப்பிரிவின் நோக்கங்களுக்காக—

''கம்பெனி'' என்பது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியை உள்ளடக்குதலாகாது;

''பணிப்பாளர்'' என்பது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றின் பணிப்பாளரை உள்ளடக்குத லாகாது.

48. (1) எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் அல்லது ஏதேனும் ஒப்பந்தத்தில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எதுவும், அதற்குக் கொடுக்கப்பட்ட அல்லது அதனுல் வைத்திருக்கப் படும் பிணைப் பொறுப்பைக் காசாசப் பெறுதல் தொடர்பாகத் தவிர, நேரடி யாகவோ மறைமுகமாகவோ பண்டங்களை வாங்குவதில் அல்லது விற்பதில் அல்லது கொடுத்து மாற்றுவதில் ஈடுபடுதலாகாது, அல்லது சேகரிப்பதற்கென அல்லது கொடுக்கல் வாங்கல் செய்வதற்கெனப் பெறப்பட்ட நாணயமாற்ற உண்டியல்கள் தொடர்பாக அல்லது 11 ஆம் அட்டவணையில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் அல்லது (397 ஆம் அத்தியாயமான) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தில் அல்லது 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டவாறுன அதன் தொழில் தொடர்பாக இச்சட்டவாக்கங் களின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாக இருக்கும் அளவுக்கு தவிர வேறு விதமாக, ஏதேனும் வியாபாரத்தில் அல்லது ஏனையோருக்காகப் பண்டங்களை வாங்குவதில் விற்பதில் அல்லது கொடுத்து மாற்றுவதில் ஈடுபடுதல் ஆகாது.

(2) முற்போந்த உட்பிரிவில் ஏற்பாடுகள், நியமித்த தேதியன்று கொண்டு நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் மேற்சொல்லப்பட்டவாறுன ஏதேனும் அத் தகைய தொழிலுக்கு ஏற்புடையனவாகா;

ஆயின், சொல்லப்பட்ட தொழிலானது நியமித்த தேதியிலிருந்து ஓராண்டு முடிவடைய முன்னதாகச் செய்து முடிக்கப்படுதல் வேண்டும்.

49. பணச் சபையின் எழுத்தால் பெறப்பட்ட முன் அங்கீகாரம் இல்லாது உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எதுவும், அதன் அசைவற்ற சொத்துக்களுள் எதனையும், அச்சொத்துக்களின் சந்தைப் பெறுமதிக்குக் குறைவாக விற்றல், கொடுத்துமாற்றல், குறித்தொதுக்குதல் அல்லது கையுதிர்த்தல் ஆகாது அல்லது வங்கியின் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டவாறுன சொத்துக்களின் பெறுமான த்தை அச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதிக்கு மேலாக அதிகரித்தல் ஆகாது.

## பாகம் VIII

### இலங்கைக்குள்ளாகக் கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளை ஒழித்துக்கட்டுதலும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் கிளைகளை மூடுதலும்

50. வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக ஒழிப்போனுக நியமிக்கப்படுதல் வேண்டும்.

51. பணச் சபையில் எழுத்தில் பெறப்பட்ட முன் அதிகாரமளிப்பு இல்லா மல், எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் மூலம் அல்லது சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றின் தன்னிச்சையான ஒழித்துக்கட்டுகை எதுவும் பயனுறுத்தப் படுதல் ஆகாது. அங்கீகாரமளிப்பானது—

(அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியானது கடனிறுக்க வகையுள்ள தெனவும் தாமதமில்லாமல் அதன் வைப்பாளர்களுக்கும் ஏனைய கடன் தருநர்களுக்கும் மீளச் செலுத்துவதற்குப் போதிய திரவச் சொத்துக் களைகொண்டுள்ளதெனவும்; அத்துடன்

(ஆ) இந்நோக்கத்துக்கென வெளிப்படையாகக் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடைய வெளி நிலுவையாகவுள்ள பங்குகளில் ஆகக் குறைந்தது நான்கில் மூன்று பங்குகளை வைத்திருப்பவர்களின் ஒருப்பாடான வாக்கு மூலம் ஒழித்துக்கட்டுகை அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், நாணயச் சபைக்குத் தோன்றினல் மாத்திரம் வழங்கப்படுதல் வேண்டும்:

ஆயின், ஒழித்துக்கட்டுதலானது வேறோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு உரிமமளிக்கப்பட்ட இவ்வர்த்தக வங்கியின் சொத்துக்களுள் எதனையும் முழுமையாகவோ பகுதியளவிலோ விற்பதன் மூலமும் அத்தகைய வேறு வங்கியினுல் அதன் வைப்புப் பொறுப்புக்கள் மேற்கொள்ளப்படுவதன் மூலமும் பயனுறுத்தப்படுமாயின், பணச் சபையானது, கடனிறுக்க வகையின்மைநிலை ஏற்படும் என்ற உடனடி ஆபத்துப் பற்றி அறிந்ததன்மேல், பங்குடைமையாளர்களின் அங்கீகாரம் பெற வேண்டிய தேவைப்பாட்டை விட்டு விடலாம்:

ஆயின் மேலும், 12 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள், அத்தகைய பொறுப்பு ஏற்புக்கு ஏற்புடையனவாகா.

52. உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்று, ஒழித்துக்கட்டுகைக்குப் பணச் சபையின் அதிகாரமளிப்பைப் பெற்றதும், அது—

(அ) முறைமையான ஒழித்துக்கட்டலைப் பயனுறுத்துவதற்கு அவசியமானவையான அத்தகைய தத்துவங்களை மாத்திரம் பிரயோகித்துக்கொண்டு உடனடியாகத் தொழிலைக் கொண்டு நடத்தாதொழிதல் வேண்டும்.

(ஆ) அதன் வைப்பீட்டாளர்களுக்கும் ஏனைய கடன் தருநர்களுக்கும் போகுமதியாகவுள்ள பணத்தொகைகளை மீளச் செலுத்துதல் வேண்டும்;

(இ) அதிகாரமளிப்பைப் பெறுவதன் முன்னர் மேற்கொள்ளப்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் ஒடுக்குதல் வேண்டும்.

53. தன்னிச்சையான ஒழித்துக்கட்டுதலுக்கு அமைந்த ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி 51 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அதிகாரமளிப்பைப் பெற்றதன்மேல் முப்பது நாட்களுக்குள்ளாக எல்லா வைப்பீட்டாளர்களுக்கும், கடன் தருநர்களுக்கும் நம்பக தன்மையில் பாதுகாப்பு வைப்புப் பேழையின் குத்தகைக்காரர் அல்லது ஒப்படை பெறுநர் என்ற வகையில், அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினுல் வைத்திருக்கப்படும் நிதிகளுக்கு அல்லது ஆதனத்துக்கு வேறு வகையில் உரித்துடையவரான ஆட்களுக்கும் தன்னிச்சையான ஒழித்துக் கட்டுதல் பற்றிய அறிவித்தல் ஒன்று பதிவஞ்சல் மூலம் அனுப்புவித்தல் வேண்டும். அறிவித்தலில் உட்படுத்தப்படவேண்டிய தகவலைப் பணச் சபையானது விதித்துரைக்க வேண்டும். பணச் சபையானது, அவ்வாறு செய்வது உசிதமானதெனக் கருதுகின்றவிடத்து, அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கியினுல் அதற்கென நியாயமான காரணம் காட்டியதன்மேல் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கு அத்தகைய அறிவித்தல் அனுப்புவதை விலக்கி வைக்கலாம். அந்த அறிவித்தலானது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் தொழில் இடத்தினுள் துலாம்பரமான ஓரிடத்தில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் நாணயச் சபை பணிக்கக் கூடியவாறான அத்தகைய பிற பிரசித்தம் கொடுக்கப்படுதலும் வேண்டும்.

54. தன்னிச்சையான ஒழித்துக்கட்டுகையைப் பயனுறுத்த வேண்டுமென்ற அதிகாரமளிப்பு ஒரு வைப்பீட்டாளருக்கு அல்லது வேறு கடன்தருநருக்கு அல்லது சொந்தக்காரனுக்கு அவரது கோரிக்கையை முழுமையாகக் கொடுப்பனவு செய்வதற்குள்ள உரிமையையும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினுல் வைத்திருக்கப்படும் நிதிகளின் அல்லது வேறு ஆதனத்தின் சொந்தக்காரருக்குள்ள உரிமையையும் பங்கப்படுத்துதல் ஆகாது. சட்டபூர்வமான எல்லாக் கோரிக்கைகளும் காலந்தாழ்த்தாது செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினுள் வைத்திருக்கப்படும் எல்லா நிதிகளும் ஏனைய ஆதனமும் பணச் சபையினுல் தீர்மானிக்கப்படக் கூடியவாறுன அத்தகைய ஆகக் கூடிய காலத்துக்குள்ளாக அவ்வவற்றிற்கு உரிமையுள்ள சொந்தக்காரர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

55. பணச் சபையானது ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி 54 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறுக அதன் சகல கடப்பாடுகளையும் விடுவித்துள்ளதென அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அத்தகைய வங்கியின் பெயர், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் நிரலிலிருந்து அகற்றப்படுதல் வேண்டுமென்பதுடன், வெளி நிலுவையாகவுள்ள சொத்துக்கள் சட்டபூர்வமான சொந்தக்காரர்களுக்கு அவரவர்களுக்குள்ள உரிமைகளுக்கமைவாக, அவர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும். பகிர்ந்தளிப்பு எதுவும்—

(அ) வைப்பீட்டாளர்களினதும் அல்லது ஏனைய கடன் தருநர்களினதும் அல்லது சொந்தக்காரர்களினதும் சகல உரிமைக் கோரிக்கைகளும் செலுத்தப்படும் வரை அல்லது உரிமைக் கோரிக்கை பற்றிப் பிணக்கொன்றிருக்கும் விடயத்தில் நீதி முறையான முடிவின்பின் எழக்கூடிய ஏதேனும் பொறுப்பைச் சமாளிப்பதற்குப் போதிய நிதிகளை உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி, மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கும் வரை;

(ஆ) நிதிகளைக் கோராத வைப்பீட்டாளர்களுக்கும் வேறு கடன் தருநருக்கும் சொந்தக்காரருக்கும் கொடுபடற்பாலதான எவையேனும் நிதிகளை மத்திய வங்கிக்குச் செலுத்தும்வரை;

(இ) இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கச் சட்டபூர்வமான சொந்தக்காரரிடம் திருப்பிக் கொடுக்கப்படமுடியாத உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினுல் வைத்திருக்கப்படும் வேறு எவையேனும் நிதிகள் அல்லது ஆதனம் 72 ஆம் பிரிவிற்கிணங்கக் கையாளப்படும் வரை;

செய்யப்படுதல் ஆகாது.

56. பணச் சபையானது—

(அ) உரிமமளிக்கப்பட்ட எவ்வர்த்தக வங்கியின் தன்னிச்சையான ஒழித்துக்கட்டுகைக்கு அது அதிகாரமளித்துள்ளதோ அவ்வங்கியின் சொத்துக்கள் அதன் எல்லாக் கடப்பாடுகளையும் பூரணமாகப் பொறுப்பு விடுவிப்பதற்குப் போதாதனவென; அல்லது

(ஆ) தன்னிச்சையான ஒழித்துக்கட்டுகையினை முடித்தல் பெருமளவு காலதாமதம் ஆகின்றதென;

அபிப்பிராயப்பட்டால், அது அத்தகைய வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை நீக்கஞ் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென்பதுடன் இதன் கீழ்த் தரப்பட்டுள்ள நடைமுறைகளுக்கமைவாக அத்தகைய வங்கியின் கட்டாய ஒழித்துக்கட்டுதலுக்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தலும் வேண்டும்.

57. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினது உரிமத்தினை இல்லாதொழித்தலானது, 9 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி இறுதியானதாக வந்துள்ள போது, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியானது உடனடியாக இலங்கையினுள்ளும் இலங்கைக்கு வெளியிலும் அதன் தொழிலை இடைநிறுத்துதல் வேண்டுமென்பதுடன் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரானவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஒழித்துக்கட்டுகை நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டுமெனப் பணித்தலும் வேண்டும். ஒழித்துக்கட்டுகை நடவடிக்கைகளை ஆரம்பித்ததன் பின்னர் எவ்வளவுக் கெவ்வளவு விரைவாக இயலுமோ, அவ்வளவுக்கவ்வளவு விரைவாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் சொத்துக்கள் மற்றும் எதிர்பாராப் பொறுப்புக்கள் பற்றிய விவரப் பட்டியலொன்று ஆக்கப்படல் வேண்டுமென்பதுடன், அதன் பிரதியொன்று பணச் சபைக்கு அனுப்பி வைக்கப்படுதலும் வேண்டும். அப்பிரதியானது அத்தகைய வங்கியினது தொழிலில் அக்கறை கொண்டுள்ள திறத்தவர்களினுல் பார்வையிடப்படுவதற்கெனப் பணச் சபையின் அலுவலகத்தில் கிடைக்கப்பெறற்பாலதாயிருத்தல் வேண்டும்.

58. வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரானவர், கட்டாய ஒழித்துக்கட்டுதலின் நோக்கத்துக்காக, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி எதனினதும் அலுவல்களின் முகாமைத்துவத்தினதும் கட்டுப்பாட்டினதும் முழுதானதும் புறநீங்கலானதுமான தத்துவம் உரித்தாக்கப்பட்டவராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர்—

(அ) நீதிமன்றத்தில் ஒழித்துக்கட்டுதல் நடவடிக்கைகளைத் தொடுப்பதன் மூலம் அதன் செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும்;

(ஆ) அதன் கடப்பாடுகளின் கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கு அல்லது வரையறுப்பதற்கும்;

(இ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பெயரில் சாதனம் எதனையும் நிறைவேற்றுவதற்கும்; அத்துடன்

(ஈ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியானது எந்த வழக்குக்கு அல்லது வழக்கு நடவடிக்கைகளுக்குத் திறத்தவராக இருக்கக்கூடுமோ அந்த ஏதேனும் வழக்கை அல்லது வழக்கு நடவடிக்கையை அதன் பெயரில் ஆரம்பிப்பதற்கு எதிர்வழக்காடுவதற்கு அத்துடன் நடாத்துவதற்குத்

தத்துவமுடையதாதலும் வேண்டும்.

59. ஒழித்துக் கட்டுதல் நடவடிக்கைகளின் கீழ்—

(அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் உரிமைக்கோரிக்கை அல்லது உரிமை, எந்த நியதிச் சட்டமுறையான, ஒப்பந்த ரீதியான அல்லது வேறுவகையான காலப்பகுதியின் முடிவின்மீது முடிவடையுமோ அல்லது இல்லாதாக்கப்படுமோ, அந்தக் காலப் பகுதியானது இப்பிரிவினது தொழிற்பாட்டின் காரணமாக நடவடிக்கைகளை ஆரம்பித்த தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) பந்தி (அ) என்பதில் குறித்துரைக்கப்பட்டவாறான தேதிக்கு முந்திய ஆறு மாதங்களாக இருந்துவரும் ஒரு சோந்தைத் தவிர்ந்த, ஏதேனும் நடுக்கட்டுகை அல்லது சோந்தை வறிதாக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் இப்பாகத்தின் ஏற்பாடுகளை ஏற்புடைத்தாக்குகையில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரால் உருவாக்கப்பட்ட ஒரு சோந்தை தவிர்ந்த நடுக்கட்டுகை அல்லது சோந்தை எதுவும் ஒழித்துக்கட்டலிலுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஆதனங்களை அல்லது சொத்துக்களைச் சார்ந்திருத்தலாகாது;

(இ) கடனிறுக்க வகையின்மை நிலையின் பின்னர் அல்லது அதனை எதிர்பார்த்து உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் எவையேனும் சொத்துக்களின் ஏதேனும் கைமாற்றம் வெற்றானதாதல் வேண்டும்.

60. (1) உரிமம் ஒன்று இல்லாதாக்கப்படுதல் இறுதியானதாகவரும் தேதியிலிருந்து ஆறு மாத காலப் பகுதிக்குள்ளாக, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக—

(அ) அத்தகைய வங்கியுடன் செய்துகொள்ளப்பட்ட தொழில் ஒப்பந்தம் எதனையும்;

(ஆ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி திறத்தவராகவுள்ள சேவைகளுக்கான ஏதேனும் ஒப்பந்தத்தை; அல்லது

(இ) குத்தகை பெறுநர் என்றவகையில் அதன் எவையேனும் கடப்பாடுகள் உட்பட, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்குள்ள ஏதேனும் கடப்பாட்டை,

முடிவுறுத்தலாம்.

(2) குத்தகையை முடிவுறுத்துவது தொடர்பாகத் தற்றுணிபுத் தத்துவங்களை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் பிரயோகிக்கின்றார் என்ற தொண்ணூறு நாள் அறிவித்தலைப் பெற்ற குத்தகைக்கு விடுபவர் ஒருவர், குத்தகையை முடிவுறுத்தும் தேதியன்று திரண்டுள்ளதான வாடகை தவிர்ந்த வாடகை எதனையும் அல்லது அத்தகைய முடிவுறுத்துகை காரணமாக நட்டஈடு எதனையும் கோர முடியாதவராகவிருத்தல் வேண்டும்.

61. உரிமமொன்றை இல்லாதாக்கலானது இறுதியானது வந்ததன் பின்னர் எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் நம்பகத் தன்மையில் புரியப்படும் எல்லாப் பணிகளையும் முடிவுறுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வழிவகைகளை எடுப்பதன்மூலம் இறுதிப் பங்கீட்டைச் செய்தல் வேண்டுமென்பதுடன் நம்பகத் தன்மையில் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினுள் வைத்திருக்கப்படும் எல்லாச் சொத்துக்களையும் ஆதனத்தையும் அதன் சொந்தக்காரர்களுக்குத் திருப்பிக் கொடுத்தலும் அதன் நம்பகக் கணக்குகளைத் தீர்த்து வைத்தலும் வேண்டும்.

62. உரிமமொன்றை இல்லாதொழிக்க இறுதியானதாக வந்ததன் பின்னர் இயலக்கூடியவாறு விரைவாக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், பதிவஞ்சல் மூலம் எல்லா வைப்பீட்டாளர்களுக்கும் சொந்தக்காரர்களுக்கும் ஏனைய கடன் தருநர்க்கும் பாதுகாப்பு வைப்புப் பெட்டி குத்தகைக்கெடுத்தவர்களுக்கும் அத்துடன் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியால் வைத்திருக்கப்படும் ஆதன ஒப்படைதருநர்களுக்கும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் புத்தகங்களில் எத்தொகையளவுக்கு அவர்களது கோரிக்கை காட்டப்பட்டுள்ளதோ அத்தொகையையும் தன்மையையும் காட்டும் கூற்றொன்றை அனுப்பி வைத்தல் வேண்டும். கூற்றுனது எவையேனும் ஆட்சேபனைகள் இருப்பின், அவ் ஆட்சேபனைகள் அக்கூற்றை வழங்கிய அறுபது நாட்களுக்குப் பிந்தாத குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதிக்கு முன்னர் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரிடம் கோப்பிடப்படுதல் வேண்டும் என்பதைக் குறித்துரைத்தல் வேண்டும். அத்துடன் பாதுகாப்பு வைப்புப் பெட்டி குத்தகைக்கெடுத்தவர்களையும் ஒப்படைதருநர்களையும் தமது ஆதனத்தை நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும் கூறுதல் வேண்டும். வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அறுபது நாட் காலப் பகுதி ஆரம்பமாவதற்கு முன்னர் பெறப்பட்ட நாணயச் சபையின் உறுதிப்படுத்தலுக்கமைவாக, அதற்கான காரணத்தை உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி காட்டியதன்மேல், குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கு அஞ்சல்மூலம் கூற்றை அனுப்பிவைப்பதை விலக்கி விடலாம்.

63. (1) எந்தப் பாதுகாப்பு வைப்புப் பெட்டியின் உள்ளடக்கங்கள் குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு முன்னர் மீளப் பெறப்படவில்லையோ, அந்தப் பாதுகாப்புப் பெட்டி எதுவும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரால் விதித்துரைக்கப்பட்ட முறையாகத் திறக்கப்படுதல் வேண்டும். உள்ளடக்கங்களும் உரிமை கோரப்படாத ஏதேனும் ஆதனமும் ஒப்படை பெறுநர் என்ற தன்மையில் உரிமமாக்கப்பட்ட வர்த்தக வங்கியினுள் வைத்திருக்கப்படுதல் வேண்டும். அத்துடன்—

(அ) எல்லாப் பணங்களும் பணச் சபையினது பணிப்பின் மீது மத்திய வங்கியிலுள்ள விசேட கணக்கொன்றுக்கு மாற்றப்படுதல் வேண்டும்;

(ஆ) பணம் தவிர்ந்த வேறு பொருள் எதுவும் பணச் சபையினது பணிப்பின் மீது அதனைக் கையுதிர்க்கும் முறை தொடர்பாகப் பணிப்புரையொன்றைப் பெறுவதற்காக அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) மேலே (அ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பணமும் (ஆ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பொருள்களும் அவற்றின் சொந்தக்காரர், விடயத்திற்கேற்றுற்போல, அத்தகைய பணத்தையோ, பொருள்களையோ வைப்புச் செய்த தேதியிலிருந்து பத்தாண்டு காலப் பகுதிக்கு மேலாக அதில் அக்கறை எதுவும் காட்டாதிருந்தால், IX ஆம் பாகத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி கைவிடப்பட்ட ஆதனமாகக் கருதப்படல் வேண்டும்.

64. ஆட்சேபனைகளைக் கோப்பிடுவதற்கென அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியின் பின்னர் மூன்று மாதங்களுக்குள்ளாக அல்லது பணச் சபையினது தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நீடித்த காலப்பகுதிக்குள்ளாக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்—

(அ) ஏதேனும் உரிமைக் கோரிக்கையின் செல்லுபடியை அவர் சந்தேகித்தால் அந்த உரிமம் கோரிக்கையை நிராகரித்தல் வேண்டும்;

(ஆ) அடையாளம் காணப்படத்தகு வைப்பீட்டாளருக்கு அல்லது வேறு கடன் தருநருக்குப் போகுமதியான தொகை ஏதேனுமிருந்தால் அதனையும், இச் சட்டத்தினது ஏற்பாடுகளின் கீழ் அவரது கோரிக்கை தொடர்பான முதன்மை வரிசையையும் தீர்மானித்தல் வேண்டும்;

(இ) அவர் எடுக்க உத்தேசித்துள்ள வேலைத் திட்டத்தில் அட்டவணையொன்றைத் தயாரித்தல் வேண்டும்;

(ஈ) எந்த ஆளினுடைய உரிமைக் கோரிக்கை பூரணமாக அனுமதிக்கப்படவில்லையோ அந்த ஒவ்வொருவருக்கும் அறிவித்தல் கொடுத்து அவர் எடுக்க உத்தேசித்துள்ள வேலைத் திட்டத்தின் அட்டவணை எத்தேதியிலும் எந்த இடத்திலும் பார்வைக்காக கிடைக்கும் என்பது பற்றிய அறிவித்தலைக் கொண்டுள்ள சிங்களம், தமிழ், ஆங்கிலத்திலுள்ள மூன்று நாளாந்த செய்தித்தாள்களில் மூன்று அடுத்தடுத்த வாரங்களுக்கு வாரத்துக்கு ஒருமுறை அறிவித்தல் ஒன்றை வெளியிடுதல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கப்படும் தேதியானது செய்தித்தாளில் மூன்றாவது முறை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு முந்திய ஒருகால தேதியாக இருத்தல் ஆகாது. அதன் மேல், வங்கிப் பார்வைக் பணிப்பாளர் அவ்வட்டவணையை நீதிமன்றத்தில் கோப்பிடுதல் வேண்டும்.

65. அறுபத்துநான்காம் பிரிவின் (இ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணையைக் கோப்பிட்டதன் பின்னர் இருபத்தொரு நாட்களுக்குள்ளாக, எவரேனும் வைப்பீட்டாளர், கடன்தருநர் பங்குடைமையாளர் அல்லது அக்கறையுள்ள வேறு ஆள் எடுக்கப்பட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள எந்த நடவடிக்கைக்கும் ஆட்சேபனைகளைக் கோப்பிடலாம். அவ்வாறு கோப்பிடப்பட்ட எவையேனும் ஆட்சேபனைகள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கும் நீதிமன்றம் குறித்துரைக்கக்கூடியவாறான அக்கறையுள்ள திறத்தவர்களுக்கும், அத்தகைய அறிவித்தல் கொடுத்ததன்மேல் நீதிமன்றத்தினால் பரிசீலிக்கப்படுதல் வேண்டும். ஆட்சேபனை ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டால் அட்டவணைக்குத் தோதான திரிபு செய்யப்பட வேண்டுமென நீதிமன்றம் பணித்தல் வேண்டும். அட்டவணையைக் கோப்பிட்டதன் பின்னர் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், காலத்துக்குக் காலம், பிணக்கிலிடப்பட்ட உரிமைக் கோரிக்கைகளைக் கொடுப்பதற்குத் தகுந்த ஏதுவொன்று தாபிக்கப்பட்டுள்ளது என்ற நிபந்தனையின்பேரில், பிணக்கிலிடப்படாத அல்லது நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கை உடையவர்களுக்குப் பகுதியளவிலான பகிர்ந்தளித்தலொன்றைச் செய்யலாம். சகல ஆட்சேபனைகளும் முடிவுசெய்யப்பட்டதன் பின்னர் இயலக்கூடியளவு விரைவாக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் இறுதிப் பகிர்ந்தளிப்பைச் செய்தல் வேண்டும்.

66. (1) இதன் கீழ்க் காட்டப்பட்டுள்ள உரிமைக் கோரிக்கைகள், கீழே காட்டப்பட்டுள்ள ஒழுங்கு வரிசைப்படி உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பொதுச் சொத்துக்களுக்கெதிராக முதன்மை வரிசை பெறுதல் வேண்டும்:—

(அ) இப்பாகத்தின் ஏற்பாடுகளைப் பிரயோகிக்கையில் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரால் உறப்பட்ட அவசியமான மற்றும் நியாயமான செலவுகள்;

(ஆ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் உரிமத்தை நீக்க முன்னரான மூன்றுமாத காலப்பகுதிக்கு ஒழித்துக்கட்டலிலிருக்கும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அலுவலர்களினதும் ஊழியர்களினதும் கூலிகளும், சம்பளங்களும்;

(இ) அரசாங்கத்துக்கும் உள்ளூர் அதிகார சபைகளுக்கும் போகுமதியான வரிகளும், வீத வரிகளும், வைப்புக்களும்;

(ஈ) நாணயச் சபைக்குப் போகுமதியான கட்டணங்களும் மதிப்பீடுகளும்;

(உ) ஐயாயிரம் ரூபா வரையிலான அல்லது அதற்குக் குறைந்த சேமிப்பு மற்றும் கால வைப்புக்கள்;

(ஊ) ஏனைய வைப்புக்கள்.

(2) நீதிமன்றத்தின் அங்கீகாரத்துடன் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரால் நிர்ணயிக்கப்படவேண்டிய வீதத்தில் கணக்கிடப்பட்ட வட்டியுடன் சேரக் கோப்பிடப்பட்ட மற்றெல்லா உரிமைக் கோரிக்கைகளையும் கொடுப்பனவு செய்த தன் பின்னர், விதித்துரைக்கப்பட்ட காலத்துக்குள்ளாகக் கோப்பிடப்படாத எவையேனும் எஞ்சிய உரிமைக் கோரிக்கைகள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) ஒரு குறிப்பிட்ட வகுதிக் கோரிக்கைகள் தொடர்பில் கிடைக்கற்பாலதாயுள்ள தொகையானது, கொடுப்பனவை முழுமையாக வழங்கப் போதாததாயிருப்பின் சொல்லப்பட்ட தொகையானது அக்கோரிக்கைக்கான திறந்தவர்களிடையே விகித சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

67. உரிமைக் கோரிக்கைகள் அனைத்தும் செலுத்தப்பட்டதன் பின்னர் எஞ்சியிருக்கும் எவையேனும் சொத்துக்கள் பங்குடைமையாளர்களிடையே அவரவரது பங்களிப்பு விகிதாசாரத்துக்கேற்பப் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

68. இச்சட்டத்தின் கீழான வேறு எவையேனும் ஏற்பாடுகளுக்கமைந்தனவாக இராத 61 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட இறுதிப் பகிர்ந்தளிப்பின் மேல் உரிமை கோரப்படாது எஞ்சியிருக்கும் நிதிகள், பணச் சபையினது பணிப்பின் மீது மத்திய வங்கியிலுள்ள விசேட கணக்கொன்றுக்கு மாற்றப்படுதல் வேண்டும். பணச் சபையானது அமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர் அச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்காக அத்தகைய நிதிகளைப் பயன்படுத்தலாம். நிதிகளானவை 61 ஆம் பிரிவின் கீழான இறுதிப் பகிர்ந்தளிப்புத் தேதிக்கு நேர் முந்திய பத்து ஆண்டுகளுக்குள்ளாக அதன் சொந்தக்காரர் அந்நிதிகளில் எவ்வித அக்கறையையும் காட்டாவிட்டால் இச்சட்டத்தின் IX பாகத்தின் நியதிகளின்படி கைவிடப்பட்ட ஆதனமாகவிருத்தல் வேண்டும். 72 ஆம் பிரிவானது அத்தகைய நிதிகள் தொடர்பில் இப்பிரிவின்கீழ் கைமாற்றப்பட்ட நேரத்தில் இருந்து ஏற்புடையனவாதல் வேண்டும்.

69. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க எல்லாச் சொத்துக்களும் பகிர்ந்தளிக்கப்பட்டு முடிந்ததும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கொன்றை நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். நீதிமன்றத்தினால் கணக்கு அங்கீகரிக்கப்பட்டதன்மேலும் ஒழித்துக்கட்டலை முடிவுறுத்துமாறு நீதிமன்றம் கட்டளையிடுகின்றவிடத்தும் அவ்வொழித்துக்கட்டுதல் தொடர்பாக எப்பொறுப்பிலிருந்தும் பணச் சபை விடுவிக்கப்பட்டதாதல் வேண்டும். வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பெனிகள் சட்டத்தின் அத்தகைய ஏற்பாடுகளுக்கிணங்கவும் அதற்கு ஏற்புடைத்தாகவும் சம்பந்தப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் நீதி முறையான உளதாந்தன்மையை முடிவுறுத்த முற்படுதல் வேண்டும்.

70. (1) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்று இலங்கையில் அதன் தொழிலை முடிவுக்குக் கொண்டு வர விரும்புகின்றவிடத்து, அவ்வாறு மூடுவது தொடர்பாகப் பணச் சபையின் அங்கீகாரமானது, அச்சபை குறித்துரைக்கக்கூடிய அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக வழங்கப்படுதல் வேண்டும். சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டவிடத்து இலங்கையில் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அலுவல்கள் (4) ஆம் உட்பிரிவில் தரப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கிணங்க ஒடுக்கப்படுதல் வேண்டும்.

(2) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் உரிமத்தை இல்லாதாக்கலானது 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் இறுதியானதாக்கப்பட்டுள்ளவிடத்து உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியானது, இலங்கையில் அதன் தொழிலை முடிவுறுத்த வேண்டுமென்பதுடன் அதன் அலுவல்கள் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஒடுக்கப்படுதலும் வேண்டும்.

(3) வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று தொடர்பில் தலைமை அலுவலகம் எங்கு அமைந்துள்ளதோ அங்கு ஒழித்துக்கட்டல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோது பணச் சபையானது இலங்கையில் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியை மூடிவிடுமாறு கட்டளையிடுதல் வேண்டும்.

(4) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அலுவல் (1), (2) அல்லது (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளின் கீழ் மூடப்பட்டுள்ளவிடத்து, ஒழித்துக்கட்டலுக்கமைவாகவுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி, இலங்கைக்குள்ளாக அதன் அலுவல்களை ஒடுக்குவதற்கு அவசியமானவையான அத்தகைய தத்துவங்களை மாத்திரம் வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் ஒழித்துக்கட்டுதலானது மிக விரைவாகவும் ஒழுங்கான முறையிலும் செய்யப்படுதல் வேண்டும். வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழான ஒடுக்குகையை 11 ஆம் பிரிவின் (1) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்பார்வை செய்தல் வேண்டுமென்பதுடன் ஒழித்துக்கட்டலின் விடயப் பொருளாகவுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் சொத்துக்கள் எவையும் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய பொறுப்பு முயற்சிக்கு அத்தகைய வங்கியினால் உறப்பட்ட சகல கடப்பாடுகளும் பொறுப்பு

களும், அப்பொறுப்பு முயற்சியின் நோக்கங்களுக்கிணங்க மேவப்படும் வரை இலங்கையிலிருந்து அகற்றப்படுதல் ஆகாது என்பதை நிச்சயப்படுத்துவதற்கு அவசியமான எல்லா வழி வகைகளையும் எடுத்தல் வேண்டும். 63, 68 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகள் இப்பிரிவின்கீழ் அலுவல்களை ஒடுக்குதல் தொடர்பில் ஏற்புடையனவா தல் வேண்டும்.

(5) பணச் சபையானது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் குறிப்பீடு செய்யப்பட்ட கடப்பாடுகள் எல்லாவற்றை யும் விடுவித்துள்ளதென அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அத்தகைய வங்கியின் பெயர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் நிரலிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

71. இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கும் பணச் சட்டத்தின் அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குமிடையே முரண்பாடு அல்லது ஒவ்வாமை காணப்படும் சந்தர்ப் பத்தில் இப்பாகத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## பாகம் IX

## கைவிடப்பட்ட ஆதனம்

72. (1) பொருளின் சொந்தக்காரர், விடயத்துக்கேற்றுற்போல, வைப்புச் செய்த தேதியின் பின்னர் அல்லது பங்குகளை அல்லது வேறு அக்கறைகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக நிதிகளைக் கொடுப்பனவு செய்த பின்னர் அல்லது சாதனங்களை வழங்கியதன் பின்னர் அல்லது பகிர்ந்தளிக்கப்படக்கூடிய தாக அல்லது கொடுபடக்கூடியதாக நம்பகத் தன்மையில் வைத்திருக்கப்படும் நிதிகள் வந்ததன் பின்னர் அல்லது எக்காலப்பகுதிக்குப் பாதுகாப்பு வைப்புப் பெட்டி வாடகைக்கு எடுக்கப்பட்டதோ, அக்காலப்பகுதி முடிவடைவதன் பின்னர் பத்து ஆண்டு காலப் பகுதிக்குள்ளாக—

(அ) வைப்புத் தொகையை அல்லது நிதியத் தொகையை அதிகரிக்காதிருந்த அல்லது குறைக்காதிருந்தால் அல்லது இப்பிரிவில் (2) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) எனும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட பொருள்கள் தொடர்பில் வட்டி அல்லது பங்கிலாபம் வரவு வைப்பதற்காகப் பண வைப்புப் புத்தகத்தை அல்லது வேறு பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக் காதிருந்தால்;

(ஆ) நம்பகத் தன்மையில் வைத்திருக்கப்படும் நிதிசார் தொடர்பில் முதலின் தொகையையோ வட்டியின் தொகையையோ பெறுமலோ அல்லது அதிகரிக்காமலோ, குறைக்காமலோ இருந்தால்;

(இ) அத்தகைய பொருட்கள் தொடர்பாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியுடன் எவ்வித கடிதத் தொடர்பும் வைத்திராதிருந்தால்;

(ஈ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினுல் அவை சம்பந்தமாக அனுப்பி வைக்கப்பட்ட நினைவுக் குறிப்பொன்றில் அது தொடர்பாக எவ்வித அக்கறையும் வேறு வகையாகக் காட்டாதிருந்தால்;

உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் கடல் கடந்த பிரிவினுள் வைத்திருக்கப் படும் அத்தகைய பொருள்கள் தவிர்ந்த, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினுள் வைத்திருக்கப்படும் 63 ஆம், 68 ஆம் பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட பொருட்களுடன் மேலதிகமாக இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பொருள்களும் கைவிடப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்,

(2) ஓராம் உட்பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட பொருள்கள் பின்வருவன வாதல் வேண்டும்:—

(அ) எவையேனும் சட்டபூர்வ இறுப்பனவுகள் நீங்கலாக, அவற்றின் மீதான ஏதேனும் வட்டியுடன் அல்லது பங்கிலாபத்துடன் சேர, அவ்வுரிம மளிக்கப்பட்ட வர்த்தக வங்கியுடன் இலங்கையில் செய்யப்பட்ட ஏதே னும் பொது வைப்பு (கேள்வி, சேமிப்பு அல்லது முதிர்வுகால வைப்பு);

(ஆ) எவையேனும் சட்டபூர்வ இறுப்பனவுகள் நீங்கலாக ஏதேனும் வட்டி யுடன் அல்லது பங்கிலாபத்துடன் சேர உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் பங்குகளை அல்லது வேறு அக்கறைகளைக் கொள்வனை செய்வது தொடர்பாக இலங்கையில் செலுத்தப்பட்ட எவையேனும் நிதிகள்;

(இ) அவற்றின் மீது உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி நேரடியாகப் பொறுப்படையதாகவிருக்கும், காசோலைகள் மீது அல்லது எழுத்தி லான சாதனங்கள் மீது கொடுபடற்பாலதான ஏதேனும் பணத் தொகை;

(ஈ) வேறெவரேனும் ஆளின் நன்மைக்காக நம்பகத்தன்மையில் வைத்திருக் கப்படும் ஏதேனும் தொட்டுணரமுடியாத ஆள்சார் ஆதனமும் அதன் மீதான ஏதேனும் வருமானமும் அல்லது வட்டியும்;

(உ) அதன் வாடகைக் காலப்பகுதி முடிவடைந்துள்ளதும் அவ்வாறு முடி வடைந்துள்ளமை தொடர்பாகக் குத்தகைக்கெடுத்தவரின் கடைசியா கத் தெரிந்த முகவரிக்குப் பதிவஞ்சல் மூலம் அறிவித்தல் அனுப்பப்பட் டுள்ளதும் மூன்றாண்டுகளுக்குள்ளாக அது தொடர்பாக எவ்வித முடிவும் குத்தகைக்கெடுத்தவரிடமிருந்து கிடைக்கத் தவறியுள்ளதுமான பாது காப்பு வைப்புப் பெட்டியின் எவையேனும் உள்ளடக்கங்கள்.

73. (1) பிரிவு 72 இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கைவிடப்பட்ட ஆதனத்தை வைத்திருக்கின்ற ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி, வைத்திருக்கப்படும் பொருள்களின் தன்மையினைக் கூறி, பணத்தின் விடயத்தில் பணத்தொகையைக் கூறிப் பணச் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் பணச் சபைக்கு அறிக்கையொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) வேறேதேனும் சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும் அறிக்கை யில் உள்ளடக்கப்பட்டுள்ள எல்லாப் பணங்களும், பணச் சபை அவ்வாறு பணித் தால் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் மத்திய வங்கியிலுள்ள சிறப்புக் கணக்கொன்றுக்கு மாற்றப்பட்டு, அமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர் பணச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்காக நாணயச் சபையினால் பயன்படுத்தப்படலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அடங்காத, அறிக்கையில் உள்ளடக்கப் பட்டுள்ள பொருள்கள் அமைச்சரினுல் விதித்துரைக்கப்படும் அத்தகைய நட வடிக்கைக்கான பணச் சபையினுல் அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண் டும்.

74. பிரிவு 73 இன் (1) ஆம் உட்பிரிவினுல் தேவைப்படுத்தப்பட்ட அறிக் கையைச் சமர்ப்பித்ததிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி, ஆதனச் சொந்தக்காரரின் பெயரையும் ஆதனம் சம்பந்தமான விபரங்களையும் குறிப்பிட்டு சிங்கள, தமிழ், ஆங்கில செய்தித்தாள்களில் அறிவித்த லொன்றை வெளியிடுதல் வேண்டும். அத்துடன் ஆதனம் சம்பந்தமான விபரங் களைக் கொண்டுள்ள அறிவித்தலொன்றைச் சொந்தக்காரருக்கு, கடைசியாக அறியப்பட்ட அவரது முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். ஆயின், பணச் சபையானது அதற்காக நியாயமான காரணத்தை உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி காட்டியதன் மீது அத்தகைய அறிவித்தலைத் தபாலில் சேர்ப்பதிலிருந்து உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு விலக்களிக்கலாம்.

75. எவரேனும் ஆள் அவரது பெயரிலுள்ள அல்லது எவ்வாளுக்கூடாக அவர் உரிமத்தைப் பெறுகின்ருரோ அவ்வாளின் பெயரிலுள்ள கணக்கொன்றின் வரவில் இருக்கும் பணங்கள், 73 ஆம் பிரிவின்கீழ் மத்திய வங்கியிலுள்ள சிறப்புக் கணக்கொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளதெனப் பணச் சபை திருப்திப்படுமளவுக்கு எண்பிப்பைக் கொடுத்துதவுகின்றவிடத்து, எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் மூலம் அல்லது சட்டத்தின்கீழ் அத்தகைய பணங்கள் தொடர்பில் விதிக்கப்படும் அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அல்லது மட்டுப்பாடுகளுக்கும் அமை வாக மத்திய வங்கியிலுள்ள சிறப்புக் கணக்குக்கு அவை மாற்றப்படு முன்னர் எந்தக் கணக்கின் வரவில் அந்தப் பணங்கள் இருந்தனவோ, அந்தக் கணக்குக்கு ஏற்புடையனவான அத்தகைய வீதங்களிலும் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமை வாகவும் அவ்வாறு திருப்பிக்கொடுக்கும் தேதிவரையான அத்தகைய பணங்கள் மீதான வட்டியுடன் சேர்த்து, மத்திய வங்கியினுல் அப்பணங்கள் மீளச் செலுத்தப் படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

76. பிரிவு 4 இல் தேவைப்படுத்தப்பட்டவாறுன கைவிடப்பட்டதென ஊகிக்கப்பட்ட ஆதனம் தொடர்பில், அறிக்கையைக் கோப்பிட அல்லது ஆதனத் தைக் கொடுக்க அல்லது ஆதனத்தை ஒப்படைக்கத் தவறுகின்ற உரிமமளிக்கப் பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி, இச்சட்டத்தின்கீழ்த் தவறென்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும்.

## பாகம் X

### பொது

77. ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் பணிப்பாளர், முகாமையாளர், அலுவலர் அல்லது அதன் தொழிலில் தொழிலுக்கமர்த்தப் பட்டுள்ளவாறு வேறு ஆள் ஒவ்வொருவரும், தமது கடமைகளை ஏற்க முன்னதாக, வங்கியினதும் அதன் வாடிக்கையாளர்களினதும் எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும், எவரேனும் ஆளின் கணக்கின் நிலைமை தொடர்பிலும் அது தொடர்பான மற்றெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் கண்டிப்பாக இரகசியத் தைக் கடைப்பிடிப்பதாகத் தம்மைக் கட்டுப்படுத்தி வெளிப்படுத்துகை ஒன்றில் கையொப்பமிடுதல் வேண்டும்; அத்துடன்—

(அ) (1) நீதிமன்றத்தினுல்; அல்லது

(ii) அக்கருமங்கள் எவ்வாள் தொடர்பானதோ அவ்வாளினுல், அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்போது;

(ஆ) தமது கடமைகளைப் புரிகையில்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக் கிணங்கியொழுகுவதில்,

தவிர, அவரது கடமைகளை நிறைவேற்றுவதில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய வேறு எந்தக் கருமத்தையும் வெளியிடமாட்டாரென அத்தகைய வெளிப்படுத் துகை மூலம் தம்மைக் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

78. வழக்கு அல்லது குற்றவழக்கு எதுவும் இச்சட்டத்தின் கீழ்ப் பணச் சபையினுல் அல்லது மத்திய வங்கியின் எவரேனும் அலுவலரினுல் அல்லது சேவையாளரினுல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்ட தாகக் கொள்ளப்படும் எச்செயலுக்காகவும், பணச் சபையின் உறுப்பினர் எவருக்கெதிராகவும் அல்லது மத்திய வங்கியின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளருக்கெதிராகவும் அல்லது இச்சட்டத்தின் கீழ் அல்லது பணச் சபை யினது பணிப்பின் மீது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்ட தாகக் கொள்ளப்படும் எச்செயலுக்காகவும் ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் எவரேனும் பணிப்பாளர், அலுவலர் அல்லது ஊழியர் எவருக்கெதி ராகவும் அமைதல் ஆகாது.

79. (1) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினதும் 3 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவினதும், 15 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும், 16 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினதும், 17 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின தும், 33 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும், 41 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும், 47 ஆம் பிரிவின் (9) ஆம், (10) ஆம் உட்பிரிவுகளினதும், 77 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிகளின் அல்லது ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆளும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியும், அத்தகைய தவறுகையினை அறிந்து கொண் டும் வேண்டுமென்றும் அதிகாரமளிக்கின்ற அல்லது அனுமதிக்கின்ற அத்தகைய வங்கியின் ஓர்வோர் அலுவலரும் அல்லது சேவையாளரும் இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்ன ரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மூன்றாண்டுகளை விஞ்சாத காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற் றண்டனைக்கு அல்லது பத்து இலட்சம் ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத் திற்கு அல்லது அத்துடன் மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் எத்தவறுக்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ்த் தண்டனை எதுவும் குறித்துரைக்கப்படவில்லையோ அத்தவறுக்குக் குற்றவாளியாகும் ஓவ் வோர் ஆளும், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் பதினெட்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை அத்தகைய குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

80. (1) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப்பாளராக, முகாமையாளராக, அலுவலராக அல்லது ஊழியராக இருந்து கொண்டு—

(அ) இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினுல் இணங்கியொழுகப்படுவதை நிச்சயப்படுத்துவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கத் தவறுகின்ற; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பணச் சபையினுல் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரையுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் கூற்றின் செம்மையை நிச்சயப்படுத்துவதற்கு நியாயமான எல்லா வழிவகைகளையும் எடுக்கத்தவறுகின்ற;

(ஈ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் தொழில், அலுவல்கள், கொடுக்கல் வாங்கல், நிலைமை, சொத்துக்கள் அல்லது பொறுப்புகள் அல்லது கணக்குகள் பற்றிய ஏதேனும் புத்தகத்தில் அல்லது பதிவேட்டில் அல்லது அறிக்கையில், துண்டில், ஆவணத்தில் அல்லது கூற்றில் பொய்யான பதிவொன்றை வேண்டுமென்று செய்கின்ற அல்லது அத்தகைய பதிவைச் செய்விக்கின்ற;

(உ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் தொழில், அலுவல்கள், கொடுக்கல் வாங்கல், நிலைமை, சொத்துக்கள் அல்லது பொருட்கள் அல்லது கணக்குகள் பற்றிய ஏதேனும் புத்தகத்தில் அல்லது பதிவேட்டில் அல்லது ஏதேனும் அறிக்கையில், துண்டில், ஆவணத்தில் அல்லது கூற்றில் வேண்டுமென்று பதிவொன்றைச் செய்யாது விடுகின்ற அல்லது வேண்டுமென்று அத்தகைய ஏதேனும் பதிவைச் செய்யாது விடச் செய்விக்கின்ற; அல்லது

(ஊ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் தொழில், அலுவல்கள், கொடுக்கல் வாங்கல், நிலைமை, சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அல்லது கணக்குகள் பற்றிய ஏதேனும் புத்தகத்தில் அல்லது பதிவேட்டில் அல்லது ஏதேனும் அறிக்கையில், துண்டில், ஆவணத்தில் அல்லது கூற்றில் உள்ள ஒரு பதிவை வேண்டுமென்று மாற்றுகின்ற சுருக்குகின்ற, மறைக்கின்ற அல்லது அழிக்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் பதிவு மாற்றப்பட, சுருக்கப்பட, மறைக்கப்பட அல்லது அழிக்கப்பட வேண்டுமென்று செய்விக்கின்ற,

எவரேனும் ஆள், இச்சட்டத்தின் கீழ் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானெருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், பதினெட்டு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்துக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாகுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆள் ஒருவருக்கு எதிரான எவையேனும் நடவடிக்கைகளில் இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதனை நிச்சயப்படுத்தும் கடமை வேறு ஓர் ஆளுக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளது அல்லது இக்கூற்றுக்கள் செம்மையானவையென நிச்சயப்படுத்தும் கடமை வேறொராளுக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளது என நம்புவதற்குத் தமக்கு நியாயமான காரணங்கள் இருந்தன என எண்பிப்பது ஓர் எதிர் வாதமாதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆள் அக்கடமையை நிறைவேற்றுவதற்குத் தகுதியுடையவராகவும் நிறைவேற்றக்கூடிய நிலைமையில் இருந்ததாகவும் எண்பித்தலும் ஓர் எதிர்வாதமாகுதல் வேண்டும்.

81. இச்சட்டத்தின் கீழான தவறொன்று, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் புரியப்படுமிடத்து அத்தவறானது புரியப்பட்ட நேரத்தில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒருவராக அல்லது அலுவலர் ஒருவராகவிருந்த ஒவ்வோராளும் அத்தவறைத் தனது மனதறியப் புரியவில்லை என நிரூபித்தாலன்றி அல்லது அத்தகைய தவறானது புரியப்படுவதனைத் தவிற்பதற்கான எல்லா விழிப்புக் கவனத்தையும் தான் பிரயோகித்தார் என்பதையும் எண்பித்தாலன்றி அத்தவறுக்கான குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

82. (1) எக்கருமங்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் தொடர்பில் அல்லது இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள், தொடர்பில் அமைச்சரவை ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர் இயன்றளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டு வரப்படல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஏதேனும் ஒழுங்குவிதியானது நீக்கப்பட்டதாகக் கருதப்பட்ட தேதி பற்றிய அறிவித்தலானது கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

83. ஐந்தாம் பிரிவின் நியதிகளின்படி உரிமம் வழங்கப்பட்டுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி—

(i) (85 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட கடன் முகவர் நிலையமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ii) 1961 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் XI

### நீக்கம்

84. (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டமானது அச்சட்டத்தின் 116அ, 121அ, 121ஆ ஆகிய பிரிவுகளை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

85. 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டமானது அச்சட்டத்தின் XIX ஆம் பாகத்தினை நீக்கஞ் செய்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

## பாகம் XII

### பொருள் கோடல்

86. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினு லன்றி—

''கடனுதவி'' என்பது, எதிர்பாராப் பொறுப்பொன்றை ஏற்றுக்கொள்ளு வதற்கான பொறுப்பு உட்பட, ஏதேனும் கடன் அல்லது மேலதிகப்பற்று அல்லது முற்பணம் அல்லது ஏதேனும் கடனை அல்லது மேலதிகப்பற்றை அல்லது முற்பணத்தை வழங்குவதற்கான ஏதேனும் பொறுப்பு என்று பொருளாகும்;

''வங்கித்தொழில்'' என்பது, கேட்கும்போது காசோலை, உடனுண்டியல் கட்டளை அல்லது வேறுவகை மூலம் கொடுபடற்பாலதான பண வைப்புக் களை ஏற்றுக்கொள்ளுவதன் மூலம் பொதுமக்களிடம் இருந்து நிதிகளைப் பெற்று ஒன்றில் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது வழமை யான வங்கித் தொழில் மூலம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ முற்பணத்துக்காக முதலீடுகளுக்காக அல்லது வேறேதேனும் தொழிற் பாட்டுக்காக அத்தகைய நிதிகளைப் பயன்படுத்தும் தொழில் என்று பொரு ளாகும்;

''மூலதன நிதிகள்'' என்பது, இறுத்த அல்லது குறித்தொதுக்கப்பட்ட மூலதனம் எனவும், 2 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான ஒதுக்கு நிதியம் எனவும் பொருளாகும்;

''மத்திய வங்கி'' என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்;

''மிக நெருங்கிய உறவினர்'' என்பது, வாழ்க்கைத்துணை அல்லது தங்கிவாழ் பிள்ளை என்று பொருளாகும்;

''கம்பெனி'' என்பது, 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பெனி என்று பொருளாகும்;

''தாபனம்'' என்பது, ஒரு கம்பெனி அல்லது குழுமம் என்று பொருளாகும்;

''பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்'' என்பது, பணச் சபையினால் பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம் ஒன்றெனத் தீர்மானிக்கப் பட்ட ஒரு வெளிநாட்டு நாணயம் என்று பொருளாகும்;

''பணிப்பாளர்'' என்பது--

(அ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி யொன்று தொடர்பில் கம்பெனிகள் சட்டத்தின் கீழ்க் கூட்டிணைக்கப் பட்ட ஒரு கம்பெனியின் பணிப்பாளரினால் நிறைவேற்றப்படும் பணி களை ஒத்த அதே பணிகளை உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றன் பணிப்புத் தொடர்பில் கொண்டு நடாத்துகின்ற அல்லது கொண்டு நடாத்துவதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ள எப்பதவிப் பெயரினாலே னும் அழைக்கப்படும் எவரேனும் ஆள் என்று பொருளாகும்;

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி தொடர்பில், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிப்புத் தொடர்பில் கம்பெனிகள் சட்டத்தின் கீழ்க் கூட்டிணைக்கப் பட்ட கம்பெனியொன்றின் பணிப்பாளரினால் கொண்டு நடாத்தப் பட்டவை போன்ற அதே பணிகளைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது கொண்டு நடாத்துவதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ள எப்பதவிப் பெய ரினாலேனும் அழைக்கப்படும் ஆள் ஒருவர்; அத்துடன் அதிகாரமளிக்கப் பட்ட பிரதான முகவரென அல்லது அவரது மாற்றுப் பணிப்பாள ரெனப் பதவிப் பெயர் குறிக்கப்படும் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் பணிகளை நிறைவேற்றுவதற்குப் பொறுப்புடைய இலங்கையிலுள்ள ஆள் என்று பொருளாகும்;

''வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்'' என்பது (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட மத்திய வங்கியின் வங்கி மேற் பார்வைப் பகுதித் தலைவர் என்று பொருளாகும்;

''உள்ளூர் வங்கித் தொழில்'' என்பது, கரைகடந்த வங்கித் தொழிலைப் புரிகின்ற இச்சட்டத்தின் பாகம் IX ற்கு அமைவாயிராத, ஏதேனும் வங்கித் தொழில் என்று பொருள்படும்;

''வர்த்தக வங்கித் தலைமை அலுவலகம்'' என்பது, ஒரு வர்த்தக வங்கி தொடர்பில், அவ்வர்த்தக வங்கிப் பணிப்பாளர் சபை அலுவலகம் இடம் பெற்றுள்ள இடம் என்று பொருளாகும்;

''திரவச் சொத்துக்கள்'' என்பது, பின்வருவன என்று பொருளாகும்—

(அ) காசு;

(ஆ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளிலுள்ள மீதிகள்;

(இ) இலங்கையில், அழைப்பின் பேரிலுள்ள பணம்;

(ஈ) ஓராண்டுக்கு மேற்படாத முதிர்ச்சியையுடைய இலங்கை அரசாங்கத்தினுல் வழங்கப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களும் பிணைப் பொறுப்புகளும்;

(உ) பண்டங்களின் பற்றுச்சீட்டுக்கள்;

(ஊ) இறக்குமதி, ஏற்றுமதி உண்டியல்கள்;

(எ) நாணயச் சபையினுல் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்தகையவேறு சொத்துக்கள்.

''உள்ளூர் அதிகாரசபை'' என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை அல்லது ஏதேனும் அபிவிருத்திச் சபை எனப் பொருள்படும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் சபையினுல் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட, நிறைவேற்றப்பட்ட தத்துவங்களும், கடமைகளுக்கும், பணிகளுக்கும் சமமான அல்லது அதனேடு தொடர்புடைய தத்துவங்களே, கடமைகளே, பணிகளேப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு, நிறைவேற்றுவதற்கு, ஏதேனும் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டதும் தாபிக்கப்பட்டதுமான ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்குகிறது;

''பணச் சபை'' என்பது, (42 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச் சபை என்று பொருளாகும்;

''வதிவற்ற'' என்பது, வதிகின்ற என்பதன் வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்படாத தனிப்பட்ட கம்பெனி, கூட்டிணைக்கப்பட்ட குழு அல்லது வேறு நீதிமுறை ஆள் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்படாத குழு என்று பொருளாகும்;

''தொழிலிடம்'' என்பது, பொது மக்களுக்காகத் திறந்திருக்கும் நடமாடும் அலுவலகம் உட்பட, இலங்கையில் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் ஏதேனும் கிளே அல்லது அலுவலகம் என்று பொருளாகும்;

''பகிரங்கக் கூட்டுத்தாபனம்'' என்பது, கொடை மூலம், கடன் மூலம் அல்லது வேறு விதமாக அரசாங்கத்தினுல் முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியங்களேக் கொண்டு அல்லது மூலதனத்தைக் கொண்டு, கம்பெனிகள் கட்டளேச் சட்டம் தவிர்ந்த எழுத்திலான ஏதேனும் சட்டத்தினுல் அல்லது அதன் கீழ்த் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படும் ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருள்படும்;

''தகைமை பெற்ற கணக்காய்வாளர்'' என்பது—

(அ) இலங்கையின் பட்டயம் பெற்ற கணக்காய்வாளர்கள் நிறுவனத்தின் அல்லது சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தினது உறுப்பினராகவுள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின் சபையினுல் கணக்காளர் ஒருவராகச் செயலாற்றுவதற்கு வழங்கப்பட்ட சான்றிதழைக் கொண்டுள்ளவருமான ஒரு தனியாள்;

(ஆ) குழுமத்தின் ஒவ்வொரு வதிகின்ற பங்காளர்களும் இலங்கையின் பட்டயம் பெற்ற கணக்காய்வாளர்கள் நிறுவகத்தின் பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ளவர்களும், அத்தகைய நிறுவகத்தின் சபையினுல் கணக்காளர் ஒருவராகச் செயலாற்றவென வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டுள்ளவர்களுமான கணக்காளர்கள் குழுமம் ஒன்று என்று பொருளாகும்;

''வதிகின்ற'' என்பது—

(அ) இலங்கையில் வதிகின்ற இலங்கைப் பிரசையென்று;

(ஆ) இலங்கைப் பிரசை ஒருவரல்லாத, ஆனுல் ஆகக் குறைந்தது ஆறு மாதங்களுக்காவது இலங்கையில் இருந்துள்ளவரும் இலங்கையில் தொடர்ந்திருப்பவர் அல்லது இருக்க விரும்புபவர் என்று;

(இ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனி என்று அல்லது எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழு என்று அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் குழுமம், பங்காண்மை அல்லது வேறு ஒழுங்கமைப்பு என்று;

(ஈ) இலங்கையில் தொழிற்படுவதும் ஏதேனும் வெளிநாட்டுச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட ஒரு கம்பெனியின் அல்லது வேறு நீதிச் சட்டமுறை ஆளின் ஒரு கிளை, துணை நிறுவனம், கிளை நிறுவனம், விசாலிப்பு, அலுவலகம் அல்லது வேறு ஏதேனும் பிரிவு என்று பொருளாகும்.

''கணிசமான அக்கறை'' என்பது—

(அ) ஒரு கம்பெனி தொடர்பில், வேறொரு கம்பெனியால் அல்லது தனியாளால் அல்லது அவரது மிக நெருங்கிய உறவினரால், தனியாகவோ அல்லது ஒன்று சேர்ந்தோ அதன் இறுத்த தொகை பத்து இலட்சம் ரூபாவை அல்லது கம்பெனியின் இறுத்த மூலதனத்தின் பத்து வீதத்தை, இதில் எது குறைந்ததோ அதனைப் பங்குகளில் வைத்திருக்கும் பயனுகர் அக்கறையை அல்லது அத்தகைய கம்பெனியின் சார்பில் தனியாள் ஒருவரால் அல்லது அவரது மிக நெருங்கிய உறவினரால் அல்லது வேறொரு கம்பெனியால் கொடுக்கப்பட்ட உத்தரவாதத்தை அல்லது நட்டஈட்டைக் கொண்டிருத்தல் என்று பொருளாகும்;

(ஆ) குழுமம் ஒன்று தொடர்பில் சொல்லப்பட்ட குழுமத்தில் எல்லாப் பங்காளர்களினுலும் கொடுத்துதவப்பட்ட மொத்த மூலதனத்தின் பத்து வீதத்துக்கு மேலாகக் காணப்படுகின்ற தனித்தோ ஒருமித்தோ எடுக்கப்பட்ட தனியாளொருவரால் அல்லது மிக நெருங்கிய உறவினரால் அதன் கண் வைத்திருக்கப்படும் பயனுகர் அக்கறை என்று அல்லது அத்தகைய குழுமத்தின் சார்பில் தனியாள் ஒருவரால் அல்லது அவரது அல்லது அவளது வாழ்க்கைத் துணையினுல் அல்லது பெற்றோரினுல் அல்லது பிள்ளையினுல் கொடுக்கப்பட்ட உத்தரவாதம் அல்லது நட்டஈடு ஒன்று இருத்தல் என்று பொருளாகும்;

## அட்டவணை 1

*[பிரிவு 2 (4)]*

1. அல்கெமெனே வங்கி நெதர்லாந்து என். வி.
2. அமெரிக்கன் எக்ஸ்பிறஸ் வங்கி லிமிட்டெட்.
3. அம்ஸ்ரடாம் றொட்டடாம் வங்கி என். வி.
4. இலங்கை வங்கி.
5. சர்வதேச கடன், வர்த்தக வங்கி (கடல் கடந்த) லிமிட்டெட்.
6. ஓமான் வங்கி லிமிட்டெட்.
7. பாங்குவி இன்டோசுயெஸ்.
8. சிட்டிபாங் என். எ.
9. இலங்கை வர்த்தக வங்கி லிமிட்டெட்.
10. டொய்ஸ் பேங்க் ஏஜீ.
11. கிறின்ட்லேய்ஸ் வங்கி பீ. எல். சி.
12. ஹபிப் வங்கி ஏ. ஜி. சூறிச்.
13. ஹபிப் வங்கி லிமிட்டெட்.
14. ஹட்டன் நாஷனல் வங்கி லிமிட்டெட்.
15. ஹொங்கொங் அன்ட் சங்ஹாய் வங்கிக் கூட்டுத்தாபனம்.
16. இந்தியன் வங்கி.
17. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி.
18. மத்திய கிழக்கு வங்கி லிமிட்டெட்.
19. ஓவர்சீஸ் றஸ்ட் வங்கி லிமிட்டெட்.
20. மக்கள் வங்கி.
21. ஸ்ரான்டேட் சார்ட்டெட் வங்கி.
22. ஸ்ரேட் பாங் ஒவ் இந்தியா.
23. மத்திய கிழக்கு யூனியன் வங்கி லிமிட்டெட்.
24. சம்பத் வங்கி லிமிட்டெட்.
25. செலான் ட்ரஸ்ட் வங்கி லிமிட்டெட்.
26. 1985 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ்த் தாபிக்கப்பட்ட ஏதேனும் வங்கி.

## அட்டவணை II

[பிரிவு 3 (4)]

(அ) வைப்பு—சேமிப்பு அத்துடன் அதனையொத்த பிற கணக்கினை ஆரம்பித்தலும் பேணுதலும் முகாமை செய்தலும்;

(ஆ) பணத்தைக் கடனெடுத்தல், திரட்டுதல் அல்லது எடுத்தல்; பிணைப் பொறுப்பின் மீது அல்லது பிணைப்பொறுப்பில்லாது பணம் கடன் கொடுத்தல் அல்லது முற்பணம் அளித்தல்; கைமாற்றப்படக்கூடியவையாயினுஞ்சரி மாற்றப்படக் கூடியவையாயினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி நாணயமாற்று உண்டியல்கள், உண்டிகள், வாக்குறுதிப் பத்திரங்கள், கூப்பன்கள், உடனுண்டியல்கள், ஏற்று பொருட்பட்டியல்கள், புகையிரதப் பற்றுச்சீட்டுகள், ஆணைச்சீட்டுகள், தொகுதிக் கடன்முறிச் சான்றிதழ்கள், பொருள்பெறு சீட்டுகள், வேறு சாதனங்கள் முதலியவற்றை வரைதல், ஆக்குதல், ஏற்றுக்கொள்ளல், மதிப்பளித்தல், வாங்குதல், விற்றல், சேகரித்தல், அத்துடன் கையாளுதல், நாணயக் கடிதங்கள், பயணிக் காசோலைகள், புழக்க நாணயத் தாள்கள் முதலியவற்றைக் கொடுத்தல் அத்துடன் வழங்குதல், புலியன் இனங்களை வாங்குதல், விற்றல், கையாளுதல், வெளிநாட்டு நாணயத் தாள்கள் உட்பட வெளிநாட்டுச் செலாவணியை வாங்குதல் அத்துடன் விற்றல்,பங்குத்தொகுதி நிதிகள் பங்குகள், தொகுதிக்கடன் முறிகள், தொகுதிக்கடன் தொக்கு, முறிகள், கடப்பாடுகள், பிணைப்பொறுப்புக்கள், அத்துடன் எல்லா வகையான முதலீடுகள் ஆகியவற்றைக் கொள்ளுதல், வைத்திருத்தல், தரகுமீது வழங்குதல், நட்டோத்தரவாதஞ் செய்தல், அத்துடன், கையாளுதல், வாடிக்கையாளர்களுக்காக அல்லது வேறு வகையான பிணைப்பொறுப்புகளையும் கொள்வனவு செய்தல் அத்துடன் விற்றல்; கடன்களையும் முற்பணங்களையும் பேசி இணங்கிக்கொள்ளுதல்; வைப்பின்மீதோ பாதுகாப்புக் கட்டுக்காவலுக்காகவோ அல்லது வேறு வகையாகவோ எல்லா வகையான முறிகளையும் பணச்சீட்டுகளையும் பெறுமதி வாய்ந்தவைகளையும் ஏற்றுக்கொள்ளுதல், பாதுகாப்பு வைப்புத் தொழிலைக் கொண்டு நடாத்துதல், பணத்தையும் பிணைப்பொறுப்புக்களையும் சேகரித்தலும் அனுப்புதலும்;

(இ) அரசாங்கத்துக்காக அல்லது உள்ளூர் அதிகாரசபைகளுக்காக வங்கித் தொழில் கம்பெனி ஒன்றாக இராத ஏதேனும் கம்பெனியின் முகாமை முகவர் ஒருவரின் தொழில் தவிர்ந்த எவ்விவரணத்தையும் சார்ந்த முகவர் தொழிலைக் கொண்டு நடாத்தும் வேறு எவரேனும் ஆளுக்காக அல்லது ஆட்களுக்காக முகவர்களாகச் செயலாற்றுதல்; ஆனால் பண்டங்களைத் துறைமுகத்திலிருந்து அகற்றி அனுப்பி வைப்பதையும் அற்றோனித் தத்துவக்காரராகச் செயற்படுவதையும் பொறுப்பு விடுவிப்புகளையும் பற்றுச்சீட்டுகளையும் கொடுப்பதையும் உள்ளடக்கும்;

(ஈ) பகிரங்க மற்றும் தனியார் கடன்களுக்காக ஒப்பந்தம் செய்தலும் அதனை இணங்கிப் பெறுதலும் அத்துடன் வழங்குதலும்;

(உ) ஏதேனும் கம்பெனியின், கூட்டுத்தாபனத்தின் அல்லது கழகத்தின் பங்குகள், தொக்குகள், கடன்முறிகள், அல்லது கடன் முறித்தொக்கு கள், அல்லது பகிரங்க அல்லது தனியார் அல்லது அரச அல்லது மாநகர அல்லது வேறு கடன்களை வழங்குவதனைக் கொண்டு நடாத்துவதிலும் முகாமை செய்வதிலும் பங்கு பற்றல்; மேம்படுத்தல், பயனுறுத்தல், காப்புறுதி செய்தல், உத்தரவாதமளித்தல், நட்டஈடளித்தல், அத் துடன் ஏதேனும் அத்தகைய வழங்குகையின் நோக்கத்துக்காகப் பணம் கடன் கொடுத்தல்;

(ஊ) ஒவ்வொரு வகை சார்ந்த உத்தரவாத நட்டஈட்டுத் தொழிலைக் கொண்டு நடாத்துதலும், புரிதலும்;

(எ) ஏலவே இருக்கின்ற அல்லது புதிய ஏதேனும் தொழில் பொறுப்பு முயற் சிக்கு அல்லது கைத்தொழிலுக்கு நிதியளித்தல் அல்லது அதனை ஊக்கு வித்தல் அல்லது ஊக்குவிப்பதில் அல்லது நிதியளிப்பதில் உதவி புரிதல் அத்துடன் எவையேனும் ஒன்றியங்கள் மூலம் அல்லது வேறு வகையாக அதனை அபிவிருத்தி செய்தல் அல்லது உருவாக்கல்;

(ஏ) அசைவற்ற அல்லது அசைவுள்ள ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுவது வசதியானது அல்லது அவசியமானதெனக் கம்பெனி கருதக்கூடிய அல்லது அதனைக் கொள்ளுவது கம்பெனியின் அபிப்பிராயப்படி அதனால் வைத்திருக்கப்படும் எவையேனும் பிணைப்பொறுப்புக்களைக் காசாகப் பெறுவதனை இயலச் செய்யக்கூடிய அல்லது அஞ்சப்படும் ஏதேனும் நட்டத்தை அல்லது பொறுப்பைத் தடுக்கும் அல்லது குறைக்கும் எவை யேனும் உரிமைகளை அல்லது சிறப்புரிமைகளை, கொள்வனை மூலம், குத்தகை மூலம், கொடுத்து மாற்றுவதன் மூலம், வாடகை மூலம் அல்லது வேறு வகையாகக் கொள்ளுதல்;

(ஐ) கம்பெனியின் கோரிக்கைகளைத் திருப்தி செய்கையில் அல்லது பகுதியள வில் திருப்தி செய்கையில் கம்பெனிக்கு வந்து சேரக்கூடிய அசைவுள்ள அசைவற்ற சகல ஆதனங்களையும் முகாமை செய்தல், விற்றல், காசா கப் பெறுதல்;

(ஒ) எவையேனும் கடன்களுக்கான அல்லது முற்பணங்களுக்கான பிணைப் பொறுப்பாக அல்லது பகுதியளவிலான பிணைப் பொறுப்பாக அமையக் கூடிய அல்லது ஏதேனும் அத்தகைய பிணைப் பொறுப்புடன் தொடர்பு பட்டதாக இருக்கக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்திலுள்ள ஏதேனும் சொத்துவத்தையும் ஏதேனும் உரிமையை யும் உரித்தையும் அல்லது அக்கறையையும் கொள்ளுதல்; வைத்திருத் தல் அல்லது பொதுவாகக் கையாளுதல்;

(ஓ) நம்பிக்கைப் பொறுப்புக்களைப் பொறுப்பேற்றலும் நிறைவேற்றலும்;

(ஔ) நிறைவேற்றுநர்களாக, நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக அல்லது, வேறு வகையாக மரணச் சொத்துக்களின் நிருவாகத்தைப் பொறுப் பேற்றல்;

(க) கம்பெனியின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள வேறு ஏதேனும் கம்பெனியின் பங்குகளை எடுத்தல் அல்லது வேறு வகையாகக் கொள்ளல் அத்துடன் வைத்திருத்தல்;

(ங) கம்பெனியின் ஊழியர்களுக்கு அல்லது கடந்தகால ஊழியர்களுக்கு அல்லது தங்கிவாழுநருக்கு அல்லது அத்தகைய ஆட்களுடன் உறவு பட்டவருக்கு நன்மை பயக்கக் கருதப்பட்டதான கழகங்களையும் நிறுவனங்களையும் நிதியங்களையும் நம்பிக்கைப் பொறுப்புகளையும் வசதிகளையும் தாபித்தலும் ஆதரித்தலும் அல்லது தாபிப்பதற்கும் ஆதரித்தலுக்கும் ஆதரவளித்தல், ஒய்வூதியங்களும் ஏனைய படிகளும் வழங்குதல், காப்புறுதி தொடர்பாகக் கொடுப்பனவு செய்தல், தரும அல்லது நன்மையான குறிக்கோள்களுக்குப் பணங்கள் உத்தரவாதமளித்தல் அல்லது எவையேனும் பரிசில்களுக்கு அல்லது பகிரங்க அல்லது பொதுவான பயன்பாட்டுக் குறிக்கோள்களுக்குப் பணங்கள் வழங்கல்;

(ச) கம்பெனியின் நோக்கங்களுக்கு அவசியமான அல்லது வசதியான ஏதேனும் கட்டடத்தை அல்லது வேலைகளைக் கொள்ளுதல், கட்டியமைத்தல், பராமரித்தல் அல்லது மாற்றுதல்;

(ஞ) கம்பெனியின் ஆதனத்தையும் உரிமைகளையும் முழுவதுமாக அல்லது பகுதியளவில் விற்றல், சீர்திருத்தல், முகாமை செய்தல், அபிவிருத்தி செய்தல், கொடுத்து மாற்றுதல், குத்தகைக்குக் கொடுத்தல், ஈடு செய்தல், விற்றுத் தீர்த்தல், கணக்குக் காட்டுதல் அல்லது வேறு வகையாகக் கையாளுதல்;

(ட) அத்தகைய தொழில் இச்சட்டத்தில் கூறப்பட்ட அல்லது விபரிக்கப் பட்ட தன்மைத்தாக இருக்கும் போது எவரேனும் ஆளின் அல்லது கம்பெனியின் தொழில் முழுவதையும் அல்லது எவையேனும் பாகத்தைக் கொள்ளும் அத்துடன் பொறுப்பேற்றல்;

(ண) கம்பெனியின் தொழிலை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு இடைநேர் விளைவான அல்லது உசிதமான அத்தகைய மற்றெல்லா விடயங்களையும் செய்தல்;

(த) முகாமை உசாத்துணைச் சேவைகளில் ஈடுபடுதல்;

(ந) வங்கித் தொழில், கணக்கியல், பெறுமான மதிப்பீடு செயற்றிட்டம் கொடுகடன் மதிப்பீடு என்பவற்றிலும் இவற்றை ஒத்த விடயங்களிலும் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தல்;

(ப) வாடகைக் கொள்வனவுச் சேவைகள், தொழிற்சாலைக் குத்தகைச் சேவைகள், குதக்காரர் சேவைகள் ஆகிய தொழிலில் ஈடுபடுதல்;

(ம) அபிவிருத்திக்கான நடுத்தர மற்றும் நெடுங்காலக் கடனுக்கு ஏற்பாடு செய்தல்.

# 1988ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைத் (திருத்தச்) சட்டம்

*(1988ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

## 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணுட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம், 1988 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பந்தியின் (Lii) என்னும் உட்பந்தியில் ''1982 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க இலங்கை நில அளவையாளர் நிறுவகத்தின்; அத்துடன் என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, 1982 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, இலங்கை நில அளவையாளர் நிறுவகத்தின்;'' என்னும் சொற்களேயும் இலக்கங்களேயும் இடுவதன் மூலமும்;

(2) அப்பந்தியின் (Liii) என்னும் உட்பந்தியில் ''1982 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இரசாயனவியல் நிறுவக (இலங்கை)ச் சட்டத்தின்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக ''1982 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இரசாயனவியல் நிறுவக (இலங்கை)ச் சட்டத்தின் அத்துடன்'' என்னும் சொற்களேயும் இலக்கங்களேயும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பந்தியின் (Liii) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(Liv) 1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின்.''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பந்தியின் (III) ஆம் உட்பந்தியில், ''1978 நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் குறைக்காததும்; அத்துடன்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''1978 நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் குறைக்காததும்;'' என்னும் சொற்களேயும், இலக்கங்களேயும் இடுவதன்மூலமும்:—

(2) அப்பந்தியின் (IV) ஆம் உட்பந்தியை ''நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அமைக்கப்படாததும்'' என்னும் சொற்களுக்கும், இலக்கத்துக்கும் பதிலாக, ''நவம்பர் 15 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் அமைக்கப்படாததும்; அத்துடன்'' என்னும் சொற்களேயும், இலக்கத்தையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பந்தியின் (IV) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன்மூலமும்:—

"(V) 1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு எக்கம் பனியின் வரி விதிக்கற்பாலதான வருமானம் மூன்று இலட்சத்து முப்பத்துமூவாயிரத்து முந்நூற்றி முப்பத்துமூன்று ரூபாவை விஞ்சாதிருக்கின்றதோ அந்தக் கம்பனியும்".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை அச்சட்டவாக்கத் தின் 33அ, 33ஆ, 33இ, 33ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"தகைமை யளிக்கும் பகிர்வின்மீது வதியும் கம்பனிகள் செலுத்து வதற்கானதாகும் முற்பணக் கம்பனிவரி.

33அ. (1) இலங்கையில் வதியும் கம்பெனி ஒவ்வொன்றும் 1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும், அந்த வரி மதிப்பீட்டாண்டின்போது அக்கம்பனியால் செய்யப்பட்ட தகை மையளிக்கும் பகிர்ந்தளிப்பு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகையொன்றின்மீது அவ்வகுப்பைச் சேர்ந்த கம்பனி களுக்கு ஏற்புடைத்தான வீதமாக, இச்சட்டத்திற்கான ஏழாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதோதான வீதப்படி கணிக் கப்பட்டதான (இதனகத்துப் பின்னர் "முற்பணக் கம்பனி வரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வரியொன்றைச் செலுத்துவதற் காளாதல் வேண்டும்.

(2) வதிவுள்ள கம்பனி ஒவ்வொன்றும் 125 (2) IV) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, 1988 ஏப்பிறில் 1 ஆம் தேதி யன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டிற்கு இச்சட்டத்தின் 33 (1) அ) என்னும் பிரிவின்கீழ் அக்கம்பனியால் செலுத்தப்படற்பாலதாகும் வரியிலிருந்து, அந்த வரிமதிப்பீட்டாண்டில் அது செலுத்திய முற்பணக் கம்பனி வரி யைக் கழிப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டும். அத்தகைய கழிப்பனவு, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு 33 (1) (அ) என்னும் பிரிவின்கீழ் அக்கம்பனியால் செலுத்தற்பாலதான வரியின் 50 சத வீதத்தை விஞ்சுதல் ஆகாது.

(3) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு கம்பனியொன்றினல் செலுத்தப்பட்டதும் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அந்த வரிமதிப் பீட்டாண்டிற்குக் கழிக்கப்பட்ட தொகையை விஞ்சுவதுமான முற்பணக் கம்பனி வரியானது, கம்பனிக்கு மீளவளிக்கப்படுத லாகாது, ஆனுல் முன்னெடுத்துச் செல்லப்பட்டு அடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டிற்கு 33 (1) (ஆ) என்னும் பிரிவின்கீழ் அக்கம்பனியால் செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்து 125 (2) (IV) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க இவ்வாருகக் கழிக்கப்படுதல் வேண்டும். ஆயினும் ஏதேனும் வரிமதிப்பீட் டாண்டிற்கு 33 (1) (ஆ) என்னும் பிரிவின்கீழ் அக்கம்பனியால் செலுத்தற்பாலதான வரியிலிருந்து முற்பணக் கம்பனி வரிக்காகக்

கழிக்கப்படும் மொத்தத் தொகை அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு 33 (1) (அ) என்னும் பிரிவின்கீழ் அக்கம்பனியால் செலுத்தற் பாலதான வரியின் 50 சத வீதத்தை விஞ்சுதலாகாது.

33ஆ. (1) கம்பனியொன்றல்லாத வதிவுள்ள ஆள் ஒருவர் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில், எப்பங்கிலாபம் தொடர்பில் ஏதேனும் வதிவுள்ள கம்பனியால் 33அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் முற்பணக் கம்பனி வரி செலுத்தப்பட்டுள்ளதோ அப்பங்கிலாபமொன்றைப் பெறுமிடத்து, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய பங்கிலாபத்திலிருந்து அத்தகைய ஆளின் நியதிச் சட்ட வருமானம் தகைமையளிக்கும் பகிர்வு ஒன்றினைக் கொண்டிருப்பதாக அப்பங்கிலாபத்தின் அத்தகைய பங்கிலாபத்திற்கு ஏற்றிக் கூறப்படற்பாலானவாறு மொத்தப் பங்கிலாபத்தினதும் அத்துடன் முற்பணக் கம்பனி வரியினதும் கூட்டு மொத்தத்திற்குச் சமமான ஒரு தொகையானதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு எப்பங்கிலாபம் தொடர்பாக ஏதேனும் வதிவுள்ள கம்பனியால் 33அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் முற்பணக் கம்பனி வரி செலுத்தப்பட்டுள்ளதோ அப்பங்கிலாபமொன்றைக் கம்பனியொன்றல்லாத வதிவுள்ள எந்த ஆளின் நியதிச் சட்ட மொத்த வருமானம் உள்ளடக்கியுள்ளதோ, அந்த வதிவுள்ள ஒவ்வோராளும் தகைமையளிக்கும் பகிர்வொன்றைக் கொண்டிருக்கின்றவாறு அப்பங்கிலாபத்தின் அத்தகைய பாகத்தின் மீது செலுத்தப்பட்ட முற்பணக் கம்பனி வரியொன்றுக்குச் சமமான தொகையொன்றை அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளினல் செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்து கழிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும். அவ்வாறு கழிக்கப்படவுள்ள தொகை, அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான வரியை விஞ்சுகின்றவிடத்து விஞ்சு தொகையானது அத்தியாயம் XXIII இன் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய ஆளுக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

33இ. வதிவுள்ள கம்பனி ஒவ்வொன்றும் 1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றிற்கும் பின்வருவனவற்றைக் குறிப்பிடும் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்:—

(1) பணத்தின் வடிவத்தில் அல்லது 1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் பணம் செலுத்துமாறு வதிவுள்ள வேறு கம்பனிகளிடமிருந்து பெறப்பட்ட கட்டளை ஒன்றின் வடிவில் பின்வரும் வகுதிகளின் அல்லது துணை வகுதிகளின்கீழ் வகுக்கப்பட்ட பங்கிலாபங்கள்:—

(அ) விலக்களிக்கப்பட்ட பங்கிலாபங்கள்;

(ஆ) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் முற்பணக் கம்பனி வரி செலுத்தப்படாதுள்ளதோ அப்பங்கிலாபங்கள்;

(இ) வேறு பங்கிலாபங்கள்;

(i) 1988 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் ஏதேனும் காலப்பகுதிக்கான இலாபங்களில் இருந்து செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள்.

(ii) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் 50 சதவீதப் படி முற்பணக் கம்பனி வரி செலுத்தப்பட்டுள்ளதோ அப்பங்கிலாபங்கள்.

(iii) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் 331–3 சத வீதப்படி முற்பணக் கம்பனி வரி செலுத்தப் பட்டுள்ளதோ அப்பங்கிலாபங்கள்; அத்துடன்

(iv) எப்பங்கிலாபங்கள் தொடர்பில் 25 சதவீதப் படி முற்பணக் கம்பனி பங்கிலாபங்கள் செலுத்தப்பட்டுள்ளதோ அப்பங்கிலாபங்கள்.

(அ) 1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் எழுவனவும் திரளுவனவும் பின்வரும் வகுதிகளின் கீழ் வகுக்கப்பட்டவையுமான பங்கிலாப வருமானத்தைத் தவிர்ந்த வேறு இலாபங்களும் வருமானமும்:—

(அ) விலக்களிக்கப்பட்ட இலாபங்களும் வருமானமும்;

(ஆ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சதவீதங்களைத் தவிர்ந்த வேறு சத வீதங்களின்படி வரி விதிக்கற்பாலனவான இலாபங்களும் வருமானமும்; அத்துடன்

(இ) வேறு இலாபங்களும் வருமானமும்.

(3) முற்போந்த பந்திகளில் தரப்பட்டுள்ள வருமான வகுதிகள், துணைவகுதிகள் ஒவ்வொன்றிலுமிருந்து, அந்த வரி மதிப்பீட்டாண்டில் செலுத்தப்பட்ட பங்கிலாபங்களின் விவரங்கள்.

(4) வரிகளினதும் ஒதுக்குகளினதும் கொடுப்பனவுக்கென மேற்போந்த பந்திகளில் தரப்பட்டுள்ள வருமான வகுதிகள், துணைவகுதிகள் ஆகிய ஒவ்வொன்றிலுமிருந்து அந்த வரி மதிப்பீட்டாண்டின் போது செய்யப்பட்டுள்ள ஒதுக்கீடுகள்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்:—

(i) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குப் பதிலாக, பின்வரும் பந்தியை இடுவதன்மூலம்:—

''(ஈ) பின்வருவனவற்றில் இருந்து செலுத்தப்பட்ட தொகையைப் புறம்பாகக் காட்டும் மொத்தப் பங்கிலாபத்தின் அமைப்பு:—

(i) பெறப்பட்டதான விதிவிலக்களிக்கப்பட்ட பங்கிலாபங்கள்;

(ii) பெறப்பட்டதான எப்பங்கிலாபங்கள் தொடர்பில் முற்பணக் கம்பனி வரி 50 சதவீதப்படி செலுத்தப்பட்டுள்ளதோ அப்பங்கிலாபங்கள்;

(iii) பெறப்பட்ட எப்பங்கிலாபங்கள் தொடர்பில் முற்பணக் கம்பனி வரி 33 1/3 சதவீதப்படி செலுத்தப்பட்டுள்ளதோ அப்பங்கிலாபங்கள்;

(iv) பெறப்பட்ட எப்பங்கிலாபங்கள் தொடர்பில் முற்பணக் கம்பனி வரி 25 சதவீதப்படி செலுத்தப்பட்டுள்ளதோ அப்பங்கிலாபங்கள்;

(v) பெறப்பட்ட வேறு பங்கிலாபங்கள்;

(vi) வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட வருமானம்;

(vii) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவை தவிர்ந்த வேறு சதவீதங்களின்படி வரி விதிக்கற்பாலதான இலாபங்களும் வருமானமும்; அத்துடன்

(viii) வேறு இலாபங்களும் வருமானமும்; அத்துடன்

(ii) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச் சேர்ப்பதன் மூலம்:—

(உ) தகைமையளிக்கும் பகிர்வொன்றைக் கொண்டிருப்பதாக முற்போந்த பந்தியின் (viii)ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு இலாபங்களிலும் வருமானங்களிலுமிருந்து செலுத்தப்பட்ட பங்கிலாபத்தின் அத்தகைய பாகம் தொடர்பில் செலுத்தப்பட்ட முற்பணக் கம்பனி வரி;

DISCARDED

(ஊ) தகைமையளிக்கும் பகிர்வொன்றைக் கொண்டிருப்பதாக (ஈ) என்னும் பந்தியின் (ii) ஆம் அல்லது (iii) ஆம் அல்லது (iv) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் பங்கிலாபம் ஒன்றிலிருந்து செலுத்தப்பட்ட பங்கிலாபத்தின் அத்தகைய பாகம் தொடர்பில் செலுத்தப்பட்ட முற்பணக் கம்பனி வரி''; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம்:—

''(2அ) இலங்கையில் வதிவுள்ள கம்பனி ஒவ்வொன்றும் 1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் பின்வரும் விவரங்களைத் தரும் கூற்றொன்றை அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் நவம்பர் மாதத்தின் முப்பதாம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்:—

(i) அந்த வரிமதிப்பீட்டாண்டில் செலுத்தப்பட்ட முற்பணக் கம்பனி வரி;

(ii) 1988 ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு 33 (1) (அ) என்னும் பிரிவின் கீழான வரி தொடர்பில் அந்த வரிமதிப்பீட்டாண்டில் செலுத்தப்பட்ட எவையேனும் கொடுப்பனவுகள்;''; அத்துடன்

(3) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''அத்தகைய கூற்றில் காண்பிக்கப்படும் வரித்தொகையினைக் கழிப்பதற்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அத்தகைய கூற்றில் காண்பிக்கப்படும் முற்பணக் கம்பனி வரி உட்பட வரித்தொகையினைக் கழிப்பதற்கு'' என்னும் சொற்களை இடுவதன் மூலம்.''.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 97 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(4) முற்போந்த உட்பிரிவுகள் எவற்றினதும் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், 1988 ஏப்பிறில் 1 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய கம்பனியால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வுத் தொகைக்குச் சமனான தொகையொன்றின்மீது 33அ (2)என்னும் பிரிவின் கீழ், இலங்கையில் வதிவுள்ள ஏதேனும் கம்பனியினால் செலுத்தப்படற்பாலதான முற்பணக் கம்பனிவரி முழுவதும், அத்தகைய தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றையும் கொண்டதான பங்கிலாபம் பகிர்ந்தளிக்கப்படும் நேரத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அனுப்பும் தொகையுடன், அத்தகைய வரி

ஒழுங்கு முறையாகச் சேகரிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு, ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் அத்தகைய விவரங்கள் அடங்கிய வெளிப்படுத்துகையொன்று சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக ''அத்தகைய தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றையும் கொண்டதான பங்கிலாபம் பகிர்ந்தளிக்கப்படும் நேரம்'' என்னும் சொல்லமைப்பு பங்கிலாபம் வெளிப்படுத்தப்படும் தேதி என்று, அல்லது பங்கிலாபம் எதிர்காலத் தேதியொன்றில் செலுத்தப்படவுள்ளதாக வெளிப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய வருங்காலத் தேதி என்று பொருள்படும்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 117 இம் பிரிவு, அப்பிரிவின் (12) ஆம் உட்பிரிவில் ''உடன்பட்டுக் கொள்ளப்படுதல் வேண்டும் அல்லது தீர்மானிக்கப்படல் வேண்டும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆணையாளர் தலைமையதிபதியால் உடன்பட்டுக் கொள்ளப்படுதல் அல்லது தீர்மானிக்கப்படல் வேண்டும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில் ''பிரிவு 97 (3) என்பதில் குறித்துரைக்கப்பட்ட'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக ''அந்த வரியைச் செலுத்துவதற்காகப் பிரிவு 97 (3) ஆம் பிரிவில் அல்லது 97 (4) ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட'' என்னும் சொற்களையும், இலக்கங்களையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவுக்கான காப்பு வாசகத்தின் (iii) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:—

''(iv) 1989 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டிற்கு அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு உடன் முன்னரான ஆண்டிலிருந்து 33அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க கம்பனியொன்றினால் செலுத்தப்பட்டு முன்னெடுத்துச் சொல்லப்பட்ட மிகையான முற்பணக் கம்பனி வரி எதுவும், அது கழிக்கப்படக்கூடிய அளவுக்கு முதலில் அந்த வரிமதிப்பீட்டாண்டில் ஒகத்து பதினைந்தாம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தற்பாலதான காலாண்டுத் தவணையிலிருந்தும், அத்தகைய மிகையின் மீதி ஏதுமிருப்பின் அந்த வரி மதிப்பீட்டாண்டில் நவம்பர் பதினைந்தாம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தற்படற்பாலதான அடுத்த காலாண்டுத் தவணையிலிருந்தும், என்றிவ்வாறாக கழிக்கப்படலாம் என்பதுடன் அவ்விதம் கழிக்கப்படும் தொகை, இப்பந்தியின் நோக்கத்திற்காக விடயத்திற்கேற்ப ஒகத்து பதினைந்தாம் தேதியன்று அல்லது நவம்பர் பதினைந்தாம் தேதியன்று என்றிவ்வாறு செலுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.'';

(3) அப்பிரிவின் (ii) ஆம் உட்பிரிவில் கொடைகள் வரி எனப் பொருள் படும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கொடைகள் வரி எனப் பொருள்படும் என்பதுடன் வரி விதிக்கப்பட்ட ஏதேனும் வருமானம் தொடர்பில் கம்பனியொன்றினுல் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்குச் செலுத்தற்பாலதான தகைமையளிக்கும் ஏதேனும் பகிர்வு தொடர்பில் கம்பனியொன்றினுல் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் செலுத்தற்பாலதான முற்பணக் கம்பனி வரியெனவும் பொருள்படும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவு, அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்து, பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(ஈ) இச்சட்டத்தின் கீழ் செலுத்துமாறு கம்பனியொன்று தேவைப்படுத் தப்படும் ஏதேனும் முற்பணக் கம்பனி வரியையும்;''

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 151 பிரிவு, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், ''60 (3) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, 33 (இ) என்னும் பிரிவின் அல்லது 60 (3) என்னும் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு'' என்னும் சொற்களையும் இடுவதன்மூலம்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 158 ஆம் பிரிவு, அப்பிரிவின் (11) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத் தால் திருத்தப்படுகின்றது:—

''(12) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளவை எவையும், ஆணையாளர் தலைமையதிபதியின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளவையும் எவரேனும் ஆளின் கருமங்கள் தொடர்பி லானவையுமான எவையேனும் பதிவேடுகளை அல்லது ஆவணங்களை அணுகு வதற்கு அல்லது பரிசோதனை செய்வதற்கு அமைச்சருக்கோ அல்லது அமைச் சரின் அமைச்சுச் செயலாளருக்கோ தத்துவமளிப்பதாக வாசிக்கப்படுதலோ அல்லது பொருள் கொள்ளப்படுதலோ ஆகாது''.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 163 ஆம் பிரிவு ''ஆதனம்'' என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்து வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''தகைமையளிக்கும் பகிர்வு'' என்பது 1988 ஏப்பிறில் 1 ஆம் தேதி யன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரி மதிப்பீட் டாண்டில், வதிவுள்ள கம்பனியொன்றின் எந்த இலாபங்கள்மீதும் அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு வரி விதிக்கற்பாலதாயிருப்பின் அந்த வகுப்பைச் சேர்ந்த கம்பனிகளுக்கு ஏற்புடையதாகும் விதமாக இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதப்படி வரி விதிக்கப்படுமோ அந்த இலாபங்களிலிருந்து அத்தகைய கம்பனியால் பணம் என்ற வகையில் அல்லது பணம் செலுத்துவதற்கான கட்டளையொன்றின் வகையில் பங்குதாரர் ஒருவருக்குப் பகிர்ந்தளிக்கப்படும் ஏதேனும் பங்கிலா பத்தின் முழுமை அல்லது பாகம் என்று பொருள்படும்.

ஆனுல்—

(i) அத்தகைய கம்பனிக்கு 1988 ஏப்பிறில் 1 ஆம் தேதிக்கு முன்னர் திரண்ட அல்லது எழுந்த இலாபங்களிலிருந்து அல்லது வருமானத்திலிருந்து;

(ii) அதன் விலக்களிக்கப்பட்ட வருமானத்திலிருந்து; அத்துடன்

(iii) அத்தகைய கம்பனியால் பெறப்பட்ட பங்கிலாபங்களிலிருந்து பெற்ற ஏதேனும் வருமானத்திலிருந்து

பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கிலாபமொன்றை உள்ளடக்கமாட்டாது.

13. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அந்த அட்டவணைக்கான பாகம் II இல் ''1979 ஏப்பிறில் I ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆனுல் 1988 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன் முடிவுறுகின்ற'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்;

(2) அந்த அட்டவணையின் பாகம் III இல், ''1979 ஏப்பிறில் I ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்கும்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''1979 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆனுல் 1988 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவுறுகின்ற'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்;

(3) அந்த அட்டவணையின் பாகம் IV இன் (ஆ) என்னும் பந்தியில் ''1982 ஏப்பிறில் I ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும்'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, ''1982 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின் தொடங்குகின்ற ஆனுல் 1988 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவுறுகின்ற'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(4) அந்த அட்டவணையின் பாகம் IV என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகத்தை உட்புகுத்துவதன்மூலமும்:—

''பாகம் IV அ

சிறிய கம்பனி

1988 ஏப்பிறில் 1 அம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்குமான வரி வீதம்:—

(1) கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானம் இருநூற்றைம்பதாயிரம் ரூபாவை விஞ்சாததாயின் 33 1/3 சத வீதம்.

(2) கம்பனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானம் இருநூற்றைம்பதாயிரம் ரூபாவை விஞ்சுவதாகவும் ஆனல், முன்று இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து முன்னூற்றி முப்பத்து மூன்று ரூபாவை விஞ்சாததாகவும் இருக்குமாயின் வரியானது பின்வருவதன் கூட்டு மொத்தமாதல் வேண்டும்:—

(i) 250,000 ரூபாவின் 33 1/3 சதவீதத்துக்குச் சமமான ஒரு தொகை, அத்துடன்

(ii) அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கு கம்பனியின் வரி விதிக்கற்பாலதான வருமானம் எத்தொகையால் 250,000 ரூபாவை விஞ்சுகின்றதோ அத்தொகை.''.

14. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான ஆறுவது அட்டவணையை உடனடுத்துப் பின்வரும் புதிய அட்டவணை இத்தால் சேர்க்கப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்திற்கான ஏழாவது அட்டவணையாகப் பயனுறுதலும் வேண்டும்:—

''ஏழாம் அட்டவணை

(பிரிவு 33 அ (1))

1988 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்குமான முற்பணக் கம்பனி வரி வீதங்கள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(i) சிறிய கம்பனியொன்றினல் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது—25 சதவீதம்.

(ii) விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பனியொன்றினல் அல்லது மக்கள் கம்பனியொன்றினல் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது —33 1/3 சதவீதம்.

(iii) ஒரு சிறிய கம்பனி அல்லது விலை கோரிப் பெறப்படும் பங்குடைய பகிரங்கக் கம்பனி அல்லது மக்கள் கம்பனி தவிர்ந்த வேறு ஏதேனும் கம்பனியால் செய்யப்பட்ட தகைமையளிக்கும் பகிர்வு ஒவ்வொன்றினதும் தொகைக்குச் சமமான தொகைமீது —50 சதவீதம்.''

*1986 யூன் 16இல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (அதிவிஷேசமானது) இலக்கம் 510/9 இல் வெளியிடப்பட்ட அறிவுத்தல்.*

*சி. எவ். 1—64*

## (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

*(40 இம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் சனுதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

ஜே. ஆர். ஜயவர்தன,
**சனுதிபதி.**

கொழும்பு,
*ஜுன் 16, 1988.*

### ஒழுங்கு விதி

இவ்வொழுங்குவிதிகள் தொடர்ந்து வலுவிலிருக்கும்போது, 1979 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க நிதிக் கம்பனிகளைக் கட்டுப்படுத்தற் சட்டமானது பின்வருமாறு பயனுறுதல் வேண்டும்:—

(1) அச்சட்டத்தில் 15 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவு இடப்பட்டாற்போன்றும்:—

''(3) (அ) எந்தவொரு நிறுவனத்தினதும் எவரேனும் உரிமையாளருக்கு. கணக்காய்வாளருக்கு, பங்காளருக்கு, பணிப்பாளருக்கு, முகாமையாளருக்கு, செயலாளருக்கு அல்லது ஊழியருக்குச் சத்தியக் கட்டளைச் சட்டத்துக்கிணங்கச் சத்தியங்களை அல்லது உறுதியுரைகளை எடுத்தோதலும்;

(ஆ) எந்தவொரு நிறுவனத்தினதும் எவரேனும் உரிமையாளரை, பங்காளரை, பணிப்பாளரை, முகாமையாளரை, கணக்காய்வாளரை, செயலாளரை அல்லது ஊழியரை, அத்தகைய நிறுவனத்தினது அலுவல்களின் உண்மையான நிலைமையையும் அத்தகைய நிறுவனம் அதன் தற்போதைய அல்லது எதிர்கால வைப்பிலிடுவோருக்குப் பாதகமாகக்கூடிய முறையில் நடாத்தப்படுகின்றதாவென்பதையும் நிச்சயிப்பதற்குப் பணிப்பாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலும்;.

(இ) எந்தவொரு நிறுவனத்தினதும் எவரேனும் உரிமையாளரை, பங்காளரை, பணிப்பாளரை, முகாமையாளரை, கணக்காய்வாளரை, செயலாளரை அல்லது ஊழியரை, தம்வசத்திலிருப்பனவும் அவசியமான ஏதேனும் தகவலைக் கொண்டுள்ளனவும் அல்லது கொண்டிருக்கும் சாத்தியமுடையனவுமான புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்கள் எவற்றையும் சோதனைக்குக் காண்பிக்கும்படி தேவைப்படுத்தலும்; அத்துடன்

(ஈ) எந்தவொரு நிறுவனத்தினதும் எவரேனும் உரிமையாளரை, பங்காளரை, பணிப்பாளரை, முகாமையாளரை அல்லது செயலாளரை, நிறுவனத்தின் கணக்குகளை அத்தகைய பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்வதற்குச் சமர்ப்பிக்கும்படி தேவைப்படுத்தலும்,

வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.''.

(2) அச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தி இடப்பட்டாற்போன்றும்:—

''(அ) நிபந்தனையில்லாமல் அல்லது பொதுமக்கள் நலன்கருதி நிறுவனத்தினது வைப்பிலிடுவோரின் அல்லது கடன் கொடுத்தோரின் நலன் கருதி, சபை அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைய நிறுவனம் மீளவும் தொழில் நடாத்தும்படி அனுமதித்துக் கட்டளையிடுதல் சபையினது கடமையாதல் வேண்டும். இப்பந்தியின்கீழ் சுமத்தப்படுகின்ற நிபந்தனைகள், நிறுவனத்தின், பணிப்பாளர்கள் சபையிலிருந்து பணிப்பாளர் ஒருவர் பதவியிலிருந்து அகற்றப்படுவதைத் தேவைப்படுத்துகின்ற, அல்லது நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபைக்கு, சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் நியமிக்கப்படுவதைத் தேவைப்படுத்துகின்ற நிபந்தனையொன்றை உள்ளடக்கலாம்,'';

(3) அச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் இறுதியில் பின்வரும் பந்தி சேர்க்கப்பட்டாற்போன்றும்:—

''(இ) உட்பிரிவு (3அ) வில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு நடவடிக்கைகள் எடுத்தல்'';

(4) அச்சட்டத்தின் 16ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவு இடப்பட்டாற் போன்றும்:—

''(3அ) (அ) சபையானது கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல் ஒன்றன் மூலம் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்கு, நிறுவனமொன்றின் நிருவாகத்தையும் முகாமையையும் பொறுப்பேற்கலாம். சபையானது, கசெற்றில் வெளியிடப்படும் அடுத்துப் பின்னரான அறிவித்தல் ஒன்றன் மூலம், மூல அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியை நீடிக்கலாம்.

(ஆ) நிறுவனமொன்றின் நிருவாகத்தையும் முகாமையையும் சபையானது பொறுப்பேற்குமிடத்து, சபை—

(i) அத்தகைய நிறுவனம் கம்பனிகள் சட்டத்தின் கீழ்க் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாக இருந்தால், அத்தகைய நிறுவனம் தொடர்பில் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் அல்லது அத்தகைய கம்பனியின் அமைப்பக விதிகளினால் அல்லது அமைப்பக விதிகளின் கீழ் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும் அத்துடன் பணிகளையும் பிரயோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம்;

(ii) அத்தகைய நிறுவனம் ஒரு பங்குடைமையாகவோ அல்லது தனி உரித்தாண்மையாகவோ இருந்தால் அத்தகைய நிறுவனம் தொடர்பில் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினுல் அல்லது சட்டத்தின் கீழ் அல்லது அத்தகைய பங்குடைமை தொடர்பான பங்குடைமை உறுதியினுல் ஒரு பங்காளருக்கு அல்லது தனி உரிமையாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும் அத்துடன் பணிகளையும் பிரயோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம்;

(iii) பொதுமக்கள் நலனைக் கவனத்திற் கொண்டு, சபைக்கும் அத்தகைய ஆளுக்கும் அல்லது ஆட்கள் குழுவுக்கும் இடையே உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடிய வாறுன அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, அத்தகைய நிறுவனத்தை முகாமை செய்வதற்காக எவரேனுமாளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் உடன்படிக்கையொன்றைச்செய்து கொள்ளலாம்.

(இ) நிறுவனம் ஒன்றின் நிருவாகமும் முகாமையும் சபையால் பொறுப்பேற்கப்படும் காலப்பகுதியின்போது அத்தகைய, நிறுவனத்தின் பணிப்பாளர், பங்காளர், முகாமையாளர், செயலாளர் அல்லது உரிமையாளர் ஆகிய ஒவ்வொருவரும் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்வதற்குச் சபையினுல் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்டாலொழிய, அத்தகைய நிறுவனம் தொடர்பிலான எவையேனும் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிக்காது, புரியாது அத்துடன் நிறைவேற்றுது ஒழிதல் வேண்டும்.

(ஈ) (i) சபையால் அதன் நிருவாகமும் முகாமையும் பந்தி (அ) வின் கீழ் பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்திற்கு, அத்தகைய நிறுவனத்தை முறையாக முகாமை செய்வதற்கு அவசியமாகக் கூடியவாறுன அத்தகைய கடன்களை அல்லது வேறு பண வசதியை மத்திய வங்கியின் நிதிகளிலிருந்து சபை வழங்கலாம்.

(ii) (அ) அதன் கட்டுப்பாடு அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதான நிறுவனம் ஒன்றின் கட்டுப்பாட்டை மேற்கொள்ளுவதிலும், அதனைத் தொழிற்படுத்துவதிலும்; அத்துடன்

(ஆ) நான்காம் உட்பிரிவின்கீழ் ஒரு நிறுவனத்தை ஒடுக்குவதிலும்

உறப்பட்ட எல்லாச் செலவுத் தொகைகளும் இறுப்பனவுகளும் அத்துடன் செலவுகளும், அத்தகைய

கொடுப்பனவு பொதுமக்கள் நலனுக்கானது எனச் சபை கருதும் எந்தவொரு விடயத்திலும் மத்திய வங்கி நிதிகளிலிருந்து கொடுபடல் வேண்டும்.

(உ) சபையானது நிறுவனமொன்றின் நிருவாகத்தையும் முகாமையையும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளவிடத்து, இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியால் அல்லது அதன்கீழ் சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது சபைமீது சுமத்தப்பட்ட, அல்லது சபைக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கையில் சபையால் செய்யப்பட்ட அல்லது செய்யாது விடப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியம் காரணமாக எவரேனும் ஆளுக்கு ஏற்பட்ட அல்லது அவரினல் உறப்பட்ட அல்லது ஏற்பட்டுள்ளதாக அல்லது உறப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட ஏதேனும் இழப்பு அல்லது சேதம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்திலான ஏதேனும் வழக்குக்கு அல்லது எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளாதல் அல்லது அமைவாதல் ஆகாது.''.

(5) பதினுறும் பிரிவின் (8) ஆம் உட்பிரிவு அச்சட்டத்தினின்று விட்டுவிடப்பட்டாற்போன்றும்; அத்துடன்

(6) அச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் (13) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வருவது இடப்பட்டாற்போன்றும்:—

''(13) (அ) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரால் அல்லது அத்தகைய பணிப்பாளரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போது, ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுவதற்கு அல்லது ஏதேனும் புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் காண்பிப்பதற்குத் தவறுகின்றவரான, அல்லது வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், அல்லது அத்தகைய பணிப்பாளரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் இப்பிரிவின் கீழான அல்லது 15 ஆம் பிரிவின் கீழான ஏதேனும் சோதனை செய்வதில் அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்றவரான அல்லது அனுமதிக்கத் தவறுகின்றவரான ஏதேனும் நிறுவனத்தின் எவரேனும் உரிமையாளர், பங்காளர், பணிப்பாளர், முகாமையாளர், கணக்காய்வாளர், செயலாளர் அல்லது ஊழியர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.''.

(7) அச்சட்டத்தின் 21 ஆம் பிரிவை உடனடுத்து அதன் பாகம் IV எனப் பயனுற வேண்டியதான பின்வரும் புதிய பாகம் இடப்பட்டாற்போன்றும்:—

"பாகம் IV"

**பல்லினமானவை**

காரியானுகூல மற்ற நிறுவனங்கள் தொடர்பாகப் பணச் சபைக்குள்ள தத்துவங்கள்.

21அ. (1) பணச்சபையானது—

(அ) புதினப்பத்திரிகைகளில் அல்லது வேறு வெகுசனத் தொடர்புச் சாதனங்களில் விளம்பரங்கள் செய்தல் உட்பட, எத்தன்மைத்தான எவ்வழிகள் மூலமும்—

(i) பணச்சபையின் அபிப்பிராயப்படி இச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பின் அல்லது விதியின் ஏற்பாடு எதனையும் மீறியுள்ள நிறுவனங்களின் பெயர்களையும் முகவரிகளையும்;

(ii) ஏதேனும் நிறுவனம் ஸ்திரமானதா அல்லது ஸ்திரமற்றதா அல்லது கடனிறுக்க வகையுடையதா அல்லது கடனிறுக்க வகையற்றதா என்பது பணச்சபையின் பூரண தற்றுணிபுக்குட்பட்டதாக இருக்க, அந்நிறுவனத்தின் ஸ்திரமற்ற அல்லது கடனிறுக்க வகையற்ற நிலைமைக்குப் பொறுப்பானவர்களெனச் சபை கருதும் எவரேனும் பணிப்பாளர்களின், பங்குடமையாளர்களின், பங்காளர்களின், உரிமையாளர்களின், ஊழியர்களின், முகவர்களின் அல்லது வேறு எவரேனும் ஆளின் அல்லது ஆட்களின் பெயர்களையும் முகவரிகளையும்

பகிரங்கப்படுத்தலாம்.

(ஆ) மேலே (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்தின் அல்லது எவரேனும் ஆளின் எவையேனும் பணங்கள், ஆதனங்கள் அல்லது அசைவுள்ள அல்லது அசைவற்ற வேறு சொத்துக்கள் ஆகியவற்றின் பெறுமதி, தன்மை, அவை உள்ள இடம் என்பன தொடர்பிலான தகவல்களையும் விபரங்களையும் மத்திய வங்கிக்குக் கொடுத்துதவுமாறு, புதினப்பத்திரிகைகளில் அல்லது வெகுசனத் தொடர்புச் சாதனங்களில் விளம்பரஞ் செய்வித்தல் உட்பட, எத்தன்மைத்தான எவ்வழிகளின் மூலமும் பொதுமக்களைக் கேட்கலாம்;.

(இ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளினல் தமது சொந்தப் பெயரிலோ அல்லது அத்தகைய ஆள் அக்கறை கொண்டுள்ள ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பெயரிலோ அல்லது அத்தகைய ஆளின் எவரேனும் நியமத்தரின், உறவினரின், ஊழியரின் அல்லது முகவரின் பெயரிலோ பயன்தரு விதமாகச் சொந்தமாக வைத்திருக்கப்படும் எவையேனும் பணங்கள் ஆத

னங்கள் மற்றும் சொத்துக்கள் என்பவற்றின் பெறுமதி, தன்மை, அவை உள்ள இடம் என்பன பற்றி வெளியிடு மாறு பணிக்கலாம்;

(ஈ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளுக்கு அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட எவை யேனும் ஆதனங்களின் அல்லது சொத்துக்களின் உடை மையை, சொத்துவத்தை அல்லது அவற்றில் உள்ள ஏதேனும் அக்கறையை அத்தகைய ஆள் உரித்துமாற்று வதைத் தடை செய்யும் அறிவித்தலொன்றைச் சேர்ப் பிக்கலாம்;

(உ) ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் விடயத்தில் காணிப் பதிவாளர், மோட்டார் வாகனங்களின் விடயத்தில் மோட்டார் வாகனப் பதிவாளர் என்போர் உட்பட, அத்தகைய ஆதனங்களின் அல்லது சொத்துக்களின் சொத்துவம் தொடர்பிலான அல்லது அத்தகைய ஆத னங்களின் அல்லது சொத்துக்களின் சொத்துவத்தை அல் லது அவற்றில் உள்ள அக்கறையைப் பாரதீனப்படுத்து தல் தொடர்பிலான ஏதேனும் ஆவணத்தைப் பதிவு செய்வதற்காகத் தோதான அதிகாரிக்கு (ஈ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தலின் பிரதி யொன்றைச் சேர்ப்பிக்கலாம்;

(ஊ) பணச்சபைக்காகவும் பணச்சபையின் சார்பிலும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினுல் ஒப்பமிடப்பட்ட தடை செய்யும் அறிவித்தலின் பிரதியொன்று எவ்வதிகாரியிடம் சேர்ப்பிக்கப்பட்டதோ அவ்வதிகாரியை, அத்தகைய அதி காரியின் கட்டுக்காப்பிலுள்ள தோதான புத்தகங்களில் அத்தகைய அறிவித்தலைப் பதிவுசெய்யுமாறு தேவைப் படுத்தலாம்;

(எ) பந்தி (உ) மற்றும் (ஊ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப் படும் எவரேனும் அதிகாரியை, (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளின் எவை யேனும் ஆதனங்கள் அல்லது சொத்துக்கள் தொடர்பாக, அது கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் தகவலைக் கொடு த்துதவுமாறு தேவைப்படுத்தலாம்;

(ஏ) கசெற்றிலான அறிவிப்பின்மூலம், அசைவற்ற ஆதனம் தவிர்ந்த மேலே (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய் யப்பட்ட ஆட்களின் எவையேனும் சொத்துக்களை அல் லது ஆதனங்களைத் தனக்கே உரித்தாக்கலாம்;

(ஓ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளினல் பயன்தருவிதமாகச் சொந்தமாக வைத்திருக்கப் படும் எவையேனும் சொத்துக்களைக் கைப்பற்றி, ஏதேனும் வங்கியில் அல்லது ஏதேனும் நிறுவனத்தில் அத்தகைய ஆளின் வரவில் இருக்கும் எவையேனும் பணத்தொகை களைக் கைப்பற்றிக் கையுதிர்த்தல் உட்பட, சபை பொரு த்தமானதெனக் கருதுகின்றவாறுன ஏதேனும் முறையில் அத்தகைய சொத்துக்களைக் கையுதிர்க்கலாம்;

(2) (அ) பணச்சபையினுல் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், இப்பிரிவின் (1) ஆம் உட்பந்தியின் (ஓ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் ஆதனங்களையும் சொத்துக்களைக் கைப்பற்றி உடைமைகொள்ள லாம்.

(ஆ) பந்தி (அ) இன் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், முனையப்பட்டுள்ள அல்லது முனையப்படக்கூடிய சாத் தியமுடைய ஏதேனும் முட்டுக்கட்டை அல்லது எதிர்ப்புக் காரண மாக எவையேனும் சொத்துக்களை உடைமைகொள்ள இயலாத வராகவுள்ளவிடத்து அல்லது இயலாதவராக இருப்பாரென அஞ் சுகின்றவிடத்து, அத்தகைய அலுவலர், அதற்கென நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதன்மேல், அத் தகைய சொத்துக்களின் உடைமையை அவருக்கு ஒப்படைக்கும் படி நீதிமன்றத்தின் அலுவலரொருவரைப் பணிக்கின்ற அந்நீதி மன்றத்தின் கட்டளையொன்றுக்கு உரித்துடையவராதல் வேண் டும்.

(இ) உட்பந்தி (ஆ) இன் கீழ் நீதிவான் நீதிமன்றத்தினுல் நீதிமன்ற அலுவலரொருவருக்குக் கட்டளையொன்று வழங்கப்படு மிடத்து, அவர் உடனடியாக அக்கட்டளை நிறைவேற்றுதல் வேண் டுமென்பதுடன், அக்கட்டளை நிறைவேற்றப்பட்ட முறை பற்றி அந்நீதிமன்றத்துக்கு எழுத்தில் அறிக்கையிடுதலும் வேண்டும்.

(ஈ) உட்பந்தி (ஆ) இன் கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றினுல் வழங்கப்பட்ட கட்டளையொன்றை நிறைவேற்றும் நோக்கத்துக் காக, நீதிமன்ற அலுவலர் அல்லது அவரது பணிப்பின் கீழ்ச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் அக்கட்டளை தொடர்புபட்டுள்ள சொத்துக்களைக் கைப்பற்றி, அச் சொத்துக்களின் உடைமையை அத்தகைய சொத்துக்களின் உடைமையைக் கொள்ளுதற்கு அதி காரமளிக்கப்பட்டுள்ள அலுவலருக்கு ஒப்படைப்பதற்கு அவசிய மாகக் கூடியவாறுன அத்தகைய வலோத்காரத்தைப் பயன்படுத் தலாம்.

*21ஆ.* வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், இப்பிரிவு வலுவுக்கு வந்த பின்னர் 21அ என்னும் பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளினல் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கலை மீளாய்வு செய்யலாம் என்பதுடன், இப்பிரிவின் நோக்கங்களை முறியடிக்கும், நோக்கத்துக்காக அது செய்து கொள்ளப்பட்டுள்ளதென அவர் அபிப்பிராயப்பட்டால், அத்தகைய கொடுக்கல் வாங்கல் பற்றிப் பணச் சபைக்கு அறிக்கையிடலாம். அத்தகைய அறிக்கையின்மீது, பணச் சபை, அத்தகைய கொடுக்கல் வாங்கல் இப்பிரிவுகளின் நோக்கங்களை முறியடிக்கும் நோக்கங்களுக்காகச் செய்து கொள்ளப்பட்டுள்ளதெனத் தீர்மானிக்குமிடத்து, அத்தகைய கொடுக்கல் வாங்கல் எல்லா நோக்கங்களுக்காகவும் வெற்றுனதும் வறிதானதும் எனக் கருதப்படுதல் வேண்டும்.

*21இ.* இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், பணச் சபையானது, அதன் முகாமைத்துவம் பணச் சபையினல் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றுடன் வைப்பிலிடுபவர் ஒருவரினல் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யலாம் என்பதுடன், மீளச் செலுத்துதல், வட்டி வீதங்கள், இறுப்பனவுகள் என்பன தொடர்பிலான நியதிகள் உட்பட அத்தகைய ஒப்பந்தத்தின் நியதிகளை வேறுபடுத்தலாம்.

*21ஈ.* மத்திய வங்கியின் அலுவலர்கள் இச்சட்டத்தின் நோக்களுக்காகவும் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் கருத்துக்குட்படவும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.''; அத்துடன்

*(8)* அச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் இறுதியில் பின்வரும் வரைவிலக்கணம் சேர்க்கப்பட்டாற்போன்றும்:—

''உறவினர்'' என்பது 21அ என்னும் பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் தொடர்பாக அத்தகைய ஆளின் வாழ்க்கைத்துணை, பிள்ளை, தந்தை, தாய், சகோதரர் மற்றும் சகோதரி என்றும் பொருளாகும்.;.

# 1988 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டம்

[1988 நவம்பர் மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

## 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சகாய நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 5 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

(ஊஊ) தொங்கு கணக்கொன்றைப் பேணுதல் வேண்டும்; இதில் இச்சட்டத்தின் கீழ்ப் பெறப்பட்ட எந்த உதவு தொகைகள் தொடர்பில் சட்டத்தின் நியதிகளின்படி அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்படி தொழில் தருநர்கள் இயைபான விபரத்திரட்டுக்களைக் கொடுத்துதவத் தவறியுள்ளனரோ, அல்லது குறைபாடுள்ள அல்லது பிழையான விபரத் திரட்டுக்களைக் கொடுத்துதவியமையினுல் தனிப்பட்ட கணக்குகளுக்கு வரவுவைக்க முடியாதுள்ளதோ அந்த உதவுதொகைகள் வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உதவுதொகைகள் தொடர்பில் நிதியத்தினுல், பேணப்படும் கணக்கொன்றில் இப்பந்தி வலுவுக்கு வரும் தேதியில் வைத்திருக்கப்படும் எல்லாப் பணங்களும் இப்பந்தியினுல் உருவாக்கப்பட்ட தொங்கு கணக்கிற்குப் பணச்சபையினுல் கைமாற்றப்படுதலும் வேண்டும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டவாறு இயைபான விபரத் திரட்டுக்களைக் கொடுத்துதவத் தவறியுள்ள தொழில்தருநர் ஒருவர், தமது ஊழியர் தொடர்பில் சரியான விபரத்திரட்டுக்களைக் கொடுத்துதவுகின்றவாறும் கொடுத்துதவுகின்றபோதும், பணச்சபையானது தொங்கு கணக்கில் இருக்கும் பணங்களை உறுப்பினரின் தனிப்பட்ட கணக்கிற்குக் கைமாற்றுதல் வேண்டும்.

இப்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு எவையேனும் பணங்கள் தொங்கு கணக்கிலிருந்து தனிப்பட்ட கணக்கிற்குக் கைமாற்றப்படுமிடத்து, அத்தகைய கைமாற்றல் தேதிக்கு, முன்னரான ஆறு ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு அத்தகைய பணங்களைப் பெற்றுக் கொண்டதான தேதியில் இருந்து அத்தகைய பணங்களைத் தனிப்பட்ட கணக்கிற்குக் கைமாற்றும் தேதி வரையிலான காலப்பகுதிக்கு அப்பணத் தொகைமீது வட்டி கொடுக்கப்படல் வேண்டுமென்பதுடன், வட்டி வீதமானது சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் நியதிகளின்படி தீர்மானிக்கப்பட்டதும் அத்துடன் எந்த ஆண்டு தொடர்பில் வட்டி செலுத்தப்படுகின்றதோ அந்த ஆண்டுக்கு ஏற்புடையதாதற்பாலதுமான வீதமாக இருத்தலும் வேண்டும்.''; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (ஓஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

''(ஓஓஓ) அப்பயன்பட ஆணையாளரிடமிருந்து பெறப்பட்ட பணிப்புரையின்மீது உறுப்பினர் ஒருவரின் தனிப்பட்ட கணக்கில் இருந்து 22 ஆம் பிரிவின்கீழ் வீடமைப்புக் கடன்மீது வருமதியாக உள்ள எவையேனும் நிலுவையாகவுள்ள பணங்களைக் கழித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு கழிக்கப்பட்ட தொகையை இயைபான கடன் வழங்கு நிறுவனத்திற்குக் கைமாற்றுதல் வேண்டும்;''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு, அப்பிரிவின் முடிவில் பின்வரும் காப்பு வாசகத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''ஆயின், எவ்வாறுயினும் நிதியத்தின் உறுப்பினரொருவர், 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச ஈட்டு, முதலீட்டு வங்கிச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட அரச ஈட்டு, முதலீட்டு வங்கியுடன், அல்லது 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் அல்லது (401 ஆம் அத்தியாயமான) தேசிய வீடமைப்புச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனத்துடன் அல்லது 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கியுடன் அல்லது (397 ஆம் அத்தியாயமான) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கியுடன் அல்லது 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியுடன் (124 ஆம் அத்தியாயமான) கூட்டுறவுச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன், நிதியத்தில் அவரது தனிப்பட்ட கணக்கின் வரவிலுள்ள உதவு தொகைகளை சொல்லப்பட்ட'' நோக்கங்களுக்காகக் கொடுக்கப்பட்ட கடனுக்கெதிராகச் சாட்டுதல் செய்யலாம் அல்லது பொறுப்பாக்கலாம்.

குடும்பத்தில் ஓர் உறுப்பினருக்கு மேற்பட்டவர்கள் நிதியத்தின் உறுப்பினர்களாக இருக்கும் ஏதேனும் விடயத்தில், நிதியத்தின் உறுப்பினர்களாகவுள்ள அத்தகைய எல்லாக் குடும்ப உறுப்பினர்களும், மேற் கூறப்பட்டவாறு எடுக்கப்பட்ட ஒரு வீடமைப்புக் கடனிற்கு எதிராக அவர்களின் தனிப்பட்ட கணக்குகளின் வரவிலிருக்கின்ற உதவுதொகைகளின் கூட்டு மொத்தத்தைச் சாட்டுதல் செய்யலாம் அல்லது பொறுப்பாக்கலாம்.

''கடன் தவணைப் பணத்தின் மீள் கொடுப்பனவில் தவறுகை இருக்குமிடத்து, ஆணையாளரானவர் இயைபான கடன் வழங்கு நிறுவனத்தினால் அவ்வாறு தெரிவிக்கப்பட்டதன் பின்னர், சட்டத்தின் 23 ஆம் அல்லது 24 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய ஊழியரின் அல்லது ஊழியர்களின் தனிப்பட்ட கணக்கில் அல்லது கணக்குகளில் இருக்கின்ற பணங்களில் இருந்து, அத்தகைய கடன் வழங்கு நிறுவனத்திற்கு அத்தகைய தவணைப் பணத்தின்மீது திரண்டுள்ள வட்டியுடன் சேர்த்து தவறுகையிலுள்ள தவணைப் பணத்தைத் தீர்த்து வைத்தல் வேண்டும்.

ஊழியரொருவரினால் கடன் ஒன்றின் தவணைப் பணங்களின் கொடுப்பனவிலான தவறுகைகள் தொடர்பில் ஆணையாளருக்கு இயைபான கடன் வழங்கு நிறுவனத்தினால் தெரிவிக்கப்படுதலானது, ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டினதும் இறுதியில் செய்யப்படுதல் வேண்டும்.''.

விடயத்துக்கேற்ப 23 ஆம் அல்லது 24 ஆம் பிரிவின் கீழான நன்மையைக் கொடுப்பனவு செய்யும் நேரத்தில் மேற்கூறப்பட்டவாறு எடுக்கப்பட்ட ஒரு வீடமைப்புக் கடனின் பேரில் எவையேனும் பணத்தொகைகள் நிலுவையாக இருக்குமிடத்து, ஆணையாளர், விடயத்துக்கேற்றாற்போல அத்தகைய உறுப்பினரின் அல்லது உறுப்பினர்களின் தனிப்பட்ட கணக்கில் அல்லது கணக்குகளில் அவரின் அல்லது அவர்களின் வரவில் இருக்கின்ற பணத்தொகைகளைக் கழித்து அத்தகைய கழிவை உடனடுத்து அந்தக் கடன் வழங்கு நிறுவனங்களுக்கு அவ்வாறு கழிக்கப்பட்ட பணங்களைக் கைமாற்றும்படி பணச்சபையைப் பணிக்கலாம்.

22 ஆம் பிரிவின் நோக்கத்துக்காக, ''குடும்பம்'' என்பது நிதியத்தின் ஓர் உறுப்பினர், அவருடைய அல்லது அவளுடைய வாழ்க்கைத் துணை அத்துடன் அவருடைய அல்லது அவளுடைய பிள்ளைகள் என்று பொருளாகும்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''பிரிவில் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இப்பிரிவில் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிரவும், 22 ஆம் பிரிவில் செய்யப்பட்ட கழிவுகளுக்கமைவாகவும்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''அப்பொழுது அத்தகைய தொகை யானது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''22 ஆம் பிரிவில் செய்யப்பட்ட கழிவுகளுக்கமைவாக, அப்பொழுது அத்தகைய தொகை யானது'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், ''அத்தகைய தொகையானது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''22 ஆம் பிரிவில் செய்யப்பட்ட கழிவுகளுக்கமைவாக, அத்தகைய தொகையானது'' என்னும் சொற் களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத் தின் 31அ என்னும் பிரிவாகப் பயனுடையதாக இருத்தலும் வேண்டும்:—

"விபரத்திரட் டுக்களைக் கொடுத்துதவத் தவறும் தொழில்தருநர் மீது மிகை யிறுப்பனவை விதித்தல்.

31அ. எந்தத் தொழில்தருநர் இச்சட்டத்தின் நியதிகளின்படி அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்படி ஏதேனும் உதவுதொகையுடன் சேர்த்து விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தப்படுகின்றாரோ அந்தத் தொழில்தருநர் எவரும் அத்தகைய விபரத்திரட்டைக் குறித் துரைக்கப்பட்ட காலத்துக்குள் கொடுத்துதவத் தவறும் இடத்து, அல்லது பிழையான அல்லது குறைபாடுள்ள விபரத்திரட்டைக் கொடுத்துதவுமிடத்து, அத்துடன் அக்காலப் பகுதிக்கான அத் தகைய விபரத்திரட்டைக் கொடுத்துதவத் தவறியமைக்கான காரணத்தை ஆணையாளரின் திருப்திக்கு விளக்க இயலாதவரா யிருக்குமிடத்து, அவர் எந்தத் தேதியன்று அல்லது எந்தத் தேதி க்கு முன்னர் விபரத்திரட்டு வருமதியாக இருந்ததோ அந்தத் தேதியிலிருந்து மத்திய வங்கியினால் உரிய முறையில் பூரணப் படுத்தப்பட்ட விபரத்திரட்டொன்று பெறப்பட்ட தேதி வரையி லான ஒவ்வொரு பூர்த்தி செய்யப்பட்ட மாதத்திற்குமான அல் லது அதன் பாகத்திற்கான அத்தகைய உதவுதொகைத் தொகை யின் ஒரு சதவீதத்திலான மிகையிறுப்பனவொன்றை நிதியத்திற் குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.''.

# 1988 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, பல்புடை முதலீட்டு (உத்தரவாத முகவர் நிலைய) சட்டம்

**பல்புடை முதலீட்டு உத்தரவாத முகவர் நிலையத்தைத் தாபிக்கின்ற சமவாயத்தின் கீழ் இலங்கை அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதனை இயலச் செய்வதற்கான ஒரு சட்டம்**

பல்புடை முதலீட்டு உத்தரவாத முகவர் நிலையத்தைத் தாபிக்கின்ற சமவாயத்திற்குக் கையொப்பமிடும் நாடொன்றாக; இலங்கை, 1986 ஒக்டோபர் 3 ஆம் தேதியன்று வந்துள்ளதாதலாலும்;

அத்துடன், இலங்கை அச்சமவாயத்தின் கீழ் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதனை இயலச் செய்வதற்குச் சட்ட ஏற்பாடு செய்தல் அவசியமாகவுள்ளதாதலாலும்;

ஆகவே, இப்பொழுது இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம், 1988 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, பல்புடை முதலீட்டு உத்தரவாத முகவர் நிலையச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், (இதனகத்துப் பின்னர் ''சமவாயம்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) பல்புடை முதலீட்டு உத்தரவாத முகவர் நிலையத்தைத் தாபிப்பதும், அதன் ஏற்பாடுகள் இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளதுமான சமவாயம் இலங்கை தொடர்பில் வலுவுக்கு வருகின்ற தேதியன்று அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தாட்சிப்படுத்துகின்ற அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. அமைச்சர், அரசாங்கத்தின் சார்பில், சமவாயத்தின் 7 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் கீழ், சமவாயத்தினால் தாபிக்கப்பட்டதும், (இதனகத்துப் பின்னர் ''முகவர் நிலையம்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) பல்புடை முதலீட்டு உத்தரவாத முகவர் நிலையத்துக்கான இலங்கையின் கடப்பாடுகளை ஈடுசெய்வதற்கு அவசியமாகக் கூடியவாறாக, கைமாற்றத்தகாதனவும் வட்டி ஈட்டாதனவுமான அத்தகைய வாக்குறுதிப் பத்திரங்களையும் அதே போன்ற கடப்பாடுகளையும் அல்லது கைமாற்றத் தகாதனவும் வட்டி ஈட்டாதனவுமான அத்தகைய வாக்குறுதிப் பத்திரங்களை அல்லது அதே போன்ற கடப்பாடுகளை உருவாக்கி அம்முகவர் நிலையத்துக்கு வழங்கலாம்.

3. இலங்கைத் திரட்டு நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும்:—

(அ) சமவாயத்தின் 7 ஆம் உறுப்புரையின் (i) ஆம், (ii) ஆம் பந்திகளின் கீழ் இலங்கையினால் செலுத்தப்படற்பாலதான தொடக்க ஒப்பப் பணத்தை முகவர் நிலையத்துக்குச் செலுத்துவதற்குக் காலத்துக்குக் காலம் தேவைப்படக் கூடியவாறான அத்தகைய பணத் தொகைகள்;

(ஆ) சமவாயத்தின் வேறேதேனும் ஏற்பாட்டின் கீழ், இலங்கையினால் முகவர் நிலையத்துக்குக் காலத்துக்குக் காலம் செலுத்தற்படற்பாலனவாக வரக் கூடிய அத்தகைய பணத் தொகைகள்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது முகவர் நிலையத்துக்கு வழங்கப்பட்ட எவையேனும் பத்திரங்களை அல்லது கடப்பாடுகளை மீட்பதற்குத் தேவைப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள்.

4. (1) மூன்றும் பிரிவின் கீழ் இலங்கைத் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் பணத் தொகைகளை ஏற்பாடு செய்யும் நோக்கத்துக்காக, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் தகுதியென எண்ணும் அத்தகைய படிவத்தில் வட்டி ஈட்டாதனவும், கைமாற்றத் தகாதனவுமான பத்திரங்கள் அல்லது கடப்பாடுகள் உருவாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்படுவதன் மூலம், இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கடன்களைத் திரட்டுவதற்கு அவருக்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

(2) (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க உருவாக்கப்பட்டு வழங்கப்பட்ட எவையேனும் பத்திரங்களை அல்லது கடப்பாடுகளை ஏற்பதற்கும் வைத்திருப்பதற்கும் இலங்கை மத்திய வங்கிக்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட எவையேனும் பத்திரங்களை அல்லது கடப்பாடுகளை மீட்பதற்குத் தேவைப்பட்ட எல்லாப் பணத் தொகைகளும் இலங்கைத் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

5. இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் முகவர் நிலையத்திடமிருந்து பெறப்படும் எல்லாப் பணத்தொகைகளும், இலங்கைத் திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(அ) சமவாயத்தின் 10 ஆம் உறுப்புரையின் கீழான மீளளிப்பொன்றாக;

(ஆ) சமவாயத்தின் 27 ஆம் உறுப்புரையின் கீழ்த் தேறிய வருமானத்தின் பகிர்ந்தளிப்பொன்றன்மீது;

(இ) சமவாயத்தின் 55 ஆம் உறுப்புரையின் கீழ் முகவர் நிலையத்தின் ஒழித்துக்கட்டுதலொன்றின்மீது; அத்துடன்

(ஈ) சமவாயத்தின் வேறேதேனும் ஏற்பாட்டின் கீழ்,

6. சமவாயத்தின் 1, 44, 45, 46, 47, 48, 50 ஆகிய உறுப்புரைகளின் ஏற்பாடுகள் இலங்கையில் சட்டவலுவைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க—

(அ) மேற்கூறப்பட்ட 1 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்ட அந்தஸ்தையும் தகுதியையும் முகவர் நிலையம் இலங்கையில் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) முகவர் நிலையமும் அதன் அலுவலர்களும், மேற்கூறப்பட்ட 50 ஆம் உறுப்புரைக்கமைய மேற்கூறப்பட்ட 44, 45, 46, 47, 48 ஆகிய உறுப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட விடுபாட்டுரிமைகளையும் சிறப்புரிமைகளையும் இலங்கையில் கொண்டிருத்தலும் வேண்டும்.

7. சமவாயத்தின் 37 ஆம் உறுப்புரையின் கீழ் இலங்கை அரசாங்கத்தினால் அவ்வாறாகப் பதவிப் பெயர் குறிக்கப்படும்போது, இலங்கை மத்திய வங்கியானது, அவ்வுறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காக, இலங்கையில் முகவர் நிலையத்தின் வைப்பிடமாகவிருத்தல் வேண்டும்.

8. இச்சட்டத்தில், 'மத்திய வங்கி' என்பது (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் 5 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்.

## பல்புடை முதலீட்டு உத்தரவாத முகவர் நிலையத்தைத் தாபிக்கின்ற சமவாயம்

### முன்னுரை

**ஒப்பந்தஞ் செய்யும் அரசுகள்**

பொருளாதார அபிவிருத்திக்காகச் சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும், அத்தகைய அபிவிருத்திக்குப் பொதுவாக வெளிநாட்டு முதலீட்டினதும் குறிப்பாகத் தனியார் வெளிநாட்டு முதலீட்டினதும் பங்களிப்பை வளர்ப்பதற்கும் ஆன தேவையைக் கருத்திற் கொண்டும்;

அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்கு வெளிநாட்டு முதலீடுசென்றடைதல், வர்த்தகம் சாரா ஆபத்துக்கள் தொடர்பான தொழிற்பாடுகளை எளிதாக்குவதன் மூலம் வசதிப்படுத்தப்பட்டு மேலும் ஊக்குவிக்கப்படுமென்பதை ஏற்றங்கீகரித்துக் கொண்டும்;

வெளிநாட்டு முதலீட்டைப் பயன்படுத்துவதற்கான நியாயமான, நிலையுறுதியான தரங்களின் அடிப்படையில், அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் அபிவிருத்தித் தேவைகள், கொள்கைகள், குறிக்கோள்கள் என்பவற்றுடன் ஒத்திருக்கின்ற நிலைமைகளின் கீழ்ப் பயனீட்டும் நோக்கங்களுக்காக மூலதனமும் தொழினுட்பவியலும் அவற்றுக்குச் சென்றடைதலை அதிகரிக்க விரும்பிக் கொண்டும்;

பல்புடை முதலீட்டு உத்தரவாத முகவர் நிலையமானது, தேசிய, பிராந்திய முதலீட்டு உத்தரவாத நிகழ்ச்சித் திட்டங்களையும் வர்த்தகம் சாரா ஆபத்துக் கெதிரான தனிப்பட்ட காப்புறுதியாளர்களையும் முழுமையாக்கி வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதில் முக்கியமான ஒரு பங்கை ஆற்ற முடியுமென நம்பிக் கொண்டும்; அத்துடன்

அத்தகைய முகவர் நிலையம், இயன்றவரையில், அதன் அழைக்கத்தகு மூலதனத்தை நாடாமல் அதன் கடப்பாடுகளை ஈடுசெய்ய வேண்டுமெனவும், முதலீட்டு நிலைமைகளில் தொடர்ந்து நடைபெறும் சீராக்கத்தின் மூலம் அத் தகையவொரு குறிக்கோள் எய்தப்படுமெனவும் உணர்ந்து கொண்டும், பின்வருமாறு உடன்பட்டுள்ளன.

## அத்தியாயம் I

**தாபிப்பு, அந்தஸ்து, நோக்கங்கள், வரைவிலக்கணங்கள் என்பன,**

உறுப்புரை 1—முகவர் நிலையத்தைத் தாபித்தலும் அதன் அந்தஸ்தும்

*(அ)* (இதனகத்துப் பின்னர் முகவர் நிலையம் என அழைக்கப்படும்) பல்புடை முதலீட்டு உத்தரவாத முகவர் நிலையம் இத்தால் தாபிக்கப்படுகின்றது.

*(ஆ)* முகவர் நிலையமானது முழுச் சட்டநெறி ஆளுமையையும், குறிப்பாக;

(i) ஒப்பந்தஞ் செய்வதற்கான;

(ii) அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் கையுதிர்ப்பதற்குமான; அத்துடன்

(iii) சட்ட நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கான

தகுதியையும் உடையவராதல் வேண்டும்.

உறுப்புரை 2—குறிக்கோளும் நோக்கங்களும்

முகவர் நிலையத்தின், குறிக்கோளானது, உறுப்பு நாடுகளுக்கிடையேயும், அத்துடன் குறிப்பாக அபிவிருத்தியடைந்து வருகின்ற உறுப்பு நாடுகளுக்கும் பயனீட்டும் நோக்கங்களுக்காக முதலீடுகள் சென்றடைதலை ஊக்குவித்தலாகும்; (இதனகத்துப் பின்னர் ''வங்கி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மீளமைப்பு அபிவிருத்தி என்பனவற்றுக்கான சர்வதேச வங்கி, சர்வதேச நிதிக் கூட்டுத் தாபனம், அத்துடன் வேறு சர்வதேச அபிவிருத்தி நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகளை இதன் மூலம் குறைநிரப்ப முடியும்.

அதன் குறிக்கோளை எய்துவதற்கு முகவர் நிலையம்—

*(அ)* ஏனைய உறுப்பு நாடுகளிலிருந்து சென்றடையும், உறுப்பு நாடொன்றிலான முதலீடுகள் தொடர்பில் வர்த்தகஞ்சாரா ஆபத்துக்களுக்கெதிராக, கூட்டுக் காப்புறுதியும் மீள்காப்புறுதியும் உட்பட, உத்தரவாதங்களை வழங்குதல் வேண்டும்;

(ஆ) அபிவிருத்தியடைந்து வருகின்ற உறுப்பு நாடுகளுக்கும் அவற்றுக்கிடையேயும் முதலீடுகள் சென்றடைதலை மேம்படுத்துவதற்குத் தோதான முழுமையாக்கல் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்; அத்துடன்

(இ) அதன் குறிக்கோளை முன்னெடுத்துச் செல்வதில் அவசியமாக அல்லது விரும்பத்தக்கதாக உள்ள அத்தகைய வேறு இடைநேர் விளைவான தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும்.

முகவர் நிலையமானது, அதன் முடிபுகள் எல்லாவற்றிலும் இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகளினால் வழிகாட்டப்படுதல் வேண்டும்.

உறுப்புரை 3—வரைவிலக்கணங்கள்

இச் சமவாயத்தின் நோக்கங்களுக்காக—

(அ) ''உறுப்பினர்'' என்பது, 61 ஆம் உறுப்புரைக்கிணங்க இச்சமவாயம் எந்த அரசு தொடர்பில் வலுவுக்கு வந்துள்ளதோ அந்த அரசு ஒன்று எனப் பொருளாகும்.

(ஆ) ''ஓம்பு நாடு'' அல்லது ''ஓம்பு அரசாங்கம்'' என்பது, 67 ஆம் உறுப்புரையில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறு, முகவர் நிலையத்தினால் உத்தரவாதமளிக்கப்பட்ட அல்லது மீள் காப்புறுதி செய்யப்பட்ட, அல்லது உத்தரவாதத்துக்கென அல்லது மீள் காப்புறுதிக்கெனக் கருத்திற் கொள்ளப்படுகின்ற முதலீடொன்று எந்த உறுப்பினரின், அதன் அரசாங்கத்தின், அல்லது உறுப்பினரின் ஏதேனும் பகிரங்க அதிகார சபையின் ஆள்புலங்களை அமைவிடமாகக் கொண்டிருக்கவுள்ளதோ அந்த உறுப்பினர், அதன் அரசாங்கம் அல்லது உறுப்பினரின் ஏதேனும் பகிரங்க அதிகாரசபை ஒன்று எனப் பொருளாகும்.

(இ) ''ஓர் அபிவிருத்தியடைந்து வருகின்ற உறுப்பு நாடு'' என்பது, (இதனகத்துப் பின்னர் ''பேரவை'' என அழைக்கப்படும்) 30 ஆம் உறுப்புரையிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளுநர் பேரவையினால் இதற்கான அ என்னும் அட்டவணை காலத்திற்குக் காலம் திருத்தப்படலாமாதலால் இவ் அட்டவணையில் அவ்வாறு நிரற்படுத்தப்பட்ட ஓர் உறுப்பினர் எனப் பொருளாகும்.

(ஈ) ''ஒரு விசேட பெரும்பான்மை'' என்பது, முகவர் நிலையத்தின் மூலதனக் கையிருப்பின் ஒப்பப்பணமளிக்கப்பட்ட பங்குகளினது ஐம்பத்தைந்து சதவீதத்துக்குக் குறையாதவற்றைக் குறிக்கின்றதும் மொத்த வாக்களிக்கும் தத்துவத்தின் மூன்றிலிரண்டுக்குக் குறையாததுமான ஒத்திசைவான வாக்கு ஒன்று எனப் பொருளாகும்.

(உ) ''கட்டற்ற முறையில் பயன்படத்தகு நாணயம் ஒன்று'' என்பது, (1) சர்வதேச பண நிதியத்தினால் காலத்துக்குக் காலம் அவ்வாறாகப் பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் நாணயம் எனவும் அத்துடன் (ii) சர்வதேச பண நிதியத்தின் கலந்தாலோசனையின் பின்னரும் அத்தகைய நாணயத்தைக் கொண்ட நாட்டின் அங்கீகாரத்துடனும் இச்சமவாயத்தின் நோக்கங்களுக்காக (இதனகத்துப் பின்னர் சபை என அழைக்கப்படும்) 30 ஆம் உறுப்புரையிற் குறிப்பீடு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை, பெயர் குறிக்கக் கூடியதான வேறேதேனும் கட்டற்ற முறையில் கிடைக்கக்கூடியதும் பயனுள்ளவகையில் பயன்படத் தகுந்ததுமான நாணயம் எனவும் பொருளாகும்.

## அத்தியாயம் II

## உறுப்பாண்மையும் மூலதனமும்

### உறுப்புரை 4—உறுப்பாண்மை

(அ) முகவர் நிலையத்திலான உறுப்பாண்மை வங்கியின் எல்லா உறுப்பினர்களினாலும் சுவிற்சலாந்தினாலும் பெறக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) ஆரம்ப உறுப்பினர்கள், இதற்கான அ என்னும் அட்டவணையில் நிரற்படுத்தப்படுகின்றனவும், 1987, ஒக்டோபர் 30 ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர் இச்சமவாயத்திற்கான அங்கத்தவர்களாகின்றனவுமான அரசுகளாதல் வேண்டும்.

### உறுப்புரை 5—மூலதனம்

(அ) முகவர் நிலையத்தின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனக் கையிருப்பு நூறு கோடி விசேட பணம் பெறும் உரிமைகள் (விசேட பணம் பெறும் உரிமைகள் 10,000,000,000) ஆதல் வேண்டும். மூலதனக் கையிருப்பு, ஒவ்வொன்றும் 10,000 விசேட பணம் பெறும் உரிமைகளின் சமப் பெறுமதியைக் கொண்ட 100,000 பங்குகளாகப் பிரிக்கப்படுதல் வேண்டும்; இது, உறுப்பினர்களினால் ஒப்பப் பணமளிக்கப்படுவதற்குக் கிடைக்கக் கூடியதாகவிருத்தல் வேண்டும். மூலதனக் கையிருப்புத் தொடர்பில் உறுப்பினர்களின் எல்லாக் கொடுப்பனவுக் கடப்பாடுகளும், 1981, சனவரி 1 முதல் 1985 யூன் 30 வரையிலான காலப் பகுதிக்கு ஐக்கிய நாடுகள் டொலர்களின்படி விசேட பணம் பெறும் உரிமைகளின் சராசரிப் பெறுமதியின் அடிப்படையில் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும்; அத்தகைய பெறுமதி விசேட பணம் பெறும் உரிமை ஒன்றுக்கு 1.082 ஐக்கிய நாடுகள் டொலர்களாகவிருக்கும்.

(ஆ) மூலதனக் கையிருப்பானது, புதிய ஓர் உறுப்பினர் சேர்த்துக் கொள்ளப்பட்டதன்மேல், அப்போது அதிகாரமளிக்கப்பட்ட பங்குகள் 6 ஆம் உறுப்புரையினைப் பின்பற்றி அத்தகைய உறுப்பினரால் ஒப்பப் பணமளிக்கப்படவுள்ள பங்குகளை ஏற்பாடு செய்வதற்குப் போதாதனவாகவிருக்கும் அளவுக்கு அதிகரித்தல் வேண்டும்.

(இ) பேரவை, விசேட பெரும்பான்மை மூலம், முகவர் நிலையத்தின் மூலதனக் கையிருப்பை எந்நேரத்திலும் அதிகரிக்கலாம்.

### உறுப்புரை 6—பங்குகளை ஒப்பப்பணமளித்தல்

முகவர் நிலையத்தின் ஒவ்வோர் ஆரம்ப உறுப்பினரும், இதற்கான அ என்னும் அட்டவணையில் அதன் பெயருக்கெதிரே எடுத்துக் கூறப்பட்ட மூலதனக் கையிருப்பினது பங்குகளின் எண்ணிக்கைக்குச் சம பெறுமதியில் ஒப்பப் பணமளித்தல் வேண்டும். வேறு ஒவ்வோர் உறுப்பினரும், பேரவையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது, ஆனால் எச்சந்தர்ப்பத்திலும் சமப் பெறுமதிக்குக் குறைந்த ஒரு வழங்கு விலையிலல்லாது, மூலதனக் கையிருப்பினது அத்தகைய எண்ணிக்கையினவான பங்குகளுக்கு ஒப்பப் பணமளித்த

லாகாது. உறுப்பினரெவரும் ஐம்பதுக்குக் குறைவான பங்குகளுக்கு ஒப்பப்பண மளித்தலாகாது. அதிகாரமளிக்கப்பட்ட மூலதனக் கையிருப்பின் மேலதிகப் பங்கு களுக்கு உறுப்பினர்கள் எவ்விதிகளின்மூலம் ஒப்பப் பணமளிக்கலாமோ அவ்விதி களைப் பேரவை விதித்துரைக்கலாம்.

உறுப்புரை 7—ஒப்பப்பணமளிக்கப்பட்ட மூலதனத்தின் பிரிவும் அழைப்புக்களும்

ஒவ்வோர் உறுப்பினரதும் தொடக்க ஒப்பப்பணம் பின்வருமாறு செலுத்தப் படுதல் வேண்டும்:—

(i) அத்தகைய உறுப்பினர் தொடர்பில் இச்சமவாயம் வலுவுக்கு வருகின்ற தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களினுள், ஒவ்வொரு பங்கினதும் விலையின் பத்து சதவீதம் 8 ஆம் உறுப்புரையின் (அ) என்னும் பிரிவில் விதிக்கப்பட்டவாறு காசாகச் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், முகவர் நிலையத்தின் கடப்பாடுகளை ஈடுசெய்யும் முகமாகச் சபையின் முடிபொன்றினைப் பின்பற்றிக் காசாக்கப்பட வேண்டிய, கைமாற்றத் தகாத, வட்டி ஈட்டாத வாக்குறுதிப் பத்திரங்கள் அல்லது அதே போன்ற கடப்பாடுகள் என்ற வகையாக மேலதிகப் பத்துச் சதவீதம் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(ii) எஞ்சிய தொகை, அதன் கடப்பாடுகளை ஈடுசெய்வதற்குத் தேவைப் படும்போது முகவர் நிலையத்தினால் அழைக்கப்படுவதற்கு அமைந்த தாதல் வேண்டும்.

உறுப்புரை 8—பங்குகளின் ஒப்பப்பணத்தைக் கொடுப்பனவு செய்தல்

(அ) ஒப்பப்பணங்களின் கொடுப்பனவுகள் கட்டற்ற முறையில் பயன்படத் தக்கு நாணயங்களில் செய்யப்படுதல் வேண்டும்; ஆயின், அபிவிருத்தியடைந்து வருகின்ற உறுப்பு நாடுகளினாற் செய்யப்படும் கொடுப்பனவுகள் உறுப்புரை 7 (1) இன் கீழ்ச் செலுத்தப்படற் பாலனவான அவற்றின் ஒப்பப் பணங்களின் செலுத்தப்பட்ட காசுப் பகுதியின் இருபத்தைந்து சதவீதம் வரை அவற்றின் சொந்த நாணயங்களில் செய்யப்படலாம்.

(ஆ) செலுத்தப்படாத ஒப்பப் பணங்களின் எப்பாகத்தின் மீதான அழைப் புக்களும் எல்லாப் பங்குகளின் மீதும் ஒரு சீராகவிருத்தல் வேண்டும்.

(இ) அழைப்பொன்றின்மீது முகவர் நிலையத்தினால் பெறப்பட்ட தொகை அவ்வழைப்பை அவசியமாக்கியுள்ள கடப்பாடுகளை ஈடுசெய்வதற்குப் போதாததாக விருப்பின், முகவர் நிலையமானது, அதனால் பெறப்படும் கூட்டு மொத்தத் தொகை அத்தகைய கடப்பாடுகளை ஈடுசெய்வதற்குப் போதுமானதாகவிருக்கும் வரை செலுத்தப்படாத ஒப்பப் பணங்களின்மீது மேலும் தொடர்ச்சியான அழைப்புக் களைச் செய்யலாம்.

(ஈ) பங்குகளின் மீதான பொறுப்பு வழங்குவிலையின் செலுத்தப்படாத பகுதிக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

*உறுப்புரை 9—நாணயங்களின் பெறுமதியை மதிப்பிடுதல்*

ஒரு நாணயத்தின் பெறுமதியை இன்னொன்றின் பெறுமதியின்படி தீர்மானிப்பது இச்சமவாயத்தின் நோக்கங்களுக்காக அவசியமாகவுள்ள போதில் எல்லாம், அத்தகைய பெறுமதி, சர்வதேச பண நிதியத்தின் கலந்தாலோசனையின் பின்னர், முகவர் நிலையத்தினால் நியாயமான முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*உறுப்புரை 10—மீளளிப்புக்கள்*

(அ) முகவர் நிலையமானது, செயல்முறைக்குகந்தவரை விரைவாக, ஒப்பப் பணமளிக்கப்பட்ட மூலதனத்தின் மீதான அழைப்புக்களின் மீது செய்யப்பட்ட தொகைகளை—

(i) உத்தரவாதமொன்றிலிருந்து அல்லது மீள்காப்புறுதி ஒப்பந்தமொன்றிலிருந்து விளையும் உரிமைக் கோரிக்கையொன்றைச் செலுத்துவதற்கு அழைப்பானது செய்யப்பட்டிருப்பினும் செய்யப்பட்ட அளவுக்கும், அதன் பின்னர் முகவர் நிலையம் அதன் கொடுப்பனவை, முழுமையாக அல்லது பகுதியளவில் கட்டற்றமுறையில் பயன்படத்தகு நாணயமொன்றில் அறவிட்டிருப்பினும் அறவிட்ட அளவுக்கும்; அல்லது

(ii) அழைப்பானது, உறுப்பினரொருவரினால் செய்யப்படும் கொடுப்பனவில் தவறுகையொன்று புரியப்பட்டமை காரணமாகச் செய்யப்பட்டிருப்பினும் செய்யப்பட்ட அளவுக்கும் அதன் பின்னர் அத்தகைய உறுப்பினர் முழுமையாக அல்லது பகுதியளவில் அத்தகைய தவறுகையை ஈடுசெய்திருப்பினும் ஈடுசெய்த அளவுக்கும்; அல்லது

(iii) பேரவை, விசேட பெரும்பான்மை மூலம், முகவர் நிலையத்தின் நிதி நிலைமை முகவர் நிலையத்தின் வருவாய்களிலிருந்து அத்தகைய தொகைகள் எல்லாம் அல்லது அவற்றின் பாகம் திருப்பிக் கொடுக்கப்படுவதை அனுமதிக்கின்றதெனத் தீர்மானித்திருப்பினும் தீர்மானிக்கும் அளவுக்கும்,

உறுப்பினர்களுக்குத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

(ஆ) இவ்வுறுப்புரையின் கீழ் உறுப்பினரொருவருக்குச் செய்யப்பட்ட மீளளிப்பு எதுவும், அத்தகைய மீளளிப்புக்கு முன்னர் செய்யப்பட்ட அழைப்புகளைப் பின்பற்றிச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகைக்கு அவ்வுறுப்பினரினால் செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் விகிதாசாரத்தில் கட்டற்றமுறையில் பயன்படத்தகு நாணயத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(இ) இவ்வுறுப்புரையின் கீழ் உறுப்பினரொருவருக்கு மீளளிக்கப்பட்ட தொகைகளின் சமத்தொகை, உறுப்புரை 7 (ii) இன் கீழ் அவ்வுறுப்பினரின் அழைக்கத்தகு மூலதனக் கடப்பாடுகளின் பாகமாதல் வேண்டும்.

## அத்தியாயம் III

## தொழிற்பாடுகள்

*உறுப்புரை 11 -காப்புறுதி செய்யப்பட்ட ஆபத்துக்கள்*

*(அ)* கீழே *(ஆ)*, *(இ)* என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் வகையினதான ஆபத்து ஒன்றிலிருந்து அல்லது அதிகமானவற்றிலிருந்து விளையும் ஒரு நட்டத்துக்கெதிராக முகவர் நிலையம் தகவுடைய முதலீடுகளுக்கு உத்தரவாத மளிக்கலாம்:—

(i) நாணயக் கைமாற்று

ஓம்பு நாட்டுக்கு வெளியே அதன் நாணயத்தைக் கட்டற்ற முறையில் பயன்படத்தகு நாணயமாக அல்லது உத்தரவாதம் வைத்திருப்பவரினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய இன்னொரு நாணயமாகக் கைமாற்றுவ வதன்மீது, அத்தகைய கைமாற்றத்துக்காக அத்தகைய வைத்திருப்ப வரினால் செய்யப்படும் விணண்ப்பமொன்றின்மீது நியாயமானவொரு காலப்பகுதிக்குள் செயலாற்றுவதற்கு ஓம்பு அரசாங்கம் தவறியமை உட்பட ஓம்பு அரசாங்கத்துக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான மட்டுப் பாடுகளின் ஏதேனும் அறிமுகம்;

(ii) உடைமை கவர்தலும் அதே போன்ற வழிவகைகளும்

அரசாங்கங்கள் தமது ஆள்புலங்களில் பொருளாதாரச் செயற்பாட்டை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துக்காக வழமையாக எடுக்கின்ற பொதுவான ஏற்புடைமையுள்ள ஓரங்காட்டுதலை உட்படுத்தாத வழிவகைகள் புற நீங்கலாக, உத்தரவாதம் வைத்திருப்பவர் தமது முதலீட்டினது சொத் துவத்தின் அல்லது கட்டுப்பாட்டின், அல்லது தமது முதலீட்டிலிருந்து பெறக்கூடிய ஒரு கணிசமான அளவு நன்மையின் உத்தரவாதமொன்றை அவரிடமிருந்து பறிக்கும் பயனுடையதும், ஓம்பு அரசாங்கத்துக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதுமான ஏதேனும் சட்டமாக்கல் நடவடிக்கை அல்லது நிருவாக நடவடிக்கை அல்லது விட்டுவிடுகை;

(iii) ஒப்பந்த முறிவு

*(அ)* உத்தரவாதம் வைத்திருப்பவர் மறுதலிப்பு அல்லது முறிவு பற்றிய உரிமைக் கோரிக்கையைத் தீர்மானிப்பதற்கு ஒரு நீதிமுறை அல்லது நடுத்தீர்ப்புசார் மன்று ஒன்றை நாடுவதற்கு முடியாதவரா யிருக்கும்போது, அல்லது *(ஆ)* அத்தகைய மன்றினால் எடுக்கப்படும் முடிவொன்று, முகவர் நிலையத்தின் ஒழுங்குவிதிகளைப் பின்பற்றி உத்தர வாத ஒப்பந்தங்களில் விதித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய நியாயமான காலப்பகுதியினுள் அத்தகைய மன்றினால் அளிக்கப்படாத போது, அல்லது *(இ)* அத்தகைய முடிபொன்று வலுவுக்கிடப்பட முடியாதபோது ஓம்பு அரசாங்கத்தினால் உத்தரவாதம் வைத்திருப் பவருடனான ஒப்பந்த மொன்றின் ஏதேனும் மறுதலிப்பு அல்லது முறிவு; அத்துடன்

(iv) போரும் குடியியற் குழப்பமும்

66 ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு இச் சமவாயம் ஓம்பு நாட்டின் எந்த ஆள்புலத்தில் ஏற்புடையதாதல் வேண்டுமோ அந்த ஆள்புலம் எதிலும் ஏதேனும் இராணுவ நடவடிக்கை அல்லது குடியியற் குழப்பம்.

(ஆ) முதலீட்டாளரினதும் ஓம்பு நாட்டினதும் கூட்டு விண்ணப்பத்தின் மேல், சபையானது விசேட பெரும்பான்மையின் மூலம் மேலே பிரிவு (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட தவிர, (ஆனால் எவ்விடயத்திலும் நாணயத்தின் மதிப்புக் குறைப்பு அல்லது பெறுமானத் தேய்வு ஆபத்துக்கல்ல) குறித்த வர்த்தகம் சாரா ஆபத்துக் களை இவ்வுறுப்புரையின் கீழ் காப்புறுதி செய்வதற்கான நீடிப்பை அங்கீகரிக்கலாம்.

(இ) பின்வருவனவற்றிலிருந்து விளையும் நட்டங்கள் காப்புறுதி செய்யப்படுத லாகாது—

(i) உத்தரவாதம் வைத்திருப்பவர் எந்த ஓம்பு அரசாங்க நடவடிக்கைக்கு அல்லது விட்டுவிடுகைக்கு உடன்பட்டுள்ளாரோ அல்லது பொறுப்பாக விருந்துள்ளாரோ அந்த ஏதேனும் நடவடிக்கை அல்லது விட்டுவிடுகை; அத்துடன்

(ii) உத்தரவாத ஒப்பந்தம் முடிவுறுமுன்னர் நிகழும் ஏதேனும் ஓம்பு அரசாங்க நடவடிக்கை அல்லது விட்டுவிடுகை அல்லது வேறேதேனும் சம்பவம்.

உறுப்புரை 12—தகவுடைய முதலீடுகள்

(அ) தகவுடைய முதலீடுகள் சம்பந்தப்பட்ட தொழில் முயற்சியில் ஒப்புரவை வைத்திருப்போரினுல் செய்யப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட இடைக் கால அல்லது நீண்டகாலக் கடன்கள் உட்பட, ஒப்புரவு வட்டிகளையும் சபையினுல் தீர்மானிக்கப்படக் கூடியவாறுன அத்தகைய வகையினதான நேரடி முதலீட்டை யும் உள்ளடக்குதல் வேண்டும்.

(ஆ) சபையானது, விசேட பெரும்பான்மை மூலம், வேறேதேனும் இடைக் கால அல்லது நீண்டகால வகையினதான முதலீட்டுக்குத் தகவுடைமையை நீடிக்கலாம், ஆயின், மேலே பிரிவு (அ) வில் கூறப்பட்டவை தவிர்ந்த கடன்கள் முகவர் நிலையத்தினுல் காப்புறுதி செய்யப்பட்ட அல்லது காப்புறுதி செய்யப்படக் குறித்த முதலீடொன்றுக்கு அவை தொடர்புபட்டிருப்பின் மட்டுமே தகவுடையன வாகவிருக்கலாம்.

(இ) உத்தரவாதங்கள், செயல்படுத்தப்படும் முதலீடுகளுக்கு மட்டுப்படுத்தப் படுதல் வேண்டும்; முகவர் நிலையத்தினுல் உத்தரவாதத்துக்கான விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டதனை அடுத்துத் தொடங்கும் அத்தகைய முதலீடுகள் பின்வரு வனவற்றை உள்ளடக்கலாம்:—

(i) ஏலவேயுள்ள முதலீடொன்றை நவீனப்படுத்துவதற்கு, விசாரிப்பதற்கு, அல்லது அபிவிருத்தி செய்வதற்குச் செய்யப்பட்ட அந்நியச் செலா வணியின் ஏதேனும் கைமாற்றம்; அத்துடன்

(ii) ஓம்பு நாட்டுக்கு வெளியே வேறு வகையாகக் கைமாற்றப்படக் கூடிய ஏலவேயுள்ள முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட உழைப்புகளின் பயன் பாடு.

(ஈ) முதலீடொன்றுக்கு உத்தரவாதமளிக்கையில், முகவர் நிலையம் பின்வருவன பற்றித் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்:—

(i) முதலீட்டின் பொருளாதார நிறைநலமும் ஓம்பு நாட்டின் அபிவிருத்திக்கு அதன் பங்களிப்பும்;

(ii) முதலீடானது ஓம்பு நாட்டின் சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுகுதல்;

(iii) ஓம்பு நாட்டின் வெளிப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் குறிக்கோள்களுடனும் முன்னுரிமைகளுடனும் முதலீடானது ஒத்திருத்தல்; அத்துடன்

(iv) முதலீட்டுக்கு நியாயமான, ஒப்புரவான பயன்பாடும் சட்டப் பாதுகாப்பும் கிடைக்கக் கூடியதாகவிருத்தல் உட்பட, ஓம்பு நாட்டில் முதலீட்டு நிலைமைகள்.

உறுப்புரை 13—தகவுடைய முதலீட்டாளர்கள்

(அ) எவரேனும் இயற்கை ஆளும் எவரேனும் சட்டநெறி ஆளும் முகவர் நிலையத்தின் உத்தரவாதத்தைப் பெறுவதற்குத் தகவுடையவராகவிருக்கலாம்; ஆயின்—

(i) அத்தகைய இயற்கை ஆள், ஓம்பு நாடு அல்லாத ஓர் உறுப்பினரின் நாட்டவராகவிருத்தல் வேண்டும்;

(ii) அத்தகைய சட்டநெறி ஆள் கூட்டிணைக்கப்பட்டு அதன் பிரதான தொழிலிடத்தை ஓர் உறுப்பினரில் வைத்திருத்தல் வேண்டும் அல்லது அதன் பெரும்பான்மை மூலதனம் ஓர் உறுப்பினரினால் அல்லது உறுப்பினர்களினால் அல்லது அதன் நாட்டவர்களினால் சொந்தமாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்; ஆயின், மேலேயுள்ள எவ்விடயங்களிலும் அத்தகைய உறுப்பினர் ஓம்பு நாடாக இருத்தலாகாது; அத்துடன்

(iii) அத்தகைய சட்டநெறி ஆள், அது தனிப்பட்ட முறையில் சொந்தமாக வைத்திருக்கப்படினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, வர்த்தக அடிப்படையொன்றின்மீது தொழிற்படுதல் வேண்டும்.

(ஆ) முதலீட்டாளருக்கு ஒன்றுக்கதிகமான நாட்டினங்கள் இருக்கும் சந்தர்ப்பத்தில், மேலே பிரிவு (அ) வின் நோக்கங்களுக்காக, உறுப்பினரொருவரின் நாட்டினம் உறுப்பினர் அல்லாதவரொருவரின் நாட்டினத்திலும் மேலோங்கி நிற்றல் வேண்டுமென்பதுடன், ஓம்பு நாட்டின் நாட்டினம் வேறெவரேனும் உறுப்பினரின் நாட்டினத்திலும் மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

(இ) முதலீட்டாளரினதும் ஓம்பு நாட்டினதும் கூட்டு விண்ணப்பத்தின் மேல், சபையானது, விசேட பெரும்பான்மை மூலம், ஓம்பு நாட்டின் நாட்டவர் ஒருவராகவுள்ள இயற்கை ஆளொருவருக்கு அல்லது ஓம்பு நாட்டின் கூட்டிணைக்கப்பட்ட சட்டநெறி ஆளொருவருக்கு அல்லது எந்த ஓம்பு நாட்டின் பெரும்பான்மை மூலதனம் அதன் நாட்டவர்களினால் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றதோ அந்த ஓம்பு நாட்டிற்குத் தகவுடைமையை நீடிக்கலாம்; ஆயின் முதலீடு செய்யப்பட்ட சொத்துக்கள் ஓம்பு நாட்டிற்கு வெளியேயிருந்து கைமாற்றப்படுதல் வேண்டும்.

உறுப்புரை 14—தகவுடைய ஓம்பு நாடுகள்

முதலீடுகள் அபிவிருத்தியடைந்து வருகின்ற உறுப்பு நாடொன்றின் ஆள்புலத்தில் செய்யப்படவிருப்பின் மட்டுமே அவற்றுக்கு இவ்வத்தியாயத்தின்கீழ் உத்தரவாதமளிக்கப்படுதல் வேண்டும்.

உறுப்புரை 15—ஓம்பு நாட்டு அங்கீகாரம்

காப்புறுதி செய்யப்படுவதற்குப் பெயர் குறிக்கப்பட்ட ஆபத்துக்களுக்கெதிராக முகவர் நிலையத்தினால் செய்யப்படும் உத்தரவாதத்தின் வழங்குகையை ஓம்பு நாடு அங்கீகரிக்கு முன்னர் முகவர் நிலையமானது ஏதேனும் உத்தரவாத ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளுதலாகாது.

உறுப்புரை 16—நியதிகளும் நிபந்தனைகளும்

உத்தரவாத ஒப்பந்தம் ஒவ்வொன்றினதும் நியதிகளும் நிபந்தனைகளும், சபை வழங்கக்கூடிய அத்தகைய விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைய, முகவர் நிலையத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; ஆயின், முகவர் நிலையமானது, உத்தரவாதமளிக்கப்பட்ட முதலீட்டின் மொத்த நட்டத்துக்குக் காப்புறுதியளித்தலாகாது. உத்தரவாத ஒப்பந்தங்கள் சபையின் பணிப்பின் கீழ்த் தலைவரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

உறுப்புரை 17—உரிமைக் கோரிக்கைகளைக் கொடுப்பனவு செய்தல்

தலைவர், உத்தரவாத ஒப்பந்தத்துக்கும் சபை நிறைவேற்றக்கூடிய அத்தகைய கொள்கைகளுக்கும் இணங்க, சபையினது பணிப்பின் கீழ் உத்தரவாதமொன்றை வைத்திருக்குமொருவருக்கு உரிமைக் கோரிக்கைகளைக் கொடுப்பனவு செய்தல் பற்றி முடிவு செய்தல் வேண்டும். முகவர் நிலையத்தினால் கொடுப்பனவு ஒன்று செய்யப்படு முன்னர், அவ்வச்சூழ்நிலைகளுக்குத் தோதானவையாகக் கூடிய அத்தகைய நிருவாக முறையான பரிகாரங்களை உத்தரவாதம் வைத்திருப்பவர்கள் நாட வேண்டுமென உத்தரவாத ஒப்பந்தங்கள் தேவைப்படுத்துதல் வேண்டும். ஆயின், ஓம்பு நாட்டினது சட்டங்களின் கீழ் அவர்களுக்கு இவை தயாராகக் கிடைக்குமாயின், மேற்கூறியவாறு தேவைப்படுத்தமுடியும். உரிமைக் கோரிக்கைகளுக்கு இடமளிக்கும் நிகழ்ச்சிகள் சம்பவித்த காலத்துக்கும் உரிமைக் கோரிக்கைகள் கொடுப்பனவு செய்யப்படும் காலத்துக்கும் இடையே நியாயமான குறித்த காலப் பகுதிகள் கழித்திருக்க வேண்டுமென அத்தகைய ஒப்பந்தங்கள் தேவைப்படுத்தலாம்.

உறுப்புரை 18—கடன் பற்றுரிமை மாற்றீடு

(அ) உத்தரவாதம் வைத்திருக்கும் ஒருவருக்கு நட்டஈடு கொடுப்பதன் மீது அல்லது கொடுக்க உடன்படுவதன்மீது, உத்தரவாதமொன்றை வைத்திருப்பவர் ஓம்பு நாட்டுக்கெதிராகவும் ஏனைய கடன் பெற்றவர்களுக்கெதிராகவும் உத்தரவாத மளிக்கப்பட்ட முதலீடு தொடர்பாக எத்தகைய உரிமைகளை அல்லது உரிமைக் கோரிக்கைகளைக் கொண்டிருந்திருப்பாரோ அத்தகைய உரிமைகள் அல்லது உரிமைக்கோரிக்கைகள் முகவர் நிலையத்துக்கு, கடன் பற்றுரிமை மாற்றீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். உத்தரவாத ஒப்பந்தம் அத்தகைய கடன் பற்றுரிமைமாற்றீட்டுக்கான நியதி, நிபந்தனைகளை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(ஆ) மேலே(அ) என்னும் பிரிவைப் பின்பற்றி முகவர் நிலையத்துக்குள்ள உரிமைகள் சகல உறுப்பினர்களாலும் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(இ) மேலே (அ) என்னும் பிரிவைப் பின்பற்றிக் கடன் பற்றுரிமை மாற்றி யிட நாட்டு நாணயத்திலான பணத்தொகைகள், உத்தரவாதத்தை வைத்திருப் பவரின் கைகளில் அத்தகைய நிதிகள் எத்தகைய பரிகரிப்புக்கு உள்ளாகுமோ அதையொத்த சாதகமான பயன்பாடும், மாற்றும் பரிகரிப்பும், ஓம்பு நாட்டினுல் அளிக்கப்படுதல் வேண்டும். எவ்விடயத்திலும், அத்தகைய தொகைகள் முகவர் நிலையத்தின் நிருவாகச் செலவினங்களையும் ஏனைய செலவுகளையும் கொடுப்பதற் காக அதனுல் பயன்படுத்தப்படலாம். ஏனைய நாணயங்கள் இலகுவாக அவை பயன்படாத அளவுக்கு அவற்றின் வேறு பயன்பாடுகள் பற்றி முகவர் நிலையம் ஓம்பு நாடுகளுடன் உடன்பாட்டொழுங்குகளைச் செய்து கொள்ளவும் முற்படலாம்.

உறுப்புரை 19—தேசிய மற்றும் பிராந்திய அமைப்புகளுடனுன உறவுநிலை

முறையே அவரவரது சேவைகளின் திறமையையும் வெளிநாட்டு மூலதனத் தின் அதிகரித்த வரவுகள் தொடர்பிலான அவர்களின் பங்களிப்பையும் மேலும் அதிகரிக்கச் செய்யும் கருத்துடன் முகவர் நிலையமானது உறுப்பினர்களின் தேசிய அமைப்புக்களுடனும் முகவர் நிலையத்தின் செயற்பாடுகளை ஒத்த செயற்பாடுகளைக் கொண்டு நடாத்தும் உறுப்பினர்களால் அதன் மூலதனத்தில் பெருமளவு வைத் திருக்கப்படும் பிராந்திய அமைப்புகளுடனும் கூட்டாகச் செயற்படுதல் வேண்டு மென்பதுடன் அவற்றின் செயற்பாடுகளை முழுமையாக்க முயலுதலும் வேண்டும். இதனை எய்தும் முகமாக, முகவர் நிலையமானது குறிப்பாக மீள் காப்புறுதி மற்றும் கூட்டுக் காப்புறுதி முறைமைகள் உட்பட, அத்தகைய கூட்டுச் செயற்பாட் டின் விவரங்கள் பற்றி அத்தகைய அமைப்புக்களுடன் உடன்பாட்டொழுங்குகளைச் செய்து கொள்ளலாம்.

உறுப்புரை 20—தேசிய மற்றும் பிராந்திய அமைப்புக்களின் மீள் காப்புறுதி

(அ) முகவர் நிலையமானது அவர் உறுப்பினர் ஒருவரால் அல்லது அதன் முகவர் நிலையத்தினுல் அல்லது மூலதனத்தின் பெரும்பான்மையானது உறுப்பினர் களால் சொந்தமாக வைத்திருக்கப்படும் பிராந்திய முதலீட்டு உத்தரவாத முகவர் நிலையத்தினுல் பொறுப்பேற்கப்பட்ட வர்த்தகம் சாரா ஆபத்தொன்றிலிருந்து அல்லது பல ஆபத்துக்களிலிருந்து விளையும் நட்டத்துக்கெதிராகக் குறித்தவொரு முதலீடு தொடர்பாக மீள் காப்புறுதி வழங்கலாம். சபையானது, சிறப்புப் பெரும்பான்மை மூலம் மீள் காப்புறுதி ஒப்பந்தங்கள் தொடர்பாக முகவர்

நிலையத்தினால் பொறுப்பேற்கப்படக் கூடிய எதிர்பாராப் பொறுப்பின் ஆகக்கூடிய தொகைகளைக் காலத்துக்குக் காலம் விதித்துரைத்தல் வேண்டும். முகவர் நிலையத்தினால் மீள் காப்புறுதிக்கான விண்ணப்பம் பெற்றுக் கொள்ளப்பட முன்னர் பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படப் பூரணமாக்கியுள்ளனவான குறிப்பான முதலீடுகள் தொடர்பில் ஆகக்கூடிய தொகையானது, இவ்வத்தியாயத்தின் கீழ் முகவர் நிலையத்தின் கூட்டு மொத்த எதிர்பாராப் பொறுப்பின் பத்து வீதமாக ஆரம்பத்தில் குறிக்கப்படுதல் வேண்டும். உறுப்புரைகள் 11 முதல் 14 வரையுள்ள உறுப்புரைகளில் குறித்துரைக்கப்படும் தகைமை நிபந்தனைகள், மீள் காப்புறுதிக்கான விண்ணப்பத்தைத் தொடர்ந்து பின்னர் மீள் காப்புறுதி செய்யப்பட்ட முதலீடுகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டியதில்லை என்பதில் தவிர மீள் காப்புறுதிச் செயற்பாடுகளுக்கு ஏற்புடையனவாகும்.

(ஆ) முகவர் நிலையத்துக்கும் மீள் காப்புறுதி செய்யப்பட்ட உறுப்பினருக்கும் அல்லது முகவர் நிலையத்துக்கும் இடையேயுள்ள பரஸ்பர உரிமைகளும் கடப்பாடுகளும், சபை வழங்க வேண்டியவாறான அத்தகைய விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் அமைவாக, மீள் காப்புறுதி ஒப்பந்தங்களில் கூறப்படுதல் வேண்டும். முகவர் நிலையமானது அது பொறுப்பேற்றும் ஆபத்துக்கேற்ற கட்டுப்பணங்களைப் பெறுவதோடு அபிவிருத்தியடைந்துவரும் உறுப்பு நாடுகளில் புதிய முதலீடுகளை ஊக்குவிக்கும் பணியில் மீள் காப்புறுதி செய்யப்பட்ட அமைப்பு தோதாக ஈடுபடுவதனை உறுதிசெய்து, ஆபத்துக்களைக் குறைக்கும் கருத்துடன், முகவர் நிலையத்தினால் மீள் காப்புறுதிக்கான விண்ணப்பம் பெறப்படு முன்னர் செய்யப்பட்ட முதலீடொன்றை மேலும் மீள் காப்புறுதிக்கான ஒப்பந்தம் ஒவ்வொன்றையும் சபை அங்கீகரித்தல் வேண்டும்.

(இ) முகவர் நிலையமானது முதனிலை உத்தரவாதமளிப்பவராக அது இருந்திருந்தால் முகவர் நிலையம் கொண்டிருக்கக்கூடிய கடன் பற்றுரிமை மாற்றீட்டு மற்றும் நடுத்தீர்ப்பு உரிமைகளை அது அல்லது மீள் காப்புறுதி செய்யப்பட்ட அமைப்பு கொண்டிருக்கிறது என்பதை, இயலுமானவளவுக்கு உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். மீள் காப்புறுதி நியதி, நிபந்தனைகள், முகவர் நிலையத்தினால் கொடுப்பனவு செய்யப்படு முன்னர் 17 ஆம் உறுப்புரைக்கிணங்க நிருவாக முறைப் பரிகாரங்கள் நாடப்படவேண்டுமென்பதைத் தேவைப்படுத்துதல் வேண்டும். ஓம்பு நாட்டைப் பொறுத்தவரை முகவர் நிலையத்தினால் செய்யப்பட்ட மீள் காப்புறுதி அதனால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் மாத்திரமே கடன் பற்றுரிமை மாற்றீடு பயனுறுதியுடையதாக இருத்தல் வேண்டும். மீள் காப்புறுதி செய்யப்பட்ட முதலீடு தொடர்பிலான உரிமைகளை அல்லது உரிமைக் கோரிக்கைகளை மீள் காப்புறுதி செய்யப்பட்டவர் முறையான கவனத்துடன் பின்பற்றுதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தும் ஏற்பாடுகளை முகவர் நிலையம் மீள் காப்புறுதி ஒப்பந்தத்தில் உள்ளடக்குதல் வேண்டும்.

### உறுப்புரை 21—தனியார் காப்புறுதிகளுடனும் மீள் காப்புறுதியாளர்களுடனும் கூட்டாகச் செயற்படுதல்

(அ) முகவர் நிலையமானது, அதன் சொந்தச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காகவும் அபிவிருத்தியடைந்துவரும் உறுப்புநாடுகளில் வர்த்தகம் சாரா ஆபத்துக்களை மேவுவதற்கு ஏற்பாடு செய்வதற்காகவும் அத்தகைய காப்புறுதியாளர்களை ஊக்குவிப்பதற்காகவும் முகவர் நிலையத்தினால் பிரயோகிக்கப்படுவனவற்றை ஒத்த அதே நிபந்தனைகளின் மீது உறுப்பு நாடுகளிலுள்ள தனியார்

காப்புறுதியாளர்களுடன் உடன்பாட்டொழுங்குகளைச் செய்து கொள்ளலாம். அத்தகைய உடன்பாட்டொழுங்குகள் 20 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழும் நடைமுறைகளின் கீழும் முகவர் நிலையத்தினால் மீள் காப்புறுதி ஏற்பாடு செய்யப்படுவதனை உள்ளடக்கலாம்.

(ஆ) முகவர் நிலையமானது அதனால் வழங்கப்பட்ட ஏதேனும் உத்தரவாதத்தை அல்லது எவையேனும் உத்தரவாதங்களை, முழுமையாகவோ பகுதியளவிலோ ஏதேனும் தோதான மீள் காப்புறுதி அமைப்புடன் மீள் காப்புறுதி செய்து கொள்ளலாம்.

(இ) முகவர் நிலையமானது தனியார் காப்புறுதியாளர்களிடமிருந்தும் மீள் காப்புறுதியாளர்களிடமிருந்தும் நியாயமான நியதிகளின் மீதான ஒப்பீட்டுக் காப்புறுதி வசதி கிடைக்காத முதலீடுகளைக் குறிப்பாக உத்தரவாதமளிக்க நாட்டங் காட்டும்.

உறுப்புரை 22—உத்தரவாத எல்லைகள்

(அ) சிறப்புப் பெரும்பான்மை மூலம் பேரவையினால் வேறு விதமாகத் தீர்மானிக்கப்பட்டாலொழிய, இந்த அத்தியாயத்தின் கீழ் முகவர் நிலையத்தினால் பொறுப்பேற்கப்படக்கூடிய எதிர்பாராப் பொறுப்புக்களின் கூட்டு மொத்தத் தொகை, சேதமுறு ஒப்பப்பணஞ் செலுத்தப்பட்ட முகவர் நிலையத்தின் மூலதனமும் அதன் ஒதுக்குகளும் சபை தீர்மானிக்கக் கூடியவாறான அதன் மீள் காப்புறுதி மேவுகையின் அத்தகைய பாகமும் சேர்ந்த தொகையின் நூற்றைம்பது வீதத்தை விஞ்சுதலாகாது. சபையானது காலத்துக்குக் காலம் எதிர்பாராப் பொறுப்புக்களின் கூட்டு மொத்தத் தொகையின் ஆகக்கூடிய எல்லையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமா என்பதைக் கண்டறியும் கருத்துடன், உரிமைக் கோரிக்கைகள், ஆபத்து திருப்பல் அளவு, மீள் காப்புறுதி மேவுகை மற்றும் ஏனைய இயைபான நிகழ்வுகள் என்பவற்றினது அனுபவத்தின் அடிப்படையில் முகவர் நிலையத்தின் ஆபத்து ஒப்பீட்டளவு விவரத்தை மீளாய்வு செய்தல் பேரவையினால் தீர்மானிக்கப்படும் ஆகக்கூடிய தொகை எச்சந்தர்ப்பத்திலும் முகவர் நிலையத்தின் சேதமுறு ஒப்பப் பணஞ் செலுத்தப்படல் மூலதனத்தினதும், அதன் ஒதுக்குகளினதும் தோதானதெனக் கருதப்படக்கூடியவாறான அதன் காப்புறுதி மேவுகையின் அத்தகைய பாகத்தினதும் ஐந்து மடங்கை விஞ்சுதலாகாது.

(ஆ) மேலே (அ) என்னும் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட உத்தரவாதப் பொது எல்லைக்குப் பங்கமின்றி, சபையானது—

(i) ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினரதும் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட எல்லா உத்தரவாதங்கள் தொடர்பாகவும் இந்த அத்தியாயத்தின் கீழ் முகவர் நிலையத்தினால் பொறுப்பேற்கப்படக்கூடிய எதிர்பாராப் பொறுப்பின் ஆகக்கூடிய கூட்டு மொத்தத் தொகைகளை விதித்துரைக்கலாம். அத்தகைய ஆகக்கூடிய தொகைகளைத் தீர்மானிக்கையில் சபையானது முகவர் நிலையத்தின் மூலதனத்தில் அந்தந்த உறுப்பினருக்குள்ள பங்கு பற்றியும் அபிவிருத்தியடைந்துவரும் உறுப்பு நாடுகளில் ஆரம்பமாகும் முதலீடுகள் தொடர்பாக மிகவும் தளர்ந்த வரையறைகளைப் பிரயோகிக்க வேண்டிய அவசியம் பற்றியும் உரிய கவனஞ் செலுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ii) தனிப்பட்ட செயற்றிட்டங்கள், தனிப்பட்ட ஓம்பு நாடுகள் முதலீட்டு அல்லது ஆபத்து வகைகள் போன்ற அத்தகைய ஆபத்து திருப்புதல் காரணிகள் தொடர்பாக முகவர் நிலையத்தினால் பொறுப்பேற்கப்படக் கூடிய எதிர்பாராப் பொறுப்பின் ஆகக்கூடிய கூட்டு மொத்தத் தொகை களை விதித்துரைக்கலாம்.

உறுப்புரை 23—முதலீட்டு ஊக்குவிப்பு

(அ) முகவர் நிலையமானது அபிவிருத்தியடைந்துவரும் உறுப்பு நாடுகளுக்கு வெளிநாட்டு முதலீட்டு வருவாய்ச் சூழலை மேம்படுத்தும் கருத்துடன் அத்தகைய நாடுகளில் முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பாக ஆராய்ச்சியை மேற்கொள்ளு தலும் முதலீட்டு வருவாய்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளைப் பொறுப் பேற்றலும் அது தொடர்பான தகவலைப் பரப்புதலும் வேண்டும். முகவர் நிலையமானது, உறுப்பினர் ஒருவரினது வேண்டுகோளின்மீது அவ்வுறுப்பினரது ஆள்புலத்திலுள்ள முதலீட்டு நிலைமைகளைச் சீர்திருத்துவதற்கான தொழினுட்ப ஆலோசனையையும் உதவியையும் வழங்கலாம். இச் செயற்பாடுகளை நிறைவேற்று கையில், முகவர் நிலையமானது—

(i) உறுப்பு நாடுகளிடையேயுள்ள இயைபான முதலீட்டு உடன்படிக்கை களினால் வழிகாட்டப்படுதல் வேண்டும்;

(ii) அபிவிருத்தியடைந்துவரும் உறுப்பு நாடுகளுக்கு முதலீட்டு வருவாய் தொடர்பாக அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடையும் உறுப்பு நாடுகளில் காணப்படும் தடைகளை அகற்ற முற்பட வேண்டும்; அத்துடன்

(iii) வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்புடன் சம்பந்தப்பட்ட ஏனைய முகவர் நிலையங்களுடனும், குறிப்பாகச் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்துட னும் ஒன்றிணைந்து செயலாற்றுதல் வேண்டும்.

(ஆ) முகவர் நிலையமானது—

(i) முதலீட்டாளர்களுக்கும் ஓம்பு நாடுகளுக்குமிடையே பிணக்குகளை மன மொத்துத் தீர்த்துவைத்தலை ஊக்குவித்தல் வேண்டும்;

(ii) முதலீடு தொடர்பான உடன்படிக்கையொன்றில் மிகவும் விரும்பப்படும் முதலீட்டு உத்தரவாத முகவர் நிலையத்துக்கு அல்லது அரசுக்கு உரிய தாகச் சம்பந்தப்பட்ட உறுப்பினரால் உடன்பட்டுக் கொள்ளப்பட் டதையொத்த—சாதகமான பரிகரிப்பை அதனால் உத்தரவாதமளிக்கப் பட்ட முதலீடு தொடர்பில் முகவர் நிலையத்துக்கு உறுதிப்படுத்தும் உடன்படிக்கைகளை அபிவிருத்தியடையும் உறுப்பு நாடுகளுடன் குறிப் பாக எதிர்கால ஓம்பு நாடுகளுடனும் செய்துகொள்ள முயலுதல் வேண்டும்; அத்தகைய உடன்படிக்கைகள் சபையின் விசேட பெரும் பான்மை மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும்; அத்துடன்

(iii) முதலீடுகளை ஊக்குவித்தல் தொடர்பாகவும் பாதுகாத்தல் தொடர் பாகவும், அதன் உறுப்பினர்களிடையே உடன்படிக்கைகளைச் செய்து கொள்ள ஊக்கமளித்தலும் வசதியளித்தலும் வேண்டும்.

(இ) முகவர் நிலையமானது அபிவிருத்தியடையும் உறுப்பு நாடுகளிடையே முதலீட்டு வருவாய்களை அதிகரிப்பதற்கான முக்கியத்துவம் பற்றி, அதன் ஊக்கு விப்பு முயற்சிகளில், குறிப்பான கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

உறுப்புரை 24—ஆதரவளிக்கப்பட்ட முதலீடுகளின் உத்தரவாதம்

இந்த அத்தியாயத்தின் கீழ் முகவர் நிலையத்தினால் பொறுப்பேற்கப்பட்ட உத்தரவாதச் செயற்பாடுகளுடன் மேலதிகமாக, முகவர் நிலையமானது இச் சமவாயத்துக்கான I வது பின்னிணைப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆதரவாண்மை உடன்பாட்டொழுங்குகளின் கீழ் முதலீடுகளுக்கு உத்தரவாதமளிக்கலாம்.

## அத்தியாயம்—IV

## நிதி ஏற்பாடுகள்

உறுப்புரை 25—நிதி முகாமை

முகவர் நிலையமானது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அதன் நிதிக் கடப்பாடு களைச் சமாளிப்பதற்கு அதற்குள் திறமையைப் பேணும் கருத்துடன் முழு நிறை வான வியாபாரப் பழக்கங்களுக்கிணங்கவும் விவேகமான நிதி முகாமைப் பழக் கங்களுக்கிணங்கவும் அதன் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

உறுப்புரை 26—கட்டுப்பணங்களும் கட்டணங்களும்

முகவர் நிலையமானது ஒவ்வொரு வகை ஆபத்துக்கும் ஏற்புடையதான கட்டுப்பண வீதங்களையும் கட்டணங்களையும், ஏனைய இறுப்பனவுகளையும் தாபித் தலும் அவ்வப்போது மீளாய்வு செய்தலும் வேண்டும்.

உறுப்புரை 27—தேறிய வருவாயின் ஒதுக்கீடு

(அ) பத்தாம் உறுப்புரையின் (அ) (III) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, ஒதுக்குகள் முகவர் நிலையத்தின் ஒப்பப்பணஞ் செலுத்திய மூலதனத் தின் ஐந்து மடங்கை எய்தும் வரை தேறிய வருமானத்தை, முகவர் நிலையம் ஒதுக்குகளுக்கு ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

(ஆ) முகவர் நிலையத்தின் ஒதுக்குகள் மேலே (அ) என்னும் பிரிவில் விதித் துரைக்கப்பட்ட மட்டத்தை எய்திய பின்னர், பேரவையானது, முகவர் நிலையத் தின் தேறிய வருமானம் ஒதுக்குகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படவேண்டுமா என் பதையும் முகவர் நிலையத்தின் உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவேண்டுமா என்பதையும் வேறு விதமாகப் பயன்படுத்தப்படவேண்டுமா என்பதையும் எந்த அளவுக்கு இவை செய்யப்பட வேண்டும் என்பதையும் முடிவு செய்தல் வேண்டும். முகவர் நிலைய உறுப்பினர்களுக்குச் செய்யப்படும் தேறிய வருவாயின் பகிர்ந் தளிப்பு எதுவும் சிறப்புப் பெரும்பான்மை மூலம் செயலாற்றும் பேரவையின் முடிவுக்கிணங்க முகவர் நிலையத்தினது மூலதனத்தில் ஒவ்வோர் உறுப்பினரும் கொண்டுள்ள பங்குக்குச் சமவிகிதமாகச் செய்யப்படுதல் வேண்டும்.

உறுப்புரை 28—வரவு செலவுத் திட்டம்

சபையினுல் அங்கீகரிக்கப்படுவதற்கென முகவர் நிலையத்தின் வரவு செலவுகள் பற்றிய ஆண்டு வரவு செலவுத் திட்டம் ஒன்றைத் தலைவர் தயாரித்தல் வேண்டும்.

உறுப்புரை 29—கணக்குகள்

முகவர் நிலையமானது வருடாந்த அறிக்கையொன்றை வெளியிடுதல் வேண்டும். அதில் அதன் கணக்குக் கூற்றுக்களும் சுயாதீன கணக்காய்வாளர்களினுல் கணக்காய்வு செய்யப்பட்டவாறுன இச்சமவாயத்துக்கான I வது பின்னிணைப்பில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆதரவாண்மை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கணக்குக் கூற்றுக்களும் அடங்கியிருத்தல் வேண்டும். முகவர் நிலையமானது, தோதான இடைவெளிகளில் அதன் நிதி நிலைமை தொடர்பான ஒரு சுருக்கக் கூற்றையும் அதன் செயற்பாடுகளினது விளைவைக் காட்டும் இலாப நட்டக் கூற்றையும் உறுப்பினர்களுக்குச் சுற்றுநிருபமாக அறிவித்தல் வேண்டும்.

## அத்தியாயம்—V

## ஒழுங்கமைப்பும் முகாமையும்

உறுப்புரை 30—முகவர் நிலையத்தின் அமைப்பு

முகவர் நிலையமானது ஆளுநர் பேரவையொன்றையும் பணிப்பாளர் சபையொன்றையும் தலைவர் ஒருவரையும் அது தீர்மானிக்கக் கூடியவாறுன அத்தகைய கடமைகளைப் புரிவதற்குப் பணியாட்டொகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

உறுப்புரை 31—பேரவை

(அ) இந்தச் சமவாயத்தினது நியதிகளின் மூலம் முகவர் நிலையத்தின் வேருேர் அமைப்புக்குக் குறிப்பாக அளிக்கப்பட்டுள்ளவாறுன அத்தகைய தத்துவங்கள் தவிர்ந்த, முகவர் நிலையத்துக்குள்ள சகல தத்துவங்களும் பேரவைக்குரித்தாக்கப்படுதல் வேண்டும். பேரவையானது, பின்வரும் தத்துவங்கள் தவிர்ந்த, அதன் தத்துவங்களுள் எதனையும் நிறைவேற்றுவதற்காகச் சபைக்குக் கையளிக்கலாம்:—

(i) புதிய உறுப்பினர்களைச் சேர்த்தலும் அவர்களைச் சேர்ப்பதற்கான நிபந்தனைகளைத் தீர்மானித்தலும்;

(ii) உறுப்பினர் ஒருவரை இடைநிறுத்துதல்;

(iii) மூலதன அதிகரிப்பு அல்லது குறைப்புப் பற்றித் தீர்மானித்தல்;

(iv) 22 ஆம் உறுப்புரையின் (அ) என்னும் பிரிவினைப் பின்பற்றி எதிர்பாராப் பொறுப்புக்களின் கூட்டு மொத்தத் தொகை எல்லையை அதிகரித்தல்;

(v) 3 ஆம் உறுப்புரையின் (இ) என்னும் பிரிவினைப் பின்பற்றி உறுப்பு நாடொன்றை அபிவிருத்தியடையும் உறுப்பு நாடொன்றெனப் பதவிப் பெயர் குறித்தல்;

(vi) 39 ஆம் உறுப்புரையின் (அ) என்னும் பிரிவைப் பின்பற்றி வாக்களிக்கும் நோக்கங்களுக்காகப் புதிய உறுப்பினர் ஒருவரை வகுதி ஒன்றையோ இரண்டையோ சார்ந்தவரென வகுதிப்படுத்தல் அல்லது இப்போதுள்ள உறுப்பினர் ஒருவரை அதே நோக்கங்களுக்காக மீள்வகுதிப்படுத்தல்;

(vii) பணிப்பாளர்களினதும் அவர்களது மாற்றுக்களினதும் நட்ட ஈட்டைத் தீர்மானித்தல்;

(viii) தொழிற்பாடுகளை நிறுத்தி முகவர் நிலையத்தை முடிவுக்குக் கொண்டு வருதல்;

(ix) முடிவுக்குக் கொண்டு வருவதன்மேல் உறுப்பினர்களுக்குச் சொத்தைப் பகிர்ந்தளித்தல்; அத்துடன்

(x) இந்தச் சமவாயத்தையும் அதன் பின்னிணைப்புக்களையும் அட்டவணைகளையும் திருத்துதல்.

(ஆ) பேரவையானது, ஆளுநர் ஒருவரையும் அது தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் உறுப்பினர் ஒவ்வொருவரினாலும் நியமிக்கப்பட்ட மாற்று ஒருவரையும் கொண்டிருத்தல் வேண்டும். மாற்று எவரும், அவரது முதல்வர் இல்லாதபோது தவிர, வாக்களித்தலாகாது. பேரவையானது, ஆளுநர்களுள் ஒருவரைத் தவிசாளராகத் தெரிவு செய்தல் வேண்டும்.

(இ) பேரவையானது, ஆண்டுப் பொதுக் கூட்டமொன்றையும் சபையினால் அழைக்கப்படும் அல்லது பேரவையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு கூட்டங்களையும் கூட்டுதல் வேண்டும். சபையானது, ஐந்து உறுப்பினர்களினால் அல்லது மொத்த வாக்களிக்கும் வலுவில் இருபத்தைந்து வீதமானவற்றைக் கொண்டிருக்கும் உறுப்பினர்களினால் வேண்டப்படும் போதிலெல்லாம் பேரவையின் கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும்.

உறுப்புரை 32—சபை

(அ) சபையானது, முகவர் நிலையத்தின் பொதுத் தொழிற்பாடுகளுக்குப் பொறுப்புடையதாதல் வேண்டும்; அத்துடன் இப்பொறுப்பை நிறைவேற்றுகையில் இச்சமவாயத்தின் கீழ்த் தேவைப்படும் அல்லது அனுமதிக்கப்படும் எந் நடவடிக்கையையும் எடுத்தல் வேண்டும்.

(ஆ) சபையானது, பன்னிரண்டு பணிப்பாளர்களுக்குக் குறையாதோரைக் கொண்டிருத்தல் வேண்டும். உறுப்பாண்மையில் மாற்றங்கள் பற்றிப் பரிசீலிப்பதற்காகப் பணிப்பாளர்களின் எண்ணிக்கை, பேரவையினால் மாற்றப்படலாம். பணிப்பாளர் இல்லாத போது அல்லது செயலாற்ற இயலாதபோது தமக்குப் பதிலாகச் செயலாற்றுவதற்கான முழுத் தத்துவத்துடன் ஒவ்வொரு பணிப்பாளரும் மாற்று ஒருவரை நியமிக்கலாம். வங்கியின் தலைவர், சபையின் பதவி வழித் தவிசாளராதல் வேண்டும். ஆனால் வாக்குகள் சரிசமமாக இருக்கும்போது அறுதியிடும் வாக்கொன்றைத் தவிர, வாக்கு எதுவும் உடையவராதலாகாது.

(இ) பேரவை, பணிப்பாளர்களின் பதவிக் காலத்தைத் தீர்மானித்தல் வேண்டும். முதலாவது சபை பேரவையினால் அதன் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

(ஈ) தவிசாளர், தமது சொந்த விருப்பத்தின் பேரிலோ அல்லது மூன்று பணிப்பாளர்களின் வேண்டுகோளின் மீதோ சபையின் கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும்.

(உ) தொடர்ச்சியான அமர்வில் பணியாற்றும் வதிவுச் சபையொன்றை முகவர் நிலையம் வைத்திருக்க வேண்டுமெனப் பேரவை முடிவு செய்யும் அத்தகைய காலம் வரை பணிப்பாளரும் மாற்றுக்களும் சபையின் கூட்டங்களில் சமூகமளிக்கும் செலவு தொடர்பாகவும் முகவர் நிலையத்தின் சார்பில் ஏனைய உத்தியோகபூர்வப் பணிகளைப் புரிவது தொடர்பாகவும் மட்டும் ஈடுபடுதல் வேண்டும். தொடர்ச்சியான அமர்வில் பணியாற்ற வேண்டிய சபையொன்றைத் தாபித்ததன்மேல் பணியாளர்களும் மாற்றுக்களும் பேரவையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஊதியத்தைப் பெறுதல் வேண்டும்.

உறுப்புரை 33—தலைவரும் பணியாட்டொகுதியும்

(அ) தலைவர், சபையினது பொதுவான கட்டுப்பாட்டின் கீழ் முகவர் நிலையத்தின் சாதாரண அலுவலைக் கொண்டு நடாத்துதல் வேண்டும். அவர் பணியாட்டொகுதியின் ஒழுங்கமைப்புக்கும் நியமனத்துக்கும் வேலை நீக்கத்துக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(ஆ) தலைவரானவர், சபையின் தவிசாளரால் பெயர் குறித்து நியமிக்கப்படுவதன் மீது சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும். பேரவையானது தலைவரின் சம்பளத்தையும் சேவை ஒப்பந்த நியதிகளையும் தீர்மானித்தல் வேண்டும்.

(இ) தலைவரும் பணியாட்டொகுதியினரும் தமது கடமைகளைப் புரிகையில் முகவர் நிலையத்துக்கே கடமை புரிய வேண்டியவர்கள், வேறெந்த அதிகார சபைக்கும் கடமை புரிய வேண்டியவர்களல்ல. முகவர் நிலையத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் இக் கடமையின் சர்வதேசத் தன்மையைப் பணித்தல் வேண்டும் என்பதுடன் தலைவரையோ அல்லது பணியாட்டொகுதியினரையோ அவர் தம் கடமைகளைப் புரிகையில் அவர்களைச் செல்வாக்குக் குட்படுத்தும் சகல நடவடிக்கைகளிலிருந்தும் விலகியிருத்தலும் வேண்டும்.

(ஈ) பணியாட்டொகுதியினரை நியமிக்கையில் தலைவர் திறமையின் உயர் தராதரங்களையும் தொழினுட்பத் தகைமையையும் எய்தும் முக்கிய நோக்கத்துக்கமைவாக, எந்தப் பரந்தளவு புவியியல் அடிப்படையில் இயலுமோ அந்தப் பரந்தளவு அடிப்படையில் ஆளணியினரைச் சேர்த்துக் கொள்ளுவதற்கு முக்கிய கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

(உ) தலைவரும் பணியாட்டொகுதியும் எல்லா வேளைகளிலும் முகவர் நிலையத்தின் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதில் பெறப்பட்ட தகவலின் அந்தரங்கத்தன்மையைப் பேணுதல் வேண்டும்.

உறுப்புரை 34—அரசியல் செயற்பாடு தடைசெய்யப்பட்டுள்ளது

முகவர் நிலையமும் அதன் தலைவரும் பணியாட்டொகுதியும் எந்த உறுப்பினரதும் அரசியல் அலுவல்களில் தலையிடுதல் ஆகாது. முதலீடொன்று தொடர்பாகவுள்ள எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கெடுப்பதற்கு முகவர் நிலையத்துக்குள்ள உரிமைக்குப் பங்கமின்றிச் சம்பந்தப்பட்ட உறுப்பினரின் அல்லது உறுப்பினர்களின் அரசியல் தன்மை காரணமாக அவர்கள் எடுக்கும் முடிபுகள் எவ்விதமாகவும் செல்வாக்குட்படுத்தப்படுதல் ஆகாது. அவர்களது முடிவுகளுக்கு இயைபான விடயங்கள் 2 ஆம் உறுப்புரையில் கூறப்பட்ட நோக்கங்களை எய்துமுகமாகப் பாரபட்ச மில்லாது சீர்தூக்கிப் பார்க்கப்படுதல் வேண்டும்.

உறுப்புரை 35—சர்வதேச ஒழுங்கமைப்புகளுடனான உறவு

முகவர் நிலையமானது, இச்சமவாயத்தின் நியதிகளுக்குள்ளாக, ஐக்கிய நாடுகள் கழகத்துடனும் உறவுபட்ட துறைகளில் சிறப்பான பொறுப்புக்கள் கொண்ட அரசாங்கங்களுக்கிடையிலான ஏனைய நிறுவனங்களுடனும், குறிப்பாக வங்கியுடனும் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்துடனும் கூட்டாக இயங்குதல் வேண்டும்.

உறுப்புரை 36—பிரதான அலுவலகம் அமைந்துள்ள இடம்

(அ) முகவர் நிலயத்தின் பிரதான அலுவலகம், பேரவை சிறப்புப் பெரும்பான்மை மூலம் வேறோர் இடத்தில் தாபிக்க முடிவு செய்தாலொழிய, வாஷிங்டன் டி. சி. யில் அமந்திருத்தல் வேண்டும்.

(ஆ) முகவர் நிலையமானது, அதன் வேலைக்கு அவசியமாகக் கூடியவாறான வேறு அலுவலகங்களைத் தாபிக்கலாம்.

உறுப்புரை 37—சொத்துக்களுக்கான வைப்பிடம்

ஒவ்வோர் உறுப்பினரும், அதன் மத்திய வங்கியை, அத்தகைய உறுப்பினரின் நாணய வைப்புக்களை அல்லது முகவர் நிலையத்தின் ஏனைய சொத்துக்களை முகவர் நிலையம் வைக்கக்கூடிய வைப்பிடமாகக் குறிப்பிடுதல் வேண்டும்; அல்லது அதற்கு மத்திய வங்கி இல்லையானல் முகவர் நிலையத்துக்கு ஏற்றுக்கொள்ளக் கூடியவாறான அத்தகைய வேறு நிறுவனத்தை அது குறிப்பிடுதல் வேண்டும்.

உறுப்புரை 38—தொடர்புவழி

(அ) ஒவ்வோர் உறுப்பினரும், இச்சமவாயத்தின் கீழ் எழும் எக்கருமம் தொடர்பாகவும் முகவர் நிலையம் தொடர்பு கொள்ளக்கூடிய தோதான அதிகார சபையொன்றைப் பெயர் குறித்தல் வேண்டும். முகவர் நிலையமானது அத்தகைய அதிகார சபையின் கூற்றுக்களை உறுப்பினரின் கூற்றுக்களாக நம்ப இடமுண்டு. முகவர் நிலையமானது, உறுப்பினர் ஒருவரினது வேண்டுகோளின்மீது, 19 முதல் 21 வரையுள்ள உறுப்புரைகளில் கையாளப்பட்ட கருமங்கள் தொடர்பிலும் அவ்வுறுப்பினரின் அமைப்புக்கள் அல்லது காப்புறுதியாளர்கள் தொடர்பிலும் அவ்வுறுப்பினருடன் கலந்தாலோசித்தல் வேண்டும்.

(ஆ) முகவர் நிலையத்தினால் ஏதேனும் செயல் செய்யப்பட முன்னர் எவரேனும் உறுப்பினரின் அங்கீகாரம் தேவைப்படும் போதிலெல்லாம் உத்தேச செயல் பற்றி உறுப்பினருக்கு அறிவிக்கும்போது முகவர் நிலையம் நிர்ணயிக்கக் கூடியவாறான அத்தகைய நியாயமான காலப் பகுதிக்குள்ளாக உறுப்பினர் ஆட்சேபனையொன்றைச் சமர்ப்பித்தாலொழிய, அங்கீகாரம் கொடுக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம்—VI

### வாக்களித்தலும், ஒப்பப்பணங்களைச் சீராக்குதலும் பிரதிநிதித்துவப்படுத்தலும்

*உறுப்புரை 39—வாக்களித்தலும், ஒப்பப்பணங்களைச் சீராக்கலும்*

(அ) இச்சமவாயத்தின் அ என்னும் அட்டவணையில் நிரற்படுத்தப்பட்டுள்ள இரு வகுதி அரசுகளின் சமமான அக்கறையையும் ஒவ்வோர் உறுப்பினரின் நிதிப் பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் முகவர் நிலையத்தின் வெளிக் கொணர்வதற்கு வாக்களிக்கும் ஒழுங்குகளைச் செய்வதற்காக ஒவ்வோர் உறுப்பினரும் 177 உறுப் பாண்மை வாக்குகளுடன் அவ்வுறுப்பினரால் வைத்திருக்கப்படும் பங்குத் தொகுப் பின் ஒவ்வொரு பங்குக்கும் ஓர் ஒப்பப் பணவாக்கும் கொண்டவராதல் வேண்டும்.

(ஆ) இச்சமவாயம், வலுவுக்கு வந்ததன் பின்னர் மூன்றாண்டுகளுக்குள் எந் நேரத்திலும் இச் சமவாயத்தின் அ என்னும் அட்டவணையில் நிரற்படுத்தப்பட்ட இரு வகுதி அரசுக்குள் ஒன்றைச் சார்ந்த உறுப்பாண்மைக் கூட்டு மொத்தத் தொகையும் உறுப்பினர்களின் ஒப்பப் பணவாக்குகளும் மொத்த வாக்கு வலுவின் நாற்பது வீதத்துக்குக் குறைவானதாக இருக்குமாயின், அத்தகைய வகுதியைச் சார்ந்த உறுப்பினர்கள் மொத்த வாக்கு வலுவின் அத்தகைய நூற்று வீதத்துக்குச் சமமாக அமைவதற்காக வகுதியின் கூட்டு மொத்த வாக்களிப்பு வலுவுக்கு அவசியமான அத்தகைய எண்ணிக்கையான குறைநிரப்பு வாக்குகளைக் கொண் டிருத்தல் வேண்டும். அத்தகைய குறைநிரப்பு வாக்குகள், ஒவ்வோர் உறுப்பின ரதும் ஒப்பப்பண வாக்குகள் வகுதியின் ஒப்பப்பண வாக்குகளின் கூட்டு மொத்தத் துக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரப்படி அத் தகைய வகுதியைச் சார்ந்த உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் வேண் டும். அத்தகைய குறைநிரப்பு வாக்குகள், அத்தகைய நூற்று வீதம் பேணப்படு கின்றதென்பதனை உறுதிப்படுத்துவதற்காகத் தன்னியக்கச் சீராக்கத்துக்கு அமைந் ததாதல் வேண்டுமென்பதுடன் மேற்சொல்லப்பட்ட மூன்றாண்டுக்கு/காலப்பகுதி முடிவில் நீக்கஞ் செய்யப்படுதலும் வேண்டும்.

(இ) இச்சமவாயம் வலுவுக்கு வந்ததன் பின்னரும் மூன்றாம் ஆண்டின்போது பேரவையானது பங்குகளின் ஒதுக்கீட்டை மீளாய்வு செய்தல் வேண்டுமென்ப துடன் பின்வரும் நெறிகளுக்கிணங்க அது முடிவு எடுக்க வழி காட்டப்படுதலும் வேண்டும்:—

(i) உறுப்பினர்களின் வாக்குகள் முகவர் நிலயத்தின் மூலதனத்துக்கு உண்மை யான ஒப்பப்பணங்கள் வகிக்கும் நிலைமையையும் இவ்வுறுப்புரையின் (அ) என்னும் பிரிவில் தரப்பட்டவாறான உறுப்பாண்மை வாக்குகள் வகிக்கும் நிலைமையையும் பிரதிபலித்தல் வேண்டும்;

(ii) சமவாயத்துக்கு ஒப்புதல் தெரிவிக்காத நாடுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகள், மேற்சொல்லப்பட்ட வகுதிகளிடையே வாக்களிப்புச் சமநிலையைப் பேணும் நோக்கத்துக்காக அத்தகைய உறுப்பினர்களுக்கும் அத்தகைய முறையிலும் மீள் ஒதுக்கீடு செய்வதற்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்தல் வேண்டும்; அத்துடன்

(iii) உறுப்பினர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகளுக்கு ஒப்பப் பணஞ் செலுத்த உறுப்பினர்கள் இயலக் கூடியவர்களாக வரும் வண்ணம் மேற்கொள்ளப்பட வேண்டிய வழிவகைகளைப் பேரவை எடுத்தல் வேண்டும்.

(ஈ) இவ்வுறுப்புரையின் (ஆ) என்னும் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட மூன்றாண்டுக் காலப் பகுதிக்குள்ளாகப் பேரவையினதும் சபையினதும் முடிவுகள் யாவும் சிறப்புப் பெரும்பான்மைமூலம் எடுக்கப்படுதல் வேண்டும். இச் சமவாயத்தின் கீழ் அதிலும் கூடிய பெரும்பான்மை தேவைப்படும் முடிவுகள் அத்தகைய கூடுதலான பெரும்பான்மை மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

(உ) முகவர் நிலையத்தின் மூலதனப் பங்குத் தொகுதி 5 ஆம் உறுப்புரையின் (இ) என்னும் பிரிவைப் பின்பற்றி அதிகரிக்கப்படுமிடத்து, அவ்வாறு கோரும் உறுப்பினர் ஒவ்வொருவரும், ஒப்பப்பணஞ் செலுத்தப்பட்ட பங்குத் தொகுதி முகவர் நிலையத்தின் மொத்த மூலதனப் பங்குத்தொகுதிக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அவ் விகிதாசாரத்துக்குச் சமமான அதிகரிப்பு அளவுக்கு ஒப்பப்பணஞ் செலுத்த அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும். ஆனால் உறுப்பினர் எவரும் அதிகரித்த மூலதனத்தின் எப்பாகத்துக்கும் ஒப்பப்பணஞ் செலுத்தக் கடமைப்பட்டவராகார்.

(ஊ) இவ்வுறுப்புரையின் (உ) என்னும் பிரிவின் கீழ் மேலதிக ஒப்பப்பணங்களைச் செலுத்துதல் தொடர்பில் பேரவை ஒழுங்குவிதிகளையாக்குதல் வேண்டும். அத்தகைய ஒழுங்குவிதிகள், அத்தகைய ஒப்பப்பணங்களைச் செய்வதற்காக உறுப்பினர்கள் தமது கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கவேண்டிய நியாயமான கால எல்லையை விதித்துரைத்தல் வேண்டும்.

உறுப்புரை 40—பேரவையில் வாக்களித்தல்

(அ) ஆளுநர், ஒவ்வொருவரும் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினரின் வாக்குகளை அளிக்க உரித்துடையவராதல் வேண்டும். இந்தச் சமவாயத்தில் வேறு விதமாகக் குறித்துரைக்கப்பட்டவாறு தவிர, பேரவையின் முடிவுகள் அளிக்கப்படும் வாக்குப் பெரும்பான்மை மூலம் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் மொத்த வாக்கு வலுவின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத ஆளுநரின் பெரும்பான்மை மூலம் அமைக்கப்படுதல் வேண்டும்.

(இ) பேரவையானது, ஒழுங்குவிதி மூலம் சபையானது அத்தகைய நடவடிக்கை முகவர் நிலையத்தின் நலன் கருதி எடுக்கப்பட்டதெனக் கருதுமிடத்து பேரவையின் கூட்டத்தைக் கூட்டாமல் குறிப்பான ஒரு விடயத்தின் மீது பேரவையின் முடிவொன்றைக் கோரக்கூடிய நடைமுறையொன்றைத் தாபிக்கலாம்.

உறுப்புரை 41—பணிப்பாளர்களின் தேர்தல்

(அ) பணிப்பாளர்கள் அட்டவணை 'ஆ' வுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பணிப்பாளர்கள், தம்மை அடுத்துறுவோர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் தொடர்ந்து பதவியிலிருத்தல் வேண்டும். பணிப்பாளர் ஒருவரது பதவி, அவரது பதவிக்காலம் முடிவடையத் தொண்ணூறுக்கு மேற்பட்ட நாட்கள் இருக்கும்போது வெற்றுனதாகுமிடத்து, முன்னைய பணிப்பாளரைத் தேர்ந்தெடுத்த ஆளுநர்களால் இன்னெரு பணிப்பாளர் எஞ்சிய காலப்பகுதிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். தேர்தலில் பெரும்பான்மை வாக்குகள் அளிக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். பதவி வெற்றுனதாக இருக்குமிடத்து முன்னைய பணிப்பாளரின் மாற்றுப் பணிப்பாளர், மாற்றுப் பணிப்பாளரை நியமிப்பது தவிர்ந்த அவரது ஏனைய தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

உறுப்புரை 42—சபையில் வாக்களித்தல்

(அ) ஒவ்வொரு பணிப்பாளரும் எந்த உறுப்பினரின் வாக்குகள் கணக்கிலெடுக்கப்படுமோ அந்த உறுப்பினரின் வாக்குகளை அளிக்க உரித்துடையவராதல் வேண்டும். ஒரு பணிப்பாளரால் அளிக்கப்படக்கூடிய எல்லா வாக்குகளும் ஒரு கூறுக அளிக்கப்படுதல் வேண்டும். சமவாயத்திஞல் வேறு வகையாகக் குறித்துரைக்கப்பட்டிருந்தாலொழிய சபையின் தீர்மானங்கள் அளிக்கப்பட்ட வாக்குகளின் பெரும்பான்மை கொண்டு எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) சபையின் கூட்ட நடப்பெண், மொத்த வாக்களிக்கும் தத்துவத்துக்கு அரைவாசிக்குக் குறையாத பெரும்பான்மையுடைய பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) சபையானது, ஒழுங்குவிதி மூலம் சபையின் கூட்டமொன்றைக் கூட்டாமல் குறிப்பான எந்த விடயத்தின் மீது சபையின் முடிவொன்றைக் கோருவது அல்லது செய்வது முகவர் நிலையத்தின் நலன்களுக்கு உகந்ததெனக் கருதும்போது தலைவருக்கு இயலச் செய்யும் நடபடிமுறையொன்றைத் தாபிக்கலாம்.

## அத்தியாயம்—VII

## சிறப்புரிமைகளும் விடுபாட்டுரிமைகளும்

உறுப்புரை 43—அத்தியாயத்தின் நோக்கம்

முகவராண்மை நிலையம் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காக இவ்வத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடுபாட்டுரிமைகளும், சிறப்புரிமைகளும் ஒவ்வொரு உறுப்பினரதும் ஆள்புலத்தின் முகவராண்மை நிலையத்துக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

உறுப்புரை 44—சட்டமுறைமை

உறுப்புரைகள் 57, 58 இன் எல்லைகளுக்குள் தவிர்ந்த ஏனைய வழக்குகள் எந்த உறுப்பினரின் ஆள்புல எல்லைக்குள் முகவராண்மை நிலையம் ஓர் அலுவலகத்தை உடையதோ அல்லது மன்றுணை பற்றிய அறிவித்தலை ஏற்பதற்காக ஒரு முகவரை நியமித்துள்ளதோ அங்குள்ள தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ள நீதிமன்றமொன்றிலேயே முகவராண்மை நிலையத்திற்கெதிரான வழக்குகள் கொண்டுவரப்படலாம். அத்தகைய ஏதேனும் வழக்கு, (I) உறுப்பினர்களினல் அல்லது அவர்களுக்காகப் பதில் கடமையாற்றுபவர்களினல் அல்லது அவர்களிடமிருந்து கோரிக்கை பெற்றுக் கொண்ட ஆட்களால் அல்லது (II) தனிப்பட்ட விடயங்கள் தொடர்பில் கொண்டு வரப்படுதலாகாது. முகவராண்மை நிலையத்தின் ஆதனங்களும் சொத்துக்களும் எங்கு அமைந்திருப்பினும் அத்துடன் எவரால் வைத்திருக்கப்படினும், முகவராண்மை நிலையத்துக்கெதிராக இறுதித் தீர்ப்பு அல்லது அளிப்புக் கொடுக்கப்படுமுன்னர், எல்லாவிதமான கைப்பற்றல்களிலிருந்தும் தடுக்கப்படலிலிருந்தும் நிறைவேற்றலிலிருந்தும் விடுபட்டுள்ளதாதல் வேண்டும்.

உறுப்புரை 45—சொத்துக்கள்

(அ) முகவராண்மை நிலையத்தின் ஆட்களும் சொத்துக்களும், எங்கு அமைந்திருப்பினும், எவரால் வைத்திருக்கப்படினும் தேடுதல், தேவைக்கெடுத்தல், பறிமுதல் செய்தல், உடைமை கவர்தல் அல்லது வேறு எவ்விதமான நிறைவேற்று அல்லது சட்டவாக்க செயல்மூலமான கைப்பற்றுதலிலிருந்தும் விடுபட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இச்சமவாயத்தின் கீழான தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகுமளவில், முகவராண்மை நிலையத்தின் எல்லா ஆதனங்களும் சொத்துக்களும் எவ்வித கட்டுப்பாடுகளிலிருந்தோ ஒழுங்குவிதிகளிலிருந்தோ கட்டுப்பாடுகளிலிருந்தோ அத்துடன் எந்தவிதமான சட்ட இசைவுத் தாமதங்களிலிருந்தோ விலக்களிக்கப்பட்டனவாதல் வேண்டும். ஆயின், மீள் காப்புறுதி செய்யப்பட்ட அமைப்பின் அல்லது மீள் காப்புறுதி செய்யப்பட்ட அமைப்பினல் காப்புறுதி செய்யப்பட்ட ஒரு முதலீட்டாளரின் அடுத்துறுபவராக அல்லது உத்தரவாதம் வைத்திருப்பவரின் கடன் பற்றுரிமை மாற்றிடப்பட்டவராக முகவராண்மை நிலையம் ஆதனங்களை அல்லது சொத்துக்களைக் கொண்டிருந்தால், எந்த உத்தரவாதம் வைத்திருப்பவரின் அல்லது அமைப்பின் அல்லது முதலீட்டாளரின் கடன் பற்றுரிமை பெற்றவராகச் செயல்படுகிறுரோ அந்த உத்தரவாதம் வைத்திருப்பவரின் அமைப்பின் அல்லது முதலீட்டாளரின் இடத்துக்குக் கடன் பற்றுரிமை மாற்றீடு செய்யப்பட்டார் போன்று ஏற்புடைத்தான வெளிநாட்டு நாணய மாற்று வரையறைகளிலிருந்தும், ஒழுங்குவிதிகளிலிருந்தும், கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுபட்டவராதல் வேண்டும்.

(இ) இவ்வத்தியாயத்தின் நோக்கங்களுக்காக ''சொத்துக்கள்'' என்னும் பதம் இச்சமவாயத்தின் இணைப்பு 1 இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆதரவாண்மை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சொத்துக்களையும் முகவராண்மை நிலையம் தனது குறிக்கோள்களை அடைவதாக நிருவகிக்கும் ஏனைய சொத்துக்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.

உறுப்புரை 46—புராதன சாதனங்களும் தொடர்புகளும்

(அ) முகவராண்மை நிலையத்தின் புராதன சாதனங்கள் எங்கிருந்தாலும் மீறப்பட முடியாதனவாயிருத்தல் வேண்டும்.

(ஆ) முகவராண்மை நிலையத்தின் உத்தியோகபூர்வத் தொடர்புகள் வங்கியின் உத்தியோகபூர்வத் தொடர்புகளுக்கு வழங்கப்பட்டாற்போன்று அதே முறையில் உறுப்பினர்களால் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

உறுப்புரை 47—வரிகள்

(அ) முகவராண்மை நிலையம், அதன் சொத்துக்கள், ஆதனம், வருமானம் அத்துடன் இச்சமவாயத்தினல் அதிகாரமளிக்கப்பட்டுள்ள தொழிற்பாடுகள், கருமங்கள் யாவும் எல்லா வரிகளிலிருந்தும் சுங்க வரிகளிலிருந்தும் விடுபடுதல் வேண்டும். முகவராண்மை நிலையம் ஏதேனும் வரி அல்லது தீர்வையிலிருந்து விடுபட்டதாதலும் வேண்டும்.

(ஆ) உள்நாட்டவர்களின் விடயத்தில் தவிர, ஆளுநர்களுக்கும், அவர்களது மாற்று நபர்களுக்கும் முகவர் நிலையத்தினல் செலுத்தப்படும் செலவுப் படிகள் மீது அல்லது செலவுப் படிகள் தொடர்பில் அல்லது முகவர் நிலையத்தின் சபைத் தவிசாளருக்கு, பணியாளர்களுக்கு, அவர்களது மாற்று நபர்களுக்கு, தலைவருக்கு அல்லது பணியாட்டொகுதிக்கு முகவர் நிலையத்தினல் செலுத்தப்படும் சம்பளங்கள், செலவுபடிகள் அல்லது வேறு வேதனதிகள் மீது அல்லது அவை தொடர்பில் வரி எதுவும் அறவிடப்படுதல் ஆகாது.

(இ) முகவர் நிலையத்தினல் உத்தரவாதமளிக்கப்பட்ட அல்லது மீள் காப்புறுதி செய்யப்பட்ட ஏதேனும் முதலீட்டின் மீது (அதிலிருந்தான எவையேனும் சம்பாத்தியங்கள் உட்பட) அல்லது முகவர் நிலையத்தினல் மீள் காப்புறுதி செய்யப்பட்ட எவையேனும் காப்புறுதிப் பூட்கைகள் மீது (அதிலிருந்தான எவையேனும் கட்டுப்பணங்களும், வேறு அரசிறைகளும் உட்பட) அவை எத்தகையவரால் வைத்திருக்கப்படினுஞ் சரி:—

(i) அது முகவர் நிலையத்தினல் உத்தரவாதமளிக்கப்பட்ட அல்லது மீள் காப்புறுதி செய்யப்பட்டது என்ற தனித்த காரணத்தினல் அத்தகைய முதலீட்டிற்கோ, காப்புறுதிப் பூட்கைக்கோ பாதகமாக அமைவதான; அல்லது

(ii) அத்தகைய வரிவிதிப்புச்கான தனித்த நியாயாதிக்கஞ்சார் அடிப்படையானது முகவர் நிலையத்தினல் பேணிவரப்படும் ஏதேனும் அலுவலகத்தின் அல்லது தொழில் இடத்தின் அமைவிடமாக விருப்பின்,

எவ்வகையினதுமான வரி விதிப்பு எதுவும், அறவிடப்படல் ஆகாது.

உறுப்புரை 48—முகவர் நிலையத்தின் அலுவலர்கள்

முகவர் நிலையத்தின் எல்லா ஆளுநர்களும், பணிப்பாளர்களும், மாற்று நபர்களும், தலைவரும், பணியாட்டொகுதியும்:—

(i) அவர்களது அலுவலகத் தன்மையில் அவர்களால் புரியப்படும் செயல்கள் தொடர்பில் சட்ட நடைமுறையிலிருந்து விடுப்பாட்டுரிமை பெற்றவர்களாயிருத்தல் வேண்டும்;

(ii) உள்நாட்டவர்களாக இல்லாதிருப்பின், குடிவரவு மட்டுப்பாடுகள், வெளிநாட்டவர் பதிவு செய்தல் தேவைப்பாடுகள், தேசிய சேவைக் கடப்பாடுகள் ஆகியவற்றிலிருந்து, சம்பந்தப்பட்ட உறுப்பினரால், ஏனைய பதவித் தரத்திலுள்ள பிரதிநிதிகளுக்கும், அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் வழங்கப்படுவதான அதே விடுபாட்டுரிமைகளும், செலாவணிகளும்; அத்துடன்

(iii) பிரயாண வசதிகள் தொடர்பில், சம்பந்தப்பட்ட உறுப்பினர்களினுல் வேறு உறுப்பினர்களின் ஒத்த பதவித் தரத்திலுள்ள பிரதிநிதிகளுக்கும், அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் வழங்கப்படுவதான அதே பயன்பாடு வழங்கப்படுதல் வேண்டும்.

உறுப்புரை 49—இந்த அத்தியாயத்தின் ஏற்புடைமை

ஒவ்வோர் உறுப்பு நாடும், அதன் சொந்த ஆள்புலங்களில், இந்த அத்தியாயத்தில் தரப்பட்டுள்ள நெறிகளை, அதன் சொந்தச் சட்டத்தின் நியதிகளின்படி பயனுறச் செய்யும் நோக்கத்துக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கையை எடுத்தல் வேண்டுமென்பதுடன், அது எடுத்துள்ள விரிவான நடவடிக்கை பற்றி முகவர் நிலையத்துக்குத் தெரிவித்தலும் வேண்டும்.

உறுப்புரை 50—விட்டுவிடுகை

இந்த அத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விடுபாட்டுரிமைகளும், விலக்களிப்புக்களும், சிறப்புரிமைகளும் முகவர் நிலையத்தின் நலன் கருதி அளிக்கப்பட்டுள்ளன என்பதுடன், அதன் நலன்களைப் பங்கப்படுத்தாதிருக்கும் விடயங்களில் முகவர் நிலையம் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய அளவுக்கும் அத்தகைய நிபந்தனைகள் மீதும் அவை விட்டுவிடப்படலாம். முகவர் நிலையமானது அதன் அபிப்பிராயப்படி, விடுபாட்டுரிமையானது நீதி நெறியைத் தடைப்படுத்துவதுடன், முகவர் நிலையத்தின் நலன்களைப் பங்கப்படுத்தாது விட்டுவிடப்படக் கூடியதாகவும் இருக்கும் விடயங்களில், அதன் பணியாட்டொகுதியும் எதனதும் விடுபாட்டுரிமையை விட்டுவிடுதல் வேண்டும்.

## அத்தியாயம்—VIII

## உறுப்பாண்மையை மீளப்பெறுதலும், இடைநிறுத்தலும், தொழிற்பாடுகளை இல்லாதொழித்தலும்

உறுப்புரை 51—மீளப்பெறுதல்

உறுப்பினர் எவரும், அத்தகைய உறுப்பினர் தொடர்பில், இந்தச் சமவாயம் வலுவுக்கு வந்த தேதியைத் தொடர்ந்து மூன்றாண்டுகள் முடிவடைந்ததன் பின்னர் எந்நேரத்திலாயினும், எழுத்திலான அறிவித்தலை முகவர் நிலயத்துக்கு, அதன் பிரதான அலுவலகத்தில் கொடுப்பதன் மூலம் முகவர் நிலயத்திலிருந்து உறுப்பாண்மையை மீளப் பெற்றுக்கொள்ளலாம். முகவர் நிலயமானது, அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்றமை பற்றி, இச்சமவாயத்தின் வைப்பிடம் என்ற வகையில், வங்கிக்கு அறிவிக்க வேண்டும் மீளப் பெறல் எதுவும், முகவர் நிலயம் அத்தகைய அறிவித்தலைப் பெற்றுக் கொண்ட தேதியைத் தொடர்ந்து தொண்ணூறு நாட்களில் பயனுறுதல் வேண்டும். ஓர் உறுப்பினர், அத்தகைய அறிவித்தல் பயனுறுத்தப்படாமல் இருக்கின்ற மட்டில், அதனை ஒழிக்கலாம்.

உறுப்புரை 52—உறுப்பாண்மையை இடைநிறுத்துதல்

(அ) ஓர் உறுப்பினர், இச்சமவாயத்தின் கீழான அதன் கடப்பாடுகளுள் எதனையும் நிறைவேற்றத் தவறுமிடத்து, பேரவையானது, அதன் உறுப்பாண்மையின் மொத்தப் பெரும்பான்மை வாக்களிப்புத் தத்துவத்தைப் பிரயோகிப்பனவான அதன் உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு, இடைநிறுத்தி வைக்கலாம்.

(ஆ) இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்போது உறுப்பினர் ஒருவர் இந்த அத்தியாயத்திலும் IX ஆம் அத்தியாயத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மீளப் பெறல் உரிமையும் ஏனைய உரிமைகளும் தவிர்ந்த, இச்சமவாயத்தின் கீழான எந்த உரிமைகளையும் கொண்டிருத்தல் ஆகாது. ஆனால் அதன் கடப்பாடுகள் யாவற்றிற்கும் அமைந்ததாக இருந்து வருதல் வேண்டும்.

(இ) இச்சமவாயத்திற்கான III ஆம் அத்தியாயத்தின் அல்லது பின்னிணைப்பு I இன் கீழ் வழங்கப்படவேண்டிய உத்தரவாதத்திற்கான அல்லது மீள் காப்புறுதிக்கான தகவுடைமையைத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக, இடைநிறுத்தி வைக்கப்பட்ட உறுப்பினர், முகவர் நிலயத்தின் ஓர் உறுப்பினராகக் கருதப்படுதல் ஆகாது.

(ஈ) இடைநிறுத்தி வைக்கப்பட்ட உறுப்பினர், இடைநிறுத்தக் காலப்பகுதியை நீடிப்பதற்கோ, உறுப்பினரைப் பழைய நிலமையில் வைப்பதற்கோ, பேரவை தீர்மானித்தாலொழிய, அது இடை நிறுத்தப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக்கு உறுப்பினரொருவராகத் தானாகவே இல்லாதொழிதல் வேண்டும்.

உறுப்புரை 53—உறுப்பினர்களாக இல்லாதொழியும் அரசுகளின் உரிமைகளும் கடமைகளும்

(அ) ஓர் அரசு, உறுப்பினரொருவராக இல்லாதொழியும்போது, அதன் உறுப்பாண்மை இல்லாதொழியுமுன்னர் பயனுறுத்தப்பட்டிருந்தனவான இச்சமவாயத்தின் கீழான அதன் எதிர்பாராக் கடப்பாடுகள் உள்ளிட்ட கடப்பாடுகள் யாவற்றிற்கும் பொறுப்புடையதாக இருந்து வருதல் வேண்டும்.

(ஆ) மேற்கூறிய (அ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, முகவர் நிலையமானது, அத்தகைய அரசுடன் அதன் அந்தந்த உரிமைக் கோரிக்கைகளையும், கடப்பாடுகளையும் தீர்த்து வைப்பதற்கென உடன்பாட்டொழுங்கு ஒன்றைச் செய்து கொள்ளுதல் வேண்டும். அத்தகைய உடன்பாட்டொழுங்கு எதுவும், சபையினுல் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

உறுப்புரை 54—தொழிற்பாடுகளை இடைநிறுத்துதல்

(அ) சபையானது, அது நீதியானதெனக் கருதும்போதெல்லாம் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்குப் புதிய உத்தரவாதங்களின் வழங்கலை இடைநிறுத்தி வைக்கலாம்.

(ஆ) அவசர நிலைமையின்போது, சபையானது, அத்தகைய அவசர நிலைமைக் காலத்தை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு முகவர் நிலையத்தின் செயற்பாடுகள் யாவற்றையும் இடைநிறுத்தி வைக்கலாம். ஆயின், முகவர் நிலையத்தினதும் மூன்றும் திறத்தவர்களினதும் நலன்களைப் பாதுகாப்பதற்கு அவசியமான உடன்பாட்டொழுங்குகள் செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

(இ) தொழிற்பாடுகளை இடைநிறுத்துவதற்கான முடிபானது, இச்சமவாயத்தின் கீழ் உறுப்பு நாடுகள் கொண்டுள்ள கடப்பாடுகளையோ உத்தரவாதமொன்றை அல்லது மீள் காப்புறுதிப் பூட்கையொன்றை வைத்திருப்பவர்களையோ அல்லது மூன்றும் திறத்தவர்களுக்கு முகவர் நிலையம் கொண்டுள்ள கடப்பாடுகளையோ பாதித்தல் ஆகாது.

உறுப்புரை 55—ஒழித்துக்கட்டல்

(அ) பேரவையானது, விசேட பெரும்பான்மை மூலம், தொழிற்பாடுகளை இல்லாதொழிப்பதற்கும், முகவர் நிலையத்தை ஒழித்துக் கட்டுவதற்கும் முடிபு செய்யலாம். அதன் மேல் முகவர் நிலையம் உடனடியாக, சொத்துக்களைக் கிரமமாகத் தேறிப் பெறல், பேணல், பேணிக் காத்தல், அத்துடன் கடப்பாடுகளைத் தீர்த்து வைத்தல் ஆகியவற்றினதும் இடைநேர் வினைவான செயற்பாடுகள் தவிர்ந்த எல்லாச் செயற்பாடுகளையும் இல்லாதொழித்தல் வேண்டும். சொத்துக்கள் இறுதியாக நிர்ணயிக்கப்பட்டு, பகிர்ந்தளிக்கப்படுகின்றவரையில், முகவர் நிலையமானது உளதாகவிருந்துவரல் வேண்டும் என்பதுடன், இச்சமவாயத்தின் கீழ் உறுப்பினர்கள் கொண்டுள்ள எல்லா உரிமைகளும், கடப்பாடுகளும் பாதிக்கப்படாமல் தொடர்ந்து இருந்து வருவனவாதலும் வேண்டும்.

(ஆ) உத்தரவாதங்கள் வைத்திருப்பவர்களுக்கும், ஏனைய கடன் கொடுநர்களுக்குமான எல்லாப் பொறுப்புக்களும் கொடுத்துத் தீர்க்கப்படுகின்றவரையில் அல்லது அவற்றிற்கு ஏற்பாடு செய்யப்படுகின்றவரையில் அத்துடன் உறுப்பினர்களுக்குச் சொத்துக்களைப் பகிர்ந்தளிப்பதற்குப் பேரவை தீர்மானிக்கின்றவரையில், உறுப்பினர்களுக்கான அத்தகைய சொத்துக்களின் பகிர்ந்தளிப்பு எதுவும் செய்யப்படுதல் ஆகாது.

(இ) மேற்கூறியவற்றிற்கு அமைவாக, முகவர் நிலையமானது அதன் எஞ்சியுள்ள சொத்துக்களை, ஒப்பப் பணமளிக்கப்பட்ட மூலதனத்தில் ஒவ்வோர் உறுப்பினரும் கொண்டுள்ள பங்கிற்கான விகிதாசாரப்படி உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளித்தல் வேண்டும். அத்துடன் முகவர் நிலையமானது, இச்சமவாயத்திற்கான பின்னிணைப்பு I இல் குறிப்பீடு செய்யப்படும் ஆதரவாண்மை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் எஞ்சியுள்ள சொத்துக்கள் எவற்றையும் ஆதரவளிக்கும் உறுப்பினர்களுக்கு, அவை ஒவ்வொன்றினுல் ஆதரவளிக்கப்பட்ட மொத்த முதலீடுகளுக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அதே விகிதாசாரத்தில் பகிர்ந்தளித்தல் வேண்டும். உறுப்பினர் எதுவும் அதற்கு எதிராக முகவர் நிலையத்தினுல் செய்யப்பட்ட நிலுவையாகவுள்ள எல்லா உரிமைக் கோரிக்கைகளையும் அவ் உறுப்பினர் தீர்த்து வைத்திருந்தாலொழிய, முகவர் நிலையத்தின் சொத்துக்களிலோ, ஆதரவாண்மை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சொத்துக்களிலோ ஆன அதன் பங்கிற்கு உரித்துடையவராதல் ஆகாது. சொத்துக்களின் பகிர்ந்தளிப்பு ஒவ்வொன்றும், பேரவை தீர்மானிக்கின்ற அத்தகைய நேரங்களிலும், அது நியாயமானதும் ஒப்புரவானதும் எனக் கருதும் அத்தகைய முறையிலும் செய்யப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம்—IX

## பிணக்குகளைத் தீர்த்துவைத்தல்

உறுப்புரை 56—சமவாயம் பற்றிய பொருள்கோடலும், அதன் ஏற்புடைமையும்

(அ) முகவர் நிலையத்தின் எவரேனும் உறுப்பினருக்கும் முகவர் நிலையத்துக்கும் இடையில் அல்லது முகவர் நிலையத்தின் உறுப்பினர்களுக்கிடையில் இச்சமவாயத்தினது ஏற்பாடுகளின் பொருள்கோடல் அல்லது ஏற்புடைமை பற்றி எழுவதான பிரச்சினை எதுவும், சபைக்கு அதன் முடிவுக்காகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். பிரச்சினை மூலம் குறிப்பாகப் பாதிக்கப்படுவதும், வேறு வகையில் சபையில் நாட்டவர் ஒருவர் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படாது இருப்பதான உறுப்பினர் எதுவும், அத்தகைய பிரச்சினை சீர்தூக்கிப் பார்க்கப்படும் சபையின் கூட்டம் எதிலும் சமுகமளிப்பதற்கெனக் பிரதிநிதியொருவரை அனுப்பி வைக்கலாம்.

(ஆ) மேற்கூறிய (அ) என்னும் பிரிவின் கீழ்ச் சபை முடிபு ஒன்றை வழங்கியுள்ள ஏதேனும் விடயத்தில், பிரச்சினை பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டும் என உறுப்பினர் எதுவும் தேவைப்படுத்தலாம் என்பதுடன், பேரவையின் முடிபு இறுதியானதாதலும் வேண்டும். பேரவைக்கான ஆற்றுப்படுத்துகைப் பெறுபேறு முடிவுறுதிருக்கையில், முகவர் நிலையமானது, அது அவசியமானதெனக் கருதுகின்ற அளவுக்குச் சபையின் முடிபை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றலாம்.

**உறுப்புரை 57—முகவர் நிலையத்திற்கும், உறுப்பினர்களுக்கும் இடையிலான பிணக்குகள்**

(அ) 56 ஆம் உறுப்புரையினதும், இவ்வுறுப்புரையின் (ஆ) என்னும் பிரிவினதும் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, முகவர் நிலையத்துக்கும் ஓர் உறுப்பினருக்கும் அல்லது அதன் முகவர் ஒருவருக்கும் இடையிலான பிணக்கு எதுவும் அத்துடன் முகவர் நிலையத்துக்கும், உறுப்பினர் ஒருவராக இல்லாதொழிந்த நாடு ஒன்றுக்கும் (அல்லது அதன் முகவருக்கும்) இடையிலான பிணக்கு எதுவும், இச்சமவாயத்திற்கான பின்னிணைப்பு II இல் தரப்பட்டுள்ள நடவடிக்கை முறைக்கிணங்கத் தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) முதலீட்டாளர் ஒருவரின் கடன் பற்றுரிமை மாற்றியிடப்பட்டவராகச் செயலாற்றும் முகவர் நிலையத்தின் உரிமைக் கோரிக்கைகள் சம்பந்தமான பிணக்குகள் ஒன்றில்:—(i) இச்சமவாயத்திற்கான பின்னிணைப்பு II இல் தரப்பட்டுள்ள நடவடிக்கை முறைக்கிணங்க, அல்லது (ii) அத்தகைய பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கான ஒரு மாற்றுமுறையின் மீது அல்லது முறைகளின் மீது முகவர் நிலையத்துக்கும் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கைக்கிணங்கத் தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். பின்னைய விடயத்தில் இச்சமவாயத்திற்கான பின்னிணைப்பு II, அத்தகைய ஓர் உடன்படிக்கைக்கான அடிப்படையாக அமைதல் வேண்டும். இவ்வுடன்படிக்கை, ஒவ்வொரு விடயத்திலும், சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் ஆள்புலங்களில் தொழிற்பாடுகள் முகவர் நிலையத்தினால் பொறுப்பேற்கப்படு முன்னர் சபையினால் விசேட பெரும்பான்மை கொண்டு அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உறுப்புரை 58—உத்தரவாதம் ஒன்றை அல்லது மீள் காப்புறுதியை வைத்திருப்பவர்கள் சம்பந்தமான பிணக்குகள்

உத்தரவாத அல்லது மீள் காப்புறுதி ஒப்பந்தமொன்றின் கீழ் அதற்கான திறத்தவர்களுக்கிடையில் எழும் பிணக்கு எதுவும், உத்தரவாத அல்லது மீள் காப்புறுதி ஒப்பந்தத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறான அத்தகைய விதிகளுக்கிணங்க, இறுதித் தீர்மானத்திற்கென நடுத் தீர்ப்புக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம்—X

## திருத்தங்கள்

உறுப்புரை 59—பேரவையினால் செய்யப்படும் திருத்தம்

(அ) இச்சமவாயமும், அதன் பின்னிணைப்புக்களும் மொத்த வாக்களிப்புத் தத்துவத்தின் ஐந்தில் நான்கினைப் பிரயோகிக்கின்றவர்களான ஆளுநர்களின் ஐந்தில் மூன்று வாக்குக் கொண்டு திருத்தப்படலாம். ஆயின்:

(i) 51 ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதான முகவர் நிலையத்திலிருந்து மீளப் பெறுவதற்கான உரிமையையோ, 8 ஆம் உறுப்புரையின் (ஈ) என்னும் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதான பொறுப்பு மீதான வரையறையையோ திரிபுபடுத்துவதான திருத்தம் எதற்கும் எல்லா ஆளுநர்களினதும் ஒத்திசைவான வாக்கு தேவைப்படுவதாதல் வேண்டும்; அத்துடன்

(ii) இச்சமவாயத்திற்கான பின்னிணைப்பு I இன் 1 ஆம், 3 ஆம் உறுப்புரைகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதும், அதன் கீழ் எவரேனும் உறுப்பினரின் பொறுப்பில் அதிகரிப்பொன்றை விளைவிப்பதுமான இழப்புப் பங்கிடல் உடன்பாட்டொழுங்கைத் திரிபுபடுத்துவதற்கான திருத்தம் எதற்கும், அத்தகைய ஒவ்வோர் உறுப்பு நாட்டினதும் ஆளுநரின் ஒத்திசைவான வாக்கு தேவைப்படுவதாதல் வேண்டும்.

(ஆ) இச்சமவாயத்திற்கான அ, ஆ ஆகிய அட்டவணைகள் பேரவையினால் விசேட பெரும்பான்மை கொண்டு திருத்தப்படலாம்.

(இ) திருத்தம் ஒன்று, இச்சமவாயத்திற்கான பின்னிணைப்பு I இன் ஏற்பாடு எதுவும் சம்பந்தப்பட்டதாயின், மொத்த வாக்குகள், அத்தகைய பின்னிணைப்பின் 7 ஆம் உறுப்புரையின் கீழ் ஆதரவளிக்கும் உறுப்பினர்களுக்கும் ஆதரவளிக்கப்பட்ட முதலீடுகளை ஓம்பும் நாடுகளுக்கும் குறித்தொதுக்கப்பட்ட மேலதிக வாக்குகளையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

உறுப்புரை 60—நடவடிக்கைமுறை

இச்சமவாயத்தைத் திருத்துவதற்கான உத்தேசம் எதுவும், அது உறுப்பினர் ஒருவரிடமிருந்து வரினுஞ்சரி அல்லது ஆளுநர் ஒருவரிடமிருந்து வரினுஞ்சரி, அல்லது பணிப்பாளர் ஒருவரிடமிருந்து வரினுஞ்சரி சபையின் தவிசாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர் அவ்வுத்தேசத்தைச் சபையின் முன்னிலையில் கொணருதலும் வேண்டும். உத்தேசிக்கப்பட்ட திருத்தமானது சபையினால் விதந்துரைக்கப்பட்டால், அது 59 ஆம் உறுப்புரைக்கிணங்க அங்கீகாரத்துக்கெனப் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். திருத்தம் ஒன்று பேரவையினால் உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும்போது, முகவர் நிலையமானது எல்லா உறுப்பினர்களுக்கும் முகவரியிடப்படும் விதிமுறைப்பட்ட தொடர்பு மூலம் அவ்வாறு அத்தாட்சிப்படுத்தல் வேண்டும். திருத்தம், பேரவை வேறு தேதியொன்றைக் குறித்துரைத்தாலேயொழிய, விதிமுறைப்பட்ட தொடர்புத் தேதியின் பின்னர் தொண்ணூறு நாட்களில் எல்லா உறுப்பினர்களுக்குமாக வலுவுக்கு வருதல் வேண்டும்.

அத்தியாயம்—XI

## இறுதி ஏற்பாடுகள்

உறுப்புரை 61—வலுவுக்கு வருதல்

(அ) இச்சமவாயம் வங்கியின் எல்லா உறுப்பினர்கள் சார்பிலும், சுவிட்சர்லாந்து சார்பிலும் கையொப்பமிடப்படுவதற்குரியதாதல் வேண்டும் என்பதுடன், கையொப்பமிடும் அரசுகளினால் அவற்றின் அரசியலமைப்புசார் நடவடிக்கை முறைகளுக்கிணங்க ஏற்றங்கீகரிக்கப்படுவதற்கு ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அமைந்ததாதலும் வேண்டும்.

(ஆ) ஓராம் வகுதியிலுள்ள கையொப்பமிடும் அரசுகளின் சார்பில் ஐந்துக்குக் குறையாத ஏற்றங்கீகரிப்பு, ஏற்றுக்கொள்ளல் அல்லது அங்கீகரிப்புச் சாதனங்கள் வைப்பிலிடப்பட்டிருக்கும் நாளன்றும் இரண்டாம் வகுதியிலுள்ள கையொப்ப மிடும் அரசுகளின் சார்பில் பதினைந்துக்குக் குறையாத அத்தகைய சாதனங்கள் வைப்பிலிடப்பட்டிருக்கும் நாளன்றும் இச்சமவாயம் வலுவுக்கு வருதல் வேண்டும்; ஆயின், இந்த அரசுகளின் மொத்த ஒப்பப்பணங்கள் 5 ஆம் உறுப்புரையில் விதித்துரைக்கப்பட்டுள்ளவாறு மூகவர் நிலையத்தின் அதிகாரமளிக்கப்பட்ட மூல தனத்தின் மூன்றிலொன்றுக்குக் குறையாத தொகையாகவிருத்தல் வேண்டும்.

(இ) இச்சமவாயம் வலுவுக்கு வந்ததன் பின்னர் அதன் ஏற்றங்கீகரிப்பு, ஏற்றுக்கொள்ளல் அல்லது அங்கீகரிப்புச் சாதனத்தை வைப்பிலிடும் ஒவ்வோர் அரசுக்குமாக, இச்சமவாயம் அவ்வாறு வைப்பிலிடப்படும் தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும்.

(ஈ) இச்சமவாயம் அது கையொப்பத்திற்குரியதாக வந்ததன் பின்னர், ஈராண்டுக்குள் வலுவுக்கு வராதிருப்பின், வங்கியின் தலைவர், எதிர்கால நட வடிக்கை முறை பற்றித் தீர்மானிப்பதற்கென அக்கறை கொண்ட நாடுகளின் மகாநாடு ஒன்றைக் கூட்டுதல் வேண்டும்.

உறுப்புரை 62—தொடக்கக் கூட்டம்

இச்சமவாயம் வலுவுக்கு வருவதன்மேல், வங்கியின் தலைவர் பேரவையின் தொடக்கக் கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும். இக்கூட்டமானது, இச்சமவாயம் வலுவுக்கு வந்த தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் அல்லது அதன் பின்னர் செயல்முறைக்குகந்தளவு விரைவில் மூகவர் நிலையத்தின் பிரதான அலுவலகத்தில் நடைபெறுதல் வேண்டும்.

உறுப்புரை 63—வைப்பிடம்

இச்சமவாயத்தினை ஏற்றங்கீகரிக்கும், ஏற்றுக்கொள்ளும் அல்லது அங்கீகரிக் கும் சாதனங்களும், அவற்றிற்கான திருத்தங்களும் வங்கியில் வைப்பிலிடப்படுதல் வேண்டும் என்பதுடன், வங்கியானது, இச்சமவாயத்தின் வைப்பிடமாகச் செயற் படுதலும் வேண்டும். வைப்பிடமானது, இச்சமவாயத்தின் அத்தாட்சிப்படுத்தப் பட்ட பிரதிகளை வங்கியின் உறுப்பு நாடுகளுக்கும், சுவிட்சர்லாந்துக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

உறுப்புரை 64—பதிவு செய்தல்

ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் 102 ஆம் உறுப்புரைக்கும், பொதுப் பேரவை யினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவையான அவற்றின் கீழான ஒழுங்கு விதிகளுக்கும் இணங்க வைப்பிடமானது இச் சமவாயத்தை ஐக்கிய நாடுகள் செயலகத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

உறுப்புரை 65—அறிவிப்பு

வைப்பிடமானது கையொப்பமிட்ட எல்லா அரசுகளுக்கும், அத்துடன் இச் சமவாயம் வலுவுக்கு வருவதன்மேல், முகவர் நிலையத்துக்கும் பின்வருவனபற்றி அறிவித்தல் வேண்டும்:—

(அ) இச்சமவாயத்தின் கையொப்பங்கள்;

(ஆ) 68 ஆம் உறுப்புரைக்கிணங்க ஏற்றங்கீகரிப்பு, ஏற்றுக்கொள்ளல், அங்கீகரிப்புச் சாதனங்களின் வைப்புக்கள்;

(இ) 61 ஆம் உறுப்புரைக்கிணங்க இச்சமவாயம் வலுவுக்கு வந்த தேதி;

(ஈ) 66 ஆம் உறுப்புரையைப் பின்பற்றி ஆள்புலஞ்சார் ஏற்புடைமையிலிருந்து விலக்கிவைத்தல்கள்; அத்துடன்

(உ) 51 ஆம் உறுப்புரையைப் பின்பற்றி முகவர் நிலையத்திலிருந்து உறுப்பினர் ஒருவர் மீளப் பெறல்.

உறுப்புரை 66—ஆள்புலஞ்சார் ஏற்புடைமை

இச்சமவாயம், உறுப்பினரின் நியாயாதிக்கத்தின் கீழான எல்லா ஆள்புலங்களுக்கும் எந்த ஆள்புலங்களின் சருவதேசத் தொடர்புகளுக்கு உறுப்பினர் பொறுப்பாகவுள்ளதோ அந்த ஆள்புலங்கள் உள்ளிட்டதாகவும், ஒன்றின் ஏற்றங்கீகரிக்கும், ஏற்றுக்கொள்ளும் அல்லது அங்கீகரிக்கும் நேரத்திலோ அல்லது அதற்குப் பின்னரோ இச்சமவாயத்தின் வைப்பிடத்திற்குச் செய்யப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய உறுப்பினரால் விலக்கி வைக்கப்பட்டவையான ஆள்புலங்களைத் தவிர்ந்தும் ஏற்புடையதாதல் வேண்டும்.

உறுப்புரை 67—காலாந்தர மீளாய்வுகள்

(அ) முகவர் நிலையத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுதற்கான அதன் இயலுமாந் தன்மையை அதிகரிப்பதற்குத் தேவையான மாற்றங்கள் எவற்றையும் உட்புகுத்தும் நோக்குடன், முகவர் நிலையத்தின் செயற்பாடுகளும், எய்தப்பெற்ற பெறுபேறுகளும் பற்றிய முழுநிறைவான மீளாய்வுகளைப் பேரவை காலந்தோறும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய முதலாவது மீளாய்வு, இச்சமவாயம் வலுவுக்கு வந்த பின்னர் ஐந்து ஆண்டுகளில் இடம் பெறுதல் வேண்டும். பின்னைய மீளாய்வுத் தேதிகள் பேரவையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

சியோல் என்னுமிடத்தில் தனித்ததொரு பிரதியில் ஆக்கப்பட்ட இத்தனிப் பிரதி, மீளமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சருவதேச வங்கியின் சுவடி நிலையத்தில் வைப்பிலிடப்பட்டு இருத்தல் வேண்டும். இவ் வங்கி, இச்சமவாயத்தின் கீழ் அதற்குப் பொறுப்பிக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்கான அதன் உடன்பாட்டைக் கீழேயுள்ள அதன் கையொப்பம் மூலமாக எடுத்துக் காட்டியுள்ளது.

பின்னிணைப்பு I

24 ஆம் உறுப்புரையின் கீழ் ஆதரவளிக்கப்பட்ட முதலீடுகளின் உத்தரவாதங்கள்

உறுப்புரை 1—ஆதரவாண்மை

(அ) ஏதேனும் நாட்டினத்தைச் சேர்ந்த ஒரு முதலீட்டாளரால் அல்லது எவையேனும் அல்லது பல்வேறு நாட்டினங்களைச் சேர்ந்த முதலீட்டாளர்களினல் செய்யப்படவுள்ள ஒரு முதலீட்டுக்கு உத்தரவாதமளிப்பதற்கு உறுப்பினர் எதுவும் ஆதரவளிக்கலாம்.

(ஆ) இப்பின்னிணைப்பின் 3 ஆம் உறுப்புரையின் (ஆ), (இ) ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஆதரவளிக்கும் ஒவ்வோர் உறுப்பினரும் ஆதரவளிக்கப்பட்ட முதலீடுகளின் உத்தரவாதங்களின் கீழான இழப்புக்களை, அத்தகைய இழப்புக்கள் இந்தப் பின்னிணைப்பின் 2 ஆம் உறுப்புரையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆதரவாண்மை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து ஈடு செய்யப்பட முடியாதனவாகவிருக்கும் போதும், இருக்குமளவுக்கும், அதனுல் ஆதரவளிக்கப்பட்ட முதலீடுகளின் உத்தரவாதங்களின் கீழ் ஆகக்கூடிய எதிர் பாராப் பொறுப்புத் தொகையானது, எல்லா உறுப்பினர்களினுலும் ஆதரவளிக் கப்பட்ட முதலீடுகளின் உத்தரவாதங்களின் கீழ் ஆகக்கூடிய எதிர்பாராப் பொறுப் பின் மொத்தத் தொகைக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த விகிதாசாரத்தில், ஏனைய ஆதரவளிக்கும் உறுப்பினர்களுடன் பங்கிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

(இ) இப்பின்னிணைப்பின் கீழான உத்தரவாதங்களை வழங்குவது பற்றிய அதன் முடிபுகளில், முகவர் நிலையமானது, ஆதரவளிக்கும் உறுப்பினரானது இப்பின்னிணைப்பின் கீழான அதன் கடப்பாடுகளைச் சமாளிப்பதற்கான நிலைமையில் இருக்கும் என்னும் எதிர்கால வாய்ப்புக்கு உரிய கவனஞ் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், சம்பந்தப்பட்ட ஓம்பு நாடுகளினுல் கூட்டு ஆதரவளிக்கப்பட்ட முதலீடுகளுக்கு முன்னுரிமை அளித்தலும் வேண்டும்.

(ஈ) முகவர் நிலையமான இப்பின்னிணைப்பின் கீழான அதன் தொழிற்பாடுகள் தொடர்பில் ஆதரவளிக்கும் உறுப்பினர்களைக் காலந்தோறும் கலந்தாலோசித்தல் வேண்டும்.

உறுப்புரை 2—ஆதரவாண்மை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

(அ) ஆதரவளிக்கப்பட்ட முதலீடுகளின் உத்தரவாதங்களுக்குச் சார்த்தப் படற்பாலனவான கட்டுப்பணங்களும், வேறு அரசிறைகளும், அத்தகைய கட்டுப் பணங்களினதும் அரசிறைகளினதும் முதலீட்டின் மீதான தேறல்கள் உட்பட ஆதரவாண்மை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என அழைக்கப்படும் தனி வேறு கணக்கொன்றில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) இந்தப் பின்னிணைப்பின் கீழ் வழங்கப்படும் உத்தரவாதங்களுக்குச் சார்த்தப்படற்பாலனவான உரிமைக் கோரிக்கைகள் மீதான எல்லா நிருவாகச் செலவுகளும், கொடுப்பனவுகளும் ஆதரவாண்மை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து செலுத்தப்படுவனவாதல் வேண்டும்.

(இ) ஆதரவாண்மை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சொத்துக்கள், ஆதரவளிக்கும் உறுப்பினர்களின் கூட்டுக் கணக்குக்காக வைத்திருக்கப்படுதலும் நிர்வகிக்கப்படுதலும் வேண்டும் என்பதுடன், முகவர் நிலையத்தின் சொத்துக்களினின்றும் தனிவேருகவும், வேருகவும் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*உறுப்புரை 3—ஆதரவளிக்கும் உறுப்பினர்கள் மீதான அழைப்புக்கள்*

(அ) ஆதரவளிக்கப்பட்ட ஓர் உத்தரவாதத்தின் கீழான இழப்பு ஒன்றின் கணக்கின் பேரில் முகவர் நிலையத்தினல் ஏதேனும் தொகை செலுத்தப்படற்பாலதாகவிருந்தும், அத்தகைய தொகை ஆதரவாண்மை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் சொத்துக்களிலிருந்து செலுத்தப்பட முடியாததாகவிருக்கும் அளவுக்கும், முகவர் நிலையமானது, இந்தப் பின்னிணைப்பின I ஆம் உறுப்புரையின் (ஆ) என்னும் பிரிவுக்கிணங்கத் தீர்மானிக்கப்பட வேண்டியவாறு அத்தகைய தொகையில் அதன் பங்கை அத்தகைய நிதியத்திற்குச் செலுத்துமாறு ஒவ்வோர் ஆதரவளிக்கும் உறுப்பினரையும் அழைத்தல் வேண்டும்.

(ஆ) உறுப்பினரினல் செய்யப்படும் மொத்தக் கொடுப்பனவுகள், அதனல் ஆதரவளிக்கப்பட்ட முதலீடுகளை மேவுவனவான உத்தரவாதங்களின் மொத்தத் தொகையை விஞ்சுவதாக்குமாயின், அவ்வுறுப்பினர் எதுவும் இந்த உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்பற்றிய ஓர் அழைப்பின் பேரில் எத்தொகையையும் செலுத்தற்காளாதல் ஆகாது.

(இ) ஓர் உறுப்பினரால் ஆதரவளிக்கப்பட்ட முதலீடு ஒன்றை மேவுவதான உத்தரவாதம் எதுவும் முடிவடைவதன் மீது, அவ்வுறுப்பினரின் பொறுப்பு அத்தகைய உத்தரவாதத் தொகைக்குச் சமமானவொரு தொகையினல் குறைக்கப்படுதல் வேண்டும்; அத்தகைய பொறுப்பும், ஆதரவளிக்கப்பட்ட முதலீடொன்றுடன் தொடர்புபட்ட ஏதேனும் உரிமைக் கோரிக்கை, முகவர் நிலையத்தினல் செலுத்தப்படுவதன் மேல் சரிசம வீதமானவோர் அடிப்படையில் குறைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறில்லாவிடில், அத்தகைய கொடுப்பனவு நேரத்தில் நிலுவையாகவுள்ள ஆதரவளிக்கப்பட்ட முதலீடுகளின் உத்தரவாதங்கள் யாவும் முடிவடைகின்றவரையில் தொடர்ந்து பயனுறுதல் வேண்டும்.

(ஈ) ஆதரவளிக்கும் உறுப்பினர் எதுவும், மேற்கூறிய (ஆ), (இ) ஆகிய பிரிவுகளில் அடங்கியுள்ள வரையறையின் காரணமாக இந்த உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்பற்றிய அலைப்பின் பேரிலான தொகைக்குப் பொறுப்பாகவில்லாதிருப்பின், அல்லது அதரவளிக்கும் உறுப்பினர் எதுவும் அத்தகைய ஏதேனும் அழைப்பின் பேரில் செல்மதியான தொகையொன்றைச் செலுத்தத் தவறுமாயின், அத்தகைய தொகையைச் செலுத்தற்கான பொறுப்பானது ஏனைய ஆதரவளிக்கும் உறுப்பினர்களினல் சரிசம வீதப்படியானவொரு அடிப்படையில் பங்கீட்டுக்கொள்ளப்படுதல் வேண்டும். இப்பிரிவைப் பின்பற்றி உறுப்பு நாடுகளின் பொறுப்பானது மேற்கூறிய (ஆ), (இ) ஆகிய பிரிவுகளில் தரப்பட்டுள்ள வரையறைக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

(உ) இந்த உறுப்புரைக்கிணங்கிய ஓர் அமைப்பைப் பின்பற்றி, ஆதரவளிக்கும் உறுப்பினர் ஒன்றினல் செய்யப்படும் கொடுப்பனவு எதுவும் உடனடியாகவும், கட்டற்ற முறையில் பயன்படத்தகு நாணயத்திலும் செய்யப்படுதல் வேண்டும்.

*உறுப்புரை 4—நாணயங்களின் பெறுமான மதிப்பிடலும், மீளளிப்புக்களும்*

மூலதன ஒப்பப் பணங்கள் தொடர்பில் இச்சமவாயத்தில் அடங்கி உள்ள நாணயங்களின் பெறுமான மதிப்பிடலும் மீளளிப்புக்களும் பற்றிய ஏற்பாடுகள், ஆதரவளிக்கப்பட்ட முதலீடுகளின் கணக்கின் பேரில் உறுப்பினர்களால் செலுத்தப் படும் நிதிகளுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*உறுப்புரை 5—மீள்காப்புறுதி*

(அ) முகவர் நிலையமானது, இந்தப் பின்னிணைப்பின் I ஆம் உறுப்புரையில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ், ஓர் உறுப்பினருக்கு, அதன் முகவருக்கு, இச் சமவாயத்தின் 20 ஆம் உறுப்புரையின் (அ) என்னும் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள நாடொன்றில் உள்ள தனிப்பட்ட ஒரு காப்புறுதியாளருக்கு மீள் காப்புறுதி ஏற்பாடு செய்யலாம். உத்தரவாதங்கள் சம்பந்தமான இந்தப் பின்னிணைப்பினதும், இச்சமவாயத்தின் 20 ஆம், 21 ஆம் உறுப்புரைகளினதும் ஏற்பாடுகள் இப்பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்படும் மீள் காப்புறுதிக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(ஆ) முகவராண்மை நிலையம், இப்பின்னிணைப்பின் கீழ்த் தன்னுல் உத்தர வாதம் செய்யப்பட்ட முதலீடுகளுக்கு மீள் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளலா மென்பதுடன், மீள் காப்புறுதி செய்வதற்கான செலவுத் தொகைகளை ஆதர வாண்மை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து பெற்றும் கொள்ளலாம். சபையானது, இவ்விணைப்பின் உறுப்புரை (1) இன் (ஆ) என்னும் பிரிவின் கீழ்க் குறிப்பீடு செய்யப்படும் ஆதரவாளிக்கும் உறுப்பினர்களின் நட்டத்தைப் பங்கிடும் கடப்பாடு, மீள் காப்புறுதி செய்யப்படுவதன் மூலம் குறைக்கப்படலாமென்பது பற்றியும், அது எந்த அளவுக்குக் குறைக்கப்படலாமென்பது பற்றியும் தீர்மானிக் கலாம்.

*உறுப்புரை 6—தொழிற்பாட்டு நெறிகள்*

இப்பின்னிணைப்பின் ஏற்பாடுகளுக்குப் பங்கம் விளைவிக்காது இச்சமவாயத் தின் III ஆம் அத்தியாயத்தின் கீழான உத்தரவாதம் தொடர்பிலான ஏற்பாடு களும் இச்சமவாயத்தின் IV ஆம் அத்தியாயத்தின் கீழான நிதி முகாமை ஏற்பாடு களும்:—(i) அத்தகைய முதலீடுகள், எவரேனும் உறுப்பினரின் அத்துடன் குறிப் பாக எவரேனும் அபிவிருத்தியடையும் உறுப்பினரின் ஆள்புலன்களில் இப்பின் னிணைப்புக்கான 1 ஆம் உறுப்புரையின் (அ) என்னும் பிரிவின் கீழ்த் தகுதியுடைய வரான முதலீட்டாளர் அல்லது முதலீட்டாளர்களால் செய்யப்பட்டிருந்தால், ஆதரவாண்மைக்கு அத்தகைய முதலீடுகள் தகுதியுடையனவாதல் வேண்டுமென் பதிலும்; அத்துடன் (ii) இப்பின்னிணைப்பின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உத்தரவாதத்துக்கு அல்லது மீள் காப்புறுதிக்கு முகவர் நிலையமானது அதன் சொந்தச் சொத்துக்கள் தொடர்பாகப் பொறுப்புடையதாகாது என்பதிலும் தவிர, ஆதரவளிக்கப்பட்ட முதலீட்டு உத்தரவாதங்களுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*உறுப்புரை 7*—வாக்களித்தல்

ஆதரவளிக்கப்பட்ட முதலீடுகளுக்கான தீர்மானங்களைப் பொறுத்தவரையில், ஆதரவளிக்கும் ஒவ்வோர் உறுப்பினரும், ஆதரவாண்மையின் அடிப்படையில் மீள் காப்புறுதி செய்யப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட தொகைக்கு ஈடான ஒவ்வொரு 10,000 விசேட பண உரிமைக்கும் ஒரு மேலதிக வாக்கை யுடையவராதல் வேண்டுமென்பதுடன், ஆதரவளிக்கப்பட்ட முதலீட்டை ஓம்பும் ஒவ்வோர் உறுப்பினரும், அதனால் ஓம்பப்படும் ஏதேனும் ஆதரவளிக்கப்பட்ட முதடுலீ தொடர்பில் மீள் காப்புறுதி செய்யப்படும் அல்லது உத்தரவாதமளிக்கப் படும் தொகைக்கீடான ஒவ்வொரு 10,000 விசேட பண உரிமைக்கும் ஒரு மேலதிக வாக்கையும் உடையவராயிருத்தல் வேண்டும். அத்தகைய மேலதிக வாக்குகள் ஆதரவளிக்கப்பட வேண்டுமென்பதுடன் உறுப்பினர்களின் வாக்களிக்கும் தத்துவத்தை நிர்ணயிக்கும் போது கவனத்திலெடுக்கப்படமுடியாததுமாகும்.

## பின்னிணைப்பு II

### 57 ஆம் உறுப்புரையின் கீழ் ஓர் உறுப்பினருக்கும் முகவராண்மை நிலையத்துக்கு மிடையிலான பிணக்குகள் தீர்க்கப்படுதல்

*உறுப்புரை 1*—இப்பின்னிணைப்பின் ஏற்புடைமை

57 ஆம் உறுப்புரையின் பிரிவு (ஆ) (ii) வின் அடிப்படையில் முகவ ராண்மை, நிலையம், ஓர் உறுப்பினருடன் உடன்படிக்கை செய்து கொண்ட விடயங்கள் தவிர்ந்த இச்சமவாயத்தின் எல்லைக்குள்ளான எல்லாப் பிணக்குகளும், இப்பின்னிணைப்பில் குறிப்பிட்டுள்ளபடி நடபடி முறைக்கிணங்கத் தீர்க்கப்படுதல் வேண்டும்.

*உறுப்புரை 2*—இணக்கப் பேச்சு

இப்பின்னிணைப்பின் எல்லைக்குள்ளான ஒரு பிணக்கின் கட்சிக்காரர்கள் இணக் கத்தை அல்லது நடுத்தீர்ப்பை நாட முன்னர் தமக்குள் இணக்கப் பேச்சு மூலம் அப்பிணக்கைத் தீர்க்க முயல வேண்டும். கட்சிக்காரர்கள் இணக்கப் பேச்சை ஆரம்பிக்கக் கோரிய தேதியிலிருந்து நூற்றிருபது நாட்கள் கொண்ட காலப் பகுதிக்குள் ஒரு தீர்வுக்கு வராவிடில், இணக்கப் பேச்சுக்கள் முடிவடைந்ததாகக் கருதப்படுதல் வேண்டும்.

*உறுப்புரை 3*—இணக்கம்

*(அ)* இணக்கப் பேச்சு மூலம் பிணக்கு தீர்க்கப்படாவிடின், கட்சிக்காரர்கள் பரஸ்பர இணக்கம் மூலம் இவ்வுறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இணக்க நடபடி முறையை முதலில் நாடத் தீர்மானித்திருந்தாலேயொழிய, ஏதேனும் கட்சிக்காரர் இப்பின்னிணைப்பின் 4 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க பிணக்கை நடுத்தீர்ப்புக்காகச் சமர்ப்பிக்கலாம்.

(ஆ) இணக்கத்தை வேண்டிய உடன்படிக்கையானது, பிணக்கின் விடயம், அது தொடர்பிலான கட்சிக்காரர்களின் கோரிக்கைகள், அத்துடன் முடியுமானல் கட்சிக்காரர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட இணக்குபவரின் பெயரையும் குறித்துரைத்தல் வேண்டும். இணக்குபவர் பற்றிய உடன்படிக்கை இல்லாத விடத்து, கட்சிக்காரர்கள் கூட்டாக, (இதனகத்துப் பின்னர் மு. பி. தீ. வை. ச.நி. எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதலீட்டுப் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கான சர்வதேச நிலையத்தின் செயலாளர் நாயகத்தை அல்லது சர்வதேச நீதிமன்றத் தலைவரை ஒரு இணக்குபவரை நியமிக்கும்படி வேண்டலாம். இணக்கத்தை வேண்டி உடன்படிக்கை செய்யப்பட்ட தொண்ணூறு நாட்களுக்குள் இணக்குபவர் நியமிக்கப்படாவிடின், இணக்க நடபடி முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

(இ) இப்பின்னிணைப்பில் வேறு விதமாக ஏற்பாடு செய்யப்பட்டு அல்லது கட்சிக்காரர்கள் உடன்பட்டிருந்தாலேயொழிய, இணக்குபவர், இணக்க நடபடி முறையை ஆக்கும் ஒழுங்குவிதியை நிர்ணயிக்கலாம். அத்துடன் இது தொடர்பில், அரசுகளுக்கும் வேறு அரசுகளின் நாட்டவர்களுக்குமிடையிலான முதலீட்டுப் பிணக்குத் தீர்த்தல் மீதான சமவாயத்திஞல் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்க விதிகளை வழிகாட்டியாகக் கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) கட்சிக்காரர்கள் நல்லெண்ணத்துடன் இணக்குபவருடன் ஒத்துழைத்தல் வேண்டுமென்பதுடன், விசேடமாக அவர் தமது பணிகளை நிறைவேற்றுவதற்கு உதவக்கூடிய ஆவணங்களையும் தகவல்களையும் கொடுத்துதவவும் வேண்டும்; அவர்கள் அவரது விதப்புரைகளுக்கு மிக முக்கியத்துவம் கொடுத்தலும் வேண்டும்.

(உ) இணக்குபவர், கட்சிக்காரர்கள் வேறு விதமாக இணங்கிக் கொண்டாலேயன்றி, அவரது நியமனத் தேதியிலிருந்து நூற்றெண்பது நாட்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்குள், அவரது முயற்சிகளின் பெறுபேற்றையும், கட்சிக்காரர்களுக்கிடையிலான சர்ச்சைக்குரிய விடயங்களையும், அவற்றைத் தீர்ப்பதற்கான தமது யோசனைகளையும் எடுத்துக் காட்டுவதுமான ஓர் அறிக்கையைக் கட்சிக்காரர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) ஒவ்வொரு கட்சிக்காரரும், அறிக்கை கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் அறிக்கை பற்றிய தமது கருத்தை மற்றைய கட்சிக்காரருக்கு எழுத்து மூலம் தெரிவித்தல் வேண்டும்.

(எ) (i) மேற்கூறப்பட்ட பிரிவு (உ) வில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியினுள் இணக்குபவர் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கத் தவறியிருந்தால்; அல்லது

(ii) கட்சிக்காரர்கள், அறிக்கை கிடைக்கப்பெற்ற அறுபது நாட்களுக்குள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள எல்லா யோசனைகளையும் ஏற்கத் தவறியிருந்தால்; அல்லது

(iii) கட்சிக்காரர்கள் அறிக்கை பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொண்ட பின்னர், இணக்குபவரின் அறிக்கை கிடைக்கப்பெற்ற அறுபது நாட்களுக்குள், சர்ச்சைக்குரிய எல்லா விடயங்களிலும் ஓர் உடன்பாடு காணத் தவறியிருந்தால்;

(iv) மேற்கூறப்பட்ட பிரிவு (ஊ) இல் விதித்துரைக்கப்பட்ட வண்ணம் கட்சிக்காரர்கள் அறிக்கை பற்றிய தமது கருத்தைத் தெரிவிக்கத் தவறியிருந்தால்,

அன்றி இணக்கத்தின் பின் எந்தக் கட்சிக்காரரும் நடுத் தீர்ப்பை நாட உரித்துடையவராதலாகாது.

(ஏ) கட்சிக்காரர்கள் வேறு வகையாக இணங்கிக் கொண்டாலேயொழிய, இணக்குபவரின் கட்டணம் மு. பி. தீ. வை. ச. நிலைய இணக்கத்துக்கு ஏற்புடைய தான வீதங்களில் இருத்தல் வேண்டும். இக்கட்டணங்களும், இணக்க நடபடி முறையின் ஏனைய செலவுகளும், கட்சிக்காரர்களிடையே சமமாகப் பங்கிடப் படுதல் வேண்டும். ஒவ்வொரு கட்சிக்காரரும் தமது செலவுகளைக் கொடுத்துத் தீர்த்தல் வேண்டும்.

உறுப்புரை 4—நடுத்தீர்த்தல்

(அ) நடுத்தீர்த்தல் நடபடிக்கை முறையானது, நடுத்தீர்த்தலை நாடும் கட்சிக் காரரால் (கோரிக்கையாளன்) பிணக்கின் ஏனைய கட்சிக்காரர் அல்லது கட்சிக் காரர்களுக்கு (எதிர்வாதிகள்) முகவரியிடப்பட்ட அறிவித்தலைக் கொடுப்பதன் மூலம் தொடுக்கப்படுதல் வேண்டும். இவ்வறிவித்தலானது பிணக்கின் இயல்பையும், கோரப்பட்ட நிவாரணம், கோரிக்கையாளரினால் நியமிக்கப்பட்ட நடுத் தீர்ப்பாளரின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். எதிர்வாதி, அறிவித்தல் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், தன்னால் நியமிக்கப்படும் நடுத்தீர்ப்பாளரின் பெயரைக் கோரிக்கையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இரு கட்சிக்காரர்களும், இரண்டாவது நடுத்தீர்ப்பாளர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், நடுத்தீர்ப்பு நியாய சபையின் (நியாய சபையின்) தலைவராகக் கடமையாற்ற வேண்டிய மூன்றும் நடுத்தீர்ப்பாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(ஆ) அறிவித்தல் தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் நியாய சபை அமைக்கப்படாதவிடத்து, நடுத்தீர்ப்பாளர் இன்னும் நியமிக்கப்படாதவிடத்து அல்லது தலைவர் தெரிவுசெய்யப்படாதவிடத்து, கட்சிக்காரர்களின் கூட்டு வேண்டுகோளின்மீது மு. பி. தீ. வை. ச. நிலையத்தின் செயலாளர் நாயகத்தினால் நியமனம் செய்யப்படலாம். அத்தகைய கூட்டு வேண்டுகோள் இல்லாதவிடத்து, அல்லது வேண்டுகோள் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் செயலாளர் நாயகம் நியமனம் செய்யப்படாதவிடத்து, எந்தக் கட்சிக்காரராவது சர்வதேச நீதிமன்றத்தின் தலைவரை, நியமனத்தைச் செய்யும்படி கோரலாம்.

(இ) எந்தக் கட்சிக்காரராவது பிணக்கின் விசாரணை ஆரம்பமாகிய பின்னர் தம்மால் நியமிக்கப்பட்ட நடுத்தீர்ப்பாளரை மாற்ற உரித்துடையவரல்லர். (நியாய சபையின் தலைவர் உட்பட) எவரேனும் நடுத்தீர்ப்பாளர் இராஜினாமாச் செய்யுமிடத்து, இறக்குமிடத்து அல்லது வலுவிழக்குமிடத்து, அவருக்கு முந்திய வரின் நியமனத்தின்போது கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றி ஒரு அடுத்துறுபவர் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அடுத்துறுபவர் தாம் அடுத்துறும் நடுத்தீர்ப்பாளருடைய அதே தத்துவங்களையும் கடமைகளையும் உடையவராதலும் வேண்டும்.

(ஈ) நியாய சபையானது தலைவரினால் நிர்ணயிக்கப்படவேண்டிய அத்தகைய நேரத்திலும் இடத்திலும் முதலில் கூட்டப்படுதல் வேண்டும். அதன் பின்னர் சபை அதன் கூட்டங்களின் தேதிகளையும் இடத்தையும் நிர்ணயிக்கலாம்.

(உ) இவ்விணைப்பில் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டு அல்லது கட்சிக் காரர்கள் உடன்பட்டிருந்தாலொழிய, சபை தனது நடபடிமுறையை நிர்ணயிக் கலாமென்பதுடன் அது தொடர்பில் அரசுகளுக்கும் வேறு அரசுகளின் நாட்டவர் களுக்குமிடையிலான முதலீட்டுப் பிணக்குகளைத் தீர்த்தல் மீதான சமவாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடுத்தீர்த்தல் விதிகளை வழிகாட்டிகளாகக் கொள்ளுதல் வேண்டும்.

(ஊ) பிணக்கானது 56 ஆம் உறுப்புரையின் கீழ்ச் சபையின் அல்லது பேரவை யின் நியாயாதிக்கத்தினுள் அல்லது இப்பின்னிணைப்பின் 1 ஆம் உறுப்புரையின் கீழான உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பெயர் குறித்த நியாய குழுவின் அல்லது நீதிச் சபையின் நியாயாதிக்கத்தினுள் வரும் பிணக்கொன்றாகும் என்ற விளைவையுடைய ஆட்சேபனையொன்று சபையின் முன்னர் தெரிவிக்கப் பட்டு, அவ்வாட்சேபனை உண்மையானதென்று சபைக்கு அல்லது பேரவைக்கு அல்லது பெயர் குறித்த குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டிய சந்தர்ப்பம் தவிர்ந்த சந்தர்ப்பங்களில், நியாய சபை தனது சொந்தத் தகைமையில் நீதிபதியாக இருத்தல் வேண்டும். பிணக்கு, மேற்கூறப்பட்ட விதத்தில் ஆற்றுப் படுத்தப்படும்போது விடயத்துக்கான முடிவு காணப்படும் வரை, நடுத்தீர்ப்பு நடபடிக்கைகள் நிறுத்தி வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் எடுக்கப்படும் முடிபு நியாய சபையைக் கட்டுப்படுத்தலும் வேண்டும்.

(எ) நியாய சபை, இப்பின்னிணைப்பின் எல்லைகளுக்குள்ளான ஏதேனும் பிணக்கு விடயத்தில், இச்சமவாயத்தின் ஏற்பாடுகளையும், பிணக்கின் கட்சிக்காரர் களிடையிலான சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை, முகவராண்மை நிலை யத்தின் துணைநிலைச் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், சர்வதேச சட்டத்திற்கு ஏற் புடையதான விதிகள், உறுப்பினர் தொடர்பான உள்ளூர் சட்டம் அத்துடன் முதலீட்டு ஒப்பந்தம் ஏதேனும் இருப்பின் அதன் ஏற்புடையதாக்கப்படக்கூடிய ஏற்பாடுகள் ஆகியவற்றை, ஏற்புடையனவாக்குதல் வேண்டும். இச்சமவாயத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றியும் நியாயசபையானது, முகவர் நிலையமும், சம்பந் தப்பட்ட உறுப்பினரும் அவ்வாறு உடன்பட்டால், ஒப்புரவான முறையிலும், நன்னோக்காவும் பிணக்கத்தைத் தீர்க்கலாம். நியாயசபையானது சட்டத்தின் தெளிவின்மை அல்லது மௌனம் காரணமாகத் தெளிவில்லாத முடிவொன்று எடுக்க முடியாது.

(ஏ) நியாயசபை, எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் நியாயமான விசாரணையை வழங்குதல் வேண்டும். சபையின் எல்லா முடிபுகளும் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு எடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் முடிபுகளின் அடிப்படையான காரணங்களையும் குறிப்பிடுதல் வேண்டும். நியாயசபையின் அளிப்பு, எழுத்தி லிருத்தல் வேண்டுமென்பதுடன், குறைந்தது இரண்டு நடுத் தீர்ப்பாளர்களா லாவது கையொப்பமிடப்பட்டு அதன் பிரதி ஒவ்வொரு கட்சியினருக்கும் அனுப்பப் படுதலும் வேண்டும். அளிப்பு இறுதியானதும், கட்சிக்காரர்களைக் கட்டுப்படுத்து வதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் அது மேன்முறையீட்டுக்கு, நீக்கஞ் செய்தலுக்கு அல்லது மீளாய்வுக்கு உட்பட்டதாதல் ஆகாது.

(ஐ) அளிப்பின் எல்லை, பொருள் பற்றிக் கட்சிக்காரர்களுக்கிடையில் ஏதேனும் பிணக்கு ஏற்படுமாயின் எவரேனும் கட்சிக்காரர் அளிப்புக் கொடுக்கப்பட்ட அறுபது நாட்களுக்குள் எந்த நியாயசபை அளிப்பை வழங்கியதோ அந்த நியாயசபையின் தலைவருக்கு எழுத்திலான விண்ணப்பம் மூலம் அளிப்பைப் பற்றிய பொருள் விளக்கம் செய்யும்படி வேண்டலாம். தலைவர், அத்தகைய விண்ணப்பம் பெறப்பட்ட அறுபது நாட்களுக்குள், எந்த நியாயசபை அளிப்பை வழங்கியதோ, அந்த நியாயசபையைக் கூட்டுதல் வேண்டுமென்பதுடன் இயலுமானால் அந்த நியாயசபைக்கு அந்த வேண்டுகோளைச் சமர்ப்பித்தலும் வேண்டும். இது இயலாத விடத்து, மேற்கூறப்பட்ட (அ) தொடக்கம் (ஈ) வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஒரு புதிய நியாயசபை அமைக்கப்படுதல் வேண்டும். நியாயசபை, வேண்டுகோள் விடுக்கப்பட்ட பொருள் விளக்கத்தின் மீதான முடிவு எடுக்கப்படும்வரை, அளிப்பு வலுவுக்கிடப்படுவதைத் தடுத்து வைக்கலாம்.

(ஒ) ஒவ்வோர் உறுப்பினரும், இவ்வுறுப்புரையின் பயனுக அளிக்கப்பட்ட அளிப்பை, அவ்வுறுப்பினரின் ஆள்புல எல்லைக்குள்ளான ஒரு நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பொன்றுற்போன்று கட்டுப்படுத்துவதொன்ருகவும், வலுவுக்கிடப் படக்கூடியதொன்ருகவும் அங்கீகரித்தல் வேண்டும். அளிப்பின் நிறைவேற்றுதலானது, எந்த நாட்டின் ஆள்புலத்தின் நிறைவேற்றல் நாடப்பட்டுள்ளதோ, அந்த நாட்டில், தீர்ப்பு நிறைவேற்றல் தொடர்பிலான சட்டங்களால் ஆளப்படுதல் வேண்டுமென்பதுடன் நிறைவேற்றுதலிலிருந்து விடுபடுவது தொடர்பில் நடைமுறையிலுள்ள சட்டத்தின் மதிப்பைக் குறைப்பதாகக் கருதமுடியாததுமாகும்.

(ஓ) கட்சிக்காரர்கள், வேறுவிதமாக உடன்பட்டுக் கொண்டாலன்றி நடுத்தீர்ப்பாளர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களும், ஊதியமும், மு. பி. தீ. வை. ச. நிலைய நடுத்தீர்ப்பாளர் ஒருவருக்குக் கொடுக்கப்படும் வீதத்தினடிப்படையில் செலுத்தப்படுதல் வேண்டும். நடுத்தீர்ப்பு நடபடிக்கை தொடர்பான செலவு தொகைகளை, ஒவ்வொரு கட்சிக்காரரும் கொடுத்துத் தீர்த்தல் வேண்டும். நியாயசபையின் செலவு தொகைகள் நியாயசபை வேறு விதமாகத் தீர்மானித்தாலேயன்றி, கட்சிக்காரரால் சம விகிதாசாரப்படி கொடுக்கப்படுதல் வேண்டும். நியாயசபையின் வழக்குத் தொகையைப் பிரிப்பது தொடர்பான அல்லது அத்தகைய செலவு தொகை செலுத்தும் முறை தொடர்பான ஏதேனும் விடயம் நியாயசபையினுல் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

உறுப்புரை 5—மன்ருணை சேர்ப்பித்தல்

இப்பின்னிணைப்பின் கீழான ஏதேனும் நடபடிக்கை தொடர்பிலான சேர்ப்பித்தல், மன்ருணை அல்லது அறிவித்தல் எழுத்திலிருத்தல் வேண்டும். அது, இச்சமவாயத்தின் 38 ஆம் உறுப்புரையின் விளைவாக, சம்பந்தப்பட்ட உறுப்பினரால் பெயர்குறிக்கப்பட்ட அதிகார சபையின் மீது முகவர் நிலையத்தினுலும் அந்த உறுப்பினராலும் முகவர் நிலையத்தின் பிரதான அலுவலகத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

அட்டவணை—அ

## உறுப்பாண்மையும் ஒப்பப்பணமும்

### வகுதி ஒன்று

| நாடு | பங்கு எண்ணிக்கை | ஒப்பப்பணம் (மில்லியன் வி.ப.உ.) |
|---|---|---|
| அவுஸ்திரேலியா | 1,713 | 17.13 |
| அவுஸ்திரியா | 775 | 7.75 |
| பெல்ஜியம் | 2,030 | 20.30 |
| கனடா | 2,965 | 29.65 |
| டென்மார்க் | 718 | 7.18 |
| பின்லாந்து | 600 | 6.00 |
| பிராங்சு | 4,850 | 48.00 |
| ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு | 5,071 | 50.71 |
| ஐஸ்லாந்து | 90 | 0.90 |
| அயர்லாந்து | 369 | 3.69 |
| இத்தாலி | 2,820 | 28.20 |
| ஜப்பான் | 5,095 | 50.96 |
| லக்சம்போர்க் | 116 | 1.16 |
| நெதர்லாந்து | 2,169 | 21.69 |
| நியூசிலாந்து | 513 | 5.13 |
| நோர்வே | 697 | 6.97 |
| தென்னுபிரிக்கா | 943 | 9.43 |
| சுவீடன் | 1,049 | 10.49 |
| சுவிட்சர்லாந்து | 1,500 | 15.00 |
| ஐக்கிய இராச்சியம் | 4,860 | 48.60 |
| ஐக்கிய அமெரிக்கா | 20,519 | 205.19 |
| | 59,473 | 594.73 |

### வகுதி இரண்டு

| | பங்கு எண்ணிக்கை | ஒப்பப்பணம் (மில்லியன் வி.ப.உ.) |
|---|---|---|
| ஆப்கானிஸ்தான் | 118 | 1.18 |
| அல்ஜீரியா | 649 | 6.49 |
| அன்டிகாவும் பார்புடாவும் | 50 | 0.50 |
| ஆர்ஜன்டினு | 1,254 | 12.54 |
| பஹமாஸ் | 100 | 1.00 |
| பாரேன் | 77 | 0.77 |
| பங்களாதேஷ் | 340 | 3.40 |
| பாபபோஸ் | 68 | 0.68 |
| பெலிஸ் | 50 | 0.50 |

| நாடு | பங்கு எண்ணிக்கை | ஒப்பப்பணம் (மில்லியன் வி.ப.உ) |
|---|---|---|
| பெனின் | 61 | 0.61 |
| பூட்டான் | 50 | 0.50 |
| பொலிவியா | 125 | 1.25 |
| பொஸ்ஸ்வனு | 50 | 0.50 |
| பிரேஸில் | 1,479 | 14.79 |
| பேர்கின்பசோ | 61 | 0.61 |
| பர்மா | 178 | 1.78 |
| புருண்டி | 74 | 0.74 |
| கமரூன் | 107 | 1.07 |
| பேட்முனீ | 50 | 0.50 |
| மத்திய ஆபிரிக்காக் குடியரசு | 60 | 0.60 |
| சாட் | 60 | 0.60 |
| சிலி | 485 | 4.85 |
| சீனு | 3,138 | 31.38 |
| கொலம்பியா | 437 | 4.37 |
| கொம்ரோஸ் | 50 | 0.50 |
| கொங்கோ மக்கள் குடியரசு | 65 | 0.65 |
| கொஸ்பரிகா | 117 | 1.17 |
| சைப்பிரஸ் | 104 | 1.04 |
| ஜியூட்டி | 50 | 0.50 |
| டொமினிக்கா | 50 | 0.40 |
| டொமினிக்கக் குடியரசு | 147 | 1.47 |
| ஈகுவடோர் | 82 | 1.82 |
| எகிப்திய அரபுக் குடியரசு | 459 | 4.59 |
| எல் சல்வடோர் | 122 | 1.22 |
| பூமத்திய கினி | 50 | 0.50 |
| எதியோப்பியா | 70 | 0.70 |
| பிஜி | 71 | 0.71 |
| கபோன் | 96 | 0.96 |
| கம்பியா | 50 | 0.50 |
| கானு | 245 | 2.45 |
| கிறிஸ் | 280 | 2.80 |
| கிரெனடா | 50 | 0.50 |
| கௌதமாலா | 140 | 1.40 |
| கினி | 91 | 0.91 |
| கினி—பிசௌ | 50 | 0.50 |
| கயஆனு | 8 | 0.84 |
| கைற்றி | 75 | 0.75 |
| ஹொன்டுரஸ் | 101 | 1.01 |
| ஹங்கேரி | 564 | 5.64 |
| இந்தியா | 3,048 | 30.48 |

*வகுதி இரண்டின் கீழ் விரிசைப்படுத்தப்பட்டுள்ள நாடுகள் யாவும் சங்க வாயத்தின் நோக்கங்களுக்காக அபிவிருத்தி உறுப்பு நாடுகளாகும்.

| நாடு | பங்கு எண்ணிக்கை | ஒப்பப்பணம் (மில்லியன் வி.ப.உ.) |
|---|---|---|
| இந்தோநேசியா | 1,049 | 10.49 |
| ஈரான் இஸ்லாமியக் குடியரசு | 1,659 | 16.59 |
| ஈராக் | 350 | 3.50 |
| இஸ்ரேல் | 474 | 4.74 |
| ஐவரிகோஸ்ட் | 176 | 1.76 |
| ஜமெக்கா | 181 | 1.81 |
| ஜோர்தான் | 97 | 0.97 |
| சனநாயக கம்பூச்சியா | 93 | 0.93 |
| கெனியா | 171 | 1.72 |
| கொரியக் குடியரசு | 449 | 4.49 |
| குவைத் | 930 | 9.30 |
| லாவோ மக்கள் சனநாயகக் குடியரசு | 60 | 0.60 |
| லெபனன் | 142 | 1.42 |
| லெசோத்தோ | 50 | 0.52 |
| லைபீரியா | 84 | 0.84 |
| லிபிய அரபு ஜமாகிரிய | 549 | 5.49 |
| மடகாஸ்கார் | 100 | 1.00 |
| மலாவி | 77 | 0.77 |
| மலேசியா | 579 | 5.79 |
| மாலைதீவு | 50 | 0.50 |
| மாலி | 81 | 0.81 |
| மோஸ்டா | 75 | 0.75 |
| மொறிபானியா | 63 | 0.63 |
| மொறிஷியஸ் | 87 | 0.87 |
| மெக்சிகோ | 1,192 | 11.92 |
| மொரோக்கோ | 348 | 3.48 |
| மொசாம்பிக் | 97 | 0.97 |
| நேபாளம் | 69 | 0.69 |
| நிக்கராகுவா | 102 | 1.02 |
| நைகர் | 62 | 0.62 |
| நைஜீரியா | 844 | 8.44 |
| ஓமான் | 94 | 0.94 |
| பாகிஸ்தான் | 660 | 6.60 |
| பனாமா | 131 | 1.31 |
| பப்புவா நியூகினி | 96 | 0.96 |
| பராகுவே | 80 | 0.80 |
| பேறு | 373 | 3.73 |
| பிலிப்பைன்ஸ் | 484 | 4.84 |
| போர்த்துக்கல் | 382 | 3.82 |
| கட்டார் | 137 | 1.37 |
| ருமேனியா | 555 | 5.55 |
| ருவான்டா | 75 | 0.75 |
| சென்கிறிஸ்டோபர், நேவிஸ் | 50 | 0.50 |
| சென்—லுசியா | 50 | 0.50 |

| நாடு | பங்கு எண்ணிக்கை | ஒப்பப்பணம் (மில்லியன் வி.ப.உ.) |
|---|---|---|
| சென்—வின்சன் | 50 | 0.50 |
| சாதோம், பிரின்சிபே | 50 | 0.50 |
| சவுதி அரேபியா | 3,137 | 31.37 |
| செனேகல் | 145 | 1.45 |
| சிஷெல்ஸ் | 50 | 0.50 |
| சியராலியோன் | 75 | 0.75 |
| சிங்கப்பூர் | 154 | 1.54 |
| சொலமன் தீவுகள் | 50 | 0.50 |
| சோமாலியா | 78 | 0.78 |
| ஸ்பெயின் | 1,285 | 12.85 |
| இலங்கை | 271 | 2.71 |
| சூடான் | 206 | 2.06 |
| சுறிநேம் | 82 | 0.82 |
| சிரியா அரேபியக் குடியரசு | 168 | 1.68 |
| சுவாஸிலாந்து | 58 | 0.58 |
| தன்சானியா | 141 | 1.41 |
| தாய்லாந்து | 421 | 4.21 |
| டோகோ | 77 | 0.77 |
| றினிடாரும் டுபாகோவும் | 203 | 2.03 |
| டியூனிசியா | 156 | 1.56 |
| துருக்கி | 462 | 4.62 |
| ஐக்கிய அராபிய எமிறேற் | 372 | 3.72 |
| உகண்டா | 132 | 1.32 |
| உருகுவே | 202 | 2.02 |
| வனுவாட்டு | 50 | 0.50 |
| வெனிசுவெலா | 1,427 | 14.27 |
| வியட்னும் | 220 | 2.20 |
| மேற்கு சமோவா | 50 | 0.50 |
| யேமன் அரபுக் குடியரசு | 67 | 0.67 |
| யேமன் மக்கள் ஜனநாயகக் குடியரசு | 115 | 1.15 |
| யுகோசலாவியா | 635 | 6.35 |
| சைறி | 338 | 3.38 |
| ஸம்பியா | 318 | 3.18 |
| சிம்பாப்வே | 236 | 2.36 |
| | 40,527 | 405.27 |
| மொத்தம் | 100,000 | 1,000.00 |

அட்டவணை—ஆ

**பணிப்பாளர்களது தேர்தல்**

(1) பணிப்பாளரின் பதவிக்கான அபேட்சகர்கள் ஆளுநர்களால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும், ஆயின் ஆளுநர் ஒருவரை மட்டுமே பெயர் குறித்து நியமிக்கலாம்.

(2) பணிப்பாளர்களின் தேர்தல் ஆளுநர்களால் வாக்களிப்பு மூலம் செய்யப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர்களுக்கான வாக்களிப்பில் ஒவ்வொரு ஆளுநரும், தாம், எந்த உறுப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிருரோ அவர், 40 ஆம் உறுப்புரையின் (அ) என்னும் பிரிவின் கீழ் அளிக்க உரித்துடையவராகவுள்ள எல்லா வாக்குகளையும் ஒரு அபேட்சகருக்கு அளிக்கலாம்.

(4) பணிப்பாளர்களின் எண்ணிக்கையின் நான்கிலொரு பங்கினர், ஆகக் கூடுதலான எண்ணிக்கையினதான பங்கினை வகிக்கும் உறுப்பினர்களின் ஒவ்வொரு ஆளுநராலும் தனித்தனியே தெரிவு செய்யப்படுதல் வேண்டும். பணிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கை நான்கால் பிரிக்கப்பட முடியாதபோது அங்ஙனம் தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர்களின் எண்ணிக்கை நான்கால் பிரிக்கப்படக்கூடிய அடுத்த குறைந்த எண்ணிக்கையின் நான்கில் ஒன்ருதல் வேண்டும்.

(5) மீதவுள்ள பணிப்பாளர்கள், இவ்வட்டவணையின் 6 தொடக்கம் 11 வரையிலான பந்திகளின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏனைய ஆளுநர்களால் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

(6) தேர்தலுக்கான பேரவையினுல் நிர்ணயிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் ஆகக்குறைந்த நூற்றுவீதத்துக்கும் குறைவாகப் பெற்ற அபேட்சகர் பேரவையினுல் நிர்ணயிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் ஆகக்கூடிய நூற்றுவீதத்துக்கும் கூடுதலாகப் பெற்றிருந்தால் தெரிவு செய்யப்படுதலாகாது என்பதில் தவிர பெயர் குறித்து அபேட்சகர்களின் எண்ணிக்கை தெரிவு செய்யப்படவுள்ள அத்தகைய மீதமுள்ள பணிப்பாளர்களின் எண்ணிக்கையுடன் சமமாக இருக்குமிடத்து, எல்லா அபேட்சகர்களும் முதல் வாக்களிப்பு மூலம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

(7) பெயர் குறித்து அபேட்சகர்களின் எண்ணிக்கை தெரிவு செய்யப்படவுள்ள அத்தகைய மீதமுள்ள பணிப்பாளர்களின் எண்ணிக்கையை விஞ்சுமிடத்து, ஆகக் கூடுதலான எண்ணிக்கையையுடைய வாக்குகளைப் பெற்ற அபேட்சகர், (பேரவையில் நிர்ணயிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் ஆகக் குறைந்த வீதத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெற்ற எவரேனும் அபேட்சகர் தவிர்த்து) தெரிவு செய்யப்படலாம்.

(8) மீதவுள்ள அத்தகைய எல்லாப் பணிப்பாளர்களும் முதல் வாக்களிப்பில் தெரிவு செய்யப்படாதபோது இரண்டாவது வாக்களிப்பு நடைபெறுதல் வேண்டும். முதலாவது வாக்களிப்பில் தெரிவு செய்யப்படாத அபேட்சகர் அல்லது அபேட்சகர்கள் மீண்டும் தெரிவு செய்யப்பட உரித்துடையவர்களாதல் வேண்டும்.

(9) இரண்டாவது வாக்களிப்பில் வாக்கு அளித்தலானது, (1) முதலாவது வாக்களிப்பில் தெரிவு செய்யப்படாத அபேட்சகர்களுக்கு வாக்களித்த ஆளுநர்களுக்கு, (11) பேரவையினுல் நிர்ணயிக்கப்பட்ட ஆகக் கூடுதலான நூற்றுவீதத்திலான வாக்குகளைப் பெற்றிருந்த அபேட்சகருக்கு வாக்களித்த ஆளுநர்களுக்கும் வாக்களிப்பு வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(10) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் எப்போது ஆகக் கூடுதலான வீதத்தை விடக் கூடுதலான வாக்குகளைப் பெற்றிருக்கிறுர் என்பதை நிர்ணயிக்கும்போது, அத்தகைய அபேட்சகருக்கு ஆகக்கூடுதலான வாக்குகளை அளித்த ஆளுநரின் வாக்குகள் முதலிலும், அடுத்த ஆகக் கூடுதலான வாக்குகளை அளித்த ஆளுநரின் வாக்குகள் அடுத்ததாகவும், அவ்விதம் அத்தகைய வீதம் பெறப்படும் வரையும் எண்ணப்படுதல் வேண்டும்.

(11) மீதவுள்ள எல்லாப் பணிப்பாளர்களும் இரண்டாவது வாக்களிப்பின் பின்னர் தெரிவு செய்யப்படாதபோது மீதவுள்ள பணிப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படும்வரை அதே முறையில் மேலும் வாக்களிப்புக்கள் நடைபெறுதல் வேண்டும். ஆயின் ஒரு பணிப்பாளர் மட்டுமே தெரிவு செய்யப்படவுள்ளபோது, மீதவுள்ள வாக்குகளின் சாதாரண பெரும்பான்மையுடன் அவர் தெரிவு செய்யப்படல் வேண்டுமென்பதுடன், அவர் அத்தகைய எல்லா வாக்குகளாலும் தெரிவு செய்யப்பட்டவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

# 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டம்

(1988, திசெம்பர் மாதம் 18 ஆந்திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

**நிதிக்கம்பனிகளின் கட்டுப்பாடு, மேற்பார்வை என்பவற்றிற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதற்கு இடைநேர் வினவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டமானது, 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பனிகள் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (1) மூன்றும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய, நிதித்தொழில் எதுவும்-

(அ) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டதும்; அத்துடன்

(ஆ) ஆகக் குறைந்தது, வழங்கப்பட்டுச் செலுத்தப்பட்ட ரூ. 5 மில்லியன் மூலதனத்தை வைத்திருப்பதும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டதுமான

பகிரங்கக் கம்பெனியொன்றினால் தவிர வேறெந்தக் கம்பெனியினாலும் கொண்டு நடாத்தப்படுதலாகாது.

(2) கம்பெனியொன்றினால் இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், விதந்துரைக்கப்பட்ட படிவத்தில் சபைக்குச் செய்யப்படல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பம் ஒவ்வொன்றும் விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள விபரங்களை விண்ணப்பகாரரின் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவையும் செம்மையானவையுமாகும் என்ற விண்ணப்பகாரரின் வெளிப்படுத்துகையொன்றினைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ், வெளிப்படுத்துகை எதையும், அது பொய்யானதெனத் தெரிந்து கொண்டு செய்கின்ற அல்லது தகவல் எதையும், அது பொய்யானதெனத் தெரிந்து கொண்டு கொடுத்துதவுகின்ற ஆள் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின்கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்வதற்கு விண்ணப்பமொன்று சபைக்குச் செய்யப்படுகின்றவிடத்து, சபையானது பதிவு செய்வதற்கு விண்ணப்பம் செய்கின்ற கம்பெனியின் புத்தகங்களை, பதிவேடுகளை அத்துடன் ஆவணங்களைக் கேட்டுப் பெற்றுச் சோதனை செய்யலாம் அல்லது சோதனையிடச் செய்விக்கலாம்.

(5) சபையானது, இச்சட்டத்தின் கீழ்க் கம்பெனியொன்றினுல் பதிவு செய்வதற்கென அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றினைச் சீர்தூக்கிப் பார்த்ததன்மேல்,

(1) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப் படப்பட்டிருக்கின்றன எனவும்; அத்துடன்

(2) அதற்குக் கிடைக்கக் கூடியதாகச் செய்யப்பட்ட தகவலின்மேல், அப்படிச் செய்வது, பொதுவாக, வைப்பிலிடுபவர்களினதும் கடன்தருநர்களினதும், அக்கறைகளுக்குத் தீங்காக இருக்காதென அது திருப்திப் பட்டால்,

அத்தகைய கம்பெனியை நிதிக் கம்பெனியொன்ருகப் பதிவு செய்யப்படலாம்.

(6) கம்பெனியொன்று (5) ஆம் உட்பிரிவின் கீழ்ப் பதிவு செய்யப்படாத விடத்து அல்லது 3 ஆம் பிரிவு எந்த ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆள் அல்லது ஆட்கள் குழுவொன்று அப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளவிடத்து, சபையானது விடயத்திற் கேற்றவாறு அத்தகைய கம்பனிக்கு அல்லது ஆளொருவருக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு, அது கொண்டு நடாத்திய நிதித் தொழிலை ஒடுக்குவதற்கும் அல்லது உரித்து துறப்பதற்கும் அத்துடன் வைப்பீட்டுப் பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்குமான பணிப்புரைகளை வழங்கலாம் என்பதுடன் அத்தகைய பணிப் புரைகளுக்கு இணங்கியொழுகுவது அத்தகைய கம்பனியின், ஆளின் அல்லது ஆட்கள் குழுவின் கடமையாதலும் வேண்டும்.

(7) கம்பனியொன்று அல்லது ஆளொருவர் அல்லது ஆட்கள் குழுவொன்று (7) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு அப்பணிப்புரைகள் வழங்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் இணங்கியொழுகத் தவறுமிடத்துச் சபையானது, ஒடுக்குவதற்கென வழக்குத் தொடருதல் உட்பட அதற்கு இணங்கியொழுகச் செய்வதற்கு அவசியப்படக்கூடியவாருன அத்தகைய நடவடிக்கையை எடுக்குமாறு பணிப்பாளரைத் தேவைப்படுத்தலாம். அத்தகைய விடயத்தில் 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. (1) இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று நிதித் தொழிலைக் கொண்டு நடாத்திக் கொண்டிருக்கும் கம்பனியொன்று அல்லது ஆளொருவர் அல்லது ஆட்கள் குழுவொன்று—

(அ) அது 2 ஆம் பிரிவின்கீழ்ப் பதிவு செய்யப்படவில்லை என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இரண்டாண்டு காலப் பகுதியொன்றுக்கு அத்தகைய தொழிலைக் கொண்டு நடாத்தலாம்;

(ஆ) பிரிவு 2 (1) என்பதன் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கும் அத்துடன் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இரண்டாண்டு காலப் பகுதி அல்லது அத்தகைய பணிப்புரை வழங்கப்பட்ட தேதியிலிருந்து நாலு மாதங்கள் இவற்றுள் எது பிந்தியதோ அக்காலப் பகுதிக்குள் இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ண) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைக்கு முரணாகக் கொண்டு நடாத்தப்பட்ட எவையேனும் செயற்பாடுகளைக் கைவிடுவதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடபடிகளை எடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஒவ்வொரு கம்பனியும் அல்லது ஆட்கள் குழுவும் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகியதன்மேல், அத்தகைய இணங்கியொழுகைக்கான எண்பிப்பாகப் பணச் சபைக்குச் சான்று சமர்ப்பித்தல் வேண்டும். சபை திருப்தியுறும் வகையில் அத்தகைய ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும் கம்பனி அல்லது ஆட்கள் குழுவொன்று 2 ஆம் பிரிவின் கீழ்ப் பதிவு செய்யப்படுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

(3) கம்பனியொன்று அல்லது ஆளொருவர் அல்லது ஆட்கள் குழுவொன்று (1) ஆம் உட்பிரிவின்கீழ் நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றவிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கு அவை ஏற்புடையதாகின்ற அளவுக்கும் அத்துடன் அவற்றிற்கமையவும் அத்தகைய கம்பனிக்கு அல்லது ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவொன்றுக்கு ஏற்புடையவாதல் வேண்டும்.

4. (1) நிதிக் கம்பனியொன்று, 5 மில்லியன் ரூபாவுக்குக் குறையாத நிறைவான மூலதனமொன்றை எல்லாக் காலங்களிலும் பேணுதல் வேண்டும்.

(2) நிதிக் கம்பனியொன்று சபையின் எழுத்திலான முன் அங்கீகாரமின்றி அதன் மூலதனத்தை அல்லது நியதிச்சட்ட ஒதுக்கீடுகளைக் குறைத்தலோ குறைவுபடுத்தலோ ஆகாது. இவ்வுட்பிரிவில் ''நியதிச்சட்ட ஒதுக்கீடுகள்'' என்பது இச்சட்டத்தின்கீழ் அதற்கு வழங்கப்பட்ட பணிப்புரையொன்றைப் பின்பற்றிக் கம்பனியால் பேணப்பட்ட ஏதேனும் ஒதுக்கீட்டு நிதி என்று பொருள்படும்.

5. நிதிக் கம்பனியொன்று, அதன் வைப்புகளைப் பாதுகாக்கின்ற அத்தகைய விதத்தில் அதன் தொழிலை எல்லாக் காலங்களிலும் நடாத்துதல் வேண்டுமென்பதுடன், வைப்புக்களும் அத்துடன் வைப்புகள் மீதான வட்டிகளும் அவை கொடுபட வேண்டிய தேதிகளில் வைப்பீட்டாளர்களுக்கு, மீளச் செலுத்தப்படற்பாலனவையென்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தலும் வேண்டும்.

6. சபையானது, இச்சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனி ஒவ்வொன்றினதும் இடாப்பொன்றை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

7. (1) இச்சட்டத்தின்கீழ் நிதிக் கம்பனியொன்று பதிவு செய்யப்பட்டிருக்குமிடத்து, சபையானது, அத்தகைய கம்பனி நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதை அனுமதிக்கின்ற உரிமமொன்றை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அத்தகைய கம்பனிக்கு வழங்குதல் வேண்டும்.

(2) அத்தகைய உரிமமானது, அத்தகைய கம்பனியின் பிரதான அலுவலகத்தில் அல்லது தொழிலிடத்தில் எல்லா நேரங்களிலும் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனி ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட தொகையினதான ஆண்டு உரிமக் கட்டணமொன்றைச் சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

8. (1) இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனியெதுவும் நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதை ஒழித்திருக்குமிடத்து, அத்தகைய கம்பனியினுல் அத்தகைய ஒழிப்பு செய்யப்பட்டதன்மேல், உடனடியாக, சபைக்கு அத்தகைய ஒழிப்பு பற்றிய அறிவித்தல் ஒன்று கொடுபடல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஒழித்தல் பற்றிய அறிவித்தல் கிடைக்கப்பெற்றதன்மேல், சபையானது, 6 ஆம் பிரிவின்கீழ்ப் பேணப்படும் இடாப்பிலிருந்து நிதிக் கம்பனியின் பெயரை நீக்கி அதன் உரிமத்தை இல்லாததாக்குதல் வேண்டும்; அத்துடன், நிதிக் கம்பனியின் நிதித் தொழிலை ஒடுக்குவதற்கும் அல்லது உரிமை துறப்பதற்கும், அத்துடன், குறித்துரைக்கப்படக்கூடியவாருன அத்தகைய முறையில் நிதிக் கம்பனியின் வைப்பீட்டுப் பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்குமான பணிப்புரைகளை அத்தகைய நிதிக் கம்பனிக்கு வழங்கலாம்.

(3) இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட எவையேனும் நிதிக் கம்பனி நிதித் தொழில் செய்யவில்லை என நம்புவதற்குச் சபைக்கு நியாயமான காரணங்கள் இருந்தால், அக்கம்பனி நிதித் தொழிலைச் செய்வதை நிறுத்திவிடவில்லை என்பதற்கான சான்றை அத்தகைய அறிவித்தற் தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு அத்தகைய கம்பனியைத் தேவைப்படுத்தும் ஓர் அறிவித்தலைப் பதிவுத் தபால் மூலம் அத்தகைய கம்பனிக்குச் சபை அனுப்பலாம். அத்தகைய காலப் பகுதிக்குள் அத்தகைய கம்பனி அத்தகைய சான்றினைச் சமர்ப்பிக்கத் தவறினுல், ஓராம் பிரிவின் கீழ்ப் பேணப்படும் பதிவேட்டிலிருந்து அத்தகைய கம்பனியின் பெயரைச் சபை நீக்கிவிட வேண்டுமென்பதுடன், அதன் உரிமத்தையும் நீக்கிவிடல் வேண்டும். ஒரு நிதிக் கம்பனியின் பதிவு அவ்வாறு நீக்கப்பட்டால், அக்கம்பனியை ஒடுக்குவதற்கான அல்லது அக்கம்பனியை ஒடுக்குவதற்கு விண்ணப்பிக்குமாறு பணிப்பாளரைத் தேவைப்படுத்துவதற்கான பணிப்புகள் உட்படத் தான் அவசியமானவையெனக் கருதக்கூடியவாருன அத்தகைய பணிப்புகளைச் சபை வழங்கலாம். இச்சந்தர்ப்பத்தில் 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கு, அத்தகைய பணிப்புகள் வழங்கப்பட்டு ஒரு மாத காலத்திற்குள், ஒரு நிதிக் கம்பனி இணங்கியொழுகத் தவறினுல் நிதிக் கம்பனியை ஒடுக்குவதற்கான வழக்கைத் தொடருமாறு பணிப்பாளரைச் சபை தேவைப்படுத்த வேண்டும் என்பதுடன், அத்தகைய ஒடுக்குதலுக்கு 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

9. (1) வேறு எவையேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய கம்பனிகளின் எவையேனும் தொழில் அம்சம் கொண்டு நடாத்தப்பட வேண்டிய முறை பற்றியும் அத்துடன் குறிப்பாக, பின்வருவன பற்றியும் நிதிக் கம்பனிகளுக்கு அல்லது எவையேனும் நிதிக் கம்பனிகள், தொகுதிக்கு அல்லது வகுதிக்குச் சபை பணிப்புக்கள் கொடுக்கலாம்—

(அ) அத்தகைய கம்பனிகளால் வைப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய நியதி, நிபந்தனைகள் குறிப்பாக அத்தகைய வைப்புக்களுக்குக் கொடுபடக் கூடிய உச்ச வட்டி விகிதங்கள், வைப்புகள் ஏற்றுக் கொள்ளப் படக் கூடிய உச்சக் காலப் பகுதிகள், ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற் பட்ட கணக்குகளில் ஓர் ஆளின் பெயரில் ஒரு கம்பனியில் வைப்பிலிடப் படக் கூடிய உச்சத் தொகை;

(ஆ) அத்தகைய கம்பனிகளால் வழங்கப்படக் கூடியதான எவையேனும் கடனுக்கான, கொடுகடன் வசதிக்கான அல்லது எவ்வகையிலுமான நிதிசார் ஏற்பாட்டிற்கான நியதி, நிபந்தனைகள் குறிப்பாக அத்தகைய கடன்களின்மீது விதிக்கப்படக் கூடியயான உச்ச வட்டி விகிதங்கள் அத்துடன் அத்தகைய, கடன் கொடுகடன் வசதி அல்லது எவ்வகையிலுமான நிதிசார் ஏற்பாடு வழங்கப்படக்கூடியதான உச்சக் காலப் பகுதி;

(இ) தரகுகள், கழிவுகள், கட்டணங்கள் அல்லது பிற வரவுகள் அல்லது எத்தன்மைத்தான கொடுப்பனவுகள் என்ற வகையில் அத்தகைய கம் பனிகளுக்குக் கொடுபடக்கூடியதான அல்லது அத்தகைய கம்பனிகளால் விதிக்கப்படக்கூடியனவான உச்ச விகிதங்கள்;

(ஈ) எவையேனும் கேள்வுக் கொள்வனவு உடன்படிக்கைமீது கருதப்படுபவ ரான கேள்வுதாரர் செய்யவேண்டிய ஆகக் குறைந்த தொடக்கக் கொடுப்பனவு அத்துடன் பல்வேறு வகையான கொடுக்கல் வாங்கல் களுக்கும் குறித்துரைக்கப்பட்ட வெவ்வேறு தொடக்கக் கொடுப்பனவு கள், அத்தகைய உச்சத் தொடக்கக் கொடுப்பனவு அத்தகைய ஒப்பந் தத்தின் கீழ்க் கேள்வுக்கமர்த்தப்பட்ட பண்டங்களின் பெறுமதியின் குறிப்பிட்ட ஒரு சதவீதமாக வெளிப்படுத்தப்படலாம்;

(உ) அத்தகைய கம்பனிகளால் முதலீடுகள் செய்யப்படக்கூடியதான நியதி கள், நிபந்தனைகள்;

(ஊ) அத்தகைய கம்பனிகளால் செய்யப்படும் கடன்களுக்கான அத்துடன் முதலீடுகளுக்கான அனுமதிக்கக்கூடிய உச்ச முதிர்வுக் காலங்கள் அத் துடன் பல்வேறு வகையான கடன், கொடுகடன் அத்துடன் முதலீட்டு நடைமுறைகளுக்குத் தேவைப்படுத்தப்படக்கூடியதான அல்லது அனு மதிக்கப்படக்கூடியதான பிணைப் பொறுப்பின் தன்மை அத்துடன் தொகை, கடன்கள், கொடுகடன் வசதிகள் அல்லது பிற நிதிசார் ஏற்பாடுகள்;

(எ) அத்தகைய கம்பனிகளால் கணக்குப் புத்தகங்கள் அல்லது பிற பதிவேடு கள் அல்லது ஆவணங்கள் பேணப்பட வேண்டிய வகையும் விதமும்;

(ஏ) கடன்கள் அறவிடப்பட முடியாதவையாக இருந்தால் அத்தகைய கடன்கள் தொடர்பில் கொடுபடாதிருக்கும் வட்டியை முழுதாகவோ அல்லது பகுதியாகவோ கம்பனிகளின் வருமானத்திலிருந்து நீக்கல்;

(ஐ) கம்பனிகளின் மொத்த வைப்புப் பொறுப்புகளுடன் அத்தகைய கம்பனிகளின் திரவச் சொத்துக்கள் கொண்டிருக்க வேண்டிய ஆகக் குறைந்த விகிதம்;

(ஒ) சபையால் அவ்விதம் தேவைப்படுத்தப்பட்டால், இலங்கை மத்திய வங்கியுடனை நிதிக் கம்பனிகளின் பண இருப்புப் பேணுகை, அத்துடன் நிதிக் கம்பனிகளின் வைப்புப் பொறுப்புகளுடன் அத்தகைய பண இருப்புக்கள் கொண்டிருக்க வேண்டிய ஆகக் குறைந்த விகிதம்;

(ஓ) முதிர்வுக் காலத்திற்கு முன்னதாக வைப்பாளர்கள் தமது வைப்புக்களை மீளப் பெறுவதற்குப் பொருத்தமானதாயிருக்க வேண்டிய நிபந்தனைகள்;

(ஔ) அத்தகைய கம்பனிகள் அவற்றின் கடன்கள், கொடுகடன் வசதிகள், பிற நிதிசார் ஏற்பாடுகள் அல்லது முதலீடுகள் என்பவற்றை அதிகரிப்பதினின்றும் தடை செய்தல்;

(க) குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதிகளுக்குள் அவற்றினல் கொடுக்கப்பட்ட எவையேனும் கடன்களின், முதலீடுகளின் அல்லது நிதிசார் ஏற்பாடுகளின் தொகை அதிகரிக்கப்படக்கூடியதான வீதத்திற்கு எல்லைகளை நிர்ணயித்தல்;

(ங) குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப் பகுதிக்குள் அவற்றின் கடன்களின், முதலீடுகளின் அல்லது நிதிசார் ஏற்பாடுகளின் தொகையைக் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளுக்குக் குறைக்கத் தேவைப்படுத்தல்;

(ச) ஒரு நிதிக்கம்பனியில்—

(1) ஒரு கம்பனியால், கூட்டிணைக்கப்பட்ட குழுவால் அல்லது ஒரு தனியாளினல் அல்லது

(2) கூட்டு மொத்தத்தில்—

(அ) ஒரு கம்பனியாலும், அத்துடன் பின்வருவனவற்றுள் ஒன்றுலும் அல்லது மேற்பட்டவையாலும் வைத்திருக்கப்படக்கூடிய பங்கு மூலதனத்தின் உச்ச நூற்றுவீதம்:—

(அஅ) அதன் துணைநிலைக் கம்பனிகள்;

(ஆஆ) அதன் கொளிக் கம்பனி;

(இஇ) அதன் கொளிக் கம்பனியின் ஒரு துணை நிலைக் கம்பனி; அல்லது

(ஈஈ) எக்கம்பனியில் அத்தகைய கம்பனி அல்லது அதன் துணைநிலைக் கம்பனி அல்லது அதன் கொளிக் கம்பனியின் ஒரு துணைநிலைக் கம்பனி கணிசமான அளவு அக்கறை கொண்டுள்ளதோ அக்கம்பனியொன்று; அல்லது

(ஆ) ஒரு தனியாளினாலும் அத்துடன் பின்வருபவர்களாலும் அல்லது பின்வருவனவற்றுள் ஒன்றாலும் அல்லது அதற்கு மேற்பட்டவையாலும்—

(அஅ) அவரது உறவினர்;

(ஆஆ) எக்கம்பனியில் அவர் கணிசமான அளவு அக்கறை கொண்டுள்ளாரோ அல்லது அவரது உறவினர் கணிசமான அளவு அக்கறை கொண்டுள்ளாரோ அக்கம்பனியொன்று;

(இஇ) அத்தகைய கம்பனியின் துணைநிலைக் கம்பனியொன்று;

(ஈஈ) அத்தகைய கம்பனியின் கொளிக் கம்பனியொன்று;

(உஉ) அத்தகைய கொளிக் கம்பனியின் துணைநிலைக் கம்பனியொன்று;

(ஊஊ) எக்கம்பனியில் அத்தகைய கம்பனி அல்லது அதன் துணைநிலக் கம்பனி அல்லது அதன் கொளிக் கம்பனி கணிசமான அளவு அக்கறை கொண்டிருக்கின்றதோ அக்கம்பனியொன்று; அல்லது

(எஎ) எக்கம்பனியில் அத்தகைய தனியாள் அல்லது அவரது உறவினர் கணிசமான அளவு அக்கறை கொண்டுள்ளாரோ அக்கம்பனியொன்றல்லாத வேறு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று:

ஆயின், எவ்வாறாயினும் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடொன்றின்மீதல்லாமல் வேறு வகையில் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று நிதிக் கம்பனியொன்றில் வைத்திருக்கப்படும் ஆளொருவரின் பங்குகளின் குறைப்பை இப்பணிப்புரைகள் தேவைப்படுத்துதலாகாது.

10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் அதற்கு வழங்கப்பட்ட பணிப்புரையொன்றுக்கு இணங்கியொழுகுவதற்கென நிதிக் கம்பனியொன்று, அத்தகைய பங்குகள் அத்தகைய ஆளினால் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் கொள்ளப்பட்டனவாயினுஞ்சரி, பின்னர் கொள்ளப்பட்டனவாயினுஞ்சரி, அத்தகைய பணிப்புரையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்குள், அத்தகைய கம்பனியில் அத்தகைய ஆளினால் வைத்திருக்கப்படும் பங்குகளின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு அத்தகைய கம்பனியில் பங்குகள் வைத்திருக்கும் ஆளைப் பணிக்கலாம்;

(ஞ) பிணைப்பொறுப்பாக்கப்பட்ட முற்பணங்கள் தொடர்பில் பேணப்பட வேண்டிய வரம்பெல்லைகள்;

(ட) கம்பனிக்கும் ஒரு குத்தகைக்காரருக்கும் இடையிலான குத்தகை ஒப்பந்தங்கள் தொடர்பான நியதி நிபந்தனைகள்;

(ண) நிதிக் கம்பனிகளால் கொண்டு நடாத்தப்படக்கூடிய செயற்பாடுகளின் வகைகள் மீதான மட்டுப்பாடு.

(2) ஒராம் உட்பிரிவின் பந்திகள் (அ), (ஆ) என்பவற்றின் கீழ் எவையேனும் பணிப்புகளால் நிர்ணனிக்கப்பட்ட உச்ச வட்டி வீதங்கள், சபையால் அவ்வாறு தீர்மானிக்கப்பட்டால், அத்தகைய பணிப்புத் தேதிக்கு முன் ஏற்றுக் கொள்ளப் பட்ட எவையேனும் வைப்புகள் தொடர்பில் அல்லது வழங்கப்பட்ட எவையேனும் கடன், கொடுகடன் வசதி அல்லது வேறு எவையேனும் நிதிசார் ஏற்பாடுகள் தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

ஆயின் அத்தகைய பணிப்புரையிலுள்ள எதுவும்—

(அ) அத்தகைய எவையேனும் வைப்பு அல்லது கடன், கொடுகடன் வசதி அல்லது பிற நிதிசார் ஏற்பாடுகள் தொடர்பிலான அத்தகைய பணிப் புத் தேதிக்கு முன் சேர்ந்த எவையேனும் வட்டிக்கு ஏற்புடையதாதல் கூடாது; அல்லது

(ஆ) விடயத்தைப் பொறுத்து அத்தகைய வைப்பு, கடன் கொடுகடன் வசதி அல்லது நிதிசார் எற்பாடு தொடர்பிலான ஒப்பந்தத்தை அல்லது உடன்படிக்கையை வட்டி வீதக் குறைப்பு மீறுவதானதாயிருந்தால், அத்தகைய பணிப்புத் தேதிக்கு முன் ஏற்றுக்கொள்ளப்பட்ட அத் தகைய எவையேனும் வைப்பு அல்லது வழங்கப்பட்ட கடன் கொடு கடன் வசதி அல்லது நிதிசார் ஏற்பாடுகள் மீது வழங்கப்படற்பாலதான அத்தகைய வட்டி வீதத்தைக் குறைக்கத் தேவைப்படுத்தலாகாது.

(3) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகச் சபையானது அவசியமானவிடத்து, குறிப்பாக ஒராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான அத்தகைய கருமங்கள் பேரில், பணிப்புகளை எவையேனும் நிதிக் கம்பனிக்கு வழங்கலாம்.

ஆயின், எவ்வகையிலும், எவையேனும் பணிப்பு வலுவிலிருக்கும்போது எந்நேரத்திலும் ஒரு நிதிக் கம்பனி தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றுக்கு அது சார்பாக விண்ணப்பமொன்றைச் செய்தால், அத்தகைய தகுதிவாய்ந்த நீதி மன்றம், அத்தகைய பணிப்புக்கு உட்படாமல் தனது வியாபாரத்தைக் கொண்டு நடாத்த அக்கம்பனியை அனுமதிக்கும் வெளிப்படுத்துகை ஒன்றைச் செய்யலாம், அல்லது நீதிமன்றம் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் அத்தகைய பணிப்பை வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம் என்பதுடன் நீதிமன்றத்தின் மேற்போந்தவாறான எவையேனும் வெளிப்படுத்துகை, சபையால் செய்யப்பட்ட பணிப்பில் எவையேனும் முரணானது எது எவ்வாறிருப்பினும் பயனுடையதாதலும் வேண்டும்.

(4) பணச் சபையானது, அதன் தற்றுணிபின்படி, (ஒ) என்னும் பந்தியின்கீழ் அதற்கு வழங்கப்பட்ட பணிப்பொன்றினைப் பின்பற்றி, சபையால் தீர்மானிக்கப் படக் கூடியவாறான அத்தகைய வீதத்தின்படி நிதிக் கம்பனியால் மத்திய வங்கியில் பேணப்படும் ஏதேனும் பண மீதியின் மேல் வட்டி செலுத்தலாம்.

10. (1) பணிப்பாளரால் செய்யப்பட்ட ஓர் அறிக்கையின் பேரில் ஒரு நிதிக் கம்பனி—

(1) அதன் வைப்பாளர்களின் நலனுக்குப் பாதகமான திடமற்ற அல்லது தகாத பழக்கங்களைப் பின்பற்றுகின்றதென;

(2) அதன் வைப்பாளர்களின் நலன்களுக்குப் பாதகமான ஒரு முறையில் அதன் தொழிலைக் கொண்டு நடாத்தும் சாத்தியமுள்ளதென;

(3) அச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புரைகளை மீறியுள்ளதென அல்லது அவற்றிற்கு இணங்கியொழுகத் தவறியுள்ளதென,

சபை அபிப்பிராயப்படுமிடத்து, சபையானது—

(அ) ஏதேனும் அத்தகைய பழக்கத்தை அல்லது மீறுகையை இல்லாதொழிக்குமாறு அல்லது தவிர்க்குமாறு; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுமாறு; அல்லது

(இ) அத்தகைய பழக்கத்தில் அல்லது மீறுகையினின்றும் எழும் நிலைமைகளைத் திருத்துவதற்கு அவசியமான நடவடிக்கையை எடுக்குமாறு; அல்லது

(ஈ) கம்பனியில் எவராலும் ஆளினால் வைத்திருக்கப்படும் பங்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கும்படி பணிப்புரைகள் வழங்குமாறு,

சபையானது அத்தகைய கம்பனியைப் பணிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட கட்டளையொன்றுடன் அதிருப்தியுறும் ஏதேனும் நிதிக் கம்பனி, அத்தகைய கட்டளை வழங்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவுறுவதற்கு முன்பு சபைக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், சபையானது அத்தகைய மேன்முறையீடு கிடைக்கப் பெற்ற பதினைந்து நாட்களுக்குள் அதன் முடிபைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

11. (1) பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், அத்தகைய ஆட்கள் அல்லது ஆட்கள் குழுக்கள் நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றதா என்பதை நிச்சயிப்பதற்கு அவசியமாகக் கூடிய அத்தகைய எல்லாத் தகவல்களையும் எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் குழு கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தலாம் என்பதுடன் இந்நோக்கத்திற்காக அத்தகைய ஆள் அல்லது ஆட்கள் குழுமத்துடன் தொடர்புடைய பதிவேடு அல்லது ஏதேனும் புத்தகத்தைச் சோதனை செய்யலாம். மற்றும் அவருடைய கருத்திற்கமைய அத்தகைய ஆள் அல்லது ஆட்கள் குழு நிதித் தொழிலைக் கொண்டு நடாத்தினால் அத்தகைய விடயத்தைச் சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

(2) சபையானது, (1) ஆம் உட்பிரிவின் கீழான அறிக்கையைப் பரிசீலனை செய்ததன்மேல், ஆள் அல்லது ஆட்கள் குழு நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துதலை நிச்சயிக்குமானால் அது குறித்த காலத்திற்குள் இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு அத்தகைய ஆட்கள் அல்லது ஆட்கள் குழுவைத் தேவைப்படுத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்யத் தவறுமிடத்து பணிப்புரைகளைக் கொடுப்பதற்கான தத்துவம் கொண்டிருத்தல் மற்றும் ஆட்களை அல்லது ஆட்கள் குழுவை ஒடுக்கும் தத்துவம் உட்பட வைப்பீட்டாளரைப் பாதுகாக்க அவசியமெனக் கருதக்கூடிய அத்தகைய படிமுறைகளை எடுத்தல் வேண்டும். அவ்விடயத்தில் 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடைத்தாகும்.

(3) 1 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் புத்தகம் அல்லது பதிவேட்டைச் சோதனைக்குக் காண்பிக்குமாறு அல்லது தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் குழு அத்தகைய தகவலைக் கொடுத்துதவுதல் அல்லது பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அத்தகைய புத்தகம், பதிவேடு அல்லது வேறு ஆவணங்களைச் சோதனைக்குக் காண்பித்தல் வேண்டும் என்பதுடன் 2 ஆம் உட்பிரிவின் கீழான தேவைப்பாடுகளுடன் அல்லது ஏதேனும் பணிப்புரைகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(4) 1 ஆம் உட்பிரிவின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி சபையானது அத்தகைய ஆட்கள் அல்லது ஆட்கள் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கடனாகப் பெறப்பட்ட அல்லது பரிந்து கேட்ட ஏதேனும் பணத் தொகை வைப்பீடா என நிச்சயிப்பதற்கு அவசியமெனக் கருதக்கூடியதான தகவலை அத்தகைய ஆட்கள் அல்லது ஆட்கள் குழு கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தலாம்.

12. (1) பணிப்பாளர் ஏதேனும் நிதிக் கம்பனியின் கணக்குப் புத்தகங்களையும் கணக்குகளையும் எந்நேரத்திலும் சோதனை செய்யலாம், அல்லது தமது திணைக்களத்திலுள்ள எந்தவோர் அலுவலருக்கும் பரிசோதனை செய்ய அதிகாரமளிக்கலாம்.

(2) அத்தகைய பரிசோதனையின் மீதான அறிக்கையானது அத்தகைய, சோதனை முடிந்தவுடனேயே பணிப்பாளரால், இலங்கையின் மத்திய வங்கி ஆளுநருக்குக் கொடுத்துதவப்படல் வேண்டும். பணிப்பாளர் அத்தகைய சோதனைக்கான செலவுத் தொகையை நிதிக் கம்பனியிடமிருந்து அறவிடலாம்.

(3) பணிப்பாளருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு—

(அ) எந்தவொரு நிதிக் கம்பனியினதும் எவரேனும் பணிப்பாளருக்கு, முகாமையாளருக்கு, செயலாளருக்கு அல்லது ஊழியருக்குச் சத்தியக் கட்டளைச் சட்டத்துக்கிணங்கச் சத்தியம் அல்லது உறுதியுரை எடுத்தோதலும்;

(ஆ) எந்தவொரு கம்பனியினதும் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை, செயலாளரை அல்லது ஊழியரைக் கம்பனியின் விடயம் தொடர்பான அல்லது அத்துடன் தொடர்புடையதும் விளைவாந்தன்மையுடையதுமான ஏதேனும் விடயங்களுக்குப் பணிப்பாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அவசியமெனக் கருதக் கூடியவாறான அத்தகைய எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவும்படி தேவைப்படுத்துதலும்;

(இ) எந்தவொரு நிதிக் கம்பனியினதும் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை, செயலாளரை அல்லது ஊழியரைத் தம்வசத்திலிருப்பனவும் அவசியமான ஏதேனும் தகவலைக் கொண்டுள்ளனவும் அல்லது கொண்டிருக்கும் சாத்தியமுடையனவுமான புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது வேறு ஆவணங்கள் எவற்றையேனும் சோதனைக்குக் காண்பிக்கும்படி தேவைப்படுத்துதலும்;

(ஈ) ஏதேனும் விடயத்தில் நிதிக் கம்பனியொன்றின் கையாடல் பற்றிய சான்று இருக்குமிடத்து ஏந்தவொரு நிதிக் கம்பனியினதும் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை, செயலாளரை அல்லது ஊழியரைப் பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்டுக் கணக்காய்வாளரின் கணக்காய்விற்காக நிதிக் கம்பனியின் கணக்குகளைச் சமர்ப்பித்தலுக்குத் தேவைப்படுத்தலும் என்பதுடன் அத்தகைய தகவலைக் கொடுத்துதவுவதற்கு அல்லது அர்த்தகைய கணக்குப் புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது ஆவணங்களைக் காண்பித்தல் மற்றும் பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய கட்டணத்தை அத்தகைய கணக்காய்வாளருக்குக் கொடுப்பதற்கும் ஒரு நிதிக் கம்பனியைத் தேவைப்படுத்தலும்;

சட்டமுறையானதாதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் அல்லது இச்சட்டத்தின் கீழ் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலருக்குத் தேவைப்பட்டதான அத்தகைய தகவலைக் கொடுத்துதவுவதற்கு மற்றும் இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதான அத்தகைய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு மற்றும் பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது (3) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் நியதிகளுக்கு ஏற்ப அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் கணக்காய்வாளருக்கு இயலுவதற்குக் காசு மீதிகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் உட்படக் கம்பனியின் புத்தகங்கள், பதிவேடுகள் யாவற்றையும் காண்பித்தல், எந்தவொரு நிதிக் கம்பனியினதும் ஒவ்வொரு பணிப்பாளரினவும், முகாமையாளரினதும், செயலாளரினதும் கடமையாதல் வேண்டும்.

(5) பணிப்பாளரானவர், நிதிக் கம்பனியின் விடயங்களில் உண்மைத் தன்மையைக் கண்டறிவதற்கு அவசியமானதென அவர் கருதுகின்றவிடத்து, மற்றும் அத்தகைய நிதிக் கம்பனி தற்போதைய அல்லது எதிர்கால வைப்பீட்டாளரைப் பாதிக்கக்கூடிய வகையில் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றதா எனக் கண்டறிவதற்கு நிதிக் கம்பனியுடன் தொடர்புடைய தகவலைக் கொண்டிருப்பதாகக் கருதக்கூடிய எவரேனும் ஆளை, அவர் தேவைப்படுத்தலும், அத்தகைய தகவலை அவருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேயும் அலுவலருக்கு அல்லது (3) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் நியதிகளுக்கு அமைய

DISCARDED

அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் கணக்காய்வாளருக்குக் கொடுத்து தவுவதற்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அவரின் முன்பாக விதித்துரைக்கப்பட்டதான அத்தகைய இடத்தில் மற்றும் அத்தகைய தேதியில் மற்றும் நேரத்தில் நேரடியாகச் சமூகமளிப்பதற்கு, அத் தகைய பணிப்புரையில் விதித்துரைக்கப்பட்டதான அத்தகைய விடயங்களில் அவ் ஆள் பரிசோதனை செய்யப்படலாம்.

(6) நிதிக் கம்பனியின் விடயங்களின் உண்மை நிலைமையைக் கண்டறியும் நோக்கத்திற்காகப் பணிப்பாளரானவர் முற்போந்த உட்பிரிவின் நியதிகளுக்கமைய அவரது சோதனையின் நோக்கத்திற்கு அவசியமென அவர் கருதினால்—

(அ) சோதனையின் கீழுள்ள நிதிக் கம்பனியின் கொளிக் கம்பனியொன்றாக அல்லது துணை நிலைக் கம்பனிதொன்று;

(ஆ) அந்நிதிக் கம்பனியின் கொளிக் கம்பனியொன்றின் துணை நிலைக் கம்பனி யொன்றாக;

(இ) அந்நிதிக் கம்பனியின் இணைக் கம்பனியொன்றாக;

இயைபான எந்நேரத்திலும் இருக்கின்ற அல்லது இருந்துள்ள ஏதேனும் கம்பனி யின் தொழிலையும் சோதனை செய்யலாம் என்பதுடன் அத்தகைய ஏதேனும் கம்பனி தொடர்பில், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளினால் அவருக்கு உரித் தாக்கப்பட்ட தத்துவங்களுள் எதனையும் பிரயோகிக்கலாம்.

இப்பிரில், 'இணைக் கம்பனி' என்பது, நிதிக் கம்பனியொன்றின் தொடர்பில் பயன்படுத்தப்படும்பொழுது, நிதிக் கம்பனி, எக்கம்பனியில், கம்பனியின் செலுத் தப்பட்ட பங்கு மூலதனத்தின் இருபது நூற்று வீதத்திற்குச் சமமான அல்லது அதற்குக் கூடுதலான அல்லது பதினைந்து நூற்று வீதத்திற்குக் குறைவான சாதாரணப் பங்குகளைக் கொண்டிருக்கின்றதோ அக்கம்பனி என்று பொருளாகும்.

12. அசபையானது, 12 ஆம் பிரிவின் கீழ் அல்லது 18 ஆம் பிரிவின் கீழ்ச் செய்யப்பட்ட அறிக்கையொன்றின் அடிப்படையில் நிதிக் கம்பனியொன்றுக் கெதிராக நடவடிக்கையெடுக்க உத்தேசிக்குமிடத்து, அது பணிப்பாளரால் செய் யப்பட்ட விதப்புரைகள் அடங்கிய பாகம் புற நீங்கலாக, அத்தகைய அறிக்கையின் பிரதியொன்றை அத்தகைய கம்பனிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிக்கை தொடர்பில் கம்பனி அதன் நிலையைச் சபைக்குக் குறிப்பிடு வதற்குக் குறைந்தது ஏழு நாட்களைக் கொண்டவொரு காலப் பகுதியையாவது கம்பனிக்கு அனுமதித்தலும் வேண்டும்.

இந்த உட்பிரிவிலுள்ள எதுவும், பண வைப்பாளர்களினதும் நிதிக் கம்பனி யினதும் நலனுக்காக உடனடி நடவடிக்கை எடுப்பது அவசியம் எனச் சபை கருதுமிடத்து அத்தகைய அறிக்கை தொடர்பில் கம்பனி அதன் நிலையைக் குறிப் பிடுவதை அனுமதிக்காமல் நடவடிக்கை எடுப்பதிலிருந்து பணச் சபையைத் தடை செய்வதற்காகக் கருதப்படுதலாகாது.

13. நிதிக் கம்பனி ஒவ்வொன்றும், ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் பின்வருவனவற்றைத் தயாரித்தல் வேண்டும்:—

(அ) அத்தகைய நிதியாண்டின் கடைசி வேலை நாளன்று உள்ளபடியான ஐந்தொகை; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆண்டு தொடர்பான இலாப நட்டக் கணக்கு.

14. (1) நிதிக் கம்பனியொன்றின் ஐந்தொகை ஆனது, அத்தகைய ஐந் தொகை எந்த நிதியாண்டு தொடர்பானதோ அந்த நிதி ஆண்டின் இறுதியில் உள்ளவாறான அத்தகைய கம்பனியின் அலுவல்களின் நிலைமையைத் தருதல் வேண்டும்.

(2) ஐந்தொகையில் அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட ஏதேனும் கூற்றில் பின்வருவன காட்டப்படல் வேண்டும்:—

(அ) தனித்தனியான தலைப்புக்களின் கீழ்த் திடமான சொத்துக்களைப் பிரதி நிதித்துவப்படுத்தாததான மூலதனமாக்கப்பட்ட செலவுகள் அவை பதிவழிக்கப்பட்டிராத அளவுக்கு;

(ஆ) முதலீடுகளின் சந்தைப் பெறுமதி;

(இ) நிதியாண்டின்போது நிலையான சொத்துக்களின் ஏதேனும் விலை மதிப் பீடு செய்யப்பட்டிருக்குமாயின், அத்தகைய சொத்துக்களை விலை மதிப் பிடுவதற்குக் கடைப்பிடிக்கப்பட்ட முறை;

(ஈ) மீளாக் கடன்கள், சந்தேகத்துக்கிடமான கடன்கள் என்பவற்றுக்கான ஏற்பாடுகளுக்குப் பின்னர், முற்பணங்களின் கூட்டு மொத்தத் தொகை கள்;

(உ) நிலையான சொத்துக்களின் பெறுமதியின் தேய்வுக்கெனப் புதுப்பித்தல் களுக்கென அல்லது குறுக்கத்துக்கென ஏற்பாடு செய்தலில் ஏதேனும் அதிகரிப்பு அல்லது வீழ்ச்சி;

(ஊ) நிதிகளின் மூலங்களும் பயன்பாடுகளும்;

(எ) தனித்தனியாக வேறுபடுத்தப்படற்பாலனவான ஒதுக்குகள், ஏற்பாடு கள், அத்துடன் பொறுப்புகள்;

(ஏ) இச்சட்டம் வலுவுக்கு வந்ததன் பின்னரான முதலாவது ஐந்தொகை யின் விடயத்தில் தவிர, நேர் முற்போந்த நிதியாண்டின் முடிவில் ஐந்தொகையில் காட்டப்பட்ட எல்லா விடயங்களுக்குமான நேரொத்த தொகைகள்.

15. இலாப, நட்டக் கணக்கில் அல்லது அதனோடு இணைக்கப்பட்ட ஏதேனும் கூற்றில் பின்வருவன காட்டப்படுதல் வேண்டும்:—

(அ) நிலையான சொத்துக்களின் பெறுமதியிலான தேய்வுக்கென, புதுப்பித்தல்களுக்கென அல்லது குறுக்கத்துக்கென ஏற்பாடு செய்யப்பட்டதன் வகையாக அரசிறைக்குப் பொறுப்பிக்கப்பட்ட தொகை;

(ஆ) இலாபங்களின் மீது இலங்கை வருமான வரிக்கெனவும் இலங்கையின் வேறு வரி விதிப்புகளுக்கெனவும் அரசிறைக்குப் பொறுப்பிக்கப்பட்டதும் அத்தகைய கணக்கிலிருந்து வேறு பிரித்துக் காட்டப்படக் கூடியதுமான தொகை நடப்பு வரி விதிப்பு ஆண்டில் அல்லது அடுத்துவரும் ஒரு ஆண்டில் வருமதியாகவுள்ள வரி தொடர்பிலான பொறுப்புகளுக்கென ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் அல்லது ஒதுக்கி வைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் தொகைகள் முக்கியமானதாயின்;

(இ) செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்படும் பங்கிலாபங்களின் கூட்டுமொத்தத் தொகை;

(ஈ) கணக்காய்வாளர்களின் ஊதியத் தொகை;

(உ) பணிப்பாளர்களின் வேதனதிகளினது கூட்டு மொத்தத் தொகையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதும், அரசிறைக்குப் பொறுப்பிக்கப்பட்டதுமான தொகை;

(ஊ) ஒதுக்குக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட அல்லது ஒதுக்கி வைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட அல்லது ஒதுக்குகளிலிருந்து மீளப் பெறப்பட்ட தொகை;

(எ) வங்கித் தொழில் கம்பனிகளால் வழமையில் கொண்டு நடாத்தப்படாதவையும், அத்துடன் விதிவிலக்கான அல்லது மீள வருவனவல்லாத தன்மையிலான சூழ்நிலைகளையிட்டு அல்லது கணக்கீட்டு அடிப்படையிலான ஒரு மாற்றத்தால் வழமையில் கொண்டு நடாத்தப்படுபவையுமான அத்தகைய கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற இலாபம் அல்லது நட்டம் அல்லது வருமானம், செலவுகள் என்பன தனித்தனியான தலைப்புகளின் கீழ்;

(ஏ) இச்சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்னரான முதலாவது இலாப நட்டக் கணக்கில் காட்டப்பட்டுள்ள எல்லா விடயங்களுக்குமான, நேரொத்த தொகைகள்.

16. (1) நிதிக் கம்பனி ஒவ்வொன்றும் நிதியாண்டு முடிவடைந்த ஆறு மாதங்களுக்குள் பின்வருவனவற்றைப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்:—

(அ) அவ்வாண்டிற்கான கம்பனியின் இலாப நட்டக் கணக்கு,;

(ஆ) அத்தகைய இலாப நட்டக் கணக்கு எத்திகதிவரை தயாரிக்கப்பட்டுள்ளதோ அத்திகதியன்று உள்ளவாறான ஐந்தொகை;

(இ) அத்தகைய இலாப நட்டக் கணக்குடனும் ஐந்தொகையுடனும் இணைக் கப்பட்ட கணக்காய்வாளர் அறிக்கை; அத்துடன்

(ஈ) அத்தகைய ஐந்தொகையுடன் இணைக்கப்பட்டதான கம்பனி விவகாரங் கள் தொடர்பில் பணிப்பாளரின் அறிக்கை.

(2) நிதிக் கம்பனி ஒவ்வொன்றும், அத்தகைய கம்பனியின் ஐந்தொகையும் இலாப நட்டக் கணக்கும், அடுத்துறும் நிதியாண்டிற்கான ஐந்தொகையும் இலாப நட்டக் கணக்கும் தயாரிக்கப்பட்டு வெளிக்காட்டி வைக்கப்படும் வரை ஐந்தொகை யையும் இலாப நட்டக் கணக்கையும் அதன் தொழிலிடங்கள் ஒவ்வொன்றினதும் துலாம்பரமான பாகமொன்றில் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

(3) இப்பாகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஐந்தொகையும் இலாப நட்டக் கணக்கும் என்ன படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதனைச் சபை குறித்துரைக் கலாம்; அத்தகைய படிவம் குறித்துரைக்கப்படுமிடத்து, நிதிக் கம்பனி ஒவ்வொன் றினதும் ஐந்தொகையும் இலாப நட்டக் கணக்கும் குறித்துரைக்கப்படக் கூடிய வாறான அத்தகைய படிவத்தில் தயாரிக்கப்படுதலும் வேண்டும்.

17. நிதிக் கம்பனியின் கணக்காய்வாளர் கணக்குகள், நிதிகள், நிதிகளின் முகாமைத்துவம் மற்றும் நிதிக் கம்பனியின் ஆதனத்தைப் பரிசோதனை செய்தல் வேண்டும். கணக்காய்வாளர் இயலுமாகக் கூடியவரையில் மற்றும் அவசியமாகக் கூடியவரையில்—

(அ) சபையினால் கொடுக்கப்பட்ட சட்டம், ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப் புரைகளுக்கு அமைவாக நிதிக் கம்பனியின் நடத்தை உள்ளதா;

(ஆ) கணக்குகளைப் பராமரித்தல் மற்றும் வைப்பீட்டை ஏற்றுக்கொள்ளல் தொடர்பிலான பதிவேடுகள் திருப்திகரமானதா;

(இ) கணக்கு முறைகள், நடவடிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் வேறு ஆவணங்கள், நிதிக் கட்டுப்பாட்டு நோக்கத்துக்காக அந்நிலைமை யின்படியும் மற்றும் நிதிக் கம்பனிகளின் செயற்பாடுகளின் தொடர் மதிப்பீட்டைப் பெறுவதற்குத் தகவலைக் கொடுப்பதற்கான நிலைமைப் படியும் முறையாகவும் போதுமான அளவும் உருவமைப்புப் பெற்றுள் ளதா மற்றும் அத்தகைய முறைகள், நடவடிக்கைகள், புத்தகங்கள் மற்றும் வேறு புத்தகங்கள் தற்போது செயற்காட்டில் உள்ளதா;

(ஈ) கணக்கியல், நிதி, மற்றும் மதிப்பீட்டு அளித்தலின் அடிப்படை நெறி களுக்கு உரிய கவனம் செலுத்திப் பரிசீலனையின் கீழ் உள்ள காலப் பகுதி நிதிக் கம்பனியின் அலுவல்கள் தொடர்பில் உண்மையானதும் நடுநிலையான நிலைமைக்குக் கொண்டுவரக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் உருவாய்வு செய்யப்பட்டதா எனவும் பரிசோதனை செய்ய லாம்.

18. (1) பணிப்பாளர் தாமாகவேனும் அல்லது தம்மால் அதிகாரமளிக்கப் பட்ட அலுவலர் மூலமாகவேனும் ஏதேனும் நிதிக் கம்பனியின் அலுவல்களைப் பரிசோதனை செய்த பின்னர் அல்லது நிதிக் கம்பனியிலிருந்து கிடைக்கப் பெற்ற தகவலின்மீது அந்நிதிக் கம்பனி கடனிறுக்க வகையற்றதென்று அல்லது அதன் வைப்பிலிடுவோரின் கோரிக்கைகளைச் சரி செய்வதற்கு முடியாமற் போகும் சாத்தியமுடையதென்று அல்லது அது தொடர்ந்து தொழில் நடாத்துவது அதன் வைப்பிலிடுவோருக்கு அல்லது கடன் கொடுத்தோருக்கு நட்டம் விளைவிக்கும் சாத்தியமுடையதென்று திருப்திப்படும் ஏதேனும் விடயத்தில், சபையிடம் சமர்ப் பிப்பதற்காகப் பணிப்பாளரானவர் அதற்கிணங்கவுள்ள அறிக்கையொன்றை, மத்திய வங்கி ஆளுநருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன் நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் மீளாய்வு செய்ததன்மேல் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய் யப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென்று சபையானது கருதினால், அந் நிதிக் கம்பனியை இலங்கையில் தொழில் நடாத்துதலை உடனடியாக இடை நிறுத்தும்படி பணித்தும், அந்நிறுவனத்தின் எல்லாப் புத்தகங்களையும் பதிவேடு களையும் சொத்துக்களையும் பொறுப்பேற்கும்படியும், அந் நிதிக் கம்பனி தொடர்ந்து தொழில் நடாத்துதலைத் தடுப்பதற்கு அவசியமான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும்படியும் பணிப்பாளரைப் பணித்தும் சபையானது கட்டளையொன்றை ஆக்கலாம்.

(2) எந்தவொரு நிதிக் கம்பனியினதும் எவரேனும் பணிப்பாளரில், முகாமை யாளரில், செயலாளர் அல்லது ஊழியரில் அல்லது கொம்பனியின் ஏதேனும் சொத்துக்கள், பதிவேடுகள், புத்தகங்களைப் பாதுகாப்பில் அல்லது தன்வசம் வைத்திருக்கும் வேறு எவரேனும் ஆளில் எவ் ஆள், பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அதைக் கொடுக்கத் தவறுகின்றாரோ அல்லது பணிப்பாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளை, ஏதேனும் புத்தகங்களை, பதிவேடுகளை அல்லது சொத்துக்களைப் பொறுப்பாக எடுத்தலையும் அல்லது கம்பனியின் தொடர்ச்சியான தொழிலைத் தடுப்பதற்குப் பணிப்பாளர் அவசியமானதெனக் கருதக்கூடிய அத்தகைய வேறு விடயங்களை எடுத்தலையும் அனுமதிக்க மறுக்கின்றாரோ அல்லது மீறுகின்றாரோ அவ் ஆள் தவறொன்றுக்குக் குற்றம் சாட்டப்பட்டவராதல் வேண்டும்.

(3) ஏதேனும் வேறு சட்டத்தின் அது எவ்வாறிருப்பினும், (1) ஆம் உட் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை மீளாய்வு செய்யப்படுதலை அல்லது ஒழிக்கப் படுதலை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்லது அத்தகைய கட்டளை ஆக்கப் பட்டதன் காரணமாக உறப்பட்ட அல்லது உறப்படும் சாத்தியமுடைய அல்லது உறப்பட்டதாகச் சார்த்தப்படும் ஏதேனும் நட்டம் அல்லது சேதம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எதுவும் தொடுக்கப் படுதலாகாது.

(4) ஏதேனும் நிதிக் கம்பனியின் தொடர்பில் சபையினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்று, அக்கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து 60 நாட் காலம் முடிவடைவதன் மேல் பயனில்லாதொழிதல் வேண்டுமென்பதுடன் சாத்தியப்படக் கூடிய விரைவிலும் எச்சந்தருப்பத்திலும் சொல்லப்பட்ட காலம் முடிவடைய முன்னரும்—

(அ) அக்கம்பனி நிபந்தனையில்லாமலோ அல்லது பொது மக்கள் நலனுக்கு அல்லது அந்நிறுவனத்தின் வைப்பிலிடுவோரினதும் வேறு கடன் கொடுத்தோரினதும் நலனுக்கு அவசியமானதெனச் சபை கருதக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கமையவோ மீளவும் தொழில் நடாத்தும்படி அனுமதித்து கட்டளையிடுதல்; அல்லது

(ஆ) அக்கம்பெனியை ஒடுக்குவதற்காகத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்துக்கு இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு விண்ணப்பிக்குமாறு வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரைச் செய்தல்,

சபையினது கடமையாதல் வேண்டும்.

(அ) என்னும் பந்தியால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும் அத்துடன் வேறு ஏதேனும் சட்டத்தின் அல்லது கம்பனியின் அமைப்புப் புறவிதிகள் அத்துடன் அவ்விதிகள் என்பன எது எப்படியிருப்பினும் அல்லது சபை ஆனது, மீளவும் தொழில் நடத்துவதற்குக் கம்பனியொன்று அனுமதிக்கப்படுவதன்மேல் தொழிலை மீளவும் ஆரம்பிக்கக் கம்பெனியை அனுமதிப்பதற்கான நிபந்தனையொன்ருக, கம்பனியில் எவரேனும் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது ஊழியர் தொடர்ந்திருப்பது அதன் வைப்பீட்டாளர்களின் நலனுக்கு முரணானது எனக் கருதுமிடத்து அத்தகைய கம்பனியின் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது ஊழியர் எவரேனையும் அகற்றிவிட்டு, அத்தகைய கம்பனியின் பணிப்பாளர், முகாமையாளர், ஊழியர் என்றவாறு எவரேனையும் ஆளை நியமிக்கலாம். ஆயினும், எவ்வாருயினும், அவ்வாறு பணிப்பாளர்களாக நியமிக்கப்படும் ஆட்களின் எண்ணிக்கை அத்தகைய நிதிக் கம்பனியின் சபையின் பெரும்பான்மையொன்ருக அமைதலாகாது.

(5) நிதிக் கம்பனி 42 ஆம் பிரிவிற்கிணங்க உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்று செய்திராவிடில் அல்லது அப்பிரிவிற்கிணங்கச் செய்யப்பட்ட நிதிக் கம்பனியின் விண்ணப்பத்தை நீதிமன்றம் நிராகரித்துள்ளவிடத்து, பணிப்பாளர் கம்பனியை ஒடுக்குவதற்கு இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தகுதிவாய்ந்த நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவின்கீழ் நிதிக் கம்பனியொன்று இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் காலத்தின்போது, சொல்லப்பட்ட கம்பெனியின் அல்லது அக்கம்பனி தொடர்பிலான ஏதேனும் செலவுகளை அவ்வாறு செய்தல் பொது நலனுக்குரியதெனச் சபை கருதுமாயின் மத்திய வங்கியின் நிதியிலிருந்து அது ஈடு செய்யலாம்.

(7) தகுதிவாய்ந்த நீதிமன்றமானது, பணிப்பாளரினல் ஏதேனும் விண்ணப்பம் செய்யப்படுவதன் மேல் ஏதேனும் நிதிக் கம்பனியை ஒடுக்கும்படி கட்டளையிடலாம்; அத்துடன் அதற்கிணங்க நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கமைய, கம்பெனிகளை ஒடுக்குதல் தொடர்பான 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய கம்பனியை ஒடுக்குதலுக்கு ஏற்ப மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*(8)* இச்சட்டத்தின்கீழ் (கம்பனியொன்றைத் தவிர்ந்த) ஆளொருவரை அல்லது ஆட்கள் குழுவை ஒடுக்குவதற்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளவிடத்து அத்தகைய ஆளின் அல்லது ஆட்கள் குழுவின் சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் பெறுமதியான ஒழிப்போன் தகுந்ததென எண்ணுகிறவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய அடிப்படையின் மீதும் நிச்சயிக்கப்படுதல் வேண்டும். தகுதிவாய்ந்த நீதிமன்றமானது ஒடுக்கற் கட்டளையொன்றை ஆக்கியதன் பின்னர், எந்நேரத்திலும் எல்லாச் சொத்துக்களையும் காசாக்கும்படி ஒழிப்போனுக்கு அதிகாரமளிக்கலாம்; அத்துடன் எவரேனுமாளை அக்கம்பெனிக்கு உரித்துடையதும் அவர் வசமுள்ளதுமான ஏதேனும் பணத்தையும், ஆதனத்தையும் அல்லது புத்தகங்களையும் வேறு ஆவணங்களையும் உடனடியாகவோ குறித்துரைக்கப்பட்டதொரு காலத்துக்குள்ளேயோ ஒழிப்போனிடம் செலுத்தும்படி ஒப்படைக்கும்படி உரித்துமாற்றும்படி, மீளவொப்படைக்கும்படி அல்லது கைமாற்றப்படுத்தலாம். கம்பெனியை ஒடுக்கும் நோக்கத்துக்கான திட்டமொன்று ஒழிப்போனால் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தலுக்காகத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆளின் அல்லது ஆட்கள் குழுவின் ஒடுக்கலானது அத்திட்டத்திற்கிணங்கக் கொண்டு நடாத்தப்படுதலும் வேண்டும்.

*(9)* இப்பிரிவின் கீழான விண்ணப்பமொன்றைப் பின்பற்றியாகிலும் சரி அல்லது வேறு வகையிலுஞ்சரி, நிதிக் கம்பெனியொன்றை ஒடுக்குதற்கெனக் கட்டளையொன்று ஆக்கப்பட்ட ஏதேனும் விடயத்தில், எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், அத்தகைய ஒடுக்குதல் நோக்கங்களுக்காக, ஒழிப்போனாக இருப்பதற்கெனப் பணிப்பாளர் அல்லது அதன் சார்பில் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள் நியமிக்கப்படல் வேண்டும். கம்பெனியல்லாத ஆட்கள் குழுவொன்றை ஒடுக்குவதற்கான ஒரு கட்டளை ஆக்கப்படுமிடத்து, இதன் கீழ் நியமிக்கப்படும் ஒழிப்போனது ஊதியமும், ஒடுக்கலின் போது தகுந்த முறையில் உறப்பட்ட செலவு தொகைகள், கட்டணங்கள், செலவுகள் என்பன யாதும், எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், மற்றெல்லா உரிமைக் கோரிக்கைகளிலும் பார்க்க முதன்மை பெறுதல் வேண்டும் என்பதோடு ஒடுக்கப்படும் அத்தகைய ஆளின் அல்லது ஆட்களின் குழுவினது சொத்துக்களிலிருந்து கொடுக்கப்படுதலும் வேண்டும்.

*(10)* நிதிக் கம்பெனியொன்றை ஒடுக்குவதில் உறப்பட்ட ஏதேனும் செலவு தொகைகளையும் கட்டணங்களையும் செலவுகளையும், அவ்வாறு செய்தல் பொது நலனுக்குரியதெனச் சபை கருதுமிடத்து மத்திய வங்கியின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

*(11)* நான்காம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஏதேனும் நிதிக் கம்பெனியை ஒடுக்குவதற்கான விண்ணப்பம் பணிப்பாளரினால் செய்யப்படும் ஏதேனும் விடயத்தில்—

*(அ)* அக்கம்பெனியானது அவ்விண்ணப்பம் முடிவுறுதிருக்கும் காலத்தின் போது தொழில் கொண்டு நடாத்துவதற்கு நீதிமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதாகவிருந்தால் ஒழியவும், நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகள் எவையேனுமிருப்பின் அவற்றுக்கிணங்கவன்றியும், அவ்வாறு தொழில் கொண்டு நடாத்துதலாகாது; அத்துடன்

(ஆ) நீதிமன்றமானது, அது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின் பின் அக் கம்பெனியானது கடனிறுக்க வகையற்றதாக இல்லையென்று கருதினால், அக்கம்பெனியானது, நிபந்தனையின்றியோ அல்லது பொது மக்கள் நலனுக்கு அல்லது அக்கம்பெனியின் வைப்பிலிடுவோரினதும் வேறு கடன் கொடுத்தோரினதும் நலனுக்கு அவசியமென நீதிமன்றம் கருதக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவோ தொழிலை மீள நடாத்துவதற்கு அனுமதியளித்து வெளிப்படுத்துகையொன்றைச் செய்யலாம்.

(12) இப்பிரிவின் கீழ்த் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும், உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யப்படுவதற்கு அமைந்ததாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய மேன்முறையீட்டின் போது குடியியல் வழக்குகளில் மேன்முறையீடுகள் செய்தல் தொடர்பான குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள் அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின் விடயத்தில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

ஆயின், (11) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான கட்டளையொன்று, முற்றானதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் மேன்முறையீட்டிற்கமைந்ததாதலுமாகாது.

(13) இப்பிரிவின் கீழ்த் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றிற்குச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஐயாயிரம் ரூபாய் பெறுமதி கொண்ட வழக்கொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(14) இப்பிரிவில் ஏதேனும் நிதிக் கம்பெனி தொடர்பில் ''தகுதிவாய்ந்த நீதிமன்றம்'' என்பது கொழும்பு மாவட்ட நீதிமன்றம் என அல்லது இலங்கையில் அந்த நிதிக் கம்பெனியின் பிரதான அலுவலகம் நடாத்திவரப்படும் மாவட்டத்திலுள்ள மாவட்ட நீதிமன்றம் எனப் பொருள்படும்.

19. (அ) பணிப்பாளர் அல்லது அவரால் 12 ஆம் பிரிவின்கீழ் அல்லது இப்பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தும்பொழுது நேரில் சமூகமளிப்பதற்கு அல்லது தகவல் எதையேனும் கொடுத்துதவ அல்லது புத்தகம், பதிவேடு அல்லது வேறு ஆவணம் எதனையும் காண்பிக்கத் தவறும் அல்லது பணிப்பாளர் அல்லது பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது 12 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ்ப் பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளர் இப்பிரிவின்கீழ் அல்லது 12 ஆம் பிரிவின் கீழ்ப் பரிசோதனை எதனையும் செய்வதைத் தடைசெய்யும் அல்லது அனுமதிக்கத் தவறும் ஏதேனும் நிதிக் கம்பெனியின் பணிப்பாளர், முகாமையாளர், செயலாளர் அல்லது ஊழியர் எவரேனும் இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(ஆ) பணிப்பாளருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது 12 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ்ப் பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் கணக்காய்வாளருக்கு இப்பிரிவின்கீழ் அல்லது 12 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் அறிக்கையில் அல்லது தகவலில் பொய்யானதென்று அவர் அறிந்துள்ள கூற்று எதனையும் செய்யும் எந்தவோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

20. (1) பதினெட்டாம் பிரிவின் கீழ்ப் பணிப்பாளர் அறிக்கையொறச்ன்னை செய்வதன் மேல் நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் மீளாய்வு செய்ததன்மீது இதன கத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறான நடவடிக்கையின் மூலம் அந்த நிதிக் கம்பெனியைக் கடனிறுக்க வகையுள்ளதாகவும் நிலைத்திருக்கக் கூடியதாகவும் செய்யலாமெனச் சபை கருதுமாயின் அரசாங்க கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையொன்றின் மூலம் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக் கூடிய வாறான அத்தகைய காலத்துக்கு நிதிக் கம்பெனியொன்றின் நிருவாகத்தையும் முகாமையையும் பொறுப்பேற்கலாம். சபையானது அதன் பின்னர் அரசாங்கக் கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தலொன்றின் மூலம், ஆரம்ப அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்தை நீடிக்கலாம். சபையானது அத்தகைய அறிவித் தல் ஒவ்வொன்றினதும் பிரதியொன்றைக் கம்பனிகள் பதிவாளருக்கு அனுப்பு வித்தல் வேண்டும். இவர் கம்பனி தொடர்பிலான புத்தகங்களில் அதனைப் பற்றிய குறிப்பொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) நிதிக் கம்பெனியொன்றின் நிருவாகத்தையும் முகாமையையும் சபை பொறுப்பேற்குமிடத்து, சபையானது—

(அ) அத்தகைய நிதிக் கம்பெனி தொடர்பில் ஏதேனும் எழுத்திலான சட்டத் தினால் அல்லது சட்டத்தின்கீழ் அல்லது அமைப்பு அகவிதிகளினால் அத்தகைய கம்பெனியின் பணிப்பாளர்கள் சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப் பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிர யோகிக்கலாம், புரியலாம் அத்துடன் நிறைவேற்றலாம்;

(ஆ) கம்பெனியின் வைப்பீட்டாளர்களினதும் கடன் தருநர்களினதும் நலனை யும் பொது மக்கள் நலனையும் கருத்திற் கொண்டு சபைக்கும் எவரேனும் ஆளுக்கும் அல்லது ஆட்கள் குழுவுக்கும் இடையில் உடன்பட்டுக் கொள்ளப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய நிதிக் கம்பனியை முகாமை செய்வதற்காக அத்தகைய ஆளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் ஏதேனும் உடன்படிக்கையைச் செய்து கொள்ள லாம்;

(இ) நிதிக் கம்பனியை வேறொரு நிதிக் கம்பெனியுடன் அல்லது ஏதேனும் வேறு நிறுவனத்துடன் அத்தகைய வேறு நிதிக் கம்பனியின் அல்லது நிறுவனத்தின் சம்மதத்துடன் ஒன்றிணைப்பதற்கு அவசியமானவை என அது கருதும் அத்தகைய ஏற்பாடுகளைச் செய்யலாம்;

(ஈ) அத்தகைய கம்பனியை, அதன் மூலதனத்தை அதிகரிப்பதன்மூலமும் புதிய பங்குதாரர்களுக்கு ஏற்பாடு செய்வதன் மூலமும், அத்துடன் பணிப்பாளர் சபையை மீளவமைப்பதன் மூலமும் மீண்டும் ஒழுங் கமைக்கலாம்;

(உ) வைப்பீட்டாளர்களின் நன்மைக்கானதென அது கருதுகின்றவாறான அத்தகைய ஏதேனும் முறையில் நிதிக் கம்பனியை மீள அமைத்துரு வாக்கலாம்;

(ஊ) ஏதேனும் நிதிக் கம்பனியின் எவரேனும் பங்குதாரரை, அவருக்குரித் தான எவையேனும் பங்குகளின் சொத்தாண்மையை அத்தகைய ஆளி னுல் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டின் கொடுப்பனவுமீது, சபையால் நியமிக்கப்பட்ட ஆளொருவருக்கு உரிமை நீக்கம் செய்யு மாறு அல்லது மாற்றுமாறு பணிக்கலாம்:—

(அ) அத்தகைய பங்குகள் விலைகோரிப் பெறப்பட்டவிடத்து அதன் சந்தைப் பெறுமதி; அல்லது

(ஆ) அத்தகைய பங்குகள் விலை கோரிப் பெறப்படாதவிடத்துச் சபை யால் நியமிக்கப்பட்ட விலை மதிப்பீட்டாளர் ஒருவரால் தீர்மானிக் கப்பட்ட விலை.

(3) நிதிக் கம்பனியொன்றின் நிருவாகமும் முகாமையும் சபையால் பொறுப் பேற்கப்படும் காலப் பகுதியின்போது அத்தகைய நிதிக் கம்பனியின் பணிப்பாளர், முகாமையாளர், செயலாளர் ஆகிய ஒவ்வொருவரும் அவ்வாறு செய்வதற்குச் சபையினுல் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்டாலொழிய அத்தகைய கம் பெனி தொடர்பில் எவையேனும் தத்துவங்களை, கடமைகளை அத்துடன் பணிகளைப் பிரயோகிக்காது, புரியாது அத்துடன் நிறைவேற்ருது ஒழிதல் வேண்டும்.

(4) நிதிக் கம்பெனியொன்றின் நிருவாகமும் முகாமையும் (1) ஆம் உட் பிரிவின்கீழ் சபையினுல் பொறுப்பேற்கப்படுமிடத்து, அவ்வாறு செய்தல் பொது மக்களின் நலனுக்கு அவசியமானதெனச் சபை கருதுமிடத்துச் சபையானது—

(அ) மானியக் கொடுப்பனவு அல்லாத வகையில் வேறு கடன்கள் அல்லது பண வசதிகள் என்ற வகையில், அவசியமெனச் சபை கருதக் கூடிய வாருன அத்தகைய நிதி வசதிகளை அந்த நிதிக் கம்பெனிக்கு ஒழுங்கு செய்யலாம் அல்லது வழங்கலாம் அத்துடன்;

(ஆ) அக்கம்பனியைப் பொறுப்பேற்றுச் செயற்படுத்துவதில் உறப்படும் எல் லாச் செலவுத் தொகைகளையும், கட்டணங்களையும், செலவுகளையும் ஈடுசெய்யலாம்:

ஆயின், எவ்வாருயினும் சபையானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் நிதிக் கம்பெனியொன்றின் நிருவாகத்தையும் முகாமையையும் பொறுப் பேற்ற பின்னர் எந்நேரத்திலும் அவ்வாறு செய்தல் பொது மக்களின் நலனுக்கு அல்லது வைப்பீட்டாளர்களின் நலனுக்கு உகந்ததென அபிப் பிராயப்படும் பட்சத்தில் கம்பெனியின் தொழிலைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கலாம் அல்லது பணிப்பாளரினுல் அல்லது சபை யால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினுல் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் மீது அக்கம்பெனியை நியாயமானதொரு காலப் பகுதிக் குள் நிலைத்திருக்கவும் கடனிறுக்க வகையுள்ளதாகவும் செய்வதற்கு இயலாதெனச் சபைக்குத் தோன்றுமாயின், அக் கம்பெனியை ஒடுக்கு வதற்குத் தகுதிவாய்ந்த நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கும்படி பணிப் பாளரைப் பணிக்கலாம். நிதிக் கம்பனியை ஒடுக்கும்படி பணிப்பாள ரைச் சபை பணிக்கின்ற சந்தருப்பத்தில், ஒடுக்குதல் தொடர்பான 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையன வாகுதல் வேண்டும்.

21. (1) ஏதேனும் நிதிக் கம்பெனியின் அலுவல்கள் குறித்துப் பணிப்பாளர் தாமே பரிசோதனை செய்ததன் பின்னர் அல்லது தம்மால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் பரிசோதனை செய்யப்பட்டதன் பின்னர் அல்லது அந் நிதிக் கம்பெனியிடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவலின்மீது அத்தகைய நிதிக் கம்பெனிக்குத் தற்காலிக பண வசதி ஏற்பாடு செய்தல், வைப்பீட்டாளர்களின் நலனுக்கு உகந்ததெனப் பணிப்பாளர் திருப்தியடையும் ஏதேனும் விடயத்தில், அதற்கிணங்கப் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை செய்தல் வேண்டும்; அத்துடன் சபையானது, அதனால் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய நியதிகள் மீதும் நிபந்தனைகளின் மீதும் அத்தகைய நிதிக் கம்பெனிக்குக் கடனளிக்கும் நோக்கத்துக் காகப் (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் 88உ என்னும் பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்டுள்ள நடுத்தர, நீண்ட தவணைக்காலக் கடன் நிதியத்திலிருந்து வணிக வங்கியொன்றுக்கு நிதி வசதியொன்றை வழங்கலாம்.

(2) பணச் சட்டத்தின் 88அ முதல் 88உ வரையிலான பிரிவுகளின் ஏற்பாடு கள், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் வணிக வங்கியொன்றுக்கு வழங்கப் படும் ஏதேனும் நிதி வசதி தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும்.

22. இச் சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சபையானது—

(அ) எந்த நிதிக் கம்பனியின் முகாமையும் நிருவாகமும் சபையினால் கையேற் கப்பட்டதோ அந்த நிதிக் கம்பனியொன்றுடன் வைப்பீட்டாளர் ஒரு வரால் செய்யப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தை மீளாய்வு செய்து அத்தகைய ஒப்பந்தம் வைப்பீட்டாளர்களின் அல்லது கடன் தருநர் களின் நலனை முறையாகக் கருத்திற் கொள்ளாமல் அல்லது கண்ணிய மான வர்த்தக நடைமுறையை முறையாகக் கருத்திற் கொள்ளாமல் செய்து கொள்ளப்பட்டுள்ளதென அது கருதுமிடத்து மீள் கொடுப் பனவு, உபாயங்கள், வட்டி வீதங்கள், அறவீடுகள் என்பன தொடர்பி லான நியதிகள் உட்பட அத்தகைய ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை வேறுபடுத்தலாம்;

(ஆ) எந்த நிதிக் கம்பனியின் முகாமையும் நிருவாகமும் சபையினால் கையேற் கப்பட்டதோ அந்த நிதிக் கம்பனியொன்றினால் எவரேனும் ஆளுடன் அல்லது ஆட்கள் குழுவுடன் செய்யப்பட்ட ஏதேனும் உடன்படிக் கையை அல்லது ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யலாமென்பதுடன் அத் தகைய மீளாய்வின்மேல் அத்தகைய ஒப்பந்தம், வைப்பீட்டாளர்களின் அல்லது கடன் தருநர்களின் நலனை முறையாகக் கருத்திற் கொள்ளாமல் அல்லது கண்ணியமான வர்த்தக நடைமுறையைக் கருத்திற் கொள்ளா மல் செய்து கொள்ளப்பட்டுள்ளதெனச் சபைக்குத் தோன்றுமிடத்து அத்தகைய உடன்படிக்கையின் அல்லது ஒப்பந்தத்தின் நியதிகளை வேறு படுத்தலாம்.

23. சபையானது, 20 ஆம் பிரிவின் கீழ், நிதிக் கம்பனியொன்றின் நிருவாகத்தையும் முகாமையையும் கையேற்றுள்ளவிடத்து, சபையினுல் ஏதேனும் செயல் செய்யப்பட்டமை அல்லது செய்யப்படாமை காரணமாக அல்லது 20 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினுல் அல்லது அதன் கீழ் சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கையில் ஏற்பட்ட அல்லது உறப்பட்ட எவரேனும் ஆளினுல் ஏற்பட்டதென அல்லது உறப்பட்டதெனக் குற்றஞ்சார்த்தப்பட்ட ஏதேனும் இழப்பு அல்லது சேதங்கள் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கிற்கு அல்லது வழக்கு நடவடிக்கைக்கு உட்படுதல் அல்லது அமைவாதல் ஆகாது.

24. (1) சபையானது 20 ஆம் பிரிவின் கீழ் நிதிக் கம்பனியொன்றின் நிர்வாகத்தையும் முகாமையையும் கையேற்றுள்ளவிடத்துச் சபை, வைப்பீட்டாளர்களினதும் கடன் தருநர்களினதும் நலனைப் பாதுகாப்பதற்கு ஏதேனும் நியதிச் சட்ட சபைக்கு அல்லது ஆளுக்கு அத்தகைய நியதிச் சட்ட சபையின் அல்லது ஆளின் சம்மதத்துடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அத்தகைய நிதிக் கம்பனியின் நிர்வாகத்தையும் முகாமையையும் உரித்தாக்கலாம். அத்தகைய கட்டளை கசெற்றில் வெளியிடப்படுவதன்மீது அத்தகைய நிதிக் கம்பனியின் நிர்வாகமும் முகாமையும் அத்தகைய நியதிச் சட்ட சபைக்கு அல்லது ஆளுக்கு உரித்தாக வேண்டும் என்பதுடன் அத்தகைய நியதிச் சட்ட சபை அல்லது ஆள் அத்தகைய நிதிக் கம்பனி தொடர்பில் எழுத்திலான ஏதேனும் சட்டத்தால் அல்லது அதன் கீழ் அல்லது கம்பனியின் அமைப்பு அகவிதிகளால் அத்தகைய கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு அளிக்கப்பட்ட, உரித்தாக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் புரிதலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையால், சபை, நிதிக் கம்பனியொன்றின் நிருவாகத்தையும் முகாமையையும் ஏதேனும் நியதிச் சட்ட சபைக்கு அல்லது ஆளுக்கு உரித்தாக்கியுள்ளவிடத்து, சபையானது, அத்தகைய நிதிக் கம்பனியில் எவரேனும் பங்காளரை அவர் உரித்தாகக் கொண்டுள்ள எவையேனும் பங்குகளின் உரித்தாண்மையைப் பின்வருமாறு கணக்கிடப்பட்ட நட்டஈடு அத்தகைய ஆளுக்குச் செலுத்தப்படுவதன்மீது சபையால் நியமிக்கப்பட்ட ஆளொருவருக்கு உரிமை துறக்குமாறு அல்லது கைமாற்றுமாறு பணிக்கலாம்:—

(அ) அத்தகைய பங்குகள் விலைகோரிப் பெறப்பட்டுள்ளவிடத்து அதன் சந்தைப் பெறுமதியில்;

(ஆ) அத்தகைய பங்குகள் விலைகோரிப் பெறப்படாதவிடத்து சபையால் நியமிக்கப்பட்ட விலை மதிப்பீட்டாளர் ஒருவரால் நிர்ணயிக்கப்பட வேண்டிய விலையின்படி.

25. (1) சபையானது 18 ஆம் பிரிவின்கீழ்ப் பணிப்பாளர் அறிக்கை செய்வதன் மேல் நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் மீளாய்வு செய்வதன்மீது, நிதிக் கம்பனியின் முன்னைய அல்லது தற்போதைய பணிப்பாளர், பிரதம நிறைவேற்றுநர், முகாமையாளர், ஊழியர் அல்லது முகவர் எவரேனும், கம்பனிக்குரிய ஏதேனும் பணத்தை அல்லது ஆதனத்தைத் துர்ப்பிரயோகம் செய்வதன் மூலம் மோசடியாக, தவறுக அல்லது சட்டத்துக்கு முரணுகத் தாம் அல்லது வேறு எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் வளமடையச் செய்தார் என அபிப்பிராயப்

படின் சபை, 18 ஆம் அல்லது 20 ஆம் பிரிவின்கீழ் ஏலவே நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்பது எவ்வாறிருப்பினும் நிதிக் கம்பனிக்குரியதாக ஏற்றிக் கூறப்படற்பாலதான பணத்தை அல்லது ஆதனத்தைத் தகுதியானதெனச் சபை கருதக் கூடியவாறான அத்தகைய வீதப்படி வட்டியுடன் சபையால் குறித்துரைக்கப் படக் கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்குள் மீளச் செலுத்துமாறு அல்லது கொடுத்துத் தீர்க்குமாறு அத்தகைய ஆளை அல்லது ஆட்களைத் தேவைப் படுத்தலாம்.

(2) மேலே (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளெவரும் அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பணங்களை அல்லது ஆதனங்களை நிதிக் கம்பனிக்குக் கொடுத்துத்தீர்க்கத்தவறுமிடத்துச் சபையானது—

(அ) குறித்துரைக்கப்பட்டவொரு காலப் பகுதிக்குள்—

(1) அத்தகைய ஆளுக்குச் சொந்தமான; அல்லது

(2) அத்தகைய ஆள் நன்மைதரும் அக்கறை கொண்டுள்ள; அல்லது

(3) அத்தகைய ஆளுக்கான நம்பிக்கைப் பொறுப்பில் அத்தகைய ஆளின் உறவினர் ஒருவரால் வேறு எவரேனும் ஆளினால் கொள்ளப் பட்ட, கொள்வனவு செய்யப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட அல்லது உடைமை கொண்டுள்ள அல்லது நிதிக் கம்பனியின் சொத்துக்களாக ஏற்றிக் கூறப்பட்ட பணங்களைக் கொண்டு கொள் ளப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட,

எவையேனும் பணங்களின், ஆதனங்களின் அல்லது சொத்துக்களின் பெறுமதியையும் தன்மையையும் அவை இருக்குமிடங்களையும் சபை யால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு வெளிவிடுமாறு அத்தகைய ஆளைப் பணிக்கலாம்.

(ஆ) அந்த ஆளினால் ஏதேனும் நேரத்தில் அல்லது சபையால் குறித்துரைக் கப்படக் கூடியவாறான அத்தகைய நேரத்தில் சொந்தமாக வைத்திருக் கப்பட்ட அல்லது உடைமை கொண்டுள்ள அசைவுள்ள அல்லது அசை வற்ற ஆதனத்தையும் நிரற்படுத்தி, நிரற்படுத்தப்பட்ட ஆதனம் கொள் ளப்பட்ட தேதியையும் அத்துடன் கொள்ளல், கொள்வனவு, நன் கொடை, விருப்பாவணம், மரபுரிமை என்ற வகையில் அல்லது வேறு வகையிலா என்பதனையும் குறித்துரைத்துச் சத்தியப் பிரமாணம் செய் யப்பட்ட எழுத்திலான கூற்றொன்றைக் கொடுத்துதவுமாறு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(இ) வேறு எவரேனும் ஆளை—

(1) நிதிக் கம்பனியொன்றின் அலுவல்களைப் புலனாய்வு செய்வதில் அத்தகைய தகவல் துணை புரியலாம் என நம்புவதற்குச் சபைக்கு நியாயமான ஏதுக்கள் இருக்குமிடத்து, அத்தகைய ஆளினால் ஏதே னும் நேரத்தில் அல்லது சபையால் குறித்துரைக்கப்படக் கூடிய வாறான அத்தகைய நேரத்தில் சொந்தமாகக் கொண்டிருக்கப்பட்ட அல்லது உடைமை கொள்ளப்பட்ட அசைவுள்ள அல்லது அசை வற்ற எல்லா ஆதனங்களையும் நிரற்படுத்தியும்;

(ii) சபையின் அபிப்பிராயப்படி அத்தகைய புலனாய்வுக்கு இயைபான அத்தகைய வேறு கருமங்களின் விவரங்கள் அடங்கியதுமான சத்தியப் பிரமாணம் செய்யப்பட்ட எழுத்திலான கூற்றொன்றை,

கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தலாம்.

(ஈ) அறிவித்தலில் குறித்துரைக்கப்படக் கூடியவாறுன அத்தகைய காலப் பகுதிக்குள் அத்தகைய கணக்குகள் தொடர்பான பதிவுகள் அடங்கிய ஏதேனும் புத்தகத்தை, ஆவணத்தை அல்லது வங்கிக் காசோலையை முன் வைக்குமாறு அல்லது அவ்வாறு குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய பதிவுகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளைக் கொடுத்துதவுமாறு இலங்கையிலுள்ள ஏதேனும் வங்கியின் முகாமையாளரைத், தேவைப்படுத்தலாம்;

(உ) அறிவித்தல் குறித்துரைக்கப்பட்டவாறு உள்நாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்குள்ள, அத்தகைய ஆளின் அலுவல்கள் தொடர்பிலான எல்லாத் தகவலையும் கொடுத்துதவுமாறும், அத்துடன் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு, அத்தகைய ஆணையாளர் தலைமையதிபதியின் உடைமையில் அல்லது அவரது கட்டுப்பாட்டின் கீழுள்ள அத்தகைய ஆள் தொடர்பிலான ஏதேனும் ஆதனத்தின் சான்றுப் படுத்தப்பட்ட பிரதியொன்றை முன்வைக்குமாறும் அல்லது கொடுத்துதவுமாறும் அத்தகைய ஆணையாளர் தலைமையதிபதியைத் தேவைப் படுத்தலாம்;

(ஊ) பொது மக்களை, (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தகவலை அதனுல் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்கு எத்தன்மையதுமான எவையேனும் விடுமுறைகளில் கொடுத்துதவுமாறு அழைக்கலாம்;

(எ) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளுக்கு அல்லது அவருக்காக ஆதனத்தை அல்லது சொத்துக்களை நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருக்கின்ற உறவினர் ஒருவருக்கு அல்லது வேறு ஆளுக்கு நிதிக் கம்பனியொன்றின் நிதிகளென ஏற்றிக் கூறப்படற்பாலதான பணத்தைக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட ஆதனத்தை அல்லது சொத்துக்களை வைத்திருக்கும் வேறு எவரேனும் ஆளுக்கு, அறிவித்தலொன்றைச் சேர்ப்பிக்கலாம். அவ்வறிவித்தலில், அத்தகைய ஆள், அத்தகைய ஆளின் உறவினர் அல்லது வேறு ஆள், அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் ஆவணங்களின் அல்லது சொத்துக்களின் உடைமையை, சொத்தாண்மையை அல்லது அவற்றிலுள்ள ஏதேனும் அக்கறையைக் கைமாற்றுவதைத் தடை செய்யலாம் என்பதுடன்—

(i) மோட்டார் வாகனம் ஒன்றுன விடயத்தில் அம் மோட்டார் வாகனம் தொடர்பில் மோட்டார் வாகனப் பதிவாளரால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழையும்;

(ii) அசைவற்ற ஆதனத்தின் விடயத்தில் அத்தகைய ஆதனத்தின் உரித்து தொடர்பிலான உறுதிகளின் புகைப்படப் பிரதிகளையும் பணிப்பாளருக்குக் கையளிக்குமாறும் தேவைப்படுத்தலாம்.

இப்பந்தியின் கீழ் வழங்கப்படும் அறிவித்தல் ஒவ்வொன்றும் தொண்ணூறு நாட்களைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு வலுவிலிருத்தல் வேண்டும்.

(ஏ) அசைவற்ற ஆதனத்தின் விடயத்தில் காணிப் பதிவாளர், மோட்டார் வாகனம் விடயத்தில் மோட்டார் வாகனப் பதிவாளர், ஏதேனும் கம்பனிகளின் பங்குகள், கையிருப்புகள், தொகுதிக் கடன்கள் என்பன விடயத்தில் கம்பனிகள் பதிவாளர், அத்துடன் இயைபான நிதிக் கம்பனியின் செயலாளர் ஆகியோர் உட்பட (எ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தலின் பிரதியொன்றை இயைபான அதிகாரிக்குச் சேர்ப்பிக்கலாம்;

(ஐ) எந்த அதிகாரிக்கு (ஏ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தலொன்றின் பிரதியொன்று சேர்ப்பிக்கப்பட்டதோ, அந்த அதிகாரி எவரையும், அந்த அதிகாரியின் கட்டுக் காப்பிலுள்ள தோதான புத்தகங்களில் அல்லது பதிவேடுகளில் அத்தகைய அறிவித்தலைப் பதிவு செய்யுமாறு தேவைப்படுத்தலாம்;

(ஒ) பந்தி (ஏ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் அதிகாரியை (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளின் அல்லது ஆளொருவரின் உறவினரின் ஆதனங்கள்,சொத்துக்கள் தொடர்பில் அவரது உடைமையில் அவர் கொண்டிருக்கக் கூடியவாறான அத்தகைய தகவலைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தலாம்;

(ஓ) (i) பந்தி (ஒ) என்பதன்கீழ்ச் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தலொன்று வலுவிலிருக்கும் காலப்பகுதியான தொண்ணூறு நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதி முடிவுறுவதன் முன்னர் பணிப்பாளர், சுருக்கமுறை நடவடிக்கைமுறை என்ற வகையில், அத்தகைய ஆதனத்தைப் பறிமுதல் செய்து விற்பனை செய்வதற்கு அதிகாரமளிக்கும் கட்டளையொன்றுக்கும் அத்தகைய ஆதனத்தைப் பறிமுதல் செய்து விற்பனை செய்வதற்கு நிறைவேற்றெழுத்தாணையொன்றை வழங்குவதற்கான கட்டளையொன்றுக்கும், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஆதனம் அமைந்திருக்கும் மாவட்டத்தில் நியாயாதிக்கம் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(ii) மாவட்ட நீதிமன்றமொன்று (i) ஆம் உட்பந்தியின் கீழ் அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீதும் அவ்விண்ணப்பத்தில் குறிப்பீடு செய்யப்படும் ஆதனம் அல்லது அதிலுள்ள ஏதேயும் அக்கறை நேரடியாகவாயினுஞ்சரி மறைமுகவாயினுஞ்சரி, முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ நிதிக் கம்பனியொன்றுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான நிதிகளைக் கொண்டே செய்யப்பட்டுள்ளது எனத் திருப்தியுறுவதன் மீதும் அத்தகைய ஆதனத்

தைப் பறிமுதல் செய்து விற்பனை செய்வதற்குப் பிசுக்காலுக்கு அதிகாரமளித்து அவரைத் தேவைப்படுத்தும் நிறைவேற்றெழுத் தாணையொன்று வழங்குமாறு பணிக்கலாம்.

(iii) குடியியல் நடவடிக்கை முறைக் கோவையின் 226 முதல் 297 வரை யிலான பிரிவுகளின் ஏற்பாடுகள் (2) ஆம் உட்பந்தியின் கீழ் வழங்கப்பட்ட நிறைவேற்றெழுத்தாணையொன்றின் கீழ் ஏதேனும் ஆதனத்தின் பறிமுதலுக்கும் விற்பனைக்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(iv) இப்பந்தியின்கீழ் ஏதேனும் ஆதனத்தின் பறிமுதலாலும் விற்பனை யாலும் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை நீதிமன்றத்தால்—

(அ) முதலாவதாக, செலவுகளினதும் அத்தகைய ஆதனத்தைப் பறிமுதல் செய்தல், வைத்திருத்தல், விற்பனை செய்தல் என்பனவற்றில் உறப்பட்ட அறவீடுகளினதும் கொடுப்பன விலும்;

(ஆ) இரண்டாவதாக (2) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப் பட்ட நிதிக் கம்பனிக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதென நீதி மன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகையைத் தீர்ப்பதி லும்,

பிரயோகிக்கப்படலாம் என்பதுடன் மீதி பறிமுதல் செய்யப்பட்ட ஆதனத்தின் சொந்தக்காரர்களுக்கும் செலுத்தப்படுதல் வேண்டும்.

26. (1) எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது நிதிக் கம்பனியொன்றின் அமைப்பு அகவிதிகளும் புறவிதிகளும் எவ்வாறிருப்பினும், பணச்சபை, பணிப்பாளரால் செய்யப்பட்ட அறிக்கையொன்றின்மீது 18 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ்ப் பணிப்பாளரால் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து—

(அ) நிதிக் கம்பனியை வேறொரு நிதிக் கம்பனியுடன் அல்லது வேறு ஏதேனும் நிறுவனத்துடன் அத்தகைய வேறு நிதிக் கம்பனியின் அல்லது நிறுவனத் தின் சம்மதத்துடன் ஒன்றிணைப்பதற்கு அவசியமானதென அது கருது கின்றவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்யலாம்;

(ஆ) அத்தகைய நிதிக் கம்பனியை, அதன் மூலதனத்தை அதிகரிப்பதன் மூலமும் புதிய பங்குதாரர்களுக்கு ஒழுங்கு செய்வதன் மூலமும் அதன் பணிப்பாளர் சபையை மீள அமைத்துருவாக்குவதன் மூலமும் மீள ஒழுங்குபடுத்தலாம்;

(இ) வைப்பீட்டாளர்களின் நன்மைக்கானதென அது கருதுகின்றவாறான அத்தகைய முறையில் நிதிக் கம்பனியை மீள உருவாக்கலாம்;

(ஈ) ஏதேனும் நிதிக் கம்பனியின் எவரேனும் பணிப்பாளரை அவருக்குரித்தான பங்குகளின் சொத்தாண்மையை, பணச் சபையால் நியமிக்கப்பட்ட ஆளொருவருக்குப் பின்வருமாறு தீர்மானித்த நட்டஈட்டினை அவர் கொடுப்பனவு செய்வதன்மீது உரிமை துறக்குமாறு அல்லது கைமாற்றுமாறு பணிக்கலாம்:—

(அ) அத்தகைய பங்குகள் விலைகோரிப் பெறப்பட்டவிடத்து அவற்றின் சந்தைப் பெறுமதியின்படி; அல்லது

(ஆ) அத்தகைய பங்குகள் விலைகோரிப் பெறப்படாதவிடத்து, சபையால் நியமிக்கப்பட்ட விலை மதிப்பீட்டாளர் ஒருவரால் தீர்மானிக்கப்பட்ட ஒரு விலையில்,

(2) ஓராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட பணிப்புரையொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற பங்குதாரர் ஒருவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

27. மத்திய வங்கியானது—

(அ) 1961 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கக் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 10 ஆம் பிரிவில் அல்லது எழுத்திலான வேறு சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளால் வைத்திருக்கப்படும் வைப்புத் தொகைகளின் காப்புறுதிக்கான திட்டமொன்றைத் தாபிக்கலாம், பேணலாம், முகாமை செய்யலாம் அத்துடன் கட்டுப்படுத்தலாம் என்பதுடன் அத்தகைய திட்டத்தின்கீழ் அத்தகைய கம்பனிகளால் வைத்திருக்கப்படும் வைப்புத் தொகைகளைக் காப்புறுதி செய்யுமாறு அத்தகைய கம்பனிகளைத் தேவைப்படுத்தலாம்; அல்லது

(ஆ) சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் அத்தகைய நிறுவனத்தினால் தாபிக்கப்பட்ட அத்தகைய வைப்புக்களின் காப்புறுதிக்கான ஏதேனும் திட்டத்தின் கீழ் அத்தகைய கம்பனிகளால் வைத்திருக்கப்படும் வைப்புப் பணங்களைக் காப்புறுதி செய்யுமாறு இச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளைத் தேவைப்படுத்தலாம்.

28. (1) மத்திய வங்கியினால் 27 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் வைப்புப் பணங்களின் காப்புறுதிக்கான திட்டமொன்று தாபிக்கப்பட்டுள்ளவிடத்து, இச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனி ஒவ்வொன்றும் அத்தகைய கம்பெனியினால் வைத்திருக்கப்படும் வைப்புப் பணங்களைக் காப்புறுதி செய்வதற்காக மத்திய வங்கிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) மத்திய வங்கியானது அதன் தற்றுணிபில், (1) ஆம் உட்பிரிவின் கீழ்ச் செய்யப்பட்ட விண்ணப்பம் எதனையும் ஏற்றுக் கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம் என்பதுடன் அத்தகைய விண்ணப்பத்தை அது ஏற்றுக்கொள்ளுமிடத்து, சம்பந்தப்பட்ட ஆபத்துக்களைக் கருத்திற் கொண்டு சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறு காப்புறுதியின்மீது அத்தகைய கட்டுப் பணத்தை மத்திய வங்கிக்குச் செலுத்துமாறு விண்ணப்பக்காரர் நிதிக் கம்பனியைத் தேவைப்படுத்தலாம்.

(3) கட்டுப்பணமானது நாணயச் சபையினல் தீர்மானிக்கப்படக் கூடிய வாறுன அத்தகைய காலப் பகுதிகளுக்கு அத்தகைய நேரங்களிலும் அத்துடன் அத்தகைய முறையிலும் செலுத்தப்படல் வேண்டும்.

(4) காப்புறுதி செய்யப்பட்ட நிதிக் கம்பனி, ஏதேனும் கட்டுப்பணத்தைச் செலுத்துவதில் ஏதேனும் தவணை தவறினுல், அத்தகைய தவறுகை காரணமாகச் சபையால் உறப்படுவதற்குச் சாத்தியமாகக் கூடிய நட்டங்களைக் கருத்திற்கொண்டு சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறுன அத்தகைய வீதத்தில் அத்தகைய கட்டுப்பணத் தொகைமீது அத்தகைய தவறுகையின் காலப் பகுதிக்கென மத்திய வங்கிக்கு வட்டி செலுத்துவதற்கு அது ஆளாதல் வேண்டும்.

29. சபையால்—

(அ) காப்புறுதி செய்யப்பட்ட நிதிக் கம்பனி ஒன்றிடமிருந்து, அது கட்டுப் பணங்களைச் செலுத்துவதில் தவணை தவறுமிடத்து, அறவிடப்படக் கூடிய வட்டி;

(ஆ) நிதிக் கம்பனிகளின் வைப்புப் பணங்களைக் காப்புறுதி செய்யும் நோக்கத் துக்காக, இச்சட்டத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்ட அல்லது விதித்துரைக் கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது எக் கருமம் தொடர்பில் ஒழுங்குவிதியொன்று செய்யப்பட வேண்டுமென அதிகார மளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமம் தொடர்பிலான ஏதேனும் விடயம்;

(இ) இச்சட்டத்தின் 27 ஆம், 28 ஆம் பிரிவுகளின் கீழ் மத்திய வங்கியின் தத்துவங்களை, பணிகளை, கடமைகளைப் பிரயோகிப்பதனை, நிறைவேற் றுவதனை அல்லது புரிவதனைப் பாதிக்கின்ற அவற்றுடன் தொடர் புடைய அல்லது அவற்றிற்கு இடைநேர் விளைவான ஏதேனும் வேறு விடயம்,

என்பன தொடர்பான ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

30. இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினது ஏற்பாடுகள் எப்படி யிருப்பினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறுன ஏதேனும் வங்கித் தொழில் நிறுவனத்தின் தொழிலிற்கு 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத் தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றுக்கு 1979 ஆம் ஆண் டின் 2 அம் இலக்கத் தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கியானது தொழிலுக்கு அல்லது (165 ஆம் அத்தியாய மான) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப் பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்புடைத்தாதல் ஆகாது.

31. (1) இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் நிதிக் கம்பனியின் வைப்புப் பணம் ஒன்று செயலற்றிருக்குமிடத்து, அதாவது, முதிர்வின் பின்னர், 10 ஆண்டுக் காலமொன்றிற்கு முதிர்வின்மீது வைப்புப் பணத்தை மீளப் பெறுவதற்கு ஓர் வைப்பீட்டாளர் கோராதிருக்குமிடத்து அல்லது பத்து ஆண்டுகளை விஞ்சுகின்ற காலமொன்றிற்கு வைப்புப் பணம் தொடர்பாக வைப் பீட்டாளரிடமிருந்து அல்லது அவரின் சட்டபூர்வமான பிரதிநிதியிடமிருந்து

ஏதேனும் எழுத்திலான கடிதப் போக்குவரத்து நிதிக் கம்பனிக்குக் கிடைக்கா திருக்குமிடத்து, வைப்புப் பணத்திலிருக்கும் பணம், அதன்மீது திரண்ட வட்டி, ஏதேனும் இருப்பின், அதனுடன், ஏதேனும் வேறு சட்டத்தில் இருப்பது எது எப்படியிருப்பினும், சபை அவ்வாறு பணித்திருந்தால், இலங்கை மத்திய வங்கியின் விசேட கணக்கொன்றிற்கு அத்தகைய நிதிக் கம்பனியால் மாற்றப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் நிதிக் கம்பனியில், அவரின் பெயரில் அவரின் வரவிலிருக்கும் ஏதேனும் பணம் அல்லது அவர் எந்த ஆளிடமிருந்து உரித்தைப் பெறுகின்ருரோ அந்த ஆளின் பெயரிலிருக்கும் ஏதேனும் பணம் (1) ஆம் உட்பிரிவின் கீழ் மத்திய வங்கியின் விசேட கணக்கொன்றிற்கு மாற்றப்பட்டிருக்கின்றதெனச் சபையின் திருப்திக்கு எவர் எண்பிப்பைக் கொடுத்துதவுகிருரோ அந்த எவரேனும் ஆள், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினுல் அல்லது சட்டத்தின் கீழ் அத்தகைய பணம் தொடர்பாக விதிக்கப்படக் கூடிய வாருன அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக, இலங்கை மத்திய வங்கியினுல், அத்தகைய பணத்தின், சபை காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாருன அத்தகைய விகிதத்தில் மீளக் கொடுப்பனவு தேதி வரை அத்தகைய பணத்தின்மீது செலுத்தப்படற்பாலதான வட்டியுடன் அல்லது சபை அவ்வாறு தீர்மானிக்கின்றவிடத்து அத்தகைய வட்டியில்லாமல், மீளக் கொடுப்பனவிற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் விசேட கணக்கொன்றுக்கு மாற்றப்படும் பணம் அனைத்தும் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனுன கலந்தாலோசனையின் பின் சபையினுல் தீர்மானிக்கப்படக் கூடியவாருன அத்தகைய நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படலாம்.

32. (1) ஆள் ஒருவர்—

(அ) ஏதேனும் நீதிமன்றத்தினுல் கடனிறுக்க வகையற்றவர் என வெளிப்படுத்தப்பட்டிருப்பின்;

(ஆ) நல்லொழுக்கப் பிறழ் நடத்தையை உள்ளடக்குகின்ற ஒரு தவறிற்கு ஏதேனும் நீதிமன்றத்தில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(இ) இச்சட்டத்தின் கீழ் அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஏதேனும் தவறுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(ஈ) இச்சட்டத்தின் 18 ஆம் அல்லது 25 ஆம் பிரிவுகளின் கீழ்ப் பணச் சபையினுல் எந்த ஆளுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதோ அந்த ஆளாகவிருப்பின்,

அத்தகைய ஆள் விடயத்திற்கேற்ப ஒரு நிதிக் கம்பனியின் பணிப்பாளர் ஒருவராக, பிரதம நிறைவேற்றுநர் ஒருவராக அல்லது செயலாளரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தெரிவு செய்யப்படுவதற்கு அல்லது அப்பதவியை வகிப்பதற்குத் தகைமையிழந்தவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள ஏதேனும் தகைமையிழப்பிற்குக் கீழ்ப்பட்டவராயிருந்து கொண்டு நிதிக் கம்பனியொன்றின் ஒரு பணிப்பாளராக, பிரதம நிறைவேற்றுநராக அல்லது செயலாளராகச் செயற்படுகின்ற ஆளெவரும் இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

33. (1) சபையானது எக்கருமங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் விதிகள் ஆக்கப்பட வேண்டும் என அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் தொடர்பில் அல்லது விதித்துரைக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ள அக்கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாக, அத்துடன் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்குப் பங்கமில்லாமல், சபையானது, பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பில் அல்லது ஏதேனும் பின்வரும் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்:––

(அ) நிதிக் கம்பனிகளின் பதிவும் இச்சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனியால் சபைக்குச் செலுத்தப்படற்பாலதான ஆண்டு உரிமக் கட்டணங்களும்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ்ப் பயன்படுத்தப்பட வேண்டிய படிவங்கள்;

(இ) பொது மக்களிடமிருந்து வைப்புப் பணங்களைப் பரிந்து கேட்கின்ற ஏதேனும் விவர மஞ்சரி அல்லது விளம்பரம் எவரேனும் ஆளினால் அல்லது ஆட்கள் குழுவினால் வழங்கப்படுதலை ஒழுங்குபடுத்துதல் அல்லது தடை செய்தல் அத்துடன் ஏதேனும் அத்தகைய ஏதேனும் விவர மஞ்சரி அல்லது விளம்பரம் எந்த நிபந்தனைகளுக்கமைய வழங்கப்படலாமோ அந்த நிபந்தனைகளும்.

34. அமைச்சரானவர், சட்டத்தின் கோட்பாடுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயனுறுத்தல்களை அளிக்கும் நோக்கத்திற்காக, சபைக்குப் பொதுவாக அல்லது விசேடமாகப் பணித்தல்களை அளிக்கலாம் என்பதுடன் சபை அத்தகைய பணித்தல்களுக்குப் பயனுறுத்தலை அளித்தலும் வேண்டும்.

35. (1) நிதிக் கம்பனியொன்றின் பணிப்பாளரொருவராக, பிரதம நிறைவேற்றுநராக, முகாமையாளரொருவராக, அலுவலர் ஒருவராக அல்லது ஊழியர் ஒருவராக அல்லது கணக்காய்வாளர் ஒருவராகவிருந்து கொண்டு—–

(அ) இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு நிதிக் கம்பனி இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதற்கு, எல்லா நியாயமான நடவடிக்கைகளையும் எடுக்கத் தவறுகின்ற; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ்ச் சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணித்தலுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ்ச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் கூற்றின் செம்மையான தன்மை உறுதிப்படுத்துவதற்கு எல்லா நியாயமான நடவடிக்கைகளையும் எடுக்கத் தவறுகின்ற;

(ஈ) அத்தகைய நிதிக் கம்பனியின் ஏதேனும் புத்தகத்தில் அல்லது பதிவேட்டில் அல்லது ஏதேனும் அறிக்கையில், துண்டில், ஆவணத்தில் அல்லது தொழில் கூற்றில், அலுவல்களில் கொடுக்கல் வாங்கல்களில், நிபந்தனைகளில், சொத்துக்களில் அல்லது பொறுப்புகளில் அல்லது கணக்குகளில் வேண்டுமென்றே பொய்யான பதிவொன்றைச் செய்கின்ற அல்லது பதிவைச் செய்யச் செய்கின்ற அல்லது வேண்டுமென்றே ஏதேனும் அத்தகைய பதிவை விட்டு விடச் செய்கின்ற; அல்லது

(உ) அத்தகைய நிதிக் கம்பனியின் ஏதேனும் புத்தகத்தில் அல்லது பதிவேட்டில் அல்லது ஏதேனும் அறிக்கையில், துண்டில், ஆவணத்தில் அல்லது தொழில் கூற்றில், அலுவல்களில், கொடுக்கல் வாங்கல்களில், நிபந்தனைகளில், சொத்துக்களில் அல்லது பொறுப்புகளில் அல்லது கணக்குகளில் பதிவொன்றை வேண்டுமென்றே செய்யாது விட்டு விடுகின்ற அல்லது வேண்டுமென்றே அத்தகைய ஏதேனும் பதிவைச் செய்யாது விட்டு விடச் செய்கின்ற; அல்லது

(ஊ) அத்தகைய நிதிக் கம்பனியின் ஏதேனும் புத்தகத்தில் அல்லது பதிவேட்டில் அல்லது ஏதேனும் அறிக்கையில், துண்டில், ஆவணத்தில் அல்லது தொழில் கூற்றில், அலுவல்களில் கொடுக்கல் வாங்கல்களில், நிபந்தனைகளில், சொத்துக்களில் அல்லது பொறுப்புகளில் அல்லது கணக்குகளில் ஏதேனும் பதிவை வேண்டுமென்றே மாற்றுகின்ற, தொகுக்கின்ற, மறைக்கின்ற அல்லது அழிக்கின்ற அல்லது ஏதேனும் அத்தகைய பதிவை வேண்டுமென்றே மாற்ற, தொகுக்க, மறைக்க, அழிக்கச் செய்கின்ற,

எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் ஓர் ஆளுக்கெதிரான ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளில், இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துகின்ற கடமை அல்லது இக்கூற்றுக்கள் செம்மையானதென உறுதிப்படுத்தும் கடமை, வேறு ஆளுக்குப் பொறுப்பிக்கப்பட்டுள்ளதென நம்புவதற்குத் தனக்கு நியாயமான காரணங்கள் உண்டெனவும் அத்தகைய ஆள் தகைமை வாய்ந்தவர் எனவும் அக்கடமையை நிறைவேற்றும் நிலையிலிருந்தாரெனவும் எண்பித்தல் பாதுகாப்பாகவிருக்கும்.

36. (1) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளுக்கு, அதன் கீழ் ஆக்கப்பட்ட அல்லது தரப்பட்ட ஏதேனும் விதிக்கு, பணித்தலுக்கு அல்லது தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது அவற்றை மீறுகின்ற அல்லது தகவலைக் கொடுத்துதவுமாறு இச்சட்டத்தின் ஏதேனும் பிரிவின் கீழ்த் தேவைப்படுத்தப்பட்டபோது பொய்யான தகவலைக் கொடுத்துதவியுள்ளாரெனக் காணப்படுகின்ற எவரேனும் ஆள் அல்லது குழு இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஆட்கள் குழுவொன்றினுல் இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் தவறு புரியப் பட்டிருக்கும் விடயத்தில்—

(அ) ஆட்கள் குழுவொன்று கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்ருகவிருக்குமிடத்து, அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளர், முகாமையாளர் அல்லது செயலாளர்; அத்துடன்

(ஆ) ஆட்கள் குழு, கூட்டிணைக்கப்படாத குழுவொன்ருகவிருக்குமிடத்து. அத்தகைய குழுவின் உறுப்பினர் ஒருவராக இருக்கும் ஒவ்வொரு தனியாள்,

அத்தகைய தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாருயினும் தனது அறிவுக்கு எட்டாமல் தவறு புரியப்பட்டதெனவும் அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அவர் எல்லா உரிய விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தாரெனவும் அவர் எண்பித்தால் அத்தகைய ஆள் எவரும் தவறென்றுக்குக் குற்றவாளியெனக் கருதப்படுதலாகாது.

37. எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் குழு 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணுக நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துமிடத்தும் அத்துடன் அந்த முரண்பாடு தொடர்பில் இச்சட்டத்தின் வேறு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது அல்லது எடுக்கப்படவிருப்பது எவ்வாறிருப்பினும் பணச் சபையானது பொது மக்களின் நலனுக்காக, எத்தகையதுமான எவையேனும் வழிமுறைகளில்—

(அ) கம்பனியொன்றின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் விடயத்தில் விடயத்திற்கேற்ப, அத்தகைய கம்பனியின் பெயரையும் அதன் பணிப்பாளர்களின் பெயர்களையும் அல்லது அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பெயரையும் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர்களது பெயர்களையும்; அத்துடன்

(ஆ) ஆளொருவரின் அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவின் விடயத்தில் விடயத்திற்கேற்ப அத்தகைய ஆளின் பெயரை அல்லது அத்தகைய கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவின் உறுப்பினர்களின் பெயரையும் வெளியிடலாம்.

38. இச்சட்டத்தின் கீழ்த் தவறென்றுக்குக் குற்றவாளியான ஒவ்வோராளும் நீதிவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு இரு வகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்துக்கு ஆளாதல் வேண்டும்.

39. மத்திய வங்கியின் அலுவலர்கள், இச்சட்டத்தின் கீழ்த் தவறுகள் விடயத்தில் நடவடிக்கைகள் தொடரும் நோக்கத்திற்காகக் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் 136 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குள் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

40. (1) பணிப்பாளர், இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்று புரியப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டும் அத்துடன் சபையின் அங்கீகாரத்துடனும், ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு பணத் தொகைக்கு அத்தகைய தவறை இணக்கலாம்.

(2) இப்பிரிவின் கீழ் ஏதேனும் தவறை இணக்குதல்—

(அ) தவறின்மீது நியாயதிக்கம் கொண்ட நீதிமன்றத்திற்கு இரு திறத்தவர்களினதும் ஒப்பத்தின் கீழ் எழுத்தில் அறிவித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) குற்றம் சுமத்தப்பட்டவரின் விடுதலையொன்றின் பயனையுடையதாதல் வேண்டும்.

41. (1) ஏதேனும் நிதிக் கம்பனி—

(அ) உரிமம் வழங்கப்பட்ட ஒன்பது மாதங்களுள் தொழிலை ஆரம்பிக்கத் தவறியுள்ளது என; அல்லது

(ஆ) அதனால் உறப்பட்ட எவையேனும் தனிசுகளை அத்தகைய தனிசுகள் வருமதியாகின்றபோது செலுத்தத் தவறியுள்ளது என; அல்லது

(இ) நிவாரணத்திற்காக அதற்கெதிராக மனுவொன்று அல்லது வழக்கு அணைக்கப்பட்டுள்ளவிடத்து. ஏதேனும் கடனிறுக்க வகையின்மைச் சட்டத்தின் கீழ் அல்லது கடனாளிகளுக்கு அல்லது கடனாளிகள் தொடர்பில், நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்யும் வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ்க் கட்டுக்காப்பாளர் அல்லது பெறுநர் ஒருவரை நியமித்துள்ளது என; அல்லது

(ஈ) நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதை இல்லா தொழித்துள்ளது என; அல்லது

(உ) சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளைத் தொடர்ச்சியாக மீறுகின்ற அல்லது முரண்படுகின்றது என; அல்லது

(ஊ) ஆண்டு உரிமக் கட்டணத்தைச் செலுத்தத் தவறுகின்றது என,

சபை திருப்திப்படுமிடத்து, சபையானது, அத்தகைய நிதிக் கம்பனிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதொழிக்கும் என அறிவிப்புக் கொடுக்கலாம் என்பதுடன், அத்தகைய அறிவிப்பை நிதிக் கம்பனிக்குத் தெரிவித்தலும் வேண்டும்.

(2) நிதிக் கம்பனியொன்று அத்தகைய அறிவிப்பு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், 7 ஆம் பிரிவின் கீழ் அதற்கு வழங்கப்பட்ட உரிமம் ஏன் அவ்வாறு இல்லாதொழிக்கப்படக் கூடாதென்பதற்குக் காரணங்களைத் தந்து (1) ஆம் உட்பிரிவின் கீழ் அறிவிப்பு இல்லாதொழிக்கப்படுவதற்கெதிராகச் சபைக்கு எழுத்தில் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்கலாம்.

(3) இல்லாதொழித்தல் பற்றிய அறிவிப்பின் தேதியிலிருந்து அறுபது நாட்கள் முடிவுற்ற பின்னரும் அத்துடன் (2) ஆம் உட்பிரிவின் கீழ்ச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆட்சேபனைகளைப் பரிசிலனை செய்ததன் பின்னரும், சபையானது அத்தகைய அறிவித்தலைக் கைவாங்கலாம் அல்லது நிதிக் கம்பனிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதொழிக்கலாம் என்பதுடன் அது பற்றி நிதிக் கம்பனிக்கு அறிவித்தலும் வேண்டும்.

(4) மூன்றும் உட்பிரிவின் கீழ் உரிமமொன்று இல்லாதொழிக்கப்படுதலானது—

(அ) இல்லாதொழித்தலுக்கெதிராக உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்று செய்யப்படாதவிடத்து, அத்தகைய விண்ணப்பத்தை முன் வைப்பதற்கான காலப் பகுதி முடிவுற்றதன் பின்னர்; அல்லது

(ஆ) உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்று செய்யப்பட்டவிடத்து, இல்லாதொழித்தல் உயர் நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர்,

பயனுறுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய இல்லாதொழித்தல் பற்றிய அறிவித்தல் கசெட்டில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(5) நிதிக் கம்பனியொன்றின் உரிமம் அவ்வாறு இல்லாதொழிக்கப்படுமிடத்து, சபையானது, 6 ஆம் பிரிவின் கீழ்ப் பேணப்படும் பதிவேட்டிலிருந்து நிதிக் கம்பனியின் பெயரை அப்புறப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், ஒடுக்குவதற்கான பணிப்புரைகள் உட்பட அவசியமானதென அது கருதுகின்றவாறான அத்தகைய பணிப்புரைகளையும் வழங்கலாம் அல்லது கம்பனியை ஒடுக்குவதற்கு விண்ணப்பிக்குமாறு பணிப்பாளரைத் தேவைப்படுத்தலாம். இந்த விடயத்தில் 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) வழங்குகைத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு நிதிக் கம்பனி இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, நிதிக் கம்பனியை ஒடுக்குவதற்காக வழக்கைக் கோப்பிடுமாறு சபையானது, பணிப்பாளரைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன் 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய ஒடுக்குதலுக்கு ஏற்புடையதாதலும் வேண்டும்.

43. (1) இரண்டாம் பிரிவின் கீழ் அல்லது பிரிவு 10 (2) அல்லது பிரிவு 11 (2) அல்லது பிரிவு 18 (4) (ஆ) அல்லது பிரிவு 20 அல்லது பிரிவு 24 அல்லது பிரிவு 25 அல்லது பிரிவு 26 அல்லது பிரிவு 40 என்பதன் கீழ் ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்டதாகக் கருதப்பட்ட கட்டளையொன்றினால் இடருற்ற ஆளெவரும் அல்லது அத்தகைய ஏதேனும் பிரிவின் கீழ் அல்லது எடுக்கப்பட வேண்டுமென உத்தேசிக்கப்பட்ட அல்லது அதன் கீழானதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலினால் அல்லது எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கையால் தாம் பாதிக்கப்படுவாரென அஞ்சுகின்ற ஆளெவரும் நிரந்தரமான அல்லது இடைக்காலத் தடையுத்தரவொன்றுக்கு, தடை செய் கட்டளையொன்றுக்குத் தடைக் கட்டளையொன்றுக்கு அல்லது அத்தகைய கட்டளையைப் பயனுறுத்துவதிலிருந்து சபையைத் தடை செய்யும் தடுக்கும் அல்லது மட்டுப்படுத்தும் பயனுடைய வேறு ஏதேனும் கட்டளைக்கு உரித்துடையவராதலாகாது.

(2) (அ) இரண்டாம் பிரிவின் கீழ் அல்லது பிரிவு 10 (2) அல்லது பிரிவு 11 (2) அல்லது பிரிவு 18 (4) (ஆ) அல்லது பிரிவு 20, பிரிவு 24 அல்லது பிரிவு 25 அல்லது பிரிவு 26 அல்லது பிரிவு 40 என்பதன் கீழ் ஏதேனும் கட்டளை அல்லது அதன் கீழானதாகக் கருதப்பட்ட ஏதேனும் கட்டளை தொடர்பில், அரசியலமைப் பின் 140 ஆம் உறுப்புரையால் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்ட நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்தால் பிரயோகிக்கப்படலாம்; மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பிரயோகிக்கப்படுதலாகாது.

(ஆ) பந்தி (அ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட நியாயாதிக்கத்தைக் கோரும் விண்ணப்பம் ஒவ்வொன்றும், எச்செயல் தொடர்பில் அல்லது எச்செயல் சம்பந்தமாக அத்தகைய விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அச்செயல் புரியப் பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் உயர் நீதிமன்றமானது அத்தகைய விண்ணப்பம் இணைக்கப்பட்ட இரண்டு மாதங் களுக்குள் அத்தகைய விண்ணப்பத்தைக் கேட்டு இறுதியாகக் கையுதிர்த்தலும் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 126 ஆம் உறுப்புரையின் கீழ்ச் செய்யப்பட்ட ஏதே னும் விண்ணப்பம் தொடர்பில் உயர் நீதிமன்றம் சட்டமுறைப்படி பிரயோகிக் கின்ற தத்துவங்களை அல்லது (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ளது எதுவும் பயனுறுத்துதல் ஆகாது.

(4) உயர் நீதிமன்றமானது, இப்பிரிவால் அதற்குரித்தாக்கப்பட்ட நியா யாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், சபைக்கெதிராக ஏதேனும் கட்டளையை ஆக்கு முன்னர், அது இடைக்காலக் கட்டளையாயிருப்பினுஞ்சரி, இறுதிக் கட்டளையாக இருப்பினுஞ்சரி, தம்பக்க வழக்கை எடுத்துரைக்கும் வாய்ப்பொன்றைச் சபைக்கு அளித்தல் வேண்டும்.

44. பணச் சபையின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக அல்லது மத்திய வங்கியின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கெதிராக, இச் சட்டத்தின் கீழ் அவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப் பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக வழக்கு அல்லது குற்ற வழக்கு இருத்தலாகாது.

45. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 27 ஆம் இலக்க நிதிக் கம்பனிகளைக் கட்டுப்படுத்தற் சட்டம் இத்தால் நீக்கப்படுகிறது.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 27 ஆம் இலக்க, நிதிக் கம்பனிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும் நீக்கப்பட்ட சட்டத்தின் கீழானதும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று வலுவிலுள்ளதுமான அறிவித்தல், கட்டளை, விதி அல்லது வழங்கப்பட்ட பணிப்புரை, சுமத்தப்பட்ட தேவைப்பாடு அல்லது ஆக்கப்பட்ட விதி அல்லது கையளிப்பு ஒவ்வொன்றும் அத்தகைய அறிவித்தல், கட்டளை, பணிப்புரை, தேவைப்பாடு, விதி அல்லது கையளிப்பு இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாத தாக இராத அளவுக்கு, விடயத்திற்கேற்ப, இச்சட்டத்தின் நேரொத்த ஏற்பாடு களின் கீழ் வழங்கப்பட்ட, சுமத்தப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட அறிவித்தல், கட்டளை, பணிப்புரை, தேவைப்பாடு, விதி அல்லது கையளிப்பு ஒன்றாகக் கருதப் படுதல் வேண்டும்.

(3) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டு யூன் 16 ஆம் தேதி தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடையும் காலப் பகுதியில் பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட நிதிக் கம்பனிகளைக் கட்டுப்படுத்தல் ஒழுங்குவிதிகளுடன் சேர்ந்து வாசிக்கப்படுவதாகிய 1979 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க நிதிக் கம்பனிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆக்கப்பட்ட கட்டளை அல்லது வழங்கப்பட்ட பணிப்புரை எதுவும், அந்த ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்குப் பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் அதிகாரமளித்திருக்கின்ருற் போன்று செல்லுபடியானதும் பயனுடையதாதலும் வேண்டும்.

(4) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட நிதிக் கம்பனிகளைக் கட்டுப்படுத்தல் ஒழுங்கு விதிகளுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 1979 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க நிதிக் கம்பனிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி அல்லது அவற்றைப் பின்பற்ற உத்தேசித்து 1988 யூன் 16 ஆம் தேதி தொடங்கி இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடையும் காலப் பகுதியில் சபையின் எவரேனும் அலுவலரால், சேவையாளரால் அல்லது முகவரால் அல்லது வேறு எவரேனும் ஆளினுல் அல்லது அதிகார சபையினுல் நல்லெண்ணத்துடன் புரியப்பட்ட அல்லது புரியாது விடப்பட்ட ஏதேனும் செயலுக்காகச் சபைக் கெதிராக அல்லது அவருக்கெதிராக எழுத்தாணை என்ற வகையிலாயினுஞ்சரி, வேறு வகையிலாயினுஞ்சரி, குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் எவையும் தொடரப்படுதலோ, பேணப்படுதலோ அல்லது தொடர்ந்திருத்தலோ ஆகாது.